# கப்பல் பறவை

சிவசங்கரி

கன்னிமரா பொது நூலகம்
24 JUN 1991
சென்னை.

வானதி பதிப்பகம்
13, தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

முதற்பதிப்பு : அக்டோபர் 1983
இரண்டாம் பதிப்பு : மார்ச் 1989

414362

திருநாவுக்கரசு தயாரிப்பு

24.11.1991

விலை ரூ. 16-00

894.8113
SIV

அச்சிட்டோர் :
வள்ளல் பாரி அச்சகம்
26, வள்ளல் பாரி தெரு,
எம். ஜி. ஆர். நகர்,
சென்னை-600 078.

# பதிப்புரை

சுஜா...

சிவசங்கரியின் பேனா முனையில் சிலிர்த்தெழுந்து, பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய், புரட்சிப் பாவையாய் இக்கப்பலில் உலா வரும் கதாநாயகி.

அவள் இந்த தேசத்தை நேசிப்பவள். சமுதாயத்தின் சீரழிவுகளைக் கண்டு சினம் கொள்ளுவாள்! அரசியல் வாதிகளின் சதிராட்டங்களைச் சாடுவாள்! ஆட்சியாளர் களுக்கு ஆலோசனையும் கூறுவாள்!

சுஜாவின் சிந்தனைச் சிதறல்களில் ஒன்று நம்மை சிந்திக்க வைக்கிறது.

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு கோடிக்கணக்கான ரூபாய்களை விளம்பரத்துக்காகவே செலவிடும் அரசாங்கம் அப்பணத்தை குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்பவர் களுக்குப் பரிசாக, வேட்டியும், சேலையும் ஐம்பது அறுபது ரூபாய் கொடுப்பதற்குப் பதிலாக ஐயாயிரம் ரூபாய் ரொக்கமாகக் கொடுத்தால் ஏழை எளியவர்கள் மட்டுமல்ல மத்தியதர, மேல் மட்டத்தவர்களும் ஐயாயிரத்திற்கு ஆசைப்பட்டு ஏராளமான பேர் முன் வருவார்கள் என்று கூறும் சுஜா, இன்னும் இது சம்பந்தமான விரிவான விளக்க மும் பொருளாதார பிரச்னையையும் இக்கதையினுள் விளக்குகிறாள்.

பட்டப்படிப்பு முடித்து, ஆர்கிடெக்சராக—கட்டிடக் கலை நிபுணராகப் பயிற்சி பெற்று இந்த தேசத்தில் பல அழகான மாளிகைகளையும், திரை அரங்குகளையும், சூப்பர் மார்க்கெட்டுகளையும் நிர்மாணித்துத் தந்திருக்கிறாள் சுஜா.

நாட்டைப் பற்றியும், அதன் பலவீனங்களைப் பற்றியும் வெகுவாகவிமர்சித்துவிட்டு வெறும் வாய் சவுடாலோடு நின்று காரியத்தில் ஒன்றும் செய்யாமல் இருக்கும் பெண்ணல்ல சுஜா.

விஸ்ராந்தி—என்ற முதியோர் இல்லத்தின் அட்சய பாத்திர நிதிக்கு கணிசமான நிதி கொடுத்து, அதன் வட்டியில் பாட்டிகளைப் பராமரிக்கும் ஒருநாள் செலவை ஏற்றுக் கொண்டிருப்பவள் சுஜா!

கணவனால் கைவிடப்பட்ட ஒரு மனநோயாளிப் பெண்ணுக்கு மாதம் ஐம்பது ரூபாய் சிகிச்சைக்காக டாக்டருக்குக் கொடுக்கிறாள் சுஜா!

பார்வை இழந்தவர்களுக்குப் படிப்பு சொல்லித்தர, பரீட்சை எழுத வாரத்தில் சில மணி நேரங்களை ஒரு மாணவனுக்காக ஒதுக்குகிறாள் சுஜா!

இவை தவிர மாதம் ஒருமுறை கட்டாயமாக ரத்த தானம் செய்வதோடு இறந்த பிறகு கண் தானமும் செய்ய எழுதிக் கொடுத்திருக்கிறாள்.

பாரதி மாதவம் செய்தவன். அவன் நூற்றாண்டில் பாவலர் பலர் 'ப(ா)ட்' டாடைகளும், நூலோர் பலர் 'நூலா'டைகளும் படைத்து பாரதிக்கு காணிக்கையாக்கினார்கள். ஆனால் கதாசிரியை சிவசங்கரியோ, ஒரு புதுமைப் பாவையையே பெற்றுத் தந்திருக்கிறார்கள்.

அவள்தான் சுஜா!

அவள் தன் வாழ்க்கையில் சந்திக்கும் மனிதர்கள், அவர்களின் அனுபவங்கள், அனுசரணைகள், இவைகளையெல்லாம் சுஜா எப்படிச் சமாளிக்கிறாள்—என்பதையெல்லாம் அறிய கப்பலில் ஏறுங்கள்—கண்டு கொள்ளுங்கள்.

ஏ. திருநாவுக்கரசு
வானதி பதிப்பகம்

# கப்பல் பறவை

## 1

24 JUN 1991

"சுஜா"

"......"

"ஹேய்...சுஜ்...ஜா"

குனிந்துகொண்டு பேப்பரில் ஒரு சதுரம் வரைந்து அதை மிஸ்டர் குமாரஸ்வாமியின் வரவேற்பறையாகக் கற்பனை பண்ணி, எப்படி சிங்காரிக்கலாம், எந்த இடத்தில் எதை அமைக்கலாம் என்ற வேலையில் லயித்திருந்த சுஜா தலையை நிமிர்த்தாமலேயே 'ம்?' என்றாள்.

"கூப்பிடறது காதில விழலியா?"

"ம்'னு கேட்டேனே, உனக்கு காதுல விழலியா?"

"விழலை...நிமிரு...என்னைப் பாரு."

சுஜா பார்வையை மட்டும் உயர்த்தினாள்.

"ஓ.கே. பார்த்திட்டேன். யூ ஆர் வெரி ஹான்ட்ஸம். போதுமா? இப்ப, என்னை கொஞ்சம் வேலை செய்ய விடறியா?"

"மணி ஆறு. பார்ட்டிக்கு நாழியாகலையா? வீட்டுக்குப் போய் குளிச்சு, தயாராகறதா உத்தேசம் இருக்கா இல்லே, இங்கேயிருந்தே...இப்படியே."

சுஜா புருவங்களை நெரித்தாள்.

''என்ன பார்ட்டி?''

சங்கர் சிரித்தான்.

''யார் யாருக்கோ என்னென்னமோ பட்டம் கொடுக்கறாங்க. உனக்கு முதல்ல ஞாபக மறதிக்கு ஒரு டாக்டர் பட்டம் கொடுக்கணும். நம்மபாஸ் மிஸ்டர் வர்மா வீட்டுலே இன்விக்குப் பார்ட்டி. நம்மையும் கூப்பிட்டிருக்கார். புது க்ளையண்ட்ஸ் மிஸ்டர் தேவதாஸ், மிஸ்டர் வாசுதேவனை அறிமுகப்படுத்த... விவரம் போதுமா? இல்லே, நீ யாரு, நா யாருங்கற அடிப்படை விளக்கத்துலே ஆரம்பிக்கணுமா?''

சுஜா அலுப்புடன் பென்ஸிலைக் கீழே போட்டாள்.

''ஓ, போர்...ஸ்வாரஸ்யமா வேலை பண்ணறப்போ இந்த மாதிரி தொந்தரவு இருந்தா எனக்குப் பிடிக்கறதேயில்லே சங்கர்.''

''பார்ட்டிக்குப் போறது தொந்தரவா? குழந்தைகிட்ட சொன்னாக்கூட சிரிக்கும்.''

''அருமையான ஐடியா உண்டாகி, அதை உடனே நோட் பண்ணி வரைஞ்சி பார்த்திடணும்னு நினைக்கறப்ப, பார்ட்டி கூட தொந்தரவுதான்.''

''வர்மா நம்ம பாஸ் சுஜா.''

''இருக்கட்டுமே, வேலைல நா ஈடுபாட்டோட இருக்கறதுக்கு அவர் சந்தோஷப்படறதுதானே நியாயம்? பார்ட்டியை விடு சங்கர்...மிஸஸ் வர்மா, அவங்களோட மூணு, நாலு மணி நேரம்...கடவுளே.. நா என்ன பண்ணுவேன்?''

நிஜமான பரிதாபத்துடன் சுஜா முகத்தைச் சுருக்கிக் கொள்ள சங்கர் திரும்ப சிரித்தான்.

''அவங்க உன்னை என்ன பண்ணாங்க, இத்தனை சலிச்சிக்க?''



''என்ன பண்ணாங்களா? ஓயாமப் பேசறாங்களே, அதான் தண்டனையா இருக்கு...பார்க்கறப்ப எல்லாம் அவங்க லேட்டஸ்டா வாங்கிகிட்ட புடவை, செஞ்சிகிட்ட நகை, கொடுத்த பார்ட்டி, வந்த பெரிய மனுஷங்க வீட்டு பொம்பளைங்களோட ட்ரெஸ், பக்கத்துவீட்டு பொம்பளையோட மட்டமான சமையல், அவங்க வீட்டு வேலைக்காரங்க பிரச்சனை, மை காட்...பேசறத்துக்கு இதைத் தவிர வேறு விஷயங்களே இல்லியா சங்கர்?''

''அதுக்கு என்ன செய்யறது? அவங்க உன்னை மாதிரி ஆர்கிடெக்சர் படிச்ச பொம்பளை இல்லே. சாதாரண குடும்பத் தலைவி. அவங்களுக்குத் தெரிந்ததைத்தானே அவங்க பேச முடியும்?''

சுஜா கோபத்துடன் மேஜையில் ஓங்கித் தட்டினாள்.

''ஸ்டாப் தட் நான்சென்ஸ் சங்கர். இந்த மாதிரி சப்பைக்கட்டு கட்டி, பொம்பளைங்களை அடக்கி வைச்சு அடக்கி வைச்சுதான் முக்கால்வாசிப் பேரை திறமை இருந்தும் ஞான சூன்யமா ஆக்கிட்டீங்க...மிஸஸ் வர்மா என்னபடிச்சிருக்காங்க தெரியுமா? எம். எஸ்ஸி. ஒருவருஷம் காலேஜ்லே லெக்சரரா இருந்ததா அவங்களே சொல்லியிருக்காங்க. அப்படிப்பட்டவங்க கூட புடவை, நகை, சமையல் பத்திதான் பேசணுமா? அதைத் தாண்டி வேற சப்ஜெக்டே இல்லியா? அரசியல் பிடிக்கலைனா பேச வேண்டாம்—வாட் அபௌட் ஆர்ட்ஸ்? சரி, அதுவும் வேண்டாம். சமுதாயத்திலே எத்தனை பிரச்சனை இருக்கு! அவைகளை நினைக்கக் கூடாதா? பேசி அலசக் கூடாதா? என்னடா பண்ணுவோம்னு துடிக்கக்கூடாதா?''

''ஸோ, சமுதாயப் பிரச்சனை அல்லது கலை பத்தி பேசினாத்தான் ஒருத்தர் புத்திசாலின்னு ஒத்துப்பே?''

''நீ இந்தக் கேள்வி கேட்டா எனக்குக் கோபம் வர்றது சங்கர்...நீ கூடவா? என்னை உனக்குத் தெரியாது?

அத்தனை குறுகின மனசா எனக்கு? சிந்தனை, பேச்சு, செயல் எல்லாத்துலேயும் ஆணுக்கு சமமா பெண்ணுக்கும் உரிமை இருக்கணும்ங்கறதுதானே என் கருத்து?''

''சரி, சரி, ஒத்துக்கறேன். எம். எஸ்ஸி. படிச்ச மிஸஸ் வர்மா, சாதாரண விஷயங்களைப் பத்திதான் பேசி சிந்திப்பேன்னு பிடிவாதமா—நீ என்ன சொன்னே? அ, ஞான சூன்யமா இருந்தா, அதுக்கு வர்மாவை குறை சொல்லறது என்ன நியாயம்? ஆண் அடக்கி வைச்சதால்தான் பெண் ஞான சூன்யமா போயிட்டான்னு சொல்லறது தப்பு இல்லியா?''

''கமான் சங்கர், ஒண்ணும் தெரியாத சின்னக் குழந்தை மாதிரி பேசாதே. வர்மாவை எனக்குத் தெரிஞ்சதைவிட அதிகமாகவே உனக்குத் தெரியும். ஆபிஸிலே எனக்கு முழு சுதந்திரம், மரியாதை கொடுக்கறார்னா, அதுல அவருக்கு ஆதாயம் இருக்கு. என்னைத் தட்டிக் கொடுத்து வேலை வாங்கற புத்திசாலித்தனம் அது...ஆனா வீட்டுலே அப்படி இல்லே...மனைவி தன்னைவிட புத்திசாலியா, கெட்டிக்காரியா, நாலும் தெரிஞ்சவளா இருக்கறதை ஏத்துக்க முடியாத பல ஆண்களில் வர்மாவும் ஒருத்தர். யூ நோ தட். தாலி கட்டிட்டார் இல்லே? அதனால அடக்க முடியுது.''

''அப்ப, மிஸஸ் வர்மா மாதிரி நிறையப் பெண்கள் கிணத்துத் தவளையா இருக்கறத்துக்கு ஹஸ்பெண்ட்ஸ்தான் காரணம்னு முடிவு பண்ணிட்டே?''

''ஒட்டு மொத்தமா எல்லாரையும் ஒரே வட்டத்திலே அடைக்க மாட்டேன். சிலர் திறமை இருந்தும் புருஷனுக்குப் பிடிக்கலைனு அடங்கி வாயைத் திறக்கறதில்லே. சிலருக்கு புடவை, நகை, சமையல்தான் இயற்கையிலேயே உலகமாக இருக்கு. இதுல மிஸஸ் வர்மா என்ன ஜாதினு எனக்குத் தெரியாது—ஆராய்ச்சி பண்ணறதாகவும் உத்தேசம் இல்லே —ஆனா, இந்த மாதிரி பொம்பளைங்ககிட்ட மாட்டிக்



கிட்டறப்போ, என்பாடுதான் பெரியஅவஸ்தையா போயிடுது. திருப்பித் திருப்பி சொன்னதையே சொல்லிக்கிட்டு கொஞ்சம் கூடப் பொது அறிவை வளர்த்துக்க முயற்சிபண்ணாம, தங்க கண்ணோட்டத்திலேயே உலகத்தை எடை போட்டுக்கிட்டு இருக்கிறதுகிட்ட என்னால இரண்டு நிமிஷம்கூடப் பேச முடியறதில்லே.''

''முடியலைனா பேசாம எழுந்து வந்திடறது.''

''அப்படித்தானே நா செய்யறேன். அன்னிக்கு மிஸஸ் காமேஷ் கூட கேலியா சொன்னாங்க. 'சுஜாவுக்கு நாட்டமெல்லாம் ஆம்பளைங்க பக்கம்தான்'னு.''

''அதைக் கேட்டுட்டு சும்மாவா வந்தே?''

சுஜா தலையைப் பின்னுக்குச் சாய்த்து சிரித்தாள்.

''வருவேனா! கேச் மீ டுயிங் இட்! 'ஆமா மிஸஸ் காமேஷ், நீங்க சொல்றது ரொம்ப சரி; ஆண்களோட புத்திசாலித்தனமா பல விஷயங்களைப் பத்தி பேசறமாதிரி, உங்களோட என்னால பேச முடியறதில்லே-அதான் நாட்டமெல்லாம் ஆண்கள் பக்கமே இருக்கு'னு சொன்னேன்.''

மிஸஸ் காமேஷின் முகத்தைக் கற்பனை பண்ணிப் பார்த்து, சிரித்தவன் 'ச்சே—பாவம்' என்றான்.

''என்ன பாவம்! அவங்க மட்டும் அப்படி பண்பில்லாம பேசலாமா? இதே மாதிரிதான் முன்னே ஒருதரம் ..''

ஆரம்பித்த சுஜா சட்டென்று நிறுத்தினாள்.

''இன்னிக்கு இதோட இந்தப் பேச்சு போதும் சங்கர். பேச உட்கார்ந்தா அனுமார் வால் மாதிரி நீண்டுகிட்டே போகும். நாழியாச்சு கிளம்பலாம்.''

மேஜை மேல் இருந்தவைகளை ட்ராயரில் தள்ளி, பூட்டிய பிறகு இருவரும் கிளம்பினார்கள்.

மாடிப்படியில் இறங்கும்போதும், வண்டியில் பயணிக்கும் போதும் சுஜா மெளனமாய் இருக்க, சங்கர் சீண்டினான்,

''என்ன யோசனை? மிஸ்டர் குமாரஸ்வாமி வீட்டு அலங்காரமா இல்லே, மிஸஸ் வர்மாவோட புடவை, நகைப் பேச்சா?''

சுஜா அவன் பக்கம் திரும்பாமல் சின்னக் குரலில் பேசினாள்.

''யூ நோ சங்கர், இப்படி குறுகிய கண்ணோட்டத்தோட பேசி வாழறவங்களோட நா அதிகம் பழகாம ஒதுங்கறதால என்னை சரியா புரிஞ்சிக்க முடியாம, அவங்க 'இவ பொம்பிளையே இல்லே, ஆம்பளையா பிறந்திருக்க வேண்டியவ, தவறிப் பிறந்துட்டா'னு பேசறாங்க. இவங்க அபிப்பிராயம் என்னை நிஜமா பாதிக்கலை. ஆனாலும் இந்த ஸோ கால்ட் பெண்மை நிறைஞ்ச பெண் எவளையும் என்னால சுலபமா சேலஞ்ஜ் பண்ண முடியும். என் வீட்டை நீ பார்த்திருக்கே, என் சமையலை ருசி பண்ணியிருக்கே. மத்தபடி இவங்க செய்யறதா சொல்ற அத்தனையும் கச்சிதமா செஞ்சு முடிக்க எனக்கு ஒரு நாளைக்கு மூணுலேந்து, நாலு மணி நேரதான் தேவைப்படுது. தூங்க எட்டு மணி, அதை விட்டுடலாம். எட்டு ப்ளஸ் நாலு, பன்னிரண்டு. பாக்கி பன்னிரண்டு மணி நேரங்களிலே எத்தனை கத்துக்கலாம், நம்மை எத்தனை வளர்த்துக்கலாம், உபயோகமா உழைக்கலாம்? அத்தனையும் விட்டுட்டு, வெட்டியா பொழுதைப் போக்கறதும் இல்லாம மத்தவங்களைப் பத்தி வம்பும் பேசறாங்களே, இவங்களை என்ன பண்ணாத் தேவலை! ம்? காட்... ஐம்... ஃபெட்... அப்...''

அவளுடைய இந்த இருப்புக் கொள்ளாமை, பரபரப்பு, அழுத்தமான பேச்சு எல்லாம் ஏற்கெனவே அத்துப்படியான விஷயம் என்பதால் பதில் சொல்லாமல் சங்கர் சின்னதாகப் புன்னகைத்தான்.

சுஜா சொல்வதில் தப்பொன்றும் இருப்பதாக அவனுக்குத் தோன்றவில்லை.

அவள் தனக்கென்று வைத்திருக்கும் குட்டியூண்டு ஒற்றைப் படுக்கை அறை ஃப்ளாட், எப்போதுமே நெறுவி



சாகத்தான் இருக்கும். அதது அதனதன் இடத்தில் சுத்தமாய்... அழகாய்... கலை உணர்வை உண்டுபண்ணக் கூடியதாய்...

சுஜா சமையலிலும் படு கெட்டிக்காரி. எந்த வகை சமையல் வேணும்? சைவம், அசைவம்? எந்த நாட்டு ரகம்? எதுவானாலும் அரை மணியில் ரெடி. சமைத்து முடித்து வெளியில் வந்தால் உடம்பில் ஒரு அழுக்கு வியர்வை அலங்கோலம்? ம்ஹூம்—இருக்காது.

பாட்டு கேட்பாள்; சினிமா பார்ப்பாள்; நிறைய படிப்பாள்; ஓவியக் காட்சிக்குப் போய் ரசித்துவிட்டு வருவாள்.

பாடத் தெரியுமா, ஆட வருமா, ஓவியம் வரைவாயா? என்றால், கண்களை இடுக்கிக்கொண்டு 'ஆத்மார்த்தமாக ரசிக்கத் தெரியும்; அது போதாதா?' என்பாள்.

இத்தனையோடு, ஒரு நாளைக்கு எட்டுமணி நேரங்கள் போல ஆபீஸிலும் வேலை பார்ப்பது போதாது என்று அறிவை வளர்க்க வேண்டும். இன்னும், இன்னும் என்று பறப்பவளுக்கு சதா வீட்டில் உட்கார்ந்து, சாப்பிட்டு, தூங்கி, வம்புப்பேச்சை மட்டும் பேசி பொழுதைக் கழிப்பவர்கள் எரிச்சலைத் தருவதில் ஆச்சரியம் என்ன?

தலையைச் சற்றே திருப்பி, சங்கர் அவளை ஒரு நொடி பார்த்தான். தீர்க்கமான மூக்கு, நீளமான கழுத்து, இறுக அழுத்தின உதடுகள், அசிரத்தையுடன் ரப்பர் பேண்ட் போட்டுக் கட்டப்பட்ட முடி, மிளகு சைஸில் தங்கத்தோடு, ஸ்லீவ்லெஸ் ரவிக்கை, கோட்டா நூல் புடவை.

சுஜா நல்ல உயரம்-பருமனில்லாத உருவிவிட்ட உடம்பு அதைக் கூட்டியே காட்டும்.

ஆனாலும் இந்த உயரமோ எடுப்பான உடம்போ அவளை அறிந்தவர்களுக்கு அத்தனை முக்கியம் இல்லை

என்பதும் உணர்ச்சிபூர்வமாக புத்திசாலி தனத்துடன் அவன் பேசும் பேச்சும், அந்தச் சிரிப்பும்-லேசாக தலையைப் பின்னுக்குத் தள்ளி, தோளோடு நிற்கும் முடி கழுத்தில் பம்மென்று இறங்க, சிரிக்கும் சிரிப்புமே—அவளின் மிகப் பெரிய ப்ளஸ் பாயிண்டுகள் என்பதும் சங்கரின் அபிப்பிராயங்கள்.

சுஜா அத்தனை நிறம் இல்லை, மாநிறம். சின்னகண்கள் பல் முத்து மாதிரி வரிசையாக இருக்காது. சரியாகச் சொல்ல வேண்டுமென்றால் ப்ரி மோலாரில் ஒன்று தெத்திப்பல்கூட.

ஆனாலும் தலையைப் பின்னால் சாய்த்து, நெஞ்சில் உற்பத்தி ஆகும் சிரிப்பை அலாதி தினுசில் அவள் வெளியிடும்போது, கண்கள் இரண்டும் விளக்கேற்றிக் கொண்டு பளபளப்பதும் தெத்திப்பல் இதழ் ஓரத்தில் எட்டிப் பார்த்து ஒருவித போதையைத் தருவதும் நிஜம்.

அப்புறம், அந்த புத்திசாலித்தனம்.

பேச ஆரம்பித்த இரண்டாம் நிமிஷத்துக்குள் 'என்னை அடையாளம் தெரிகிறதா?' என்று அட்டகாசமாய்த் தலை காட்டும் புத்திசாலித்தனம்.

சுஜாவின் ஃப்ளாட் இருந்த கட்டடத்துக்கு முன் சங்கர் வண்டியை நிறுத்தினான்.

''ஏழேகாலுக்கு வந்து பிக்-அப் பண்ணிக்கட்டுமா?''

''வேணாம் சங்கர்.. இங்கேயிருந்து கிட்டதான்... நான் ஒரு ஆட்டோ எடுத்துக்கிட்டு வந்திடறேன். உனக்கு எதுக்கு சிரமம்?''

வீட்டுக்குள் சென்று குளித்து, உடை மாற்றி, எளிமையாய் உடுத்தி, கொஞ்சமாய் மேக்கப் அணிந்து, தயாராகி வீட்டோடு இருக்கும் ராணியிடம் 'ராத்திரி வர நாழியாகும்' என்று சொல்லிவிட்டுக் கிளம்பி, ஆட்டோ பிடித்து வர்மாவின் வீட்டை அவள் அடைந்தபோது மணி ஏழரை என்றது.



மென்மையான சங்கீதம் வாசல்வரை வந்து 'வா' என, கூடத்தில் நுழையப் போனவள் ஒரு கணம் நிதானித்து பார்வையைச் சுழற்றினாள்.

வலப்பக்கம் மிஸஸ் வர்மா, மிஸஸ் ராவ், மிஸஸ் ஷ்யாம், ஒருபுது குண்டம்மா...கொஞ்சம் தள்ளி ராவ், ஷ்யாம், வர்மா சங்கர், கூடவே இன்னொரு மொழுக் மொழுக் ஆசாமி.

''சுஜா, மை ப்ரில்லியண்ட் ஜூனியர்... வா வா...''

வர்மா உற்சாகமாய் வரவேற்க அவள் அருகில் சென்றாள்.

''சுஜா, இவர்தான் மிஸ்டர் தேவதாஸ். திருச்சூர் டிம்பர் மர்சென்ட். கோயம்புத்தூர்ல புதுசா பர்னிச்சர் ஷோரூம் ஆரம்பிக்க நிலம் வாங்கி இருக்கறதும், கட்டடம், டெகரேஷன் எல்லாத்துக்கும் நாம் பொறுப்பெடுத்திருக்கறதும் உனக்குத் தெரியும். மிஸ்டர் தேவதாஸ், இது சுஜா... என் ஜூனியர்...''

சுஜா கை கூப்பினாள்.

''என்ன சாப்பிடறே? ஆஸ்யூஷுவல் ஆரஞ்ச் ஜூஸா?...'' வர்மா மனைவி பக்கம் திரும்பி, ''சாந்தா, சுஜா வந்திருக்கா பார்'' என்று குரல் கொடுத்தார்.

''ஹல்லோ சுஜா, ஏன் இவ்வளவு லேட்? சுருக்க வரக் கூடாதா? மிஸஸ்தேவதாஸை நீ இன்னும் மீட்பண்ணலியே! வா, அறிமுகப்படுத்தறேன். அவர் ஒரு ப்ரேஸ்லெட் போட்டிருக்கார் பாரு...''

அருகில் நின்ற சங்கரை நோக்கி, 'என்னைக் காப்பாற்றேன்' என்ற பார்வை ஒன்றை வீசிவிட்டு, சாந்தா வர்மாவுடன் சென்றவள் கையில் ஆரஞ்ச் ஜூஸ் க்ளாஸ் வைத்துக் கொண்டு, எப்போது இந்தக் கூட்டத்திலிருந்து தப்பித்து ஆண்கள் பக்கம் போகலாம் என்ற யோசனையுடன் நின்று கொண்டிருக்கையில் வெள்ளை சூட் அணிந்த அந்த நபர் உள்ளே நுழைய, பரபரப்புடன் வர்மா முன்னே சென்றார்,

முக்கியமான இரண்டு புது வாடிக்கையாளர்களுக்காக- இரண்டு பேரும் வெளியூர்வாசிகள் என்பதால் வர்மா மட்டும்அந்தந்த ஊர்களுக்குச்சென்று பேச்சுவார்த்தைகளை நடத்தி சந்தித்தவர்களுக்காக— கொடுக்கப்படும் பார்ட்டி இது என்பது சுஜாவுக்குத் தெரியும்.

ஒருவர்—தேவதாஸ், பார்த்தாகி விட்டது.

இவர்தான் அந்த இரண்டாவது நபரா?

பேர் என்ன?

ஓ! எஸ்.—வாசுதேவன்.

வாசுதேவனின் அறிமுகத்துக்காக சீக்கிரம் வர்மா தன்னைக் கூப்பிட்டுவிடுவார் என்றஎண்ணம் அப்பாடிஎன்ற நிம்மதியைக் கொடுக்க புதுசாகத் தான் வாங்கியுள்ள உயர் ஜாதி நாய்க்குட்டி பற்றி மிஸஸ் வர்மா செய்து கொண்டிருந்த வர்ணனையில் லேசாகத் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள சுஜா முயற்சித்தாள்.

## 2

“குட் ஈவினிங் மிஸ்டர் வாசுதேவன். வாங்க... வீட்டைக் கண்டுபிடிக்கிறது சிரமமா இல்லியே! ப்ளீஸ் கம் இன்... சாந்தாவை உங்களுக்குத் தெரியும். இவர் மிஸ்டர் தேவதாஸ். கேரளாலே பெரிய டிம்பர் மர்சென்ட். இது சங்கர், சுஜா... இங்க வா... மை ஜூனியர்ஸ்... மிஸ்டர் ராவ், மிஸ்டர் ஷ்யாம் என் சிநேகிதர்கள். இவர் மிஸ்டர் வாசுதேவன்... பாண்டிச்சேரிலே இவரைத் தெரியாதவங்க இருக்க முடியாது. பிரபலமான தொழிலதிபர்,



உற்சாகத்துடன் வரவேற்று நீளமாக வர்மா அறிமுகங்களைச் செய்ய, நிதானமாய் உள்ளே நடந்துவந்து ஒரு சின்ன முறுவலுடன் ஆண்களிடம் கை குலுக்கி, பெண்களைப் பார்த்துக் கை கூப்பியவரை சுஜா நிமிர்ந்து பார்த்தாள்.

நல்ல உயரம்.

ஆறடி நிச்சயம்.

விடாமல் டென்னிஸ் விளையாடும் பழக்கமிருக்குமோ? அதுதான் பலகை மாதிரி இத்தனை அகன்ற புஜங்களோ? கோட் அணிந்திராவிட்டால், வலது கையைப் பார்த்தே சொல்லிவிடலாம், இவர் டென்னிஸ் விளையாடுவாரா இல்லையா என்று—டென்னிஸ் தொடர்ந்து ஆடுபவருக்கு, வலக்கை. இடக்கையை விட ஒரு சுற்று பருமனாக, புஷ்டியாக இருக்கும்.

ஸப்போஸ், இவர் இடக்கை ஆட்டக்காரராக இருந்தால்?

என்ன அனாவசியமான ஆராய்ச்சி இது என்ற எண்ணம் தலைதூக்க, வாய் வரைக்கும் வந்துவிட்ட சிரிப்பை உள்ளே தள்ளியபடி சுஜா வந்தவரைத் தொடர்ந்து ஆராய்ந்தாள்.

தடிமனாய் கண்ணாடி.

மீசை, கீசை என்று இல்லாமல் மழமழவென்று ஷவரம் செய்யப்பட்ட முகம்.

காதோரங்களிலும், முன் நெற்றிலும் மறைக்கப்படாமல் ஓடிய நரை முடிகள், வயசு நாற்பத்தைந்துக்குக் குறைச்சல் இல்லை என்றன.

என்னவோ தெரியவில்லை, முதல் பார்வையிலேயே சுஜாவுக்கு வாசுதேவனைப் பிடித்துப் போயிற்று.

அவர் ஒரு பெரிய தொழிலதிபர், பரம்பரை பரம்பரையாய் பாண்டியில் வாழ்பவர், முந்திரி, சவுக்குத்தோப்புகள் ஏராள நூல் நூற்பு ஆலை ஒன்றுக்கும், அட்டைப் பெட்டிகளை செய்யும் தொழிற்சாலை ஒன்றுக்கும் அதிபதி.

பாண்டியில் ஒரு நூதன சூப்பர் மார்க்கட் கட்ட விரும்புவதால் வர்மா அண்ட் அஸோஸியேட்ஸுடன் தொடர்பு கொண்டிருக்கிறார் – என்ற விவரங்களால் மட்டுமல்லாது, அவரைப் பற்றின வேறு ஏதோ ஒரு விஷயம் தன்னைக் கவருவதை அவளால் புரிந்துகொள்ள முடிந்தது.

என்ன அது?

நிச்சயம் இந்த ஆஜானுபாகுவான உருவமோ, ரசனையுடன் அணிந்து கொண்டிருக்கும் உடைகளோ, அதி பணக்காரர் என்ற உணர்வோ, இதற்குக் காரணம் அல்ல.

அப்புறம்?

இந்த மாதிரி கண்டதும் பிடித்துப் போன அனுபவம் எப்போதாவது நிகழும் சமாசாரம் என்பதால், அவளுக்குள் ஆச்சர்யம் வேகமாய் எட்டிப் பார்த்தது.

பட்டியல் போட்டால் கல்லூரி நாட்களில் ஓரிரு நண்பர்கள், ஒரு புரொபஸர், சங்கர்— என்று முதல் சந்திப்பிலேயே அவளுடைய மதிப்பை காரணமில்லாமல் பெற்றவர்களின் லிஸ்ட் குட்டியாக முடிந்து விடும்.

இப்போது இந்த வாசுதேவன்.

என்ன இருக்கிறது இந்த வாசுதேவனிடம், அப்படி அலாதியாய், சட்டென்று மனலசத் தொடுவதாய்...

இன்னும் நாலு வார்த்தைகளை இவர் சேர்ந்த மாதிரி கூடப் பேசவில்லை... அப்புறம்?

நான் எதையும் சிந்தித்து ஆக்கபூர்வமாகச் செய்பவன் என்பதைத் தெரிவிக்கிற அந்த நிதானமா?

நான் படித்தவன்—விஷயம் தெரிந்தவன் என்று தம் பட்டம் அடிக்கும் அகல நெற்றியா?

கண்ணாடிகளுக்குப் பின்னால் தெரிந்த கண்களின் ஜொலிப்பா?

ஏன்ன?



எ...ன்...ன...?

திடுமென்று சுஜா தாக்கி வாரிப் போட தன்னை உலுக்கிக் கொண்டாள்.

என்ன ஆயிற்று எனக்கு?

சந்தித்து பத்து நிமிஷங்கள் கூட ஆகாத நபரை, இப்படிக் கூறு போட்டு அலசும் ஜாதி நான் இல்லையே...

மகா அசட்டுத்தனமாக என்ன சிந்தனை, என்ன ஆராய்ச்சி இது!

இடியாடிக்...

தன் மேலேயே எழுந்த எரிச்சலை மறைக்க வேண்டி, கையிலிருந்த க்ளாஸ் காலி ஆகிவிட்டதை நிரப்பும் சாக்கில் 'எக்ஸ்க்யூஸ் மீ' என்று முனகி, திரும்பி நடந்தாள்.

ஆரஞ்ச் ஜூஸை க்ளாஸில் நிரப்பினபின், சில நிமிஷங்களை வீடியோவில் ஓடிக்கொண்டிருந்த படத்தைப் பார்ப்பதில் கழித்துவிட்டு, ராவும், ஷ்யாமும் தீவிரமாக ஆந்திராவில் தெலுங்குதேசம் கட்சி ஆட்சியைப் பிடிக்குமா பிடிக்காதா என்ற சர்ச்சையில் ஈடுபட்டிருந்ததைக் கவனிக்கையில் நாலடி தள்ளி நின்று சங்கரிடம், வாசுதேவன் பேசியது தெளிவாகக் காதில் விழுந்தது.

''உங்க இரண்டு பேரைப் பற்றியும் மிஸ்டர் வர்மா ரொம்ப உயர்வா சொல்லி இருக்கார், மிஸ்டர் சங்கர். நீங்க...''

சங்கர் பணிவுடன் குறுக்கிட்டான்.

''மிஸ்டர் எல்லாம் எதுக்கு ஸார்? நான் உங்களைவிட ரொம்ப சின்னவன்...அடிக்கடி சந்திக்கப் போற நமக்கு நடுவிலே ஃபார்மாலிடி எதுக்கு?''

நின்ற இடத்திலிருந்து தலையைத் திருப்பாமல், பார்வையை மட்டும் சுழற்றியபோது வாசுதேவன் சங்கரின் தோளைத் தட்டிச் சிரிப்பது தெரிந்தது.

''ஓ. கே. ஆஸ் யு விஷ்...சொல்லுங்க, நீங்க படிச்சதெல்லாம் எங்கே? எப்ப வர்மாகிட்ட சேர்ந்திங்க?''

''நான் இந்த ஊர்க்காரன்தான் ஸார். ஏ. வி. காலேஜ்ல படிச்சேன். ஏழு வருஷம் முன்னால டிகிரியை முடிச்ச கையோட, மிஸ்டர் வர்மாகிட்ட ஜூனியரா சேர்ந்துட்டேன். அப்பாவும், மிஸ்டர் வர்மாவும் சினேகிதங்க. ஸோ, சுலபமா சேர முடிஞ்சிது.''

''மிஸ்டா வர்மா முதல்ல வேற யாரோடயோ பார்ட்னரா இருந்தார், இல்லே?''

''யூ ஆர் ரைட் ஸார். பத்து வருஷங்களா இவரும், மிஸ்டர் நாயர்னு இன்னொரு ஆர்கிடெக்டும் சேர்ந்து வேலை பண்ணாங்க. வர்மா அண்ட் நாயர் கேள்விப்பட்டிருப்பீங்களே...மவுண்ட் ரோட்ல இன்னிக்கு இருக்கிற பாதி தியேட்டர் காம்ப்ளெக்ஸ் பங்களூர்ல சில தியேட்டர்கள். பல மாடி கட்டிடங்கள் இவங்க கட்டினதுதான். தொழில்ல பேர் பிரமாதமா வந்தப்புறம் தனியா பிரிஞ்சிடலாம்னு தோணி, பிரிஞ்சிட்டாங்க. வர்மா அண்ட் அஸோஸியேட்ஸ் ஆரம்பிச்சது அப்புறம்தான்.''

''உங்க வேலை ஸ்வாரஸ்யமா இருக்கா சங்கர்?''

''ரொம்ப...''

''நீங்க மொத்தம் மூணு பேர்தானா? எல்லா வேலையும் கவனிக்கறது சிரமமா இல்லே?''

''சிரமமா? ஓ, நோ ஸார்...வி லவ் அவர் வொர்க்... மேற்பார்வைக்கு ஒரு என்ஜினியர் இருக்கார். மிஸ்டர் சுந்தர்ராமன். அவர் இன்னிக்கு ஊர்ல இல்லே; சொந்த வேலையா ஒரு வார லீவிலே போயிருக்கார்—நாலு சூப்பர்வைசர்ஸ், தவிர எங்களுக்குன்னு கண்ட்ராக்டர்ஸ், மத்தவங்களும் இருக்காங்க... நோ ப்ராப்ளம் அட் ஆல்... வேலை நிறையஇருக்கறதைத்தான் நாங்க விரும்பறோம்.''

''கட்டட உள் அலங்காரங்களையும் நீங்களே கவனிக்கறதா வர்மா சொன்னாரே!''



''எஸ் ஸார்...அது சுஜா டிபார்ட்மெண்ட்—அவ இன்டீரியர் டெகரேஷன்லே தனிப் பயிற்சி எடுத்தவ ..''

''ரியலி!''

''சுஜா எங்கே...நீங்க அவளை மீட் பண்ணிங்க இல்லே? சுஜா...ஹேய், கம் ஹியர். மிஸ்டர் வாசுதேவன் நம்ம வேலை ஸ்வாரஸ்யமானதா இருக்கானு கேட்டார். சொல்லட்டுமா எத்தனை ஸ்வாரஸ்யம்னு?''

இது என்ன சீண்டல்— என்கிற பாவனையில் வாசுதேவன் புருவங்களை உயர்த்த—

''சுஜா வேலைல ஒரு பிசாசு ஸார். அசுரத்தனமா பதினெட்டு மணி நேரம் வேலை செய்யறது சகஜம். இன்னிக்கு கூட இந்த பார்ட்டி இருக்கறதை மறந்து போய் ஆபீஸ்லியே உட்கார்ந்திருந்தவளை, பிச்சு இழுக்காத குறையா கிளப்ப வேண்டியிருந்தது.''

''ப்ச்...சங்கர்...'' சுஜா பெருமையுடன் அதட்ட, சங்கருடன் வாசுதேவனும் சேர்ந்து சிரிக்க, 'என்ன ஜோக், எனக்கும் சொல்லுங்க' என்றவாறு டெலிபோன் பேசச் சென்றிருந்த வர்மா அவசரத்துடன் வந்து சேர்ந்து கொண்டார்.

''ஸாரீ...மிஸ்டர் வாசுதேவன். பாம்பேலேந்து ட்ரங்கால்...லைன் சரியா கிடைக்கலை...பேசிட்டு வர நாழியாயிடிச்சி. உங்களுக்கு ட்ரிங்க் வந்ததா? விஸ்கி தானே? குட்... சாந்தா ஸ்னாக்ஸ் கொண்டு வரச் சொல்லுமா... தட்டெல்லாம் காலியா இருக்கு பார்.''

இரண்டு நிமிஷங்களில் வறுத்த முந்திரி, 'ச்சிஸ் துண்டங்கள் தட்டுக்களில் வந்தன.

வாசுதேவன் முன் முந்திரி தட்டை நீட்டியபோது சாந்தா பேசினாள்.

''மிஸஸ் வாசுதேவனை கூட்டிட்டு வருவீங்கன்னு நினைச்சேன்...''

“ஸாரிம்மா...நான் இங்கிருந்து அப்படியே டெல்லி போறேன். இனிமேதான் அடிக்கடி பார்க்கப் போறமே...”

சாந்தா சுஜா பக்கம் திரும்பினாள்.

“மிஸஸ் வாசுதேவனை நீ சந்திக்கணும், சுஜா...வெரி நைஸ் வுமன். போன தடவை இவர்கூட பாண்டிக்குப் போனப்ப சந்திச்சேன். மாளிகை மாதிரி வீடு. எல்லாம் மார்பிள். அடுத்த முறை அவங்க வீட்டு சாப்பாட்டைச் சாப்பிடப் போறப்போ இன்னொரு வயித்தை கடன் வாங்கிகிட்டுதான் போகறதா இருக்கேன். அடேயப்பா...என்ன சாப்பாடு, எத்தனை விதம்!”

தொடர்ந்து பேச்சு மிஸஸ் வாசுதேவன் அன்று அணிந்திருந்த ஒற்றைக்கல் வைர மோதிரம் பற்றியும் அவர்கள் வீடு, ஆள் அம்பு பற்றியும் நீண்டபோது சங்கர் கஷ்டப்பட்டு சிரிப்பை அடக்கிக் கொள்வது சுஜாவுக்குப் புரிந்தது.

அடுத்த ரவுண்ட் விஸ்கியை ஊற்றிக் கொண்டிருந்த போது ராம்ஜி—வர்மாவின் வக்கீல் நண்பர்—வேர்க்க விறுவிறுக்க வந்து சேர்ந்தார்.

“ஏன்யா இவ்வளவு லேட்? மீட் எவ்ரிபடி.”

அறிமுகம் ஆனது.

“இளம்பற சமயத்திலே ஒரு கேஸ். எங்க வேலைக்காரிக்குத் தெரிஞ்ச பொம்பளை அரளி விதையை அரைச்சு குழந்தைகளுக்குக் கொடுத்திட்டு, தானும் குடிச்சுட்டா. குழந்தைங்க போயிடிச்சி...தாய் பிழைச்சிகிட்டா. போலீஸ் கேஸ். காப்பாத்துங்கன்னு வேலைக்காரி கால்ல விழுந்து அழுதது பாவமா இருக்க, என்ன ஏதுனு விசாரிச்சிட்டு வந்தேன்.”

“குழந்தைகளுக்கு விஷம் கொடுத்து கொன்னுட்டாளா? என்ன அநியாயம் இது! காரணம் என்னவாம்?”

பேச சரியான விஷயம் கிடைத்த உற்சாகத்துடன் சாந்தா கேள்வி கேட்க, மற்ற பெண்மணிகளும் கிட்ட வந்து நின்று கொண்டார்கள்.



“வேற என்ன? வறுமைதான். அஞ்சுபசங்க.. புருஷன் கிடையாது. சாப்பாடு இல்லாத கொடுமையிலே இதுக்கு துணிஞ்சிட்டா.”

“பொறுப்பில்லாம பெத்துக்க வேண்டியது—அப்புறம் அவஸ்தைப்படவேண்டியது. ச்சேச்சே. மூளை இல்லாத ஜனங்க.” ராவ் சிடுசிடுத்தார்.

“அரசாங்கமும் கரடியாத்தான் கத்துது...இரண்டுக்கு மேல் வேணாம்னு. யார் காதுல வாங்கறாங்க? ஆபரேஷன் பண்ணிக்கறவங்களுக்கு பணம், துணி, அரிசி கொடுக்கறாங்க. கண்ல படற இடம் எல்லாம் சிகப்பு முக்கோணத்தை வரைஞ்சி வைச்சிருக்காங்க. இருந்தும் என்ன பிரயோஜனம்? எங்க போனாலும் ஜனசமுத்திரம்-மூக்கொழுகிற, அம்மணப் பசங்க...வறுமை. என்னிக்கு இந்த நாடு உருப்படுமோ? டிஸ்கஸ்டிங்.”

கோபத்துடன் பேசி ட்ரிங்கை பெரிய வாயாய் குடித்து ஒரு கை முந்திரியை வர்மா அள்ளிப் போட்டுக் கொண்டதும் முதல் முறையாய் சுஜா பேசினாள்.

“அரசாங்கம் இது விஷயமா ரொம்பப் பாடுபடறதா நீங்க சொல்றதை நா ஒப்புக்க மாட்டேன் ஸார்... பிரச்சாரம் வேணா நிறைய இருக்கலாம். ஆனா, இன்செண்டிவ் போதவே போதாது... அம்பதோ, அறுபதோ பணம், நூல் புடவை, கொஞ்சம் அரிசி... எல்லாமா எவ்வளவு ஆகும்? நூத்தி ஐம்பது ரூபா? இது ஒரு பெரிய கவர்ச்சியா? ஜே. ஆர். டி. டாட்டா, முன்னே ஒருதரம் ‘ஒரு ஏழைக் குழந்தை பிறந்து பெரியவனாகற வரைக்கும் அவனுக்காகச் செய்கிற சாப்பாடு, இதர செலவுகளை ரொம்பக் குறைச்சலா மதிப்பிட்டாகூட முப்பதாயிரம் ரூபாய்க்கு மேல ஆறது. இதை மனசுலே வைச்சுக்கிட்டு, குடும்பக் கட்டுப்பாடு பண்ணிக்கறவங்களுக்கு ஐயாயிரம் ரூபாய் பரிசு தர்றதா அரசாங்கம் அறிவிச்சா, எதிர்காலத்திலே செல

வழியப்போகும் பலஆயிரங்களை மிச்சப்படுத்தலாம். தவிர ஐயாயிரம் ரூபாய்னா அதுக்கு ஆசைப்பட்டுகிட்டு ஏழைங்க மட்டுமில்லாம, மத்தியதரக் குடும்ப ஆண், பெண்கள்கூட முன்னுக்கு வருவாங்க'னு சொன்னார். நிதானமா கணக்கு பண்ணிப் பார்த்தா இது இரண்டு பக்கத்துக்கும் எத்தனை நன்மை செய்யக் கூடிய யோசனைனு புரியும்... ஆனா அரசாங்கம் என்னிக்கு நல்ல விஷயங்களை உணர்ந்து ஏத்து கிட்டு இருக்கு; இதை ஆமோதிச்சு நடைமுறைக்குக் கொண்டு வர?''

''இந்த மாதிரி செய்திட்டா ஜனத்தொகை பெருக்கம் உடனே குறைஞ்சிடும்னு நீ நினைக்கிறியா சுஜா?''

''உடனே குறையாது... பட், இது ஒரு முக்கிய திருப்பமா அமையும். பணத்தைக்காட்டி விழிப்புணர்ச்சியை உண்டாக்கறது பெருமளவுக்கு உதவும். அப்புறம் சிங்கப்பூர்ல இருக்கற மாதிரி, இரண்டுக்கு மேல பெத்துக் கறவங்களுக்கு வேலை உயர்வு கிடையாது, போனஸ் கிடையாது'னு அரசாங்கம் கண்டிப்பா இருக்கணும்.''

வர்மா உரக்கச் சிரித்தார்.

''நீ சொல்றதை செய்தா ஓட்டு கிடைக்காது... எலக்ஷன்ல வின் பண்ணி ஆட்சியைப் பிடிக்க முடியாது.''

''ஆட்சியைப் பிடிக்கறது ஒண்ணுதான் குறியா ஸார்? நாடு, மக்கள் நலன், இதெல்லாம் வெறும் பேச்சுதானா?''

வேகமாக சுஜா தொடர்ந்து விவாதித்ததை சாந்தா குறுக்கிட்டு நிறுத்தினாள்.

''கடவுளே... இப்ப இந்த வேண்டாத பேச்செல்லாம் நமக்கு எதுக்கு? யார் தற்கொலை பண்ண முயற்சிச்சா, வதவதனு பெத்துகிட்டா நமக்கு என்ன? அந்தப் பேச்சை விடுங்க. மிஸ்டர் தேவதாஸ் முந்திரி எடுத்துக்குங்க. சங்கர் உன் க்ளாஸ் காலியா இருக்கே. ஸூப்பர்மேன் படம்



வீடியோலே போட்டிருக்கோம். நீங்க அதைப் பார்த்திருக் கீங்களா மிஸ்டர் வாசுதேவன்?''

சுருசுருவென்று நெஞ்சக்குள் கோபம் பிராண்ட, அந்தக் கும்பலில் இருக்கப் பிடிக்காமல் சுஜா மெள்ள நடந்து பால்கனிக்கு வந்தாள்.

நீல மெர்குரி விளக்கில் லானும், தோட்டமும் அழகாய் ஜொலித்தன.

மூச்சை நீளமாக இழுத்து, வெளியிட்டு எரிச்சலை அடக்க முயற்சித்த நொடியில் சன்னமாய் நாசியில் நைட் க்வீனின் மணம் ஏறியது.

கூடவே வேப்பம்பூவின் வாசனையும் கொஞ்சமாய்...

விழிகளை உயர்த்த, வெள்ளை வெளேரென்று தூரத்து வேப்பமரம் ஜல்லென்று பூத்திருப்பது தெரிந்தது.

கரும் பச்சை மரம், வெள்ளைப் பூக்கள்...

திடுமென்று சுஜாவுக்கு தான் சின்ன வயசில் சேலத்தில் வாழ்ந்த வீட்டின் நினைப்பு வந்தது.

அதிலும் இப்படித்தான் உசரமாய் ஒரு வேப்பமரம் இருக்கும். ராத்திரி நிலா வெளிச்சத்தில் பார்த்தால் தாட்டியாய் ஒரு பெண்மணி, கரும்பச்சை சேலையும் வெள்ளை ரவிக்கையும் அணிந்து நிற்கிற மாதிரி தோன்றும்.

மனசுக்குள் இளந்தென்றலாக வீசின சின்ன வயசு நாட்களை அனுபவிக்கிற தினுசில் சுஜா பின்னால் நகர்ந்து சுவரில் சாய்ந்து, கண்களை மூடிக்கொண்டாள்.

# 3

“நாங்கள்ளாம் பாண்டி விளையாடப் போறோம். வர்றியா, சுஜா?”

“ம்ஹூம்”

“ஏரோப்ளேன் பாண்டி—சுருக்கப் பழம் எடுத்திடலாம் வாயேன்.”

“நா வரலை.”

“சரி சோழி விளையாடலாமா?”

“நா எதுக்கும் வரலை கோமதி.”

“ஏன் வரலை?”

“விளையாடணும் போல இல்லே .. அதான்...”

“பொய் சொல்றாடி கோமதி—இவளுக்கு நம்ம கூட விளையாட இஷ்டம் இல்லே... அந்த தடிப்பசங்க கூப்பிட்டா ஓடுவா...”

பேசிய செல்வியை சுஜா முறைத்தாள்.

“என்ன முறைக்கறேடீ? நா சொல்றது நிஜம்தானே?”

எதற்கும் பதில் பேசாமல் சுஜா கையில் வைத்திருந்த காமிக்ஸ் புத்தகத்தில் கவனத்தைச் செலுத்த, கோமதி சலிப்புடன் திரும்பினாள்.



“நீ சொல்றது சரிதான் செல்வி... இவளுக்கு மனசுல தான் ரொம்ப இதுனு எண்ணம். கான்வெண்ட்ல படிக்க றோம்னு திமிர்...நம்ம கூட விளையாட இஷ்டம் இல்லாட்டி வரவேணாம்...அந்தப் பசங்க கூடவே விளையாடட்டும்...”

“நாதான் அப்பவே, அவ வேண்டாம்டீ...மஹா ராங்கி பண்ணிப்பா...கூப்பிட வேணாம்டீனு சொன்னேன் நீ காதுலே வாங்கிட்டாதானே...”

பேசிய செல்வி தலையை ஒரு தரம் நொடித்து “நாங்க வரோம்டீ...பெரிய மனுஷி...” என்று சொல்லிக்கொண்டு கிளம்ப, சுஜா “ஏய்” என்று குரல் கொடுத்தாள்.

“யாரடீ கூப்பிட்டே?”

“உன்னைத்தான்!”

செல்வி ஒரடி எடுத்து வைத்து அருகில் வந்தாள்.

“என்னடீ?”

“வார்த்தைக்கு வார்த்தை டீ போட்டுப் பேசாதேனு சொல்லியிருக்கறது மறந்து போச்சா?”

.........

“நா என்ன உன் வீட்டு வேலைக்காரியா, டீ டீன்னு சொல்றத்துக்கு? ம்...?”

“வேலைக்காரியத்தான் டீ போடணுமா? ஸ்னேகிதங் களை டீ போடக் கூடாதா?”

“எனக்கு அந்த மாதிரி ஸ்னேகிதம் வேணாம். சொல்லச் சொல்ல இன்னொரு தரம் வாடி, தோண்டினு சொன்னே, வாய்ல பட்டுனு போட்டுடுவேன், புரியுதா?”

எதுவும் பேசத்தெரியாமல் பேந்தப் பேந்த செல்வி விழித்துவிட்டு ஏகத்துக்கு அவமானப்படுத்தப் பட்டுவிட்ட நினைப்பில் கண்களைக் கலக்கிக் கொண்டு வேகமாகத் திரும்பி ஓட—

அவளையும், படி இறங்கிச் செல்லும் மற்ற பெண்களையும் நிமிர்ந்து பார்க்கையில் நமநமவென்று சுஜாவுக்குள் எரிச்சல் மூண்டது.

வழிய வழிய எண்ணெய் தடவி, நுனிவரைக்கும் ரிப்பன் வைத்துக் கட்டிய பின்னல்கள், கனகாம்பரமும் அரளியும் ஆக்ரமித்த கதம்பம், சரியாக நீவி உலர்த்தாமல் சுருக்கஞ் சுருக்கமாய் இருந்த பாவாடை, சட்டை, முகத்தில் இந்த வயசிலேயே ஊர்ப்பட்ட வம்புக்களை...

எதிர் வீட்டு மாமா ஊர்ல இல்லாதப்ப அந்த மாமியப் பார்க்க சீனு மாமா ஏன் அடிக்கடி போறா டீ?

நேத்திக்கு கோவில்ல ஒரு இருட்டு மூலைல கோதண்டமும், மூணாவது வீட்டு ஆண்டாளும் நின்னுட்டு இருந்தாங்க...' என்னைப் பார்த்ததும் அவசரமா ஆண்டாள் பிரகாரம்' சுத்த ஆரம்பிச்சா...மூலைல நின்னுக்கிட்டு என்னடீ செஞ்சிட்டிருந்தாங்க?

அந்த ரங்கநாயகி டீச்சர் ரொம்ப மோசம்டீ...மார்த் தாவணி விலகிப் போறது கூடத் தெரியாம, ட்ராயிங் மாஸ்டரோட கதையளந்துகிட்டு நிக்கறாங்க.

அப்பப்பா...வம்பு...வம்பு...ஒன்பது வயது முடியவில்லை; அதற்குள் பெரிய மனுஷிகள் மாதிரி இந்தக் கோடிக்கு அந்தக் கோடி வாய் நீண்டது. நாக்கு ஓயாமல் அல்லாடியது.

இந்தக் கும்பலைக் கண்டால் ஏனோ சுஜாவுக்குக் கட்டோடு பிடிப்பதில்லை. அன்றுதான் என்றில்லை, நினைவு தெரிந்த நாளாய் இந்த அருவருப்புதான்.

ஐந்து, ஆறு வயசு வரை இவர்களைத் தவிர்க்க முடியாமல், எதிர் வீட்டு, பக்கத்து வீட்டுக் குழந்தைகள் என்ற நெருக்கத்தின் காரணமாய் பழகினாலும், ஏழு வயசு பூர்த்தி ஆவதற்குள் விவரிக்கத் தெரியாத ஒரு இருப்புக் கொள்ளாமை அவளுள் சின்னதாகத் துளிர்த்து, நாளாக ஆக பெரிசாய் வளர்ந்து படர்ந்தது நிஜம்.



கோடு கிழித்து, சில்லி எறிந்து, தாண்டிக் குதித்து, ரைட்டா, ரைட்டா, கேட்டு, பாண்டியில் பழம் எடுப்பதை விட, கோலிக் குண்டை ஆள்காட்டி விரலால் குறிபார்த்து அடித்து ஏகாம்பரத்தின் கோலியை உடைப்பதும், பலிஞ்சடுகுடு ஆடுவதும், மரத்தில் ஏறி ஆண் பிள்ளைகளுக்குச் சரியாய் மாங்காய் பறிப்பதும், பாவாடையை வழித்துக் கொண்டு ஓட்டப் பந்தயம் ஓடுவதும், அவர்கள் ஆடும் கிரிக்கெட் ஆட்டத்தை வேடிக்கை பார்ப்பதும் ரொம்ப இயல்பாய் வந்தது. ஏழு வயசில் அவள் அப்பா மகேந்திரன் 'இந்தப்பள்ளி வேணாம்மா—பிஞ்சிலே பழுத்த பழம் மாதிரி பேச்சும், சிந்தனையும் ஆயிடுது' என்று சொல்லி அப்போது அவள் படித்துக் கொண்டிருந்த பள்ளியிலிருந்து விலக்கி, ஊரின் உயர்வான கான்வெண்டில் சேர்த்தது, இந்த குணமாற்றத்துக்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

சுஜாவைப் பெற்றவரைப் பற்றி இங்கே கொஞ்சம் தனியாய் சொல்ல வேண்டும்.

மகேந்திரன் பட்டப்படிப்பு படித்தவர். உயரமாய் நெடு நெடுவென்று ஒல்லியாய் இருப்பார். சின்னதாகப் பேசவே தெரியாதவர். தலையைப் பின்னுக்குச் சாய்த்து, துடையில் தட்டிக்கொண்டு ஒரு சிரிப்பு சிரித்தால், தெருவில் நடந்து செல்பவர்கள் நின்று ஒரு பார்வை பார்த்து விட்டுத்தான் போவார்கள்.

மனுஷன் ஓர் அலாதி ரகம்.

சிலர் அவரை ஜாலியான பேர்வழி என்றார்கள். சிலர் முரடு என்றார்கள். இன்னும் நன்றாகத் தெரிந்தவர்கள் எதற்கும் அஞ்சாத சரியான ஆண் பிள்ளை என்றார்கள்.

மகேந்திரன், பார்வதம் தம்பதிக்கு பிறந்தது மூன்றும் பெண்கள். மூத்தவள் சுஜா. இரண்டாவது சந்திரிகா. கடைக்குட்டி மஞ்சுளா.

பார்க்க மட்டும் அல்லாமல், குணத்திலும் சுஜா அப்படியே அப்பாதான் என்று அந்தச் சின்ன வயசிலேயே எல்லாரும் சொன்னார்கள்.

மூத்தது பிள்ளையாக இருக்க வேண்டும் என்று மகேந்திரன் ஆசைப்பட்டாரோ, என்னமோ தெரியாது, ஆனால் சுஜாவை அவர் வளர்த்த விதம் ஒரு ஆண் குழந்தையை வளர்க்கிற மாதிரிதான் இருந்தது.

ஆறு மாசமே ஆன குழந்தையை உயரே தூக்கிப் போட்டு, முரட்டுத்தனமாய்ப் பிடித்தார்; ஒரு வயசு ஆனதும் 'பைக்' முன்னால் உட்கார வைத்துக்கொண்டு வேகமாய் முகத்தில் காற்று அடிக்க ஓட்டினார்; சரியாக மூன்றாவது வயசில் தோட்டத்தில் இருக்கும் கிணற்றில் ரப்பர் ட்யூபை மாட்டி பெண்ணை மிதக்கவிட்டு நீச்சல் கற்றுக் கொடுத்தார்.

''என்னங்க... என்னங்க'' என்று பர்வதம் பதறினால், சிரித்தார்.

''ஏன் பயந்து சாவறே? சுஜா நான் பெத்த குழந்தை இல்லியா? எனக்கு மட்டும் அக்கறை, பாசம் இல்லையா?'' என்றார்.

அடுத்துப் பிறந்த இருவரிடமும் ஏனோ மகேந்திரனுக்கு இத்தனை ஈடுபாடு இருக்கவில்லை. சுஜா தன்னைக் கொண்டு, அத்தனைக்கும் ரெடி என்று நின்று, மற்ற இரண்டும் அம்மாவைக்கொண்டு எதற்கும் 'வேணாம்பா...' என்று பயந்து ஒதுங்கியதாலா?...தெரியவில்லை.

மகேந்திரன் ஓரளவுக்கு பணக்காரர்தான். அப்பா வழியில் ஒற்றைப்பிள்ளை என்ற ஹோதாவில், சொந்த வீடு, ஜவ்வரிசி ஃபாக்டரி ஒன்று, கொஞ்சம் நிலம் என்று சொத்துப் படைத்தவர்.

அவருக்கு, தான் பெரிய படிப்புப் படித்து, கவர்மெண்டில் உசந்த உத்தியோகம் பார்க்கவில்லை என்பது கழுத்து வரை நின்ற குறை.



''நான்தான் டிகிரிக்கு மேலேபடிக்க முடியலை. அப்பா, 'என்னால முடியலை... வந்து பொறுப்பு எடுத்துக்க'னு நச்சரிச்சார். ஒத்தை பிள்ளையா மாட்டிக்கிட்டேன். அதுக்கு ஈடுகட்டற மாதிரி என் பெண்களை பெரிய, பெரிய படிப்பா படிக்கவைக்கப் போறேன். ஒருத்தி ஐ. ஏ. எஸ்., ஒருத்தி டாக்டர், ஒருத்தி என்ஜினியர்னு, எப்படி?'' என்று சதா பெருமையுடன் மீசையை முறுக்குவார்.

இந்த எண்ணத்தின் காரணமாகத்தான் சுஜாவுக்கு ஆறு முடிந்து, அவள் இரண்டாவது வகுப்பில் காலடி வைத்த போது 'தமிழ் மீடியம் வேணாம்மா... உன்னை உசத்தியா இங்கிலீஷ் மீடியத்துலே படிக்க வைக்கிறேன், மேல் படிப்புக்கு இங்கிலீஷ் ஞானம் ரொம்ப அவசியம்' என்று சொல்லி பள்ளியை மாற்றினார்.

இயற்கையில் கூடப் பிறந்திருந்த சுதந்திர, எதற்கும் பயப்படாத ஸ்வபாத்தோடு, அப்பாவின் ஊக்கமும் சேர்ந்து கொள்ள, அந்த வயசிலேயே சுஜா, தன் வயசு குழந்தைகளிடமிருந்து ரொம்ப மாறுபட்டு விளங்கியது, கண் கூடாக அனைவரும் பார்த்து, உணர்ந்த சமாசாரம்.

எட்டு வயசு முடிவதற்குள் கிரிக்கெட் ஆட மட்டுமின்றி கம்மெண்ட்ரி கேட்டு புரிந்து அனுபவிக்கவும், லீவு நாட்களில் அப்போவோடு தொழிற்சாலைக்குச் சென்று அங்கு நடக்கும்வேலையை ஆர்வத்துடன் கவனிக்கவும், அன்றாடம் பேப்பர் படிக்கவும் சுஜா பழகிவிட்டாள்.

அப்பாவுக்கு சரியாய், பேப்பரை கையில் வைத்துக் கொண்டு ரொம்ப எல்லாம் புரிந்த மாதிரி உட்கார்ந்திருப்பவளை, அல்லு அசல் ஆண்கள் கேலி பண்ணுவதுண்டு.

'என்ன புரியதுனு பேப்பரை கையிலே வைச்சிகிட்டு இருக்கே சுஜா?'

'கான்வெண்ட்லே படிக்கறேன்றத்துக்காக, இந்த வேஷமெல்லாம் எதுக்கு?'

'இத்தனுண்டு இருந்துகிட்டு இதுக்கு இருக்குற ஜம்பத்தைப் பாரேன்!'

எந்தப் பேச்சு காதில் விழுந்தாலும் அதைப் பற்றிக் கவலைப் படாமல் மகளைப் பார்த்து மகேந்திரன் இதமாய் புன்னகைப்பார்.

இந்தக் காதில் வாங்கி அந்தக்காதால் விட்டுவிடு என்று சைகை காட்டுவார்.

இல்லாவிட்டால், அவர்கள் பேசுவதற்காகவே செய்கிற மாதிரி, உள்ளூர் புத்தகக்கடைக்கு மகளை அழைத்துப்போய் காமிக்ஸ்,எனிட் பிலைடன் புத்தகங்களை வாங்கிகொடுத்து பெருமை முகத்தில் கூத்தாட நிதானமாய்ப் படி ஏறுவார்.

இதெல்லாம் போதாது என்று தோன்றிவிட்ட மாதிரி சுஜாவின் ஒன்பதாவது பிறந்த நாளுக்கு சைக்கிள் வாங்கிக் கொடுத்து தானே கிட்டத்தில் இருந்து பயிற்சி அளித்து, தினமும் சைக்கிளிலேயே அவள் பள்ளிக்குச் சென்று வரச் செய்தார்.

பார்வதத்துக்கு இதிலெல்லாம் துளியும் விருப்பம் இல்லை.

ராத்திரி தனிமை கிடைக்கும் போதும், புருஷன் சந்தோஷ 'மூடி'ல் இருக்கும் போதும் மெல்லப் பேசினாள்.

'பெண்ணை பெண்ணா வளர்க்கணுங்க— இல்லேன்னா நாளைக்கு அவதான் கஷ்டப்படுவா' என்றாள்.

'அண்ணன் வந்திருந்தார். ஆம்பளையாட்டம் சுஜாவை வளக்கறியேம்மா, என் மகனுக்கு அவ அடங்கி இருப்பாளா? சந்தேகமா இருக்கும்மா'—ன்னார்' என்றாள்

'கான்வெண்டுலே படிக்க வைக்கறீங்க. சரி. அதுக்காக முடியை வெட்டிக்கணுமா? சைக்கிள்ள போகணுமா? ஆம்பிளை பசங்களோடதான் விளையாடணுமா? கொஞ்சம் கண்டிங்க. நீங்க கொடுக்கற எடம், அவ என்னை லட்சியமே



பண்ண மாட்டேங்குறா' என்றாள். அத்தனையும் கேட்டுவிட்டு மகேந்திரன் தலையைப்பின்னுக்குச் சாய்த்து உரக்கச் சிரித்தார். அவ்வளவுதான். மிஞ்சிப் போனால் 'போடி பைத்தியம்' என்றார்.

அவருடைய எதிர்பார்ப்புகளை ஒருதரம்கூடப் பொய்க்காமல் வளர்ந்த சுஜா, பாடங்களில் முதல்,பேச்சுப்போட்டிகளில் முதல், என்பதோடு விளையாட்டிலும் புலிக்குட்டியாக ஜொலித்தாள்.

பதினோரு வயசுக்குள் அவள் வாங்கி வந்த மெடல் கப், புத்தகங்களால் அலமாரியின் ஒரு தட்டு நிறைந்து போனது மட்டுமல்லாமல்,

மூளையைக் கசக்கி விளையாடும் செஸ் விளையாட்டிலிருந்து, டேபிள் டென்னிஸ் வரை அவளை அடித்துக் கொள்ள ஆள் இல்லை என்பதுகூட ஸ்திரமானது.

இந்த சமயத்தில்தான் யாரும் கொஞ்சம்கூட எதிர்பார்க்காத தினுசில் மகேந்திரன் அகாலமாய் உயிரை விட்டார்.

உயிரை விட்டார் என்று சொல்வதைவிட உயிர் அவரிடமிருந்து வலுக்கட்டாயமாகப் பிடுங்கப்பட்டது என்று சொல்வது நியாயம்.

சும்மா இருந்த ஒரு நாளில் சேலத்திலிருந்து ஐம்பது கிலோ மீட்டர் தள்ளி உள்ள ஆத்தூருக்கு நாற்பது நிமிஷத்தில் சென்றதாக நண்பர் ஒருவர் பீற்றிக் கொள்ள 'அ— நாற்பது நிடிஷம் எதுக்கு? நான் இருபது நிமிஷத்துலே போய்க் காட்டறேன்' என்று மகேந்திரன் பதில் கூற, ரோஷம் பொத்துக் கொண்டுவிட்ட ரீதியில் நண்பர் 'சரி— அப்படி நீ மட்டும் போயிடு— நான் உனக்கு ஆயிரம் ரூபா தந்திடறேன்' என— சும்மாவே குதிக்கும் ஆத்மா மகேந்திரன்; சவால் வேறு விட்டால் கேட்க வேண்டுமா? சிலிர்த்து எழுந்து விட்டார்.

நாள் குறிக்கப்பட்டது.

ஒரு நண்பர் ஷேலத்தில் நின்று நுவக்க மணியைக் குறித்துக்கொள்ள, ஆத்தூரை அடையும் நேரத்தை சரியாக கணக்கெடுக்க இன்னொரு சினேகிதர் முன்கூட்டியே புறப் பட்டுப் போய் தயாராக நின்றார்.

சொன்னபடி மகேந்திரனும் கிளம்பினார்.

ஜிவ்வென்று நூறு, நூத்திப்பத்து கிலோ மீட்டர் அனாவசியமாய் ஓட்டிப் பழகின எனக்கு இந்தப் பந்தயம் நொள்ளிக்காய்—என்று அவர் நினைத்தது, சேஷஞ்சாவடி கிராமத்தைத் தாண்டின கையோடு எதிரில் வந்த லாரியின் மூலம் பொய்த்துப் போயிற்று.

ஹெட்—ஆன்—கொலிஷன்.

என்ன, ஏது என்று புரிவதற்குள் மகேந்திரன் அவுட்.

அப்பாவின் பிணம் துண்டு துண்டாய் மூட்டையில் கட்டப்பட்டு வீட்டுக்குக் கொண்டு வரப்பட்டபோது, பெரியவளாகி ஒரு மாசமே ஆன சுஜாவுக்கு வயசு சரியாக பதினாலுதான்.

# 4

அன்றைக்கு சுஜா கல்லூரியிலிருந்து திரும்பியபோது பர்வதம் எக்கச்சக்க கோபத்தில் இருந்தாள்.

வராந்தாவில் ஏறி, செருப்பை உதறின நிமிஷத்தி லேயே இன்றைக்குச் சரியான சண்டைதான் என்பது சுஜா வுக்குப் புரிந்துபோனது.

கூடத்து சோபாவில் உட்கார்ந்திருந்த மாமாவையும் குறுக்கும் நெடுக்கும் நடந்து கொண்டிருந்த அம்மாவையும் நிமிர்ந்து பார்த்துவிட்டு நிதானமாய் உட்பக்கமாக அவள் நடக்கவும், ‘‘பார்த்திங்களாண்ணே? நாம இரண்டு பேரும்



குத்துக் கல்லாட்டம் உட்கார்ந்துகிட்டு இருக்கிறதை இவ லட்சியம் பண்ணினாளானு பார்த்திங்களா? அவுரு கொடுத்துவளர்த்த எடத்தால நான் இன்னிக்கு அவமானப் பட வேண்டியிருக்கு'' என்று பர்வதம் உரக்கப் புலம்ப, நாலடி வைத்த சுஜா நின்றாள். அம்மா பக்கம் திரும்பி னாள். என்னம்மா இதெல்லாம் என்பது போல ஒரு பார்வை பார்த்தாள்.

‘‘செய்யறதையும் செஞ்சிட்டு முறைச்சா ஆச்சா? இந்த முறைப்புக்கெல்லாம் நான் பயப்பட மாட்டேன், தெரிஞ்சிக்க.''

எதையும் தெளிவாகக் கூறாமல், அம்மா குற்றம் சாட்டுவது எரிச்சலை உண்டாக்க சுஜா புருவங்களை உயர்த்தினாள்.

‘‘நான் என்ன செஞ்சிட்டேன்னு நீங்க இத்தனை கோபப் படறீங்கம்மா? மாமாவும், நீங்களும் ஏதோ முக்கியமான விஷயத்தைப் பத்தி பேசிட்டு இருக்குற மாதிரி பட்டுச்சு. டிஸ்டர்ப் பண்ண வேணாம்னு உள்ளே போனேன். இது தப்பா?''

‘‘தப்பில்லேடிம்மா... தப்பே இல்லே. நீ எது செஞ்சு நான் தப்புனு சொல்லி ஒத்துக்கிட்டு இருக்கே. செல்லம் குடுத்து வளர்க்காதிங்க; பொம்பளை குட்டிக்கு இத்தனை செல்லம் கொடுத்து வளர்க்காதிங்கனு முட்டிக்கிட்டேன். கேட்டாரரா? அவுரு மகராஜனா போய்ச் சேர்ந்திட்டார். நான் இல்லே பொறுப்பைச் சுமக்கறேன்.''

கண்களிலிருந்து நீர் கோடு போட்டுக்கொண்டு இறங்க, பேசிய பர்வதம் நாற்காலியில் உட்கார்ந்து தலையை கையில் தாங்கிப் பிடித்தாள்.

இப்போது சுஜாவுக்குள் வாஸ்தவமாகவே கோபம் உற்பத்தி ஆனது.

என்ன நடந்து விட்டதென்று இந்த அம்மா இத்தனை பேச்சு பேசுகிறாள்?

''சம்பந்தா சம்பந்தம் இல்லாம பேசினா, எனக்கு கோபம் வரும்மா. எதுக்காக இப்ப அப்பாவ நம்ம பேச்சிலே இழுக்கறீங்க? சொல்லறதை விளக்கமா சொன்னாப் புரியும். அதை விட்டுட்டு...''

''நீ, சும்மா இரு பார்வதம்... நான் இவளோட பேசிக்கறேன்'' தங்கையை அடக்கிய புருஷோத்தமன் மருமகள் பக்கம் திரும்பினார்.

''விளக்கமாத்தானே சொல்லணும்? நான் சொல்றேன் முதல்ல என் கேள்விக்கு நீ பதில் சொல்லு. முந்தா நாள் என்ன நடந்துச்சு?''

முந்தா நாளா?

என்ன?

''ஏண்டி இப்படி செஞ்சேன்னு கண்டிச்சு கேட்காம, என்ன நடந்திச்சுனு நிதானமா கேட்கறீங்களே...இவளா சொல்லுவா? அழுக்கு, சரியான அழுக்கு.''

அம்மாவின் புலம்பலும், மாமாவின் குதர்க்கப் பேச்சும் எரிச்சலை இன்னும் அதிகமாக்க இவர்களோடு என்ன பேச்சு என்கிற பாவனையில் சுஜா சும்மா இருக்க முயன்றாள்.

''சொல்லு, சுஜா.''

''என்ன சொல்லணும்?''

''முந்தா நாள் என்ன நடந்திச்சு?''

''எத்தனையோ நடந்திச்சு...நீங்க எதைகேக்கறீங்க?''

''பார்த்திங்களாண்ணே? அம்மாடி, வாயைத் திறந்தாலே எடக்குப் பேச்சுதான். இவளை வைச்சுகிட்டு நான்' என்ன செய்யப் போறேனோ, தாயே மாரியம்மா!''



''அடடா—நீ சும்முனு இருக்க மாட்டியா பார்வதம்? நான் ஒருத்தன் பெரியவனா இல்லே? எதுக்குக் கலங்கறே? சுஜா, என்னைப்பாரு. முந்தா நாள் சாயங்காலம், பஸ் ஸ்டாண்டுலே மூர்த்தியை நீ அடிச்சியாமே, நிஜம்தானா?''

ஓ! விஷயம் இங்கு வருகிறதா?

இவர்கள் காதுக்கு எட்டிவிட்டதா?

அதுதான் இத்தனை கோபமா?

''ஆமா, அடிச்சேன்.''

''ஐயோ.. ஐயோ! ஒரு கூச்ச நாச்சம் இல்லாம எப்படி ஒத்துக்கறா பாருங்கண்ணே!''

''ஏன் அடிச்சே! ஆம்பளையை நாலு பேர் முன்னால, கை நீட்டி அடிக்கறது அசிங்கம் இல்லே? தப்பு இல்லே?''

''அவன் நாகரீகக் குறைவா நடந்துக் கிட்டது மட்டும் அசிங்கம் இல்லியா? தப்பு இல்லியா?''

''அப்படி என்ன செஞ்சிட்டான்?''

''பத்து நாளாவே ரொம்ப என் வழிக்கு வந்து கேலி செஞ்சான். பஸ் ஸ்டாப்புலே நின்னுகிட்டு கண்டபடி பேசினான். விஸில் அடிச்சான். முறைச்சேன். புரிஞ்சிப்பான்னு நினைச்சேன். மடையன்; புரிஞ்சிக்கலை. முந்தா நான் காலேஜ்லேந்து திரும்பி வர்றப்ப,இரண்டு சகாக்களையும் சேர்த்துக்கிட்டு பக்கத்துல வந்து நின்று 'ஓஹோ எந்தன் டார்லிங்...இங்கு வாராய் எந்தன் டார்லிங்'னு கண் அடிச்சுப் பாடினான். தாங்க முடியாம போயிடிச்சு... 'படவா ராஸ்கல் யாருக்கு யார்டா டார்லிங்'னு கேட்டு, கன்னத்துலே நல்லா ஒண்ணு கொடுத்தேன்.''

பர்வதம் ஆவேசத்துடன் தலையில் ஓங்கி அறைந்து கொண்டாள்.

''ஏண்டி நீ பொம்பளைதானா? இல்லே வேறஏதாவது ஜன்மமா, ம்? ஆம்பிளைனா அப்படித்தான் கேலி பண்ணுவான். அதுசகஜம்; வயசுக் கோளாறு தலையைக் குனிஞ்சுகிட்டு நீ பாட்டுக்கு வராம...''

''நான் ஏம்மா தலையக் குனிஞ்சுகிட்டு வரணும்? நான் என்ன தப்புப் பண்ணினேன்? அவன் பொறுக்கித்தனமா நடந்துகிட்டதுக்கு, தண்டனை கொடுத்ததும், வாலை சுருட்டிக்கிட்டு போயிட்டானே! இரண்டு நாளா ஆளோட அட்ரஸே இல்லே, தெரியுமா?''

''வாலை சுருட்டிக்கிட்டு போனானோ, இல்லே நம்ம குடும்ப மானத்தை சுருட்டிக்கிட்டு போனானோ...தெருவே சிரிக்குது தெரியுமா?''

''சிரிக்குதா? யாரைப் பார்த்து?''

''உன்னையும் என்னையும் பார்த்துத்தான்... 'பொம்பளையா இவ?'னு கேட்கறாங்க... இந்த ராட்சஸியை நீயா பெத்தேனு இடக்கா கேக்கறாங்க.''

''கேட்கட்டும் இந்தக் காதுல வாங்கி அந்தக் காதால விட்டுடுங்க.''

''அம்மாடி... நீ உங்க அப்பாவுக்கு தப்பாத பொண்ணுதான் டி...நான் ஒத்துக்கறேன்...நான் ஒத்துக்கறேன்.''

''பொண்ணுக்கு தன்னைக்காப்பாத்திக்க இந்த மட்டுக்காவது துணிச்சல் இருக்குதேனு சந்தோஷப்படாம, என்னம்மா நீங்க ..''

''வேணாம் சுஜா. சத்தியமா இந்த மாதிரி சந்தோஷம் எல்லாம் எனக்கு வேணாம். பொம்பளைக் குழந்தைகளை காலா காலத்துல கட்டிக்கொடுத்து, அதுங்க புருஷன், குழந்தை குட்டியோட வாழறதைப். பார்க்கறதுதான் எனக்கு சந்தோஷம். அதான் மாமாவுக்கு ஆள் அனுப்பி வரவழிச்சிருக்கேன்.''

சுஜா எதுவும் பேசாமல் மாமாவை ஏறிட்டாள்.



''ஆமா, சுஜா. வரவர உங்கம்மாவுக்கு துளின்னா படபடப்பு வந்துடுது. உங்கப்பா தவறிப் போனதுலேந்து அவளால எதையும் சாதாரணமா எடுத்துக்கத் தெரியலை. இன்னிக்கு ஆள் வந்து 'உடனே வரச் சொன்னாங்க'னு சொன்னதும் என்னவோ ஏதோனுதான் நான் ஓடிவந்தேன். உன்னைக் கட்டிக் கொடுத்துட்டா, தன் பொறுப்பு குறைஞ்சிடும்னு அவ நினைக்குறா. அதுலே ஒண்ணும் தப்பு இருக்கறதா எனக்குத் தோணலை.''

சுஜா நாற்காலியின் விளிம்பை கையில் அழுந்தப் பிடித்துக்கொண்டாள்.

'எல்லாரும் அவங்க அவங்க வேலையப் பார்த்துகிட்டு போங்க. எது நல்லது, எது கெட்டதுனு எனக்குத் தெரியும். அனாவசியமா என் வழியிலே யாரும் குறுக்கிடாதீங்க' என்று கத்த எழுந்த வேகத்தை பிரயத்தனப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

''படிச்சு நீ என்னத்தை சாதிக்கப் போறே சுஜா? முறைப் பையன் காத்துகிட்டு இருக்குறப்ப, இனியும் படிக்க வைக்கறது தேவையில்லேனே எனக்குத் தோணுது. மாமாவும் என் பேச்சை ஒத்துக்கிடறார். சட்டுபுட்டுனு உன்னை சுகுமார் கையிலே ஒப்படைச்சிட்டா நான் நிம்மதியா இருப்பேன்.''

சுகுமார்...

எஸ்.,எஸ். எல். ஸி. ஐ முடிக்க துப்பில்லாத சுகுமார்.

கறுப்பாய், இந்தச் சின்ன வயசிலேயே தொந்தியும் தொப்பையுமாய் இருக்கும் சுகுமார்.

இலை நிறைய சோற்றை மலைபோல குவித்துக் கொண்டு குழம்பை ஊற்றி பெரிய பெரிய உருண்டைகளாக உருட்டி வாயில் திணித்து, ஹாவ் என்று சப்தமாய் ஏப்பம் விடும் சுகுமார்.

நோ... நோ... நோ...

உள்ளுக்குள் கன்ற கோபத்தின் காரணமாய் கண்களில் துளிர்த்த நீரை அடக்க, ஒருதரம் சுஜா எச்சிலைக் கூட்டி விழுங்கினாள்.

''ஒண்ணுமேயில்லாத விஷயத்துக்காக நீங்க உங்களை வேதனைப்படுத்திக்கிட்டு, என்னையும் குழப்பறீங்கம்மா. நான் முர்த்திய அடிச்சது உங்களுக்கு தப்புனு தோணுது. விஷயம் அதானே? சரி. தப்புதான் நா ஒத்துக்கறேன். இனியும் இன்னொரு தரம் இந்த மாதிரி சம்பவம் நடக்காம பார்த்துக்கறேன், போதுமா? தயவு செஞ்சி கல்யாணம் அது, இதுனு மட்டும் பேசாதீங்க. இப்போ கல்யாணப் பேச்சை எடுக்க வேண்டிய அவசியம் என்னம்மா? பி.யூ.ஸி. கோர்ஸையே இன்னும் நான் முடிக்கலை. ப்ளீஸ்ம்மா... புரிஞ்சிக்கங்க.''

''படிக்கணும், படிக்கணும்னு ஆசைப்படறியேனுதான் பி.யூ.ஸி. சேர, சரினுசொன்னேன். ஆனா பொழுதுவிடிஞ்சு நித்தமும் நீ இப்படியொரு வம்பை இழுத்துக்கிட்டு வந்தா கல்யாணத்தைப்பத்தியோசிக்காமநான் என்னசெய்யறது?''

''உங்கம்மா சொல்றது நியாயம்தானே சுஜா? படிச்சு என்ன பண்ணப் போறே? சுகுமார் உன்னளவுக்குக்கூட படிக்கலை, அப்புறம் நீ மட்டும் எதுக்காகப் படிக்கணும்? எனக்கு என்னமோ நீ காலேஜ் சேர்ந்ததுலியே விருப்...''

புருஷோத்தமன் பேசிக் கொண்டிருக்கையிலேயே அவர் பேச்சை காதில் வாங்கப் பிடிக்காதது போல சுஜா குறுக்கே புகுந்து அம்மாவிடம் ''திரும்பத் திரும்ப சொன்னதையே சொல்லிக்கிட்டு இருக்க எனக்கு இஷ்டம்இல்லேம்மா இனி இந்த மாதிரி இன்னொரு முறை நடக்காதுனு நான் சொல்லிட்டேன், இல்லே? தயவு செஞ்சி இந்தப் பேச்சை இதோட நீங்களும் விடுங்க'' என்றவள், இது அம்மாவுக்கும் பெண்ணுக்கும் இடையில் நடக்கும் சமாசாரம், உங்களுக்கு சம்பந்தம் இல்லாதது என்பது போல அழுத்தமாக மாமாவை ஒரு தரம் பார்த்துவிட்டு, வேகமாகத் திரும்பி உள்ளே போனாள்.



அந்தத் தீர்மானமான பேச்சும், பார்வையும் அடி வயிற்றில் ஒரு சங்கடத்தை உண்டாக்க, புருஷோத்தமன் புருவங்களை நெறித்தார். மீசையைத்திருகிவிட்டுக் கொண்டார். கொஞ்சம் யோசித்தார்.

அப்புறம் தங்கை பக்கம்திரும்பி மெதுவாகப் பேசினார்.

''இவ பேச்சும் போக்கும் அலாதியா வேற ஒரு பாதைல போற மாதிரி எனக்குப் படுது பர்வதம். புருஷனுக்கு அடங்கி இவ அமைதியா குடுத்தனம் பண்ணுவான்னு உனக்குத் தோணுதா? எனக்குத்தோணலை. உன்னை காப்ரா படுத்தறேன்னு நினைக்காதே... இன்னிக்கு கண்டிக்க வேண்டிய சமயத்திலே விட்டுட்டு, நாளைக்கு அவஸ்தைப் படப் போறேன்னு உள்ளுக்குள்ளே ஏதோ சொல்லுது. நான் சொல்லறதைச் சொல்லிட்டேன். இனிமே அம்மா பாடு, பெண்ணு பாடு. சரி, நான் புறப்படட்டுமா?''

# 5

''அம்மா...''

''......''

''அம்... மா...''

''ம்?''

''தூங்கறீங்களா?''

''தூங்கறவளை எழுப்பிட்டு, தூங்கறியானு கேட்டா என்ன அர்த்தம்?''

''உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்மா.''

“பேசறத்துக்கு நல்ல நேரம் பார்த்தே, சுஜா! பகலெல்லாம் நான் எங்கப் போயிட்டேன்! இங்கதானே இருக்கேன். அப்ப பேசக் கூடாதா? ராத்திரி பதினோரு மணிக்கு தூங்கிக்கிட்டு இருக்கறப்ப எழுப்பி உன்கூடப் பேசணும்னு சொல்லணுமா? நல்ல பொண்ணு நீ . . ”

“ஸாரிம்மா... பகலெல்லாம் சந்திரிகாவும், சியாமளாவும் கூடவே இருந்தாங்க. அவங்க தூங்கட்டும், அதுவரைக்கும் படிக்கலாம்னு உட்கார்ந்தேன். பதினோரு மணி ஆனது தெரியலை,”

“சரி... சரி... என்ன விஷயம்? எதுக்கு எழுப்பினே?”

“ரிஸல்ட் வந்த இந்த இரண்டு நாளாகவே உங்ககிட்ட சொல்லணும்னு ஆசை; நேரம் கிடைக்கலைம்மா.”

“இப்பத்தான் நேரம் கிடைச்சிருக்கே சொல்லேன்!”

“நான் ஃபர்ஸ்ட் க்ளாஸ்லே பாஸ் பண்ணதைக் குறிச்சி எங்க லெக்சரர் ரொம்ப பெருமை பட்டுகிட்டாங்கம்மா. இந்த வருஷம் எங்க காலேஜ்ல நான் ஒருத்திதான் ஃபர்ஸ்ட் க்ளாஸ் வாங்கி இருக்கேன். ராங்க் கண்டிப்பா வரும்னு காலேஜுக்கு முந்தாநாள் போனப்ப சொன்னாங்க.”

“சரி, அதுக்கு என்ன இப்ப?”

“அப்பா இருந்திருந்தா ரொம்ப சந்தோஷப்பட்டிருப்பார் இல்லேம்மா?”

“ஹும்... அதுக்கெல்லாம்தான் நமக்குக் கொடுத்து வைக்கலியே. ராஜாவாட்டம் மனுஷனை நிமிஷத்துலே வாரிக் கொடுத்துட்டு நாம மட்டும் நிக்கறோமே..”

பேச்சு திசை மாறுவதைப் புரிந்து கொண்டு சுஜா அவசரமாய்ப் பேசினாள்.

“அப்பாக்கு நான் நல்லா படிக்கணும்னு ரொம்ப ஆசை. வாய்க்கு வாய் பெரிய படிப்பா படிச்சி ஓஹோனு வரணும்னு சொல்லுவாரே—நினைப்பு இருக்காம்மா?”



மகள் என்ன கூற வருகிறாள் என்பது கொஞ்சமாகப் புரிந்த நிலையில் பர்வதம் கண்களை இடுக்கிக்கொண்டு மௌனித்தாள்.

“அப்பாவுக்கு நான் பெரிய படிப்பா படிக்கணும்னு ஒரே ஆசை, இல்லியாம்மா?”

சொன்னதையே இரண்டாவது தரமும் சுஜா கூறியதும் தூக்கக் கலக்கம் அறவே நீங்கியவளாய் பர்வதம் முன்னால் சாய்ந்தாள்.

“இப்ப அதையே இந்த அர்த்தராத்திரி நேரத்திலே நீ ஏன் கிளிப்பிள்ளை மாதிரி திரும்பத் திரும்பச் சொல்லிக்கிட்டு இருக்கே?”

சுஜா நீளமாக மூச்சை உள்ளுக்குஇழுத்து, அம்மாவைத் தீர்க்கமாகப் பார்த்தாள்.

“மேலே படிக்க நான் விருப்பப் படறேம்மா...படிப்பை பி. யூ. ஸி. யோட நிறுத்த எனக்கு இஷ்டம் இல்லே...”

“எ...என்னது . என்னது?”

“பதட்டப்படற மாதிரி நான் ஒண்ணும் சொல்லலியேம்மா . அப்பா ஆசைப்பட்ட ரீதியிலே நல்லா படிச்சு பெரிய உத்யோகம் பார்க்கவிரும்பறேன், அவ்வளவுதான்.”

“அப்பா ஆசைப்பட்ட மாதிரி...படிச்சு. உத்யோகம் பார்க்கப் போறியா? தூங்கிட்டு இருந்தவளை எழுப்பி இந்த வார்த்தையைச் சொல்லணும்னா உனக்கு எத்தனை திமிர் இருக்கணும்? ம்?”

“இதுலே திமிர் எங்கேயிருந்து வந்ததும்மா அப்பா விரும்பினதை, நான் நிறைவேத்த முனையறேன்... அதானே?”

“ஆனா, நான் விரும்பலியே...”

“ஏன்னம்மா நீங்க?”

''ஆமா சுஜா, உங்கப்பா ஆயிரம் சொல்லி இருக்கலாம் ஆனா போய்ச் சேர்ந்திட்டாரே! இப்ப ஒண்டியா மாட்டிக் கிட்டு அவஸ்தைப்படுறது யாரு? நான்தானே?''

''இதுலே அவஸ்தைப்பட என்ன இருக்கு? நான் மேலே படிக்கறதால உங்களுக்கு என்ன கஷ்டம்?''

''புரிஞ்சுதான் பேசறியா; இல்லை எதுவும் விளங்காம உளர்றியானு எனக்குப் புரியலை, அடுத்த மாசம் உனக்கும் சுகுமாருக்கும் கல்யாணம் நடத்தறதா மாமாவும், நானும் முடிவுக்கு வந்திருக்கிறது உனக்குத் தெரியும் இல்லே... அப்புறம்...''

''நீங்கதானே முடிவு பண்ணிங்க...நான் இல்லையே!''

நிதானமாக, ஒவ்வொரு வார்த்தையாக சுஜா பேசவும் பார்வதம் அரண்டு போனாள்.

''எ...என்னது!''

''ஆமாம்மா... கல்யாணத்தை நடத்திடணும், முகூர்த்தம் பார்க்கணும்னு நீங்கதானே பேசிக்கிட்டீங்க... இதுக்கு நான் சரினு எப்பவாவது சம்மதம் கொடுத்திருக் கேனா?''

''என்னடீ..என்னடீ பெரிசா கல்லைத் தூக்கிப் போடறே...''

''பெரிசும் இல்லே, கல்லும் இல்லே. எனக்கு இப்ப கல்யாணம் பண்ணிக்க விருப்பம் இல்லே. அப்பா நான் நல்லா படிக்கணும்னு ஆசைப்பட்டார். என் இஷ்டமும் அதுதான். என்ஜினீரிங் காலேஜுக்கு அப்ளிகேஷன் போடட்டுமானு உங்களைக் கேட்கத்தான் இப்ப இந்தப் பேச்சையே எடுத்தேன்.''

''என்ஜினீரிங் படிப்பா? அடுத்த மாசம் கல்யாணம்னு நான் சொல்றேன். நீ என்ன விளையாடறியா?''



''சத்தியமா விளையாடலை அப்பா என்னைகலெக்டர் இல்லே, இன்ஜினியர் ஆக்கணும்னு எத்தனை தரம் சொல்லி இருக்கார். எனக்கு ஐ. ஏ. எஸ. படிக்கஆசை இல்லே. அதான் என்ஜினீரிங் காலேஜ்லசேரட்டுமானு கேக்கறேன்''

''வக்கீல் ராமானுஜம் பிள்ளை ராஜா ஆறு வருஷமோ என்னமோ படிச்சானே, அதுவா?''

''அதுவேதான்.''

''அடிப்பாவி...பொம்பளையா லட்சணமா சுகுமாரைக் கட்டிக்கிட்டு குடுத்தனம் பண்ணுவோம்னு தோணாம, உன் புத்தி ஏன் இப்படி கோணிப் போகுது! ம்ஹூம்... இதுக்கு நான் சம்மதிக்க மாட்டேன் சுஜா...கண்டிப்பா மாட்டேன்...''

''எதுக்கு?''

''என்ஜினீரிங் படிப்புக்கு...சத்தியமா மாட்டேன். மூளை கலங்கிப் பேசி, அதுக்கு நானும் தாளம் போட்டா எப்படி? உனக்கு அடுத்து சந்திரிகா ரெடியா நிக்கிறா... வேணாம்டிம்மா...இந்த மாதிரி விஷப்பரீட்சை எல்லாம் நம்ம குடும்பத்துக்கு வேணாம். சட்டுபுட்டுனு அடுத்த முகூர்த்தத்தில சுகுமார் கிட்ட உன்னை ஒப்படைச்சாத் தான் எனக்கு நிம்மதி.''

என்ஜினீரிங் படிப்பு படிக்கிறேன் என்றதும் 'ஆஹா படி' என்று அம்மா பச்சைக் கொடி காட்டுவாள் என்று சுஜா எதிர்பார்க்காததால் பார்வதத்தின் பிடிவாதமான பேச்சு அத்தனை ஏமாற்றத்தை அவளுக்கு அளிக்கவில்லை.

அம்மாவை லேசில் வழிக்குக் கொண்டுவர முடியாது.

விட்டுத்தான் பிடிக்க வேண்டும்.

எப்படி?

...ம்?

''சரி, என்ஜினீரிங் வேணாம், பி. எஸ். ஸி. சேர சம்மதிங்க, டிகிரி வாங்கின பிறகு கல்யாணப் பேச்சை எடுக்கறேன்னு சொல்லுங்க.''

"ம்ஹூம், எதுக்கும் நான் ஒப்புக்க மாட்டேன். கொஞ்சம் எடம் கொடுத்தாலும் மடத்தைப் பிடிக்கிற ரகம் ஆச்சே நீ! முடியாதுடிம்மா. நிச்சயம் முடியாது."

அரற்றலாய் பர்வதம் பேசியதற்கு உடனே பதில் கூறாமல் இருந்தவள், அப்புறம் மெள்ளப் பேசினாள்.

"உங்க முடிவு அதுதான்னா, என்னுடையதையும் சொல்லிடறேன் கேட்டுக்கங்க. அந்த சுகுமாரை நான் கட்டிக்க மாட்டேன். எனக்கு அவனைப் பிடிக்கலை."

"கட்டிக்கமாட்டியா? ஏண்டீ?"

"எனக்கு எந்தவிதத்திலேயும் அவன் சரியான ஜோடியா தோணலை—அதான்."

"இப்படி பொசுக்குனு போட்டு உடைச்ச மாதிரி பேசினா எப்படி சுஜா? படிப்பு ஒண்ணுதானா? குணம் இருக்கு, முறைப்பிள்ளை, இதையெல்லாம் பார்க்க வேணாமா?"

"நீங்க ஆயிரம் சொன்னாலும் அவனைக் கட்டிக்க எனக்கு விருப்பம் இல்லேம்மா.. விடுங்க."

புதுசாய் சுஜா ஒரு பூதத்தைக் கிளப்பிவிட, எதுவும் புரியாத அவஸ்தையுடன் பர்வதம் அவள் கையை எட்டிப் பிடித்தாள்.

"படிக்க வைக்கலைங்கற கோவத்துலதானே அப்படிச் சொல்றே சுஜா? நீ பட்டப்படிப்பு படிக்க நான் சம்மதிச்சா, மூணு வருஷம் கழிச்சு, டிகிரிவாங்கினதும், கல்யாணத்துக்கு சம்மதிக்கிறியா?"

சுஜா கண்களை மூடி அழுத்தமாக யோசித்தாள்.

இப்போது எனக்கு வயசு பதினேழுதான் ஆகிறது. துணிந்து எந்தக் காரியத்தில் இறங்க வேண்டும் என்றாலும் மேஜராய் இருப்பது அவசியம்.

அம்மாவாகவே தழைந்து கொடுக்க முன்வந்திருக்கும் போது இந்த சந்தர்ப்பத்தை விடுவானேன்.



பி.எஸ்ஸி. சேர்ந்துவிட்டு மெள்ள மெள்ள அம்மாவை வழிக்குக் கொண்டுவர முடியாதா?

சுஜா கண்களைத் திறந்து அம்மாவைப் பார்த்து புன்னகைத்தாள்.

ரொம்ப சமர்த்து மாதிரி "உங்க இஷ்டம்மா. முதல்ல நாலு டிகிரி கோர்ஸ்லே சேரணும். அதான் எனக்கு முக்கியம்" என்றாள்.

மறுநாளே பர்வதம் நாமக்கல்லில் இருந்த அண்ணன் வீட்டுக்குப் போய் நிலைமையை விளக்கிவிட்டு வந்தாள்.

புருஷோத்தமனுக்கு ஏக வருத்தம்.

'பெண்தான் தலைகால் புரியாமல் குதிக்கிறாள் என்றால், பர்வதமும் அதற்கு இடம் கொடுக்கிறாளே' என்று, ஆன மட்டும் பேசிப் பார்த்தார்.

'சின்னக் குழந்தை. அவளுக்கு நல்லது கெட்டது என்ன தெரியும்—நாமதான் ஒரே போடா போடணும்' என்றார்.

'இப்பவே ஊர்ல கசமுசானு பேசிக்கறாங்க—மாப்பிள்ளையைவிட பெண் அதிகம் படிச்சிருக்கிறதைக் குறிச்சி. எதுக்கு இன்னும் அவங்க பேச எடம் கொடுக்கணும்?' என்றார்.

'சுகுமாருக்கு வயசாயிட்டுப் போவுது. மேற்கொண்டு காலம் தாழ்த்தறதுல அர்த்தம் என்ன?' என்றார்.

இன்னும் என்னென்னவோ சொல்லிப் பார்த்தார்.

எதுக்கும் பர்வதம் அசையவில்லை. ரொம்பப் பேசினால் சுகுமாரைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள அவள் விரும்பவில்லை. படிப்பை ஆசைகாட்டி நான்தான் ஒரு வழியாய் சம்மதிக்கவைத்தேன்—என்றஉண்மை வெளிவந்து விடுமோ என்று பயந்தவளாய் கண்ணைக் கட்டிவிட்ட குதிரை மாதிரி மீண்டும் மீண்டும் "அப்பா விரும்பினதை மக நிறைவேத்த ஆசைப்படறா. இதுலே தப்பு என்ன? இந்தக் காலத்துலே

எல்லாக் குழந்தைகளும் படிக்கலியா... மூணு வருஷம் ஓடிடும். கொஞ்சம் விட்டுத்தான் பிடிக்கணும்'' என்று பெண்ணின் பாயின்லடையே எடுத்துப் பேசி சமாதானம் செய்தாள்.

புருஷோத்தமன் அத்தனை வசதி படைத்தவர் இல்லை.

மச்சானின் சொத்தான ஜவ்வரிசிஃபாக்டரியும், நிலமும் நீச்சும், பாங்க் பணமும் கண்களை மயக்க, ஒரு தினுசாய் தங்கையின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு 'உங்க இஷ்டம் போங்க' என்று சம்மதத்தைத் தெரிவிக்க, பி. யூ. ஸி. படித்த கல்லூரியிலேயே கணக்கை முக்கிய பாடமாக எடுத்து, பி. எஸ். ஸியில் சுஜா சேர்ந்தாள்.

அந்த ஒரு வருஷம் மனசுக்குள்—டிசம்பரில் பதினெட்டு வயசு பூர்த்தி ஆகிவிடும். முதல் வருஷத்தை படித்துக் கொண்டே என்ஜினீயரிங் காலேஜுக்கு அப்ளை செய்தால் விடுமுறை வருவதற்கும், மற்ற விஷயங்களைக் கவனிப்பதற்கும் சரியாக இருக்கும் என்ற எண்ணத்தை சதா சர்வ காலமும் போஷித்துக் கொண்டே வந்ததால், அவகாசம் கிடைத்த போதெல்லாம் என்ஜினீயர் ராஜாவைச் சந்தித்து பல விவரங்களைத் தெரிந்து கொண்டாள்.

நாட்கள் நகர, நகர என்ஜினீயரிங் படிப்பை விட, ஆர்கிடெக்சர்-கட்டிடக் கலை— இன்னும் சுவாரஸ்யமாக இருக்கும் போலத் தோன்ற, தக்க தருணம் வந்ததும் யாரிடமும் எதுவும் சொல்லாமல் கிண்டி பொறியியல் கல்லூரிக்கும் ஏ. ஸி காலேஜ் ஆஃப் டெக்னாலஜிக்கும் அப்ளை செய்தாள்.

முதல் ஆண்டு படிப்பு முடிந்ததும் அம்மா பிரமித்து நின்று, ஆட்சேபிப்பதையும் பொருட்படுத்தாமல் 'லீவுக்கு என் ஸ்நேகிதி லதா மெட்ராஸுக்குப் போகப் போறா. என்னையும் கூப்பிடறா... போயிட்டு வரேன்' என்று பிடிவாதம் பிடித்து கிளம்பிப் போய் குறிப்பிட்ட தேதியில்



இரண்டாம் பேர் அறியாமல் ஏ. ஸி. காலேஜில் ஆப்டிட்யூட் டெஸ்டையும், இன்டர்வ்யூவையும் முடித்துக்கொண்டு ஊருக்குத் திரும்பினாள்.

அந்த ஜூலை மாசம், ஒரு வெள்ளிக்கிழமை, சுஜா வெகுவாக எதிர்பார்த்த அட்மிஷன் கார்ட் வந்தது.

எனக்கு வேண்டிய பாதையை நான் தேர்ந்தெடுத்திருக்கிறேன்; இதில் தவறு என்ன?—என்ற எண்ணம் பக்கபலமாக நிற்க பிற்பகல் சாப்பாடு முடிந்து கூடத்தில் படுத்திருந்த அம்மாவை எழுப்பி உட்காரவைத்து, தன் முடிவைத் தெளிவாக சுஜா வெளியிட்டாள்.

## 6

அந்த இரண்டு நாட்களும் சுஜாவால் ஆயுசுக்கும் மறக்க இயலாத நாட்கள்.

கட்டிடக் கலை பயிற்சியில் சேரப் போகிறேன் என்று தீர்மானமாக இவள் கூற, பார்வதம் அதைவிட உறுதியாகக் கூடாது என்று எதிர்க்க...அந்த இரண்டு நாட்களும் கத்தல் தான், அழுகைதான், சண்டைதான்.

மூன்றாவது நாள் காலையில் இனியும் இவளை ஒண்டியாகத் தாக்குப் பிடிப்பது இயலாத காரியம் என்பதை உணர்ந்து அண்ணனுக்கு பார்வதம் ஆள் அனுப்ப, அவரும் வழக்கம் போல உடனே வந்து சேர்ந்தார்.

வந்தவர் உள்ளே நுழைந்து உட்கார அவகாசம் தராமல் ''அவரு இருந்துநான் போயிருக்கக்கூடாதாண்ணே இந்தத் தறுதலை இப்ப என்னென்னமோ சொல்றாளே. நான் என்ன பண்ணப் போறேன்... எனக்கு ஒண்ணுமே

புரியலையே!'' என்று பர்வதம் பெரிசாய் கத்தி அழ ஆரம்பிக்க, அருகில் இறுகிப்போய் நின்றிருந்த சுஜா பக்கம் திரும்பி ''என்னம்மா இதெல்லாம்?'' என்றார் அவரும் அதட்டலாய்.

''ஏ. ஸி. காலேஜ் ஆஃப் டெக்னாலஜிலே சேர இடம் கிடைச்சிருக்கு. இன்னும்ஒருவாரத்திலே நான் புறப்படணும்; அதுக்கான ஏற்பாடுகளைப் பத்தி பேசிட்டா தேவலைன்னு சொன்னேன். கேட்டதுலேந்து இப்படிக் குதிக்கிறாங்க.''

இப்போது மிரண்டு போவது புருஷோத்தமனின் முறையாக இருந்தது.

''என்னது... என்னது என்ன சொன்னே?''

மீண்டும் ஒரு முறை பதட்டப் படாமல் சுஜா விவரிக்க ''கேட்டீங்களாண்ணே.. நான் என்ன பண்ணுவேன். ஐயோ கடவுளே!'' என்று குரலைக் கூட்டி பர்வதம் அழுதாள்.

''ஸ்..ஸ்... சித்த சும்மா இரு பர்வதம். முடியாட்டி எழுந்து உள்ள பாக்கப் போ. என்ன ஏதுனு முதல்ல நான் விஷயத்தைப் புரிஞ்சுக்கறேன்.''

ஆளை விட்டால் போதும் என்கிற மாதிரி பர்வதம் எழுந்து உள்ளே போக அவர் மருமகளைப் பார்த்தார்.

''இப்ப விளக்கமா சொல்லு. வேற காலேஜ்ல சேரப் போறியா?''

''ஆமா... என்ஜினியரிங் மாதிரி ஒரு கோர்ஸ், ஆர்கிடெக்சர். அதாவது கட்டடக் கலை.''

''என்ஜினீரிங் மாதிரினா இதுவும் அஞ்சு வருஷப் படிப்பா?''

''அஞ்சு வருஷப் படிப்பும், ஒரு வருஷ பயிற்சியும் முடிஞ்சாதான் டிகிரி வாங்க முடியும். கிட்டத்தட்ட ஆறு வருஷம் ஆகும்,''



ஒரு நிமிஷம் முழுசாய் அவள் கூறினதை ஜீரணித்த புருஷோத்தமன் ''உனக்குப் பைத்தியம் பிடிச்சிருக்குனே நான் நினைக்கறேன்'' என்றார் மெதுவாக.

''......''

''சுகுமார் அங்கே உனக்காகக் காத்திட்டு இருக்கான். டிகிரி படிப்பே ஜாஸ்தினு நான் சொல்றேன். நீ என்ன விளையாடுறியா?''

''விளையாடற வயசா மாமா எனக்கு? ஏன் நான் சொல்றதை யாரும் ஸீரியஸா எடுத்துக்கமாட்டேங்கறீங்க? சின்ன வயசிலேயே பெரிய படிப்பு படிக்கணும்னு எங்கப்பா ஒரு வெறியை விதைச்சிட்டார். அது இப்ப மரமா வளர்ந்து படி படினு ஆசை காட்டுது. நல்லா படிக்கணும், பெரிய ஆர்கிடெக்டா வரணும்னு நான் விரும்பறதை ஏன் யாரும் புரிஞ்சிக்க மாட்டேங்கறீங்க?''

''அப்ப சுகுமார் கல்யாணம்?''

''இதப்பத்தியும் அம்மாகிட்ட நான் எப்பவோ சொல்லிட்டேன். சுகுமாரை எனக்குப் பிடிக்கலை மாமா. நாங்க சரியான ஜோடி இல்லே. இது உங்க எல்லார் மனசுக்குமே தெரியும். முறைப் பையனை விட்டுவிடக் கூடாதுன்னு அம்மா விரும்பினாங்கன்னா சந்திரிகாவை அவனுக்குக் கட்டி வைக்கறது எல்லோரோட நிம்மதிக்கும் வழி காட்டும்.''

தோட்டத்தை வெறித்து, சுஜாகூறியவைகளை மனசில் புருஷோத்தமன் அசை போட்டார்.

சுஜாவைக் காட்டிலும் நிச்சயம் சந்திரிகா தேவலை தான்.

சமர்த்து, அடக்கம் நிறைந்தவள். படிப்பும் அத்தனை இல்லை; இப்போதுதான் பத்தாவதில் காலடி எடுத்து வைத்திருக்கிறாள்.

இப்படியொரு எண்ணம் அவர் மனசிலும்கூட அவ்வப்போது பளிச்சிட்டதுவாஸ்தவம்தான். ஆனாலும் மூத்தவள்

இருக்கும்போது இளையவளுக்கா சம்பந்தம் பேசுவது' என்று பர்வதம் சத்தம் போடுவாள் என்று பேசாமல் இருந்திருக்கிறார்.

இப்போது வலிய சுஜாவாகவே இந்தப் பேச்சை எடுத்திருக்கிறாள்.

நாலு விதத்திலும் சுகுமாருக்கு இவளை விட சந்திரிகா கண்டிப்பாய் ஒத்துப்போகக் கூடியவளே.

''சரி, உன் முடிவு இதுதான்னு தீர்மானமா சொல்லிட்டா, அப்புறம் கட்டாயப்படுத்தறதுலே அர்த்தம் என்ன?''

பணத்தில் குறி வைத்திருக்கும் மாமா எளிதில் இந்த மாற்றத்துக்கு ஒப்புக்கொள்வார் என்று எதிர்பார்த்திருந்த விதத்திலேயே அவர் பேச்சு இருக்க, சந்தோஷத்துடன் ''தாங்க்ஸ் மாமா, அம்மாவை இது விஷயமா சரிக்கட்ட உதவற மாதிரி, என் படிப்பு சம்பந்தமாகவும் எடுத்துச் சொல்லி புரிய வைச்சிங்கன்னா தேவலை'' என்றாள்.

புருஷோத்தமன் தலையைச் சொறிந்தார். தாவாங் கட்டையைத் தடவிக் கொடுத்தார்.

''ஆனாலும் நீ அடாவடித்தனமா ஆர்கிடெக்சர் அது இதுனா எப்படிம்மா?''

''என் புத்திசாலித்தனத்துக்குக் கிடைச்ச பரிசைப் போயி அடாவடித்தனம்னா எப்படி மாமா? விவரமா கேளுங்க. மொத்தம் இருபது ஸீட்டுலே, அஞ்சு ஸீட்டை பெண்களுக்காக ஒதுக்கியிருக்காங்க. இதுலே ஒண்ணு எனக்குக் கிடைச்சிருக்கு. யாருடைய சிபாரிசும் இல்லாம கிடைச்சது ரொம்பப் பெருமைப்பட வேண்டிய விஷயம்.''

''சரி, சரி. ஆனாலும் ஆறு வருஷம் ஒரு பொம்பளை மெட்றாஸிலே...தனியா...எப்படி சுஜா? ஊரும், உறவும் ஏசிக் காட்டுவாங்களேம்மா!''

CPL 4 1 4 3 6 2



அதப்பத்தி எனக்குக்கவலை இல்லே மாமா. நான் படிக்கணும். இதான் முக்கியம். இதுக்கு அம்மா சம்மதிக்காட்டி, நான் மீறிகிட்டாவது போகறது நிச்சயம். இப்பவே சொல்லிட்டேன்.''

கடைசி வார்த்தை உள்ளே உட்கார்ந்திருந்த பர்வதத்தின் காதுகளில் விழுந்து ஆத்திரத்தை உசுப்பிவிட, அவசரமாய் வெளியில் வந்தாள்

''பார்த்திங்களாண்ணே இவ திமிர்ப் பேச்சை? மீறிகிட்டாவது போயிடுவளாமே? எப்படிப் போவா? அதையும் பார்த்திட்டா போச்சி. பூட்டி வைச்சா கழுதையே கிடன்னா கிடக்குறா.''

ஆங்காரத்துடன் பேசிய அம்மாவை சுஜா கண்களை இடுக்கிக்கொண்டு பார்த்தாள்.

414362

''ஸாரிம்மா...அதிலேயும் நான் உங்களை ஏமாத்தத் தான் போறேன். என்னை நீங்கஒண்ணும் பண்ண முடியாது. நான் மேஜரானவ. என் இஷ்டப்படி எதையும் செய்ய எனக்கு உரிமை இருக்கு. பெத்த மரியாதைக்கு ஒரு வார்த்தை கேக்கறேன். அதை நினைப்புலே வைச்சிக்குங்க''

''ஐயோடி...ஐயோடி...இவ பேசறதைக் கேட்டுக்கிட்டு சும்மா இருக்கீங்களேண்ணே.. இரண்டு அடிவைச்சி அடக்கக் கூடாதா? நான் தான் பொட்டச்சி. எதுக்கும் லாயக்கில் லாதவ, நீங்க ஆம்பிள்ளைதானே.''

894.8113
SIV

பிரவாகமாக நீர் பெருகும் கண்களுடன் பர்வதம் கத்த அப்போதுதான், தான் ஆண் என்பது நினைவுக்கு வந்த மாதிரி ''ஏய் சுஜா'' என்றபடி புருஷோத்தமன் எழுந்தார்.

''பேசாம இருங்க மாமா. உங்க வரம்பு புரியாம ஏதாச்சம் பேசி; வீணா என் கோபத்தை ஜாஸ்தியாக்காதீங்க. சும்மா அப்படி உ[illegible]ருங்க...ஏம்மா—ஏன் இப்படி எல்லாருக்கும் [illegible] கிழிய

24 JUN 1991

கத்துறே? எதுக்காக அளவுக்கு மீறி படபடக்கிறே? நீ என்ன கத்தி புலம்பினாலும் என் முடிவுலேந்து நான் விலகறதா இல்லே. அப்புறம் உன் இஷ்டம்...''

எழுந்த புருஷோத்தமன் உட்கார, பர்வதம் சினிமாவில் வருவது போல தலையிலும், மார்பிலும் அடித்துக்கொண்டு புலம்பினாள்.

சுஜா ஜன்னலருகே சென்றாள், கதவைச் சாத்திவிட்டு நிதானத்தை இழக்காமல் அம்மாவிடம் தொடர்ந்து பேசினாள்.

''இத்தனை தூரம் வந்தப்புறம், பாக்கி விஷயங்களையும் பேசித் தீர்த்திடறதுதான் நல்லதுனு எனக்குத் தோணுது. ஏ. ஸி. காலேஜ் பீஸ ரொம்ப அதிகம் இல்லே. வருஷத்துக்கு முன்னூத்தி அம்பது ரூபாதான். முதல்லே அதைக் கட்டினதும் அப்புறம் படிப்புக்கான உபகரணங்கள். புஸ்தகங்கள் வாங்க கொஞ்சம் பணம் தேவைப்படும். ஏ. ஸி காலேஜ்ல பெண்களுக்கு தனி ஹாஸ்டல் கிடையாது. நான் வொய். எம். ஸி. ஏ. லே தங்கிட்டு படிக்கலாம்னு இருக்கேன். இன்னொரு பொம்பளையும் அதுல தங்கப் போறதால, சேர்ந்து வர, போக சௌகரியம். இதை எல்லாம் யோசிக்கறப்போ, துவக்கத்துலே ஆயிரம் ரூபாயும் அப்புறம் மாசா மாசம் ஐநூறு ரூபாயும் இருந்தா போதும்னே தோணுது. நாலு நாளைல நான் மெட்றாஸ்க்கு புறப்படறத்துக்குள்ள...''

அவளை முடிக்க விடாமல் பர்வதம் கத்தினாள்.

''ஆயிரமும் இல்லே, ஐநூறு இல்லே. சல்லிக்காசு கூடக் கொடுக்கறதா எனக்கு உத்தேசம் இல்லே. பணம் கொடுப்பேன்னு நினைச்சுத்தானே நீ இப்படி செய்யத் துணிஞ்சிட்டே? மாட்டேன்...கொடுக்க மாட்டேன்.''

எக்காளம் கலந்த கோபத்துடன் பர்வதம் எழுந்துநின்று முறைக்க, முதல் முறையாக நிதானத்தை இழந்து சுஜா பதிலுக்குக் கத்தினாள்.



''இப்படிப் பேச உங்களுக்கு உரிமையில்லேம்மா. இது எங்க தாத்தா வழி வந்த சொத்து. இதுலே எனக்கும் உரிமை இருக்கு. முரண்டு பண்ணினீங்கன்னா கோர்ட் வரைக்கும் போகக் கூட நான் ரெடி... புரியுதா?''

''என்னடீ .. என்ன சொன்னே? திருப்பிச் சொல்லு.''

''ஒருதரம் என்ன, பத்து தரம் கூட சொல்லுவேன். இது எங்க தாத்தா சொத்து. அனுபவிக்க எனக்கு உரிமை இருக்கு. நான் என்ன, சொத்தை பிரிச்சுக் கொடுங்கன்னா கேக்கறேன்? ஆசைப்படற படிப்புக்கு மாசம் ஐநூறு ரூபா தாங்கனுதானே கேக்கறேன். இங்க உங்ககூட தங்கிட்டு நான் சாப்பிட, உடுத்த ஆகுற செலவு இதைவிட அதிகம், தெரியுமா?''

''மாசம் ஐநூறு ரூபாய். இல்லே, ஐநூறு பைசாகூட கொடுக்க மாட்டேன். போடி வெளிலே; இனிமே உனக் காச்சு, எனக்காச்சு...யம்மாடி! என்ன பேச்சு பேசறாடீ இவ... போடு, அந்த பட்டி வாயிலே போடு.'' ஆத்திரத் துடன் மகளை நெருங்கி, தோளைப்பற்றி பர்வதம் உலுக்க, புருஷோத்தமன் ''ஏய் ஏய்'' என்று கத்தியபடி வேகமாய் அவர்களைப் பிரித்து விட்டார்.

''இப்படியெல்லாம் பேச இவ எங்க கத்துக்கிட்டா அண்ணே? என் மானம் போச்சே. மரியாதை போச்சே. இனி நான் வாழ்ந்துதான் என்ன ப்ரயோசனம்?''

ஹோவென்று புலம்பி, அடித்துக் கொண்டு பர்வதம் அழ, அசிங்கமான டிராமா ஒன்றைப் பார்க்கும் எண்ணம் உண்டாக, தொடர்ந்து அங்கு நிங்கப் பிடிக்காததுபோல சுஜா மாடிக்குப் போய் உட்கார்ந்து கொண்டாள்.

அன்று முழுவதும் கீழே இறங்கி வரவோ, சாப்பிடவோ மறுத்தவள், மாலையில் மாடிக்கு வந்த மாமாவிடம் மட்டும் தீர்மானமாகப் பேசினாள்:

''நான் மேஜரானவ... தாத்தா சம்பாதிச்ச சொத்துக்கு பாத்தியதை உள்ளவ. இதெல்லாம் எனக்குத் தெரியும். ஆனா, வீணா முரண்டு பண்ணி கோர்ட் வரைக்கும் குடும்பத்தை இழுக்கறதுலே எனக்கு சம்மதம் இல்லே. இதை நல்லா மனசுலே வாங்கிகிட்டு கிழே புலம்பறவங்க கிட்டயும் எடுத்துச் சொல்லுங்க. இங்க பாருங்க மாமா, நான் அசடு இல்லே. எனக்கு என்ன வேணும்னு புரிஞ்சி தான் செயல்படறேன். அம்மாவுக்கு வருத்தம் தர்றது எனக்கும் வேதனையாகத்தான் இருக்கு, பட் ஐ காண்ட் ஹெல்ப் இட்...எனக்குப் படிக்கணும்—எப்படியாவது மேலே படிக்கணும். இது ரொம்ப முக்கியம். படிக்கக் கூடாது? காசு செலவழிக்கமாட்டேன்னு முரண்டு பண்ணாங்கன்னா, இன்னொரு காரியத்தைச் செய்யச் சொல்றதைத் தவிர எனக்கும் வேற வழியில்லே. எனக்கு கல்யாணம் செஞ்சு வைச்சாங்கன்னா அம்மாவுக்கு லட்ச ரூபாயாவது செலவழி யாதா? எனக்கு அவ்வளவு பணம் வேணாம். அதுல பாதி ஐம்பதினாயிரம் கொடுத்தாங்கன்னா போதும். அதை டிபாஸிட்லே போட்டு வர்ற வருமானத்துலே படிப்பை முடிச்சிடுவேன். அப்புறம் வேணா, இந்தப் பணத்தை அவங்களுக்கு நான் திருப்பித் தந்திடறேன். என்கிட்ட அம்மா நிதானமா பேசினாங்கன்னா 'எல்லாத்தையும் எடுத்துச் சொல்ல முடியும்! ஆனா, எங்கே என்னைப் பார்த்தாதான் அவங்களுக்கு ஆத்திரமும், அழுகையும் பொத்துகிட்டு வருதே!''

அடுத்து வந்த நாலு நாட்களும் அந்த வீட்டின் சூழ்நிலை ரொம்ப கனமாகத்தான் இருந்தது.

இடி விழுந்து விட்டது போல, பர்வதம் கீழ் அறையில் முடங்கிவிட, மாடியைவிட்டு சுஜாவும் இறங்கிவர மறுத்தாள்.

புருஷோத்தமனும், சந்திரிகாவும் தங்கள் பங்குக்கு இருவரையும் தெரிந்த வரையில் சமாதானம் செய்ய முனைந்து தோற்றுப் போனார்கள்.



வீட்டை விட்டுப் போனால், இனி அவள் என் மகள் இல்லை என்றாள் பர்வதம் பிடிவாதமாக.

அம்மா என்ன சொன்னாலும் கவலை இல்லே. நான் படிக்கணும் என்றாள் சுஜா முடிவாக.

நாலாம்நாள் காலை எதற்கும் பிடி கொடுக்காமல் அவ எக்கேடு கெட்டும் போகட்டும் என்று அரற்றிக் கொண்டிருந்த பர்வதத்திடம் ஒரு வழியாய் நியாயத்தை எடுத்துச் சொல்லி மெட்ராஸ் பாங்க் ஒன்றில் ஐம்பதாயிரம் ரூபாயை சுஜா பேரில் புருஷோத்தமன் டெப்பாசிட் செய்தார்.

ஐந்தாம்நாள்—தனக்கென்று அந்த வீட்டில் இருந்த சில உடமைகளுடன் 'போயிட்டு வரேம்மா...உங்களை மீறிகிட்டு போறத்துக்காக மன்னிச்சிடுங்க... இந்தப் பணத்தை நான் சத்தியமா தொட மாட்டேன், வட்டியை மட்டும் நான் உபயோகிச்சிப்பேன். படிப்பை முடிச்சு வேலைல சேர்ந்தப் புறம் உங்களுக்குவேணும்னா உடனே திருப்பித்தரவும் நான் ரெடி... உங்க பேர்ல எனக்கு கோபம் இல்லே. என்னை நீங்க புரிஞ்சிக்கலையேனு வருத்தம்தான் இருக்கு...'' என்று கூறி, எதற்கும் பதில் பேசாமல் பர்வதம், 'இனி உனக்குநான் அம்மா இல்லை, நீ எனக்கு மகள் இல்லை' என்று இறுகலுடன் அமர்ந்திருக்க, சுஜா சென்னைக்குப் புறப்பட்டாள்.

கல்லூரியில் பணத்தைக் கட்டி, வொய். டபிள்யூ. ஸி. ஏ. யில் இடம் பிடித்ததும் விலாசத்தைக் குறித்து அம்மாவுக்குக் கடிதம் போட்டாள்.

அதோடு சரி.

அப்புறம் அவர்களும் 'நீ சௌக்கியமா?' என்று ஒரு வார்த்தை கேட்கவில்லை. இவளும் 'அம்மா' என்று ஈஷிக் கொண்டு ஒருதரம்கூட இந்த ஒன்பது வருஷ காலத்தில் சேலத்தில் கால் வைக்கவில்லை.

# 7

வேப்பம் பூ மணத்துடன் சன்னமாய், ஆம்பிளைத் தனமான ஒரு வாசமும் நாசியில் ஏற, சுஜா சட்டென்று திரும்பினாள்.

வாசுதேவன்.

''ஹலோ...''

''ஹலோ...''

''உங்க தனிமையைக் கெடுத்திட்டனோ?''

ரப்பர் பாண்டுக்குள் சிறைப்படுத்தாமல் அவிழ்த்து ப்ரஷ் செய்யப்பட்டிருந்த முடி லேசாகக் குலுங்க இல்லை என்று தலையாட்டினாள்.

அரை நிமிஷ மௌனம்.

க்ரீட், க்ரீட் என்று சுவர்க்கோழி ஒன்று வெகு அருகாமையில் சொன்னதையே திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தது.

ஸூப்பர் மேனின் இசை சின்னதாகப் பின்னணியில் கேட்டது.



''நீங்க சொன்னதை நான் மனப்பூர்வமா ஆதரிக்கறேன் மிஸ் சுஜா...''

மொட்டையாய் அவர் பேச, எதுவும் புரியாமல் சுஜா கண்களை விரித்தாள்.

''ஃபாமிலி ப்ளானிங் பத்தின அபிப்பிராயத்தைச் சொன்னீங்களே, அதைச் சொல்றேன்.''

''ஓ!''

நெற்றியில் வந்து விழுந்த முடிக்கற்றையை இடக் கையால் பின்னுக்குக் கோதினவர், அவள் கண்களைப் பார்த்துப் பேசினார்:

''யூ ஆர் வெரி ரைட்...பிரசாரம் செய்யற அளவுக்கு, கவர்ச்சியான இன்சென்டிவ் கொடுக்க அரசாங்கம் தவறி விட்டதுன்னே நானும் நினைக்கறேன். நம்ம நாட்டுலே இல்லிட்ரஸி அதிகம். மயிலே, மயிலே இறகு போடுன்னா கேட்கற ஜாதி இவங்க இல்லே. செய்யறயா, அடிக்கட்டு மானு பயமுறுத்தினா ஒழுங்கா வேலை செய்வாங்க. இல் லேன்னா, இதைச் செய்தா, இத்தனையும் உனக்குத் தான்னு அன்பா, கரிசனத்தோட சொன்னா ஓரளவுக்கு பணிஞ்சு நடப்பாங்க. வெள்ளைக்காரன் கடைப்பிடிச்சது முதல் ரகம். எனக்கு அதில் நம்பிக்கை இல்லே...இரண்டா வது பிரிவுக்குத் தான் என் வோட். அதனால ஆபரேஷன் செய்துக்க முன் வர்றவங்களுக்கு ஐயாயிரம் ரூபா கொடுக்கறேன்னு அரசாங்கம் அறிவிச்சா, கண்டிப்பா அந்தப் பணத்துக்கு ஆசைப்பட்டுக்கிட்டு நிறையப்பேர் முன்வருவாங்கன்னு நீங்க சொன்ன கருத்தை நான் அப்படியே ஏத்துக்கிறேன்.''

தீவிரமாக வாசுதேவன் பேசுவதைக்கேட்ட நிமிஷத்தில் சுஜாவுக்குள் சந்தேகம் ஒன்று குட்டியாக எட்டிப்பார்த்தது.

கையில் வெளிநாட்டு விஸ்கியை வைத்தபடி, விலை உயர்ந்த ஸூட்டை அணிந்துகொண்டு, இந்தநாட்டு ஏழை ஜனங்கள்மேல் மிகுந்த அக்கறைஉள்ள மாதிரி பேசுகிறாரே, இந்த ஈடுபாடு உண்மையா, இல்லை போலியா?

கேட்க ஆள் கிடைத்தால், ஆஹா ஊஹூ என்று பேசித் தீர்ப்பதை வழக்கமாகக் கொண்ட பலரில் இவரும் ஒருவரா, இல்லையா?

பேசிப் பேசி காலத்தைக் கழித்து, தனக்கென்று வரும் போது அப்படியே பல்டி அடித்து வேறு திசையில் திரும்பி விடும் வேஷதாரிக் கூட்டத்தில் இவரும் ஒருவரா, இல்லையா?

சுஜா தோளைக் குலுக்கி வலக்கையை விரித்தாள்.

''நான் சொல்லறதாலயும் நீங்க அதை ஒப்புக்கறதால யும் யாருக்கு என்ன ஆதாயம் மிஸ்டர் வாசுதேவன்? ஒரு மாலைப் பொழுதை ஓரளவு சமுதாயப் பிரச்சனைகளைப் பற்றிப் பேசிக்கழிச்சோம்னு வேணா திருப்திப்பட்டுக்கலாம் —வாட் எல்ஸ்?''

சுமுகமாகப் பேசிக்கொண்டிருந்தவள் க்ஷண காலத்தில் மாறி, ஒருவித எரிச்சலுடன் பேசுவதாகத் தோன்ற வாசுதேவன் லேசாக ஆச்சரியித்தார்.

அப்புறம் சன்னக் குரலில் பேசினார்.

''தூங்கிகிட்டு இருக்கறவங்க நடுவுலே ஒரு சிலராவது விழிப்புணர்ச்சியோட இருக்கறது நல்லதுதானே மிஸ் சுஜா?''

''நல்லதுதான்...ஆனா அது மட்டும் போதுமா? நான் உன் கஷ்டத்தை உணர்ந்திட்டேன்னு சொன்னா மட்டும் போதுமா? வாட் அபௌட் ரெமடி? வெட்டியாப் பேசி பொழுதைக் கழிச்சிட்டு காரியத்துலே ஒண்ணுமே காட்டாம இருந்தா, அப்புறம் நமக்கும், மத்தவங்களுக்கும் என்ன வித்தியாசம்?''

''ஓ கே. ஐ அக்ரீ...இதுவிஷயமா என்ன செய்யணும்னு நீங்க நினைக்கறீங்க?''

சுஜா வராந்தாவில் இப்படியும் அப்படியும் நடந்தாள்.



''தெரியலை மிஸ்டர் வாசுதேவன்... நிஜமாகத் தெரியலை. என் எழுத்தான அரசியல் நண்பர்கள்கிட்ட இதுபத்தி பேசியிருக்கேன். 'சும்மா இருக்காதீங்க, எழுத் தாலயும், மேடைப் பேச்சாலயும் எத்தனையோ சாதிக் கலாமே! ஆக்க பூர்வமா உங்க எழுத்தும், பேச்சும், காரிய மும் இருக்கணும்னு பாடு படமாட்டேங்கறீங்களேனு சந்தர்ப்பம் கிடைக்கற போதெல்லாம் கேட்டுக்கிட்டு இருக் கேன்... என்ன பிரயோஜனம்! எதுக்கும் பலன் இல்லையே! எல்லாரும் பணம், புகழ்லயே குறியா இருக்காங்களே தவிர சமுதாயத்தை சீர் பண்ண உதவணும்னு யார் நினைக்க றாங்க? பிறத்தியார் செய்யட்டும்னு காத்திருக்கறவங்கள்லே ஒருத்தர் கூட, நான் என்ன பண்ணலாம்னு நினைக்காம இருக்கறது ஒரு ட்ராஜிடிதானே? தலைக்குத் தலை பேசி, அதோடு விஷயத்தை மறக்காம, ஜனத்தொகையைஎப்பாடு பட்டாவது கட்டுப்படுத்தியே ஆகணும்; நம்ம நாட்டுலே உள்ள குறைபாடுகளை அகற்றப் பாடுபடத் துவங்கணும். லெட் அஸ் ஸ்டார்ட் நௌ...னு நாம ஒவ்வொருத்தரும் தீவிரமா முனையாட்டி, இன்னும் இருபது வருஷத்திலே...''

சிரத்தையுடன் பேசிக் கொண்டு போனவள் யாரோ தோளைத் தட்டிவிட்ட தினுசில் நிறுத்தினாள். புன்னகையை வலிய வரவழைத்துக் கொண்டாள்.

''ஐ'ம் ஸாரி மிஸ்டர் வாசுதேவன், சம்பந்தா சம்பந்தம் இல்லாம பேசி உங்களை போர் அடிக்கிறேன், இல்லே? 'சமுதாயப் பிரச்சனைகளைப்பத்திப் பேச ஆரம்பிச்சிட்டா உனக்கு எங்க நிறுத்தறதுனு தெரியாது'னு சங்கர்கூட என்னை கேலி பண்ணுவான்...''

இது நாழிகை நாட்டின் கஷ்டமனைத்தையும் தான் ஒருத்திமட்டுமே சுமக்கிறவகையில் பேசிவிட்டு, சட்டென்று ஒரு குழந்தையாய் மாறி சுஜா புன்னகைக்கவும், வாசுதேவ னும் பதிலுக்கு புன்னகைத்தார்.

''அட்லீஸ்ட், நீங்களாவது நாட்டுப் பிரச்சனைகளைப் பத்தி யோசிச்சு, பேசறீங்களே! நகை, புடவை, சமையல் தான் நம்ம உலகம்னு தங்களைச் சுத்தி கூடு கட்டிக்கிட்டு உட்கார்ந்திருக்கற பல பெண்கள் மாதிரி இல்லாம!...ஐ'ம் கிளாட் அபௌட் இட்...''

சுஜாவுக்குள் விசுக்கென்று ஒரு நீர் ஊற்றுக் கிளம்பியது.

''மை காட்! மிஸ்டர் வாசுதேவன், இந்த பார்ட்டிக்கு வர்றதுக்கு முன்னால் சங்கரும், நானும் இந்த சப்ஜெக்ட் பத்திதான் பேசிட்டு இருந்தோம். நீங்க சொன்ன இதே வார்த்தைகளை நானும் உபயோகிச்சேன். ஹௌ ஸ்ட்ரேஞ்ஜ்!''

சுஜாவின் சிறுபிள்ளைத்தனம் தன்னையும் தொற்றிக் கொண்ட மாதிரி வாசுதேவன் சிரித்தார்.

''ஆமா, நீங்க மிஸஸ் ஆகாம மிஸ்-ஆ இருக்கறது கூட நாட்டுக்கு நல்லது செய்யற உத்தேசத்தில்தானா? உங்க பங்குக்கு ஜனத்தொகை ஏறாமல் இருக்க உதவுகிற காரியமா?''

''ஒருவழிலே நீங்க சொல்லறது நிஜம்தான்! ஏதோ நம்மாலான உதவி..''

அவருடைய த்வனியிலேயே சுஜாவும் பதில் அளிக்க மீண்டும் இருவரும் சிரித்தார்கள்.

சிரிப்பு நின்றதும் வாசுதேவன் சொன்னார்:

''உங்க பங்கை சொன்னீங்க, ஸோ, என் வரைக்கும் நான் என்ன செய்யறேன்னு தெரிவிக்கட்டுமா? நீங்க ஆதங்கப்பட்டு கிட்டதை ஒரளவுக்கு நடைமுறையிலே செய்திட்டுவரேன்னு நான் பெருமை, ராதர், சந்தோஷப் பட்டுக்கலாம், மிஸ் சுஜா. என் கம்பெனி, தொழிற்சாலை களிலே வேலை பார்க்கறவங்க யார் குடும்பக் கட்டுப்பாடு ஆபரேஷன் செய்துக்கிட்டாலும், ஒரு மாச லீவு சம்பளத்தோட, ப்ளஸ் ஆயிரம் ரூபா அன்பளிப்பு கொடுத்திட்டு வரேன். இதனால் கணிசமான அளவுக்கு



குடும்பக் கட்டுப்பாடு செய்திட்டவங்க என் கம்பெனிலே இருக்காங்க...இதையே ஐயாயிரம்னு சொன்னா, எல்லாருமே ஒரு குழந்தையோட போதும்னு ஆபரேஷன் செய்துக்க முன்வரலாம். ஆனா, அத்தனை கொடுக்க எனக்குக் கட்டுப்படி ஆகாதே...''

சிரித்துக்கொண்டே அவர் பேசினாலும் தூக்கி வாரிப் போட, சுஜா நிமிர்ந்து நின்றாள்.

''ரியலி மிஸ்டர் வாசுதேவன்?''

நம்பிக்கை இல்லாமல் அவள் கேட்க, அவர் இன்னமும் பெரிசாய் சிரித்துக் கொண்டு 'ஆம்' என்றார்.

''அப்ப, நீங்க வாஸ்தவத்துலேயே பெரிய மனுஷர் தான். ஹாட்ஸ் ஆஃப் டு யூ...''

''தாங்க்யூ...வெறும் வாய் வார்த்தைகளோட நிக்கற கூட்டத்திலசேராம, முதல்ல என்னையே நல்லா அனலைஸ் பண்ணி புரிஞ்சிக்கணும்; அப்புறம் என்னால முடிஞ்சதை பிறருக்குச் செய்யணும்னு நினைக்கிறேன்.''

இரண்டு பேரும் அரை நிமிஷ காலத்துக்கு மௌனத் தைக் கடைப்பிடித்து, சூழ்நிலையில் அமிழ்ந்தார்கள்.

''ம்ம்...லவ்லி நைட்...'' பெருமூச்சு இழுத்த வாசுதேவன் ''நைட் க்வீன் வாசனையோட லேசா வேப்பம்பூ வாசனையும் கலந்து வீசுது இல்லே?'' எனவும் மறுபடியும் சுஜாவுக்கு தூக்கி வாரிப் போட்டது. கூடவே உள்ளுக்குள் இன்னொரு சின்ன நீரூற்றும் பொங்கியது.

என்ன இது!

ஏன், இந்த மனிதனின் சிந்தனை பல வகைகளில் என்னுடையதை ஒத்திருக்கிறது?

எல்லாரும் நைட் க்வீன் மணத்தை மட்டும் பெருமை யாய் சொல்லிக் கொள்வார்கள்.

வேப்பம்பூ மணம் தெரிகிறதா என்றால், 'வேப்பம் பூவா? ஹுக்...சுஜா...வேற நல்ல வாசனையே உன் நாசியில் ஏறாதா' என்பார்கள்.

சுஜா பதில் ஏதும் சொல்லாமல் வாசுதேவனைப் பார்த்துக் கொண்டே கையில் வைத்திருந்த ஆரஞ்சு ஜூஸை ஒரு வாய் பருகினாள்.

''உங்களுக்கு சொந்த ஊர் இதுதானா மிஸ் சுஜா?''

''ம்ஹூம்...சேலம்.''

''ஆர்கிடெக்சரை ஏன் தேர்ந்தெடுத்தீங்க?''

''இரண்டு காரணம் ஸ்வாரஸ்யமா இருக்கும்னும், எதிர்காலத்துல நல்லா வளரக்கூடிய தொழில்னும் தோணினதால படிச்சேன்.''

''ம்ம்...இரண்டுமே சரியா அமைஞ்சிடுச்சு, இல்லியா? உங்க பேரண்ட்ஸ் சேலத்துலதான் இருக்காங்களா? இந்த சின்னவயசிலே நீங்க இத்தனை பேரும் புகழுமா இருக்கறது அவங்களுக்கு ரொம்பப் பெருமையாக இருக்குமே!''

சில நிமிஷங்கள் முன்பு வரை தன் குழந்தைப் பருவத்தையும், காலேஜில்சேர அம்மாவிடம் சண்டை போட்டதையும், கடைசியில் வீட்டை விட்டு வெளியேறி அவர்களுடன் தொடர்பு இல்லாமல் ஒன்பது வருஷங்களாக இருப்பதையும் நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்தவளிடம் இப்படி ஒரு கேள்வி கேட்கப்படுவதை எண்ணி சுஜா தலையைப் பின்னுக்குச் சாய்த்து சிரித்தாள்.

''ஏன் சிரிக்கறீங்க?''

''ஒண்ணுமில்லே மிஸ்டர் வாசுதேவன்.''

''ஒண்ணுமில்லாததுக்கு இத்தனை பெரிசா சிரிப்பாங்களா? சொன்னா நானும் சேர்ந்து சிரிக்கிறேனே...''

சிரிப்பை உதட்டைவிட்டு எடுக்காமல் என்னவென்று சொல்வது என்கிற பாவனையுடன் அவள் நிற்க, மிஸஸ் வர்மா எட்டிப் பார்த்தாள்,



''ஓ! இங்க இருக்கீங்களா, நீங்க இரண்டு பேரும்! டின்னர் ரெடி...வாங்க. மிஸ்டர் வாசுதேவன், கம் சுஜா...''

உள்ளே போனார்கள்.

கையில் சாப்பாட்டுத் தட்டை வைத்து, வேண்டியதைப் பரிமாறிக் கொண்டதும், மேஜையைச் சுற்றி நின்றபடி மற்றவர்கள் சம்பாஷணையில் கலந்து கொண்டார்கள்.

பேச்சு சாப்பாட்டில் புகுந்து புறப்பட்டது.

அரசியலை இழுத்து வந்தது.

விலைவாசியைப் புரட்டியது.

சினிமாக்காரர்கள் பற்றின கிசுகிசுவில் வந்து நின்றது.

''இரண்டு வாரம் முன்னால் இண்டியா டுடே பார்த்தீங்களா? கபூர் குடும்பத்தை அட்டைல போட்ட இஷ்யூ... இதோட உள் கதை என்னான்னா, ராஜ்கபூரே பணம் கொடுத்து இந்தக் கட்டுரையை எழுத வைச்சாராம். அவருடைய புதுப்படம் 'ப்ரேம்ரோக்' ஓடுமா ஓடாதானு பயம் வந்திடவே இப்படி ஒரு பப்ளிஸிடி ஸ்டண்டாம்...எப்படி?''

ரொம்ப தெரிந்தமாதிரி மிஸஸ் ராவ் பேச சுஜாவுக்குள் எரிச்சல் தளதளத்தது.

''எனக்கு இந்த மாதிரி காஸிப்ல எல்லாம் நம்பிக்கை இல்லே. ஆகாதவங்க கிளப்பற வதந்திதான் பாதிக்குமேல். அத விடுங்க. இண்டியா டுடே பத்தியும் கபூர் குடும்பத்தைப் பத்தியும் உயர்வா சொல்ல ஒண்ணுமே கிடைக்காம இந்த பப்ளிஸிடி ஸ்டண்ட் விவகாரம்தான் அகப்பட்டதா? ம்? ஏன். அதே இண்டியா டுடேல, ரீது, ராஜ்கபூர் பெண், இந்த வருஷம் செய்துகிட்டிருக்குற சாதனை பத்தி போட்டிருக்காங்களே, அது உங்க கண்ணுலபடலியா மிஸஸ் ராவ்?''

''ரீதுவா? சாதனையா? என்ன அது?''

''ரீது, தன் கணவன் ராஜன் நந்தாவோட சேர்ந்துகிட்டு 'நிக்கி-டாஷா'னு ஒரு நூதன காஸ் அடுப்பை தயாரிக்கறாங்க...பதினாறு மாசம் முன்னால நாலு லட்ச ரூபாய் பாங்க் கடனோட ஆரம்பிச்சது, முதல் வருஷத்திலேயே பத்து கோடி ரூபாய் விற்பனையைத் தொடப் போகுது. இதுலே வுள்ளிசா நாலுகோடி நிகர லாபம். அடுத்த வருஷத்துக்குள்ள விற்பனை முப்பது கோடி ரூபாயைத் தாண்டிடறது நிச்சயமாம். எப்படி? இது சாதனைதானே?''

விழித்துக் கொண்டு நின்ற மனைவியின் உதவிக்கு மிஸ்டர் ராவ் வந்தார்.

''ரீது தன் கணவரோட சேர்ந்துகிட்டு பிஸினெஸ் தொடங்கி இருக்கறதா சொன்னியே சுஜா, அதுலதான் மர்மம் இருக்கு... ராஜன் நந்தா யார் தெரியுமா? எஸ்கார்ட்ஸ் தொழிற்கூடங்களின் ப்ரஸிடெண்ட்... அந்தப் புத்தி பின்னால இருக்கறப்போ ரீதுவோட வெற்றிக்கு கேட்கணுமா?''

''ஸோ—புருஷன் மூளை இருக்கறதாலதான் அவங்க பிரகாசிக்கறாங்கனு சொல்றீங்களா?''

''நிச்சயமா!''

''நான்சென்ஸ். நான் ஒப்புக்கவே மாட்டேன். ஆம்பிளைகளைத் தூக்கி சாப்பிடற அளவுக்கு புத்திசாலியான பெண்களும் இருக்காங்க. இதை நீங்க ஒத்துக்கிட்டாலும், ஒத்துக்காட்டாலும் சரி...ஒரு பேட்டிலே ரீது சொல்லி இருக்காங்க. 'நேத்திக்கு விற்பனையான பொருளே நாளைக்கும் அமோகமா விற்கும்னு எதிர் பார்க்கறது தவறு. மாறும் காலத்துக்கு ஏத்த மாதிரி பொருட்களைத் தயாரிச்சு மார்க்கெட்டுக்குக் கொண்டு வரணும்னு நாங்க நினைச்சதோட விளைவுதான் இந்த நிக்கி—டாஷா அடுப்புகள்'னு. ஐ அக்ரி வித் ஹர். இருபது வருஷம் முன்னால ட்ரான்ஸிஸ்டர் ரொம்ப அதிசயம்,



இப்போ காய்கறி கடைக்காரர்கூட ட்ரான்ஸிஸ்டர் இல்லாம இருக்கறதில்லே—அவ்வளவு பிரபலம். இதே மாதிரி எலக்ட்ரானிக் யுகம் ரொம்ப வேகமாக நம்மை வசிகரிக்கறதை உணர்ந்து காரியத்திலே இறங்கணும். நிக்கி—டாஷா அடுப்பு எரியறப்பவே, ரொட்டி வாட்ட, சமூஸா செய்ய அடியிலே க்ரில்—இடம் இருக்கு. எரிபொருள், டைம், எல்லாம் மிச்சம். அதான் அப்படி ஒரே வருஷத்துல விற்பனை ஏறி இருக்கு. எதிர்காலத்தைக் கணிக்கிற திறமை யாருக்கு இருந்தாலும், அது ஆணாயிருந்தாலும் சரி, பெண்ணாயிருந்தாலும்சரி, நாம பாராட்டவே செய்யணும். அதை விட்டுட்டு...இவங்களோட புருஷர் அவர், அதனாலதான் அவங்...''

''ஹேய்... ஹே! ரிலாக்ஸ்.. உன்னோட வாக்குவாதம் பண்ண நான் சரியான ஆள் இல்லே. ஒப்புக்கறேன். பெண்களுக்கு உடம்பு பூரா மூளை...நகம், தலைமுடிகூட மூளைதான். ஸாரி...ஸாரி...வெள்ளைக் கொடி காட்டிடறேன். ஆளைவிடும்மா.''

கர்ச்சிப்பை எடுத்து வேடிக்கையாய் ராவ் ஆட்ட சுஜா உட்பட எல்லாரும் சிரித்துவிட, இன்னும் கொஞ்சம் பேசி, இன்னும் கொஞ்சம் சிரித்து. ஒரு வழியாய் அன்றைக்கு பார்ட்டி முடிந்து அவரவர் வீட்டுக்குப் புறப்பட்டபோது, மணி சரியாய் பதினொன்று என்றது.

## 8

அலாரத்தை நிறுத்திவிட்டு, சின்ன சோம்பலுடன் சுஜா புரண்டு படுத்தாள்.

பின் கழுத்தில் லேசாய் முணுமுணுத்தவலி, முதல் நாள் பார்ட்டியை ஞாபகப்படுத்தியது. வந்து, உடைமாற்றி முகம் கழுவி, தலை சீவி, படுக்க வர, மேற்கொண்டு அரை

மணி ஓடிவிட்டது. அப்புறம் கொஞ்சம் படித்துவிட்டு உறங்க முற்பட்டபோது இரவு மணி ஒன்று.

எழுந்தாள்.

பாத்ருமுக்குள் சென்று பல் தேய்த்த பின், பாயை விரித்துப் போட்டுக்கொண்டு இருபது நிமிஷங்களுக்கு யோகாசனம் செய்தாள்.

ஆறேகாலுக்கு வெளியில் வந்து கூடத்து நாற்காலியில் உட்கார்ந்து ''ராணி காபி'' என்று குரல் கொடுத்தாள்.

காபியுடன், நிதானமாய் இரண்டு பேப்பர்களையும் படித்து முடிக்க அரை மணி ஆனது.

அப்புறம் குளியல்.

ஆபீஸுக்குச் செல்லும் உடை அணிந்து தயாராகி வெளியில் வந்தவள் ''இன்னிக்கு பிரேக்ஃபாஸ்ட் வேணாம் ராணி, சுருக்கப் போகணும். இரண்டு ஸைட் இன்ஸ்பெக்ஷன் இருக்கு. இன்னொரு டோஸ் காபி மட்டும் போதும்'' என,

காபி வந்தது.

குடித்துவிட்டு கிளம்பி ஆட்டோ பிடித்து முதலில் போயிஸ் கார்டனுக்குப் போனாள்.

எட்டு ஃப்ளாட்களைக் கொண்ட நாலு மாடிக் கட்டிடம். ஒவ்வொரு மாடியிலும் இரண்டு படுக்கை அறைகளைக் கொண்ட குடியிருப்பு ஒன்று; மூன்று படுக்கை அறைகளைக் கொண்டது ஒன்று. சதுர அடி முன்னூற்றைம்பது ரூபாயைத் தொடும் விலை உயர்வான வசதிகள் கொண்ட குடியிருப்புகள்.

பாத்ரூம்களில் சலவைக்கல்; சமையல் கட்டில் பாலிஷ் செய்யப்பட்ட கறுப்புக்கல்...

நாலு ஆட்களை அடைக்கக்கூடிய நீள, அகலமான வாட்ரோபுகள். ஒவ்வொரு அறையிலிருந்தும் வெளி உலகத்தை எட்டிப் பார்க்க உதவும் பால்கனிகள்.



சிரமமில்லாமல் குடியிருப்புகளை அடைய லிஃப்ட் வசதி.

முக்கால்வாசி வேலை முடிந்து விட்டது. கட்டிடத்தின் நாலு மாடிகளுக்கும் ஏறிப்போய், செய்த, செய்யவேண்டிய வேலைகளைப் பார்த்து, சொல்லி முடித்தாள்.

நாலாவது மாடியில் சிமிண்ட் பூச்சு வழவழவென்று சரியா இல்லாததைக் குறிப்பிட்டு மேஸ்திரியைக் கண்டித்தாள்.

''கண்ட்ராக்டர் வந்தா ஆபீஸுக்கு வரச்சொல்லுங்க. வேலை சுத்தமா இல்லே...நாளைக்கு உங்களால நம்ம பேர் கெட்டுடும் போல இருக்கு!'' என்று சொல்லிவிட்டு நிற்க வைத்திருந்த ஆட்டோவில் ஏறிக்கொண்டு நுங்கம் பாக்கத்துக்கு வந்தாள்.

ஆடிட்டர் ஷண்முகம், வர்மாவின் நண்பர்.

''ஷண்முகம் போன் பண்ணான்: அவன் வீட்டுலே இரண்டு மூணு இடத்திலே சுவர் விரிசல் கண்டிருக்காம். போய்ப் பார்த்து விவரம் தெரிஞ்சுக்கிட்டு வந்திடு சுஜா'' என்று முதல் நாள் வர்மா சொல்லி இருந்ததன் பேரில் வந்திருக்கிறாள்.

ஆடிட்டர் காத்திருந்தார்.

வணக்கம் சொல்லி, வரவேற்று வீடு பூராவும் காட்டினார்.

வாசல்பக்க அறையில் நிலைப்படிக்கு மேல் கோடு போட்ட மாதிரி சன்னமாய் நீண்டு ஓடிய விரிசல்.

சமையல் கட்டில்...கொல்லை தாழ்வாரத்தில்...

தாழ்வாரம் ரொம்ப மோசமாக இருந்தது. இந்த வீட்டோடு ஒட்டிக் கொண்டிருக்க எனக்குப் பிடிக்கவில்லை என்பது போல மூன்று பக்கமும் பிரதான சுவரிலிருந்து நன்றாக சந்து விட்டு நகர்ந்திருந்தது.

சுஜா, பேப்பர் ஒன்றை பசை தடவி முன்கூட்டத்து விரிசல் மேல் ஒட்டினாள்.

ஒவ்வொன்றையும் ஊன்றிப் பார்த்தாள்.

வீட்டை இரண்டு தரம் சுற்றி வந்தாள். கொல்லைக் கட்டு மண்ணைத் தோண்டச் சொல்லி ஆராய்ந்தாள்.

"அஸ்திவாரம் எத்தனை அடிக்கு போட்டீங்க?"

ஷண்முகம் தெரியாது என்று தலை அசைத்தார்.

"கட்டின வீட்டை இரண்டு வருஷம் முன்னால வாங்கினேன். புதுசா நல்லா இருந்தது. ஒரு வருஷத்துக்கப்புறம் தான் மெதுவா விரிசல் வர ஆரம்பிச்சது."

"ம்ம்...அப்படின்னா ஸாயில் டெஸ்ட் பண்ணாங்களா? இல்லே, பைல் ஃபௌண்டேஷன் போட்டாங்களானு உங்களுக்குத் தெரிஞ்சிருக்காது."

"ம்ஹூம்."

"ஓ. கே. மிஸ்டர் ஷண்முகம், நா மிஸ்டர் வர்மா கிட்டே விவரம் சொல்லிடறேன். நீங்க அவரோடு பேசிடுங்க...வரட்டுமா?"

அங்கிருந்து ஆபீஸுக்கு வந்து இறங்கிக் கொண்டு ஆட்டோவுக்குக் கணக்குத் தீர்த்து அனுப்பினாள்.

"குட்மார்னிங் மேடம்."

"குட் மார்னிங் ஜோஸப்...பெரியவர் வந்திட்டாரா?"

"வந்திட்டார் மேடம்."

"மிஸ்டர் சங்கர்?"

"இன்னும் இல்லே. பாலவாக்கத்துக்குப் போயிருக்கார்னு நினைக்கறேன் மேடம்."

ஓ. எஸ். நேற்றே சங்கர் சொல்லி இருந்தான்; இவள் தான் மறந்துவிட்டாள்.



முன்னணி நடிகர் ஒருவர், ஓய்வுக்குத் தங்க வேண்டி ஒரு பண்ணை வீடு, கடற்கரையை ஒட்டிக் கட்ட விரும்புகிறார். அதற்கு இடம் பார்க்க சங்கர் போயிருக்கிறான்.

"காபி வேணும் ஜோஸப்—ஸ்ட்ராங்கா, சர்க்கரை கம்மியா, சூடா."

"இதோ கொண்டு வரேங்க. இன்ஸ்பெக்ஷனுக்குப் போயிட்டு வறீங்களா?"

"ம்..."

"அப்படின்னா காலைல டிபன் சாப்பிட்டிருக்க மாட்டீங்களே, உட்லாண்ட்ஸ்லேந்து ஏதாச்சும் வாங்கி வரவா மேடம்?"

ஆத்மார்த்தமான அந்த விசாரிப்பு இதத்தைத் தர, "வேணாம் ஜோஸப், பசிக்கலை. காப்பி மட்டும் போதும்" என்று சொல்லிவிட்டு ட்ராஃப்ட்ஸ்மென் இருக்கும் அறையை அடைந்தாள்.

பலகையில் சாய்ந்து வரை படம் வரைந்து கொண்டிருந்த மெய்கண்டன், இவளைக் கண்டதும் நிமிர்ந்து "குட்மார்னிங் மேடம்" என்றான்.

"குட்மார்னிங். மிஸ்டர் குமாரஸ்வாமி வீட்டு ட்ராயிங்கை முடிச்சிட்டீங்களா?"

"இன்னும் அரை மணிலே முடிஞ்சிடும் மேடம்"

"குட். முடிச்சதும் உள்ளே கொண்டு வாங்க. பன்னிரண்டு மணிக்கு அவரை மீட் பண்ணறேன். ட்ராயிங் ரெடியா இல்லேன்னா மனுஷன் துளைச்சிடுவார்."

அதே அறையில் ஒரு பக்கமாய் இருந்த அமோனியா ப்ரிண்டிங் மெஷினில், தாமோதரன் நீல வரைபடங்கள் தயாரித்துக் கொண்டிருந்ததை ஒரு நிமிஷம் நின்று பார்த்து விட்டுத் தன் அறைக்குள் வந்தாள்

ஜோஸப் கொடுத்த காபியைக் குடித்துக் கொண்டே அன்றைக்குத் தொடர்ந்து செய்ய வேண்டிய வேலைகளை ஒரு பேப்பரில் குறித்துக் கொண்டாள்.

இண்டர்காம் 'பே' என்று அழைத்தது.

''எஸ்!''

''சுஜா... எப்ப வந்தே? என் ரூமுக்கு கொஞ்சம் வர முடியுமா?''

எழுந்து போனாள்.

வர்மாவின் அறை பெரியதாக, சுவர் முழுவதும் மரத்தால் இழைக்கப்பட்டு, இங்கே பணப் புழக்கம் அதிகம் என்று வெளிப்படையாகச் சொல்லியது.

உட்கார்ந்தாள்,

''ஷண்முகம் வீட்டைப் பார்த்தியா சுஜா?''

''பார்த்தேன் ஸார். முன்கூடத்திலே விரிசல் அத்தனை ஆழமா இல்லே. எதுக்கும் பேப்பர் ஒட்டிட்டு வந்திருக்கேன். அடுத்த வாரம் திரும்பப் போய் 'செக்' செய்திட்டா நல்லது. பின் வராந்தா மோசமா நகர்ந்திருக்கு. களிமண் பூமிலே, அஸ்திவாரம் சரியா இல்லேனு நினைக்கிறேன். தென்...'' சுஜா தான் தெரிந்து கொண்ட விவரங்களையும், அதற்கு எப்படி வைத்தியம் செய்யலாம் என்று நினைப்பதையும் கூறினாள்.

''தாங்க்யூ. அவர் போன் பண்ணா நா பேசிக்கிறேன். அப்புறம் சுஜா, முக்கியமா எதுக்குக் கூப்பிட்டேன்னா மிஸ்டர் வாசுதேவன் மூணு மணிக்கு டிஸ்கஷனுக்கு வரார்; நீயும் துவக்கத்துலேந்து கூட இருக்கறது தேவலைனு நான் நினைக்கிறேன்.''

''சங்கர் அதுக்குள்ள வந்திடுவானா ஸார்?''

''தெரியலை, வந்தாலும் சங்கர் மிஸ்டர் வாசுதேவன் ப்ராஜக்ட்ல அதிகமா ஈடுபட முடியாதுனே நான் நினைக்க



றேன். கோயமுத்தூருக்கு இனிமே தேவதாஸ் விஷயமா அவன் அடிக்கடி போகவேண்டி வரும். அப்புறம் கோத்தகிரி எஸ்டேட் வீட்டையும் கவனிக்கணும். இந்த வேலையை நானும், நீயுமாவே கவனிச்சிடலாம். பெரிய வேலை—அதனால முழுக்க முழுக்க நான் சம்பந்தப்பட விரும்பறேன், கூட நீயும் இருந்தா தேவலை.''

''ஓ. கே, ஸார். நோ ப்ராப்ளம்.''

''வெல்—வேற என்ன?''

''போயிஸ் கார்டன் ஃப்ளாட்ஸுக்கு போயிருந்தேன். பூச்சு நல்லாவே இல்லே ஸார். கண்ட்ராக்டர் புஷ்பவனத்தை நீங்க கொஞ்சம் கண்டிச்சிங்கன்னா தேவலை. வர வர வேலை அத்தனை சுத்தமா இல்லே.''

போயிஸ் ஃப்ளாட்ஸ் வேலை நல்லா இல்லேன்னா, நாம தொலைஞ்சோம். வீடு வாங்கியிருக்கற ஒவ்வொருத்தரும் செமை பணக்காரங்க. போட்டோவால், அது இதுனு அமர்க்களப்படுத்தற க்ரூப். பூச்சு வழவழானு இல்லேன்னா வால் பேப்பர் காட்டிக் கொடுத்திடும். பணம் வாங்க புஷ்பவனம் வருவார் இல்லே? என்னை மறக்காம பார்த்திட்டுப் போகச் சொல்லு.''

ஒரு மணிக்கு வீட்டிலிருந்து ராணி அனுப்பி இருந்த சாப்பாட்டைச் சாப்பிடுகையில் சங்கர் வேர்வையில் நனைந்த ஷர்ட்டுடன் வந்து 'ப்ஷ்ூ' என்று முனகியபடி நாற்காலியில் சாய்ந்தான்.

சுஜா ஏ. ஸி. யின் காற்றை அவனை நோக்கித் திருப்பி விட்டாள்.

''சாப்பிடறியா?''

''வேணாம்...ஆச்சு''

''எங்க?''

''நடிகர் வீட்டுலேயே. ஆடு, கோழி, பறப்பன, ஊர்வனனு ஒண்ணு பாக்கி இல்லே. வயிறு வெடிச்சிடும் போல இருக்கு.''

''இடம் சரியா அமைஞ்சிதா?''

''நாலு இடம் பார்த்தோம். ஒண்ணு பிடிக்கும் போல இருக்கு. ஏழு ஏக்கர் மொத்தம், நிறைய சவுக்கு, தென்னை மரங்கள். இரண்டாயிரம் அடிலே அழகா வீடு கட்டலாம். ஸ்விம்மிங் பூல் கூட வேணுமாம் சுஜா.''

''நீச்சல் குளமா? அங்கயா? கடல் அத்தனை கிட்டக்க இருக்கறப்பவா?''

''பணம் இருக்கே! என்ன செய்யறது! ஒரு நீச்சல் குளம் கட்டி, ஓய்வு கிடைக்கறப்போ வெள்ளை. கறுப்பு, குண்டு, ஒல்லினு விதவிதமான பெண்களோடு ஜலக்ரீடை பண்றதுல தனி 'கிக்' தானே?''

சுஜா வாய் நிறைய சப்பாத்தியுடன் சிரித்தாள்.

''உனக்குனு அலாதியா கற்பனை வரும். நிறைய ஜேம்ஸ்பாண்ட் படங்கள் பார்க்கறே. அதான் இப்படி கோணல்மாணலா புத்திபோறது. நம்ம ஆக்டர்ஸ் எல்லாம் அப்படிப்பட்டவங்க இல்ல. ரீயல் நைஸ் பீபிள். வெயில்லேயும் மழையிலேயும் நின்னு சம்பாதிக்கறதை நிம்மதியா அனுபவிக்கணும்னு நினைக்கறதுலே என்ன தப்பு?''

சங்கர் எழுந்து நின்று சல்யூட் அடித்தான்.

''தப்பே இல்லே. தாராளமா அனுபவிக்கட்டும். தெரியாத்தனமா உன்கிட்ட வம்படிக்க உட்கார்ந்தது என் தப்புதான்... ஆமா, ஹௌ வாஸ் யுவர் டே?''

''பிஸி... போயிஸ் ஃப்ளாட்ஸுக்கும், மிஸ்டர் ஷண்முகம் வீட்டுக்கும் போயிருந்தேன். வந்து மிஸ்டர் குமாரஸ்வாமியை அரைமணி போரடிச்சேன். மனுஷனுக்கு நம்ப ப்ளான் பிடிச்சிருக்கு. உள் அலங்காரம் பத்தி முடிவு எடுத்தாச்சின்னா, கன்ஸ்ட்ரக்ஷனை ஆரம்பிச்சிடலாம்...''



''ட்ரைவ்இன் தியேட்டரோட மாடல்தயாரா சுஜா?''

''இன்னும் இல்லே...கொஞ்சம் அதைப் பார்த்திடேன். நாளைக்கு அவங்க கூட பேச உட்கார்ரத்துக்கு முன்னால மாடல், புள்ளி விவரங்களோட நாம ரெடியா இருக்கறது நல்லதுதானே?''

''எஸ், யுவர் ஹைனஸ்... நீங்க சொன்னதை உடனே கவனிக்கறேன். வேற ஏதாவது உத்திரவு உண்டா?''

தலையைப் பின்னுக்குச் சாய்த்து சிரித்தவளுக்கு சற்று முன் வர்மா கூறினது நினைவுக்கு வர, கேட்டாள்.

''ஏன் சங்கர், மிஸ்டர் வாசுதேவன் வேலைல நீ சம்பந்தப்படப் போறதில்லையா?''

''ம்ஹூம்—ஏன் கேக்கறே?''

''இல்ல, இப்பதான் வர்மா சொன்னார். நீயும்கூட இருப்பேனு நினைச்சேன்... அதான்.''

''ஸாரி பேபி... ஏற்கனவே தலைக்கு மேலே வெள்ளம் போயிட்டிருக்கறதால ஐயா திணறிகிட்டு இருக்கேன். இது எனக்கு வேணாம். பாண்டிச்சேரி கிட்டதானே. பொடி நடையா போயிட்டு வர்றதுல உனக்கு கஷ்டம் இருக்காது.

''பெரிய வேலைனு வர்மா சொன்னார். யூ ஹாவ் எனி ஐடியா அபௌட் இட்?''

''ம்ஹூம்— வாசுதேவன் ஒரு பெரிய மனுஷர், பாண்டிச்சேரில ஸூப்பர் மார்க்கெட் கட்ட விரும்பறார்—அதான் தெரியும். என்னிக்கு மீட்டிங்?''

''இன்னிக்கு மூணு மணிக்கு... நீ ஆபீஸ்ல இருந்தா வாயேன் சங்கர்.''

''ஐ வுட் லவ் டு... ஆனா முடியாது சுஜா. நடிகரோட பண்ணை வீட்டுக்கு ஸ்கெட்ச் போடணும், ட்ரைவ் இன் தியேட்டர் மாடல் தயாரான்னு பார்க்கணும். தம்புச் செட்டி தெரு வரைக்கும் போயிட்டு வர...''

பட்டியல் போட்டவனைக் கையை நீட்டி சுஜா தடுத்தாள்.

"போர் அடிக்காதே. நீ ரொம்ப பிஸி. அது எனக்குத் தெரியும். மோர் சாப்பிடறியா? ஃபர்ஸ்ட் கிளாஸ் மோர். இஞ்சி, பச்சை மிளகாய் தட்டிப் போட்டது. கம கம வாசனை... போனால் வராது..."

"தாங்ஸ்... வேணாம். வாயத் திறந்தா காக்காய் கொத்தற மாதிரி நான் இருக்கேன். கமகம மோரா நீயே குடி. ஆல் யுவர்ஸ். ஸீ யூ."

சிரித்துக் கொண்டே சங்கர் வெளியே சென்றதும், சுஜா எழுந்து கையைக் கழுவிக் கொண்டாள். டிபன் காரியரைக் கூடையில் வைத்து, ஜோஸப்பை அழைத்துக் கொடுத்து விட்டு, முதல் நாள் மாலை பாதியில் விட்டுச் சென்றிருந்த மிஸ்டர் குமாரஸ்வாமியின் வரவேற்பறை அலங்காரத்தை எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்தாள்.

## 9

இரண்டு ஐம்பத்தைந்துக்கு வரவேற்பறைக்கு வந்து காத்திருந்து, சரியாய் மூன்று மணிக்கு உள்ளே நுழைந்த வாசுதேவனை உற்சாகத்துடன் வர்மா வரவேற்க, அருகில் நின்றிருந்த சுஜா "குட் ஆஃப்டர்நூன் ஸார்" என்றாள்.

"குட் ஆஃப்டர்நூன்... ம்ம் உங்க ஆபீஸ் தடபுடலா இருக்கு மிஸ்டர் வர்மா"

"தாங்க்யூ... சுத்திப் பாக்கறீங்களா? நேரம் இருக்கா?"

"பார்க்கலாமே... எனக்கொண்ணும் அவசரம் இல்லே, அஞ்சு மணி வரை ஃப்ரீதான்."



"இது என் சொந்த பில்டிங். கீழ பூரா பாங்குக்கு வாடகைக்கு விட்டுட்டு மாடியை ஆபீஸ் உபயோகத்துக்கு வைச்சிருக்கேன். இந்தப் பக்கம் ட்ராஃப்ட்ஸ்மென் ரூம். இந்த ஆபீஸ்ல அஞ்சு ட்ராஃப்ட்ஸ்மென் இருக்காங்க. மெய்கண்டன், அம்பரிஷ், தாமோதரன், கோவிந்தராஜன், மீட் மிஸ்டர் வாசுதேவன். நம்ம புது க்ளையண்ட். நிரஞ்சன் எங்கே? லீவா? இங்கதான் படம் வரையறது. ப்ரிண்ட் எடுக்கறது எல்லாம்..."

வாசுதேவன் ஸ்டாண்டில் ஊஞ்சலாடிய பலகைகள் மேல் இருந்த வரைபடங்களை ஊன்றிக் கவனித்தார்.

அமோனியா பிரிண்டிங் மெஷினிடம் சென்று, "இது என்ன?" என்றார்.

"இதான் ப்ளு ப்ரிண்ட் எடுக்கற மெஷின். தாமோதரன்—ஒரு ப்ரிண்ட் எடுத்துக் காட்டுங்களேன்."

தாமோதரன் என்று அழைக்கப்பட்டவர் மெஷினிடம் வந்தார்.

நீலமாய் எரிந்த இரண்டு குட்டி விளக்குகள் மத்தியில் ரசாயனம் பூசப்பட்டு மஞ்சள் நிறத்திலிருந்த பேப்பரை, வரைபடம் வரையப்பட்டிருந்த ட்ரேஸிங் பேப்பர் மேல் வைத்து உள்ளே தள்ளினார்.

ட்ரேஸிங் பேப்பரில் உள்ள படம் யெல்லோ பேப்பரில் பதிவாக, அதை எடுத்து அமோனியா சேம்பரில் போட்டதும், தாள் நீலமாகவும், அதில் அழுந்தப்பட்ட கோடுகள் வெள்ளையாகவும் மாறின.

"ஆ! ஸோ... இதுதான் ப்ளு ப்ரிண்ட் தயார் பண்ணற விதமா? ஹௌ ஸிம்பிள்!"

அடுத்த அறைக்குள் சென்று அக்கௌண்டண்ட் ரவீந்திரனையும், ஸ்டெனோக்கள் சீதாலக்ஷ்மி, சாருமதி

யையும் அறிமுகப்படுத்தின பின் ''இது சுஜா, சங்கர் ரூம்'' என்று மூடியிருந்த ஒரு கதவைத் திறந்து காட்டிவிட்டு, தன் அறைக்கு வர்மா அழைத்துச் சென்றார்.

''உட்காருங்க.''

வாசுதேவன் உட்காராமல் ஒரு பக்கமாய் வைக்கப்பட்டிருந்த மாடல்களின் சமீபம் சென்று குனிந்து பார்த்தார்.

''எல்லாம் நீங்க கட்டின கட்டடங்களோட மாடல்களா?''

''கட்டின, கட்டிக்கிட்டு இருக்குற வேலைகள். இது மும்மூர்த்தி சினிமா காம்ப்ளெக்ஸோட மாடல். இந்த வேலை முடிஞ்சி, தியேட்டர்களுக்கு திறப்பு விழாகூட நடத்தியாச்சு.''

''ஓ...யெஸ்...ப்ரும்மா, விஷ்ணு, சிவா...தியேட்டர்கள் தானே! போன மாசம் வந்தப்ப என் மனைவி இந்த க்ரூப் பத்தி ரொம்ப உயர்வா கேள்விப்பட்டுட்டு, ஒரு சினிமாவுக்குப் போகணும்னு சொன்னா... போயிருந்தோம். நைஸ் ப்ளேஸ்... ஆமா, அது என்ன பேர் ப்ரும்மா, விஷ்ணு, சிவானு?''

''ஏதாவது பேர் வைக்கணும். அட்ராக்டிவா, சட்டுனு மனசைக் கவரும்படி இருக்கணும்னு அந்த ஓனரே சொன்ன பேர்தான் மும்மூர்த்தி காம்ப்ளெக்ஸ். எதிர்பார்த்தபடியே ரொம்ப நல்லா அந்தப் பேர்கள் 'க்ளிக்' ஆயிடுச்சு.''

நேரில் பார்த்ததை ஒருதரம் மனசுக்குள் கொண்டு வந்து நிறுத்தியபடி, வாசுதேவன் மாடலைப் பார்த்தார்.

ப்ரும்மாண்டமான கட்டிடம் அது. ஒவ்வொரு தியேட்டர் நுழை வாயிலிலும் பெரிசாய் அந்தப் பேருக்கு சம்பந்தப்பட்ட கடவுளின் அழகான சிற்ப வடிவம், கண்களுக்குக் குளுமை தரும் விதத்தில் உள்ளுக்குள் அமைக்கப்பட்ட தோட்டம், மறைந்திருந்து ஒளி வீசிய விளக்குகள், வானவில்லின் ஜொலிப்போடு மேலே எழும்பின நீரூற்றுக்கள், இதமான ஏ. ஸி., இந்தக் கோடிக்கு அந்தக் கோடி சிகப்பு கம்பளங்கள்.



மிக நேர்த்தியாக, வெளிநாட்டு சினிமா கொட்டகை எதையும் மிஞ்சிவிடும் அழகு, சௌகரியங்களுடன் கட்டப்பட்ட அந்த காம்ப்ளெக்ஸைப் பார்த்த பிறகே, வர்மா அண்ட் அஸோஸியேட்ஸிடம் தன் ஸூப்பர் மார்க்கெட் வேலையைவிட்டால் என்ன என்ற எண்ணம் தோன்றியதை இப்போது நினைத்துப் பார்த்தபடி வாசுதேவன் அடுத்த மாடல் பக்கம் சென்றார்.

''இது கிண்டிலே நாங்க கட்டிகிட்டு இருக்கற புது ட்ரைவ்—இன் தியேட்டரோட மாடல். சென்னைல இது வரைக்கும் ட்ரைவ்–இன் தியேட்டர் யாரும் கட்டலை. இதுதான் முதல்.''

''பெங்களூர் போயிருந்தப்போ அங்க ஒண்ணைப் பார்த்தேனே!''

''எஸ்...அந்த மாதிரிதான் இதுவும். பிலிம் ப்ரொட்யூஸர் மிஸ்டர் நாகராஜனைக் கேள்விப்பட்டிருக்கீங்க இல்லே? அவர்தான் ஓனர். சுஜா, விவரங்களை மிஸ்டர் வாசுதேவனுக்குச் சொல்லேன். நீதானே இதுக்குத் தாய்.''

வர்மா பெருமையுடன் கூற, சுஜா அவசரமாக மறுத்தாள்.

''முழுக்க முழுக்க என் ஐடியாஸ் இல்லியே ஸார். நாம எல்லோரும் சேர்ந்து உருவாக்கினதுக்கு நான் மட்டும் பெருமை தட்டிக்கறது நியாயமா?''

''ஓ—கமான் சுஜா...அடக்கமா பேசாதே. உன் மூளைதான் இதுக்கு முக்கிய காரணம். சரி...அந்த விவாதம் இருக்கட்டும். நீ மிஸ்டர் வாசுதேவனுக்கு விளக்கு.''

சுஜா நீளமாய் இருந்த குச்சி ஒன்றைக்கையில் எடுத்துக் கொண்டாள்.

''அஞ்சு ஏக்கர் நிலத்தில் இந்த ட்ரைவ்—இன் தியேட்டர் உருவாகுது. முன்னூற்று அம்பது கார்கள் நிற்க லாம். ஒவ்வொரு கார் பக்கத்திலேயும் ரிசிவர் செட் வசதி உண்டு. திரை யாருக்கும் மறைக்காத அளவுக்கு உயரத்துலே இருக்கிறதோட வண்டிகளை லேசான சாய்மானத்தில் நிற்க வைப்பதால், சௌகரியமா சாஞ்சிகிட்டு, படம் பார்க்கலாம். கார்கள் நிற்கும் வரிசைகளைத் தாண்டி, பின்னால பெரிய ரெஸ்டாரெண்ட் கட்டறோம். அங்கே சாப்டுக்கிட்டே படம் பார்க்கலாம். ரெஸ்டாரண்டின் மாடி பூரா, ஷாப்பிங் சென்டரா வைச்சிருக்கோம். படம் முடிஞ்ச பிறகு வீட்டுக்குத் தேவையான சாமான்களை ராத்திரி ஒரு மணி ஆனாகூட வாங்கிக்கிட்டு போறாப்பல, கடைகள் திறந்து இருக்கும். சாயங்காலம், ராத்திரி நேரத்துல படம் காட்டினாலும், பகல் பூரா இந்த ரெஸ்டாரண்ட் கடைகள் திறந்திருக்கும். படம் காட்டப்படாத நேரத்தில் பார்க்கிங்க்கு எட்டணா கொடுத்து காரை நிறுத்திவிட்டு, ஜனங்க சாப்பிடலாம், சாமான்கள் வாங்கலாம். இதனால, மழைக்காலம், படம் காட்டமுடியாத மத்த நேரங்களில் கூட வருமானம் இருக்கும்.''

''படம் பார்க்க வரவங்களுக்கு எப்படி சார்ஜ் பண்ண உத்தேசம்?''

அது சொந்தக்காரருடைய விருப்பத்தைப் பொறுத் திருக்கு—பட், காருக்கு இத்தனைனு வசூல் பண்ணறதுதான் வழக்கம். அதுலே ஒருத்தர் இருந்தாலும் சரி, பத்துப் பேர் இருந்தாலும் சரி.

''பகல் நேரத்துல ஷாப்பிங் பண்ணவரவங்க அப்படியே சாயங்காலம் தங்கி ஓசிலே சினிமா பார்த்திட்டா?''

''இந்தப் பிரச்சனையையும் நாங்க ஏற்கெனவே யோசிச்சாச்சு. காலைல ஏழு மணிக்குத் திறக்கற ரெஸ்டா ரண்டையும், ஷாப்பிங் சென்டரையும் மாலை நாலு மணிக்கு மூடிடுவாங்க. ஆறு வரைக்கும் எந்த வியாபாரமும்



கிடையாது. இந்த சமயத்துலே நின்னுகிட்டு இருக்குற வண்டிகளை வாட்ச்மேன் அனுப்பிடுவார். இல்லே இருக்க விரும்பினா, படத்துக்கான பணத்தை வசூல் பண்ணிடுவார். வெரி சிம்பிள். வண்டிகள் உள்ளே வர, போக, ஒரே ஒரு வழி தான் உண்டு என்பதால் இதுலே தில்லுமுல்லு நடக்க இடமே இல்லே.''

குச்சியால் இது கார் பார்க், இது திரை, இது உணவு விடுதி...என்று சுஜா ஒவ்வொன்றாகத் தொட்டுக் காட்டியபின், வெரிகுட் என்ற பாராட்டுடன் வாசுதேவன் நாற்காலியில் வந்து உட்கார்ந்தார்.

''படம் காட்டற நேரத்தைத் தவிர பாக்கி பொழுதுல இடத்தைப் பூட்டி வைக்கறதைவிட, இந்த மாதிரி வருமானம் வர்றபடி அமைச்சிருக்கறது நல்ல ஐடியா மிஸ்டர் வர்மா.''

''பாராட்டு எது கொடுத்தாலும் அது சுஜாவுக்குத் தான். இந்த எண்ணத்தைச் சொன்னது அவதான்.''

''நீங்க அப்ராட் போயிருக்கீங்களா, மிஸ் சுஜா? அங்க எங்கயாவது இந்த மாதிரி கட்டிடத்தைப் பார்த்திங்களா?''

இல்லை என்று தலைஆட்டிய சுஜா, பக்கத்து நாற்காலி யில் உட்கார்ந்தாள்.

''என்ன சாப்பிடறீங்க மிஸ்டர் வாசுதேவன்? காப்பி, டீ, ஆர் கூல் ட்ரிங்க்?''

''எனிதிங்...''

வர்மா பெல்லை அடிக்க, ஜோஸப் வந்தான்.

''மூணு காப்பி...பிஸ்கட்ஸ்.''

சில நிமிஷங்களில் காபி, பிஸ்கட்ஸ் வர, அதைச் சாப்பிட்டு முடித்தார்கள்.

கோப்பைத் தட்டுகளுடன் ஜோஸப் வெளியேறினதும், வாசுதேவனைப்பார்த்து ''டிஸ்கஷனை ஆரம்பிக்கலாமா?'' என்றார் வர்மா.

''எஸ். ஐ'ம் ரெடி...மிஸ் சுஜாவுக்கு என் திட்டம் தெரியுமா?''

''எனக்குத் தெரிஞ்ச வரைக்கும் தெரியும்.''

''ரைட், உங்களுக்கே நான் இன்னும் விளக்கமா எதுவும் சொல்லலை. ஒரு ஸூப்பர் மார்க்கெட், பெரிய பட்ஜெட்ல, கட்ட விரும்பறேன்னு சொன்னேனே ஒழிய, வேறு விவரங்கள் எதுவும் நாம பேசலை. மெட்றாஸுக்கு வந்து தீவிரமா பேச்சு வார்த்தைகளை வைச்சிக்கலாம்னு பாண்டிக்கு நீங்க வந்தப்போ தீர்மானிச்சோம். இல்லையா?''

வர்மா ஆம் என்று தலை அசைக்க, நாற்காலியைக் கொஞ்சமாகத் திருப்பி, ஒரே சமயத்தில் வர்மா, சுஜா இருவரையும் சிரமப்படாமல் பார்த்துப் பேசும் வகையில் வாசுதேவன் உட்கார்ந்து கொண்டார்.

''என் மனசிலே இருக்கறதைச் சொல்றேன். இது சாத்தியமானதா, இல்லியானு அப்புறமா நீங்க சொல்லுங்க. ஆஸ் யு நோ—எனக்கு இரண்டு தொழிற்சாலைகள் இருக்கு மூணாவதா இன்னொண்ணையும் தொடங்கி இருக்கிறதுக்கு வேணும்னேதான் விளம்பரம் தராம இருக்கேன். பொருட்களை உற்பத்தி செய்யத் தொடங்கினபிற்கு பெரிய அளவிலே விளம்பரம் செய்துக்கலாம்னு அபிப்ராயப்படறேன். பாண்டிச்சேரி ட்யூப்லே தெருவுக்கு—இப்ப ஜவஹர்லால் நேரு தெருனு பேரை மாத்திட்டாங்க. ரொம்ப சமீபமா, நல்ல மையமான இடத்துல எனக்கு பன்னிரண்டு க்ரவுண்ட் நிலம் இருக்கு. அதுல இருக்குற பழைய கட்டிடங்களை இடிச்சித்தள்ளிட்டு, நூதன ஸூப்பர் மார்க்கெட் ஒண்ணைக் கட்ட விரும்பறேன்.

''பாண்டிச்சேரி பலதரப்பட்ட மக்கள் வந்து போற இடமாய் இருந்தும், அதுல இன்னிவரைக்கும் பிரமாதமா சொல்லக்கூடிய ஒரு நட்சத்திர ஹோட்டல், ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ், ஏன்—ஏர்போர்ட் கூடக் கிடையாது. வெளி



நாட்டு, வடக்கத்திய ஜனங்கள் வந்து பணம் தாராளமா புழங்கற ஊர்ல, இந்த மாதிரி வசதியான இடங்கள் இல்லாதது எனக்குப் பெரிய குறையாப் படுது. ஏர்போர்ட் குறித்து என்னால எதுவும் செய்ய முடியாது. பட் வாட் அபௌட் அதர்ஸ்? ஒரு வருஷமா யோசனை பண்ண பிறகு ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் கட்டற இந்த முடிவுக்கு நான் வந்திருக்கேன்.

''வெளிநாடுகளுக்கு நீங்க போயிருக்கீங்க மிஸ்டர் வர்மா. அங்க இருக்குற ஸூப்பர் மார்க்கெட் மாதிரி ஒண்ணை முதல்ல பாண்டிலே கட்டிட்டு, அது லாபகரமா நடந்தா, தொடர்ந்து சென்னை,கோயம்புத்தூர், மதுரை, திருச்சினு எல்லாப் பெரிய ஊர்களிலேயும் செயின் ஆஃப் டிபார்ட்மெண்ட் ஸ்டோர்ஸ் ஆரம்பிக்க விரும்பறேன்.

''ஸ்பென்ஸர் போன்ற கம்பெனிகள் இந்த மாதிரி கடைகளை நடத்தறாங்களேனு நீங்க கேட்கலாம். நான் கட்டப் போறது எல்லாத்துலேந்தும் மாறுபட்டு இருக்கும். டோடலி டிஃபரண்ட். ஷிகாகோலே மார்ஷல் ஃபீல்ட், நியூயார்க்லே மேஸிஸ் மாதிரி அத்தனை சிறப்பா இல்லாவிட்டாலும் 'கே'மார்ட், வுல் வொர்த் மாதிரியாவது நல்ல விதத்தில், மத்திய வகுப்புக் குடும்பங்கள்கூட அணுகற மாதிரி நடத்திக் காண்பிக்கணும்னு நினைக்கிறேன். ஓ. கே. என் முன்னுரை போதும். இனி விவரங்களுக்கு வரலாம்.

''நாலு மாடிகள் கொண்ட கட்டடமா இந்த ஸூப்பர் மார்க்கெட் இருந்தா நல்லது. இங்க இருக்கப் போற பிரிவுகளிலே, கூடுமானவரை ஒரு நபருக்குத் தேவையான அத்தனை பொருட்களும் கிடைக்கணும். ஒவ்வொரு மாடியிலும் டாய்லெட் வசதி கண்டிப்பா இருக்கணும். பொதுவா ஒருஇடத்துல ரெஸ்டாரண்ட் அமைக்கப்படணும் ஜனங்கள் கஷ்டப்படாம ஏறி,இறங்க லிஃப்டுகளும், உற்சாகமா ஷாப் பண்ண ஏ. ஸி. வசதியும் அமைக்க விரும்பறேன். இதெல்லாம் செய்ய செலவு கூடுதலா ஆகலாம்; பரவாயில்லே,

கட்டுறதை எல்லாரும் அதிசயப்படற விதமா பண்ண ணும்னும், வெளிநாட்டுக்கு எந்த வகையிலேயும் நாம குறைஞ்சி போயிடலைனும் நிருபிக்கறதுதான் என் நோக்கம். நௌ வாட் டு யூ ஸே?''

நீளமாய் பேசி வாசுதேவன் நிறுத்த, அவர் கூறின, வந்த விவரங்களை ஒரு பேப்பரில் பென்சிலால் குறித்துக் கொண்டு வந்த சுஜா பிரமித்தாள்.

பன்னிரண்டு க்ரவுண்டில் கட்டிடம்...

பல ஆயிரம் சதுர அடிகள் கொண்ட தளங்கள்...

டாய்லெட், உணவுச்சாலை வசதிகள்...

லிஃப்டுகள் ..

இதமான ஏ. ஸி.யின் குளிர்ச்சி...

இவை எல்லாவற்றையும் விட, உள்ளே நுழைந்து விட்டால் இங்கு கிடைக்காத அத்யாவசியமான சாமான் கள் இல்லை என்று உண்டாக்கப்படும் உணர்வு.

அவள் கேள்விப்பட்ட வரையில் இந்தியாவில் எங்கும் இந்த ரீதியில் டிபார்ட்மெண்ட் கடைகள் இல்லை என்பதால், உடம்பு பரபரக்க முற்பட்டது.

''என் எண்ணங்களைச் சொல்லிட்டேன். இதுக்கு உத் தேசமா ஆகக்கூடிய செலவுகளை நீங்க சொன்னா, அதுக்கு தகுந்த மாதிரி கூட்டவோ, குறைக்கவோ செய்யலாம்.''

முன்னால் சாய்ந்து வாசுதேவன் மீண்டுமொருமுறை இவர்களின் அபிப்ராயத்தை வினவ, இந்த ப்ராஜெக்ட் மூலம் வரப்போகும் வருமானம் முகத்தில் திருப்தியை ஏகத் துக்கு எழுத, வர்மா சுஜா பக்கம் திரும்பி, ''எல்லாத் தையும் குறிச்சிக்கிட்டியா சுஜா? உத்தேச பட்ஜெட்டைப் போட்டுப் பார்க்கலாமா?'' என்றார்.

# 10

''**கா**ல்குலஷனை துவங்கறதுக்கு முன்னால சில சந்தேகங்களைக் கேட்கலாமா, மிஸ்டர் வாசுதேவன்!''

''கோ அஹெட்... ஷுட்...''

''சூப்பர் மார்க்கெட்டுக்கு நாலு மாடி தேவையா? அத்தனை பெரிய இடத்துல வியாபாரம் செய்யற அளவுக்கு பொருட்கள் கிடைக்குமா?''

''வொய் நாட்? நீங்க வெளிநாட்டுக்குப் போன தில்லேனு சொல்லறதால விளக்கமா ஒரு விஷயத்தைச் சொல்றேன். மிஸ் சுஜா... ஸ்டேட்ஸ்ல 'கே' மார்ட்னு ஒரு சங்கிலித் தொடர் சூப்பர் மார்க்கெட் இருக்கு. ஒவ்வொரு டவுன்லேயும் கொஞ்சம் ஊருக்கு வெளிலே, பெரிய இடத்துல இந்த மார்க்கெட்இருக்கு. மாடி இல்லாத பெரிய கட்டிடம். ஈஸியா இருபதாயிரத்திலேந்து, முப்ப தாயிரம் சதுர அடிவரைக்கும் இருக்கும். இங்கு கிடைக்காத சாமான்களே இல்லேனு சொல்லலாம். அதுக்காக, கார், ட்ராக்டர் இது போன்ற சாமான்களும் கிடைக்குமானு கேட்கக் கூடாது. ஒரு மனுஷனுக்குத் தன் அன்றாட வாழ்க் கைக்கு அத்தியாவசியமான சாமான்கள் எல்லாம் கண்டிப்பா அங்கே கிடைக்கும். இந்த மாதிரி சூப்பர் மார்க் கெட் ஒண்ணைத்தான் நான் மனசுலே நிறுத்திப் பார்க்

கிறேன். நியாயமா பார்த்தா நாலு மாடிகூட போதாது. பட், டு ஸ்டார்ட் வித், இது போதும்.''

''சரி, அப்படி என்னென்ன பிரிவுகள் தான் அமைக்கணும்னு நீங்க விரும்பறீங்க?''

''மளிகை, எண்ணை, எட்ஸெட்ரா சமாசாரம் தவிர, ஒரு ஆளுக்கு டெய்லி ரொடீனுக்குத் தேவையான எல்லா கமாடிடீஸூம் இருக்கணும்னு நினைக்கிறேன்.''

''ஏன் மளிகைப் பொருட்களை விட்டுட்டீங்க? அதுவும் ரொம்ப முக்கியமான விஷயம் இல்லியா?''

''முக்கியம்தான். ஆனாலும் இந்தத் தேவைக்கு தடுக்கி விழுந்தா, நிறையக் கடைகள் இருக்கு. சாதாரண பெட்டிக் கடைலேந்து, மினி சூப்பர் மார்க்கெட் வரைக்கும் மளிகைப் பொருட்கள்ல தானே கவனம் செலுத்தறாங்க? தவிர, மளிகை, எண்ணைச் சாமான்கள் வேண்டாம்னு சொன்னாலும், பதப்படுத்தப்பட்ட—ஸே, ஆல்வெரைடீஸ் ஆஃப்ஃபுட் இடீர் சாப்பாட்டுப் பொருட்களுக்கு ஒரு கவுண்டர் ஒதுக்கவே நினைச்சிருக்கேன்.''

''இடீர் சாப்பாட்டுப் பொருட்களா?''

''யெஸ்...இப்ப அவசர யுகம் பெருமளவுக்கு வந்தாச்சு. நின்று, நிதானமா அரட்டை அடிச்சிக்கிட்டு சமையல் கட்டுலே சமையல் பண்ண வேலைக்குப் போற பெண்களுக்கு அவகாசம் இல்லே. இதனால இன்ஸ்டண்ட் சாப்பாடோட தேவை நாளுக்கு நாள் அதிகரிச்சுக்கிட்டே போவதை நினைச்சுப் பார்த்து நான் செயல்பட விரும்பறேன். இதுபத்தி விவரமா இன்னொரு சமயம் பேசலாம். நௌ லெட் அஸ் கெட் பேக் டு த பில்டிங் ப்ளான்.''

''ஓ. கே மளிகை வேணாம். அதைத் தவிர?''



''இருபத்து நாலு மணி நேர மருந்துக்கடை ஒண்ணு இருக்கணும். கடைக்கு வர்றவங்களுக்கு தோதா ஒரு பாங்க். மத்தபடி, நான் ஏற்கனவே சொன்ன விதத்துலே அந்த மார்க்கெட்ல ஓரளவுக்கு எல்லா அத்தியாவசியமான பொருட்களும் கிடைக்கணும்.''

''ம்ம்...''

சுஜா பென்ஸிலை வாயில் வைத்துக் கடித்து யோசித்த நாழிகையில் வர்மா தானும் ஒரு கணக்குப் போட்டுவிட்டு நிமிர்ந்தார்.

''நான் பாண்டிக்கு வந்திருந்தப்போ என்னை அழைச்சிக்கிட்டுப் போய் காண்பிச்சிங்களே அந்த இடம் தானே மிஸ்டர் வாசுதேவன்?''

''யெஸ் அதேதான்.''

''நல்ல ஸ்க்வேர் ப்ளாட் சுஜா... முதல்ல அங்க ஒரு நட்சத்திர ஹோட்டல் கட்டலாம்னு யோசிச்சிட்டிருந்ததா சொன்னீங்க இல்லே?''

''யெஸ். வளர்ந்துகிட்டு வர்ற பாண்டிச்சேரிக்கு வசதியான நட்சத்திர ஹோட்டல்கள் ரொம்பஅவசியம்னு நான் நினைச்சது உண்மைதான். ஆனா, அரசாங்கமே இப்ப ஏர்போர்ட்டும், ஸ்டார் ஹோட்டலும் கட்டப்போறதா அறிவிச்சதும், சரி நாம சூப்பர்மார்க்கெட் கட்டிடுவோம்னு உறுதியா தீர்மானம் பண்ணிட்டேன்.''

''ஹோட்டல் அல்லது தியேட்டர்ஸ் கட்டினா வருமானம் இதைவிட கண்டிப்பா அதிகமா இருக்குமே மிஸ்டர் வாசுதேவன்?''

''ஸர்டென்லி...ஆனாலும் எதிர்காலத்தை நினைச்சிப் பார்க்கிறப்ப, இந்த மாதிரி தொடர் சூப்பர் மார்க்கெட் சில தொழிலதிபர்களால ரொம்ப சீக்கிரமே ஆரம்பிக்கப் படலாம்னு தோணுது. ஏன், நான் முதல் ஆளா இருந்து பேர், புகழை தட்டிக்கொள்ளக் கூடாது?''

நிறுத்தி, லேசாகப் புன்னகைத்த வாசுதேவன் ''நேத்து பார்ட்டிலே நீங்ககூட டோஸ் விட்டீங்களே மிஸ் சுஜா! தொழிலதிபர்கள் எல்லாம் எதிர்காலத்தை ஒட்டி திட்டம் போடணும்னு! ஆம் ஐ கரெக்ட்?''—என்று கேட்க, தீவிர மாகத் தான் விவாதித்ததும், எல்லோரும் பேச்சோடு சரி, காரியத்தில் ஒன்றும் இல்லை என்று சலிப்புடன் கூறியதும் நினைவுக்கு வர, சுஜாவும் பதிலுக்குப் புன்னகைத்தாள்.

''அந்த எண்ணத்தோட இந்தத் திட்டத்துக்கு நீங்க அஸ்திவாரம் போட்டிருக்கீங்கன்னா, நான் உங்களை நிஜம்மா பாராட்டறேன் ஸார்.''

''பாராட்டறதுதான் பாராட்டறீங்க. இதையும் கேட்டுட்டுப் பாராட்டுங்களேன். நேத்து நீங்க நிக்கி—டாஷா அடுப்புப் பத்தி சொன்னீங்க இல்லே! அந்த மாதிரி அடுப்புகளை இன்னும் இரண்டு மாசத்துல தென் இந்தியாவிலே உற்பத்தி பண்ணி விற்பனைக்குக் கொண்டு வரப்போற முதல் கம்பெனி என்னுதுதான். ஜப்பான் நாஷனல் நிறுவனத்தோட ஒப்பந்தம் வைச்சிக்கிட்டு, நான் ஏற்கனவே இதுக்கான முஸ்தீப்புக்கள்ல இறங்கியாச்சு. ஃபாக்டரி ரெடி...டெக்னிகல் பயிற்சிக்காக இங்கிருந்து என் என்ஜினியர்ஸ் ஜப்பான் போயிட்டு வந்தாச்சு... டெஸ்ட் நடந்திட்டிருக்கு. மார்க்கெட்டுக்குக் கொண்டு வர்றத்துக் குள்ள ரொம்பப் பெரிய அளவுலே விளம்பரம் செய்யத் துவங்கிடுவேன். நிக்கி—டாஷா அடுப்புகளிலே இல்லாத ஒரு ப்ளஸ் பாயிண்ட் என் அடுப்புல இருக்கு. குமிழைத் திருகினா எலக்ட்ரானிக் டிவைஸ் உதவியுடன், காஸ் தானாக எரியும் மூன்று அடுப்பு. இதுல ஒரு அடுப்பு எரியும் போதே அடியில் 'க்ரில்' செய்ய வசதி. தீக்குச்சி தேவை யில்லாமல் தானாக எரியும் அடுப்பு, முழுக்க முழுக்க எவர்சில்வர் ப்ளேட்டிங். ஹௌ டு யூ லைக் இட்? வேணும்னுதான் இதுபத்தி நான் இதுவரைக்கும் விளம்பரப் படுத்தாம இருக்கேன். திடீர்னு அடுத்த மாசத்துலேந்து எந்தப் பத்திரிகையைத் திறந்தாலும், சினிமா பார்த் தாலும், அதுலே 'நிஷா' அடுப்புப் பத்தின விளம்பரம்



இருக்கும். 'பூம்'னு எல்லாரையும் ஒரு கலக்குக் கலக்க ப்ளான். என்ன சொல்றீங்க?''

சுஜா வாஸ்தவத்தில் வாய் அடைத்துத்தான் போனாள்.

என்ன மனுஷன் இவர்!

நேற்று அத்தனை பேர்கள் நடுவில் நான் அத்தனை விமர்சனம் பண்ணி இருக்கிறேன். 'ஹேய்—ரொம்ப பேசாதே—அதற்கு ஒரு படி மேலே போய் நான் அடுப்புகள் தயாரிக்கிறேன் தெரியுமா? என்று ஒரு வார்த்தை சொல்லி என்னை மடக்கவில்லையே!

கண்களை விரித்துக்கொண்டு, தாங்கமாட்டாமல் சுஜா கேட்டாள்.

''நேத்து நீங்க ஏன் இதுபத்தி ஒண்ணுமே சொல்லலை?''

''ஏன் சொல்லணும்?''

''ரீது, அவள் கணவன் ராஜன் நந்தாவையும், அந்த நிக்கி—டாஷா அடுப்பு பத்தியும் ஏகமா புகழ்ந்து, நம்ம தொழிலதிபர்கள் எல்லாம் வெறும் பேச்சோட சரினு நான் சொன்னப்போ—'யூ ஆர் ராங்—அதிகப்பிரசங்கித்தனமா, விவரம் தெரியாமப் பேசாதே'னு என்னை அடக்கி இருக்க லாமே மிஸ்டர் வாசுதேவன்?''

வாசுதேவன் சிரித்தார்.

''நிஷா அடுப்பு மார்க்கெட்டுக்கு வர்றவரைக்கும் இது பத்தி எதுவும் பேசக்கூடாதுனு நான் தீர்மானம் பண்ணி இருக்கேனே, மிஸ் சுஜா!''

''இப்ப மட்டும் ஏன் சொன்னீங்க ஸார்?''

தோளைக் குலுக்கி, பதில் சொல்லாமல் வாசுதேவன் மீண்டும் சிரிக்க, நாலு பேர் நடுவில் பெருமை அடித்துக் கொள்ள விரும்பாத ரகம் இவர் என்பது புரிய சுஜா பிரமிப் புடன் அவரைக் கண் சிமிட்டாமல் பார்த்தாள்.

முதலில் குடும்பக் கட்டுப்பாடு விஷயம்.

இப்போது இது...

இன்னும் இந்த மனிதர் எத்தனை பெருமை தரும் காரியங்களை அடக்கமாகச் சாதித்துக்கொண்டு, மௌனமாக இருக்கிறாரோ!

வர்மா சிகரெட் கேஸைத் திறந்து வாசுதேவன் பக்கம் நீட்டி, அவர் 'நோ தாங்க்ஸ்' என்று மறுத்ததும், தான் ஒன்றைப் பற்ற வைத்துக்கொண்டார்.

''நிஷா'ன்றது அடுப்போட பேரா, மிஸ்டர் வாசுதேவன்?''

''ம்ம்... என் மனைவி பேர் நிர்மலா—என் பார்ட்னர் மனைவி பேரு ஆஷா. இவங்க முதல் எழுத்தையும், அவங்க கடைசி எழுத்தையும் சேர்த்து 'நிஷா'னு வைச்சிருக்கோம். மார்க்கெட்டுக்கு இந்த அடுப்புகள் வந்த பிறகு, பலர் வேணும்னே 'நிக்கி—டாஷா'வுக்குப் போட்டியா நாங்க 'நிஷா'னு வைச்சிருக்கறதா நினைக்கலாம். காண்ட் ஹெல்ப் இட்—நூதன காஸ் அடுப்புகளைத் தவிர, 'நிஷா'ன்ற பேர்ல இன்னும் சில மின்சார சாதனங்களையும் தயாரிச்சு மார்க்கெட்டுக்குக் கொண்டுவர இருக்கோம். நாஷனல் கம்பெனியோட கொலாபரேஷன்லே 'மைக்ரோ வேவ் அவன்', 'ரைஸ் குக்கர்ஸ்', புதுவிதமான 'டோஸ்டர் கம் அவன்'-னு நாலைஞ்சி பொருட்களை உடனடியா விற்பனைக்கு—ஸோ, இன்னும் எட்டு மாச காலத்துக்குள்ள கொண்டு வந்திடுவோம்... மார்க்கெட்டுல இப்ப கிடைக்கற எக்கச்சக்க விலை சாதனங்கள்மாதிரி இல்லாம வேலைக்குப் போற மிடில்க்ளாஸ் பெண்மணிகள் கூட வாங்கிஉபயோகப் படுத்தற மாதிரி விலைகளை நியாயமா அமைக்க பரிசோதனை செய்திட்டிருக்கோம். சூப்பர் மார்க்கெட் கட்டி முடிக்கறதுக்கும், இந்த எலக்ட்ரானிக் குடும்ப சாதனங்கள் தயாராகறத்துக்கும் சரியாயிருந்தா நல்லா இருக்கும். இன்னும் சொல்லப் போனா சூப்பர் மார்க்கெட்ல ஒரு பகுதிய சொந்தத்துக்கு வைச்சிகிட்டு,



எங்க 'நிஷா' சாமான்களை நல்ல முறைல விளம்பரம், டெமன்ஸ்ட்ரேட் பண்ணி, கவர்ச்சியா விற்கணும்னும் நினைக்கிறேன் .''

வர்மா சிகரெட்டை ஆஷ்ட்ரேயில் தேய்த்து அணைத்தார்.

''நீங்க சொல்ற ப்ராஜெக்டுக்கெல்லாம் ஏகமா செலவாகுமே மிஸ்டர் வாசுதேவன்! இந்த நிலைமைலே சூப்பர் மார்க்கெட் பட்ஜெட் பெரிசா இருந்தா பரவாயில்லையா?''

வாசுதேவன் இருக்கையில் சாய்ந்து கொண்டார்.

''பை காட்ஸ் க்ரேஸ்—இப்போதைக்கு அந்தக் கவலை எனக்கு இல்லே .. என் பார்ட்னர் குப்தா ஸ்டேட்ஸ்லே இருக்கார். வசதியானவர். குப்தாஸ் ஹோட்டல்ஸ்-னு சங்கிலித் தொடர் ஹோட்டல்களை நடத்தறார். மெள்ள மெள்ள இங்கே வியாபாரத்தை ஊனிக்கிட்டு ஸ்திரமா இந்தியாவுக்கே வந்திடணும்னு நினைக்கிறார். 'நிஷா' காஜெட்ஸ் தயாரிப்பை ஆரம்பிச்சது இந்த எண்ணத்தோடதான். நாங்க எதிர்பார்த்ததைவிட அமோகமா திட்டம் 'கிளிக்' ஆகும்னு தோணுது. அதான் உடனடியா சூப்பர் மார்க்கெட் வேலையையும்துவங்க நினைக்றோம். பட்ஜெட் பத்திக் கவலைப்படாதீங்க. எங்க இரண்டு பேர் முதலீடு போக, பாக்கியை கொடுக்கபாங்க்ஸ் ரெடியா இருக்கு. நோ ப்ராப்ளம்.''

''தட் மீன்ஸ் வீ கேன் கோ அஹெட் வித் த ரஃப் காஸ்ட் அனாலிஸிஸ்?''

''ப்ளீஸ் டு.''

வர்மா முன்னுக்கு வந்து சுஜாவைப் பார்த்தார்.

''இவர் தேவைகளைப் பார்க்கறப்ப, ஒரு தளத்துக்கு ஐயாயிரம் சதுர அடி கட்டாயமா தேவைப்படும்னு தோணுது. என்ன சுஜா?''

''நீங்க ரெண்டு பேரும் பேசிட்டிருந்த நாழிகைல நான் சுமாரா ஒரு கால்குலேஷன் செய்திருக்கேன். சரியா பாருங்க ஸார்!''

பேப்பரை சுஜா நீட்ட வர்மா வாங்கிப் படித்தார்.

''ஆறாயிரத்து நானூறு சதுர அடியா ஒவ்வொரு மாடியும்! அதிகம் இல்லே?''

''நானூறு சதுர அடிகளை டாய்லட், மாடிப்படிகள், லிஃப்ட், விசாரணை கவுண்டருக்கு ஒதுக்கிட்டா பாக்கி ஆறாயிரம் இருக்கும் ஸார். க்ரவுண்ட் ஃப்ளோர்ல மிஸ்டர் வாசுதேவன் விரும்பின மாதிரி பாங்க். இருபத்திநாலு மணி நேர மருந்துக் கடை, குட்டியா ஒரு ஐஸ்கிரீம் பார்லர், குழந்தைகள் நிம்மதியா விளையாட வீடியோ கேம்ஸ் சென்டர் அமைக்கலாம். மத்த மூணு மாடிகளையும் பர்ஸனல், வீடு, பொதுன்னு பிரிக்கலாம். அதாவது ஒரு தனி நபருக்குத் தேவையானவை பூராவும் பர்ஸனல் பகுதியிலே கிடைக்கும். இதையும் ஆண், பெண், குழந்தைனு பிரிச்சிட லாம். வீட்டுக்குத் தேவையான பொருட்கள் அத்தனையும் —கடிகாரமோ, ப்ளாஸ்டிக் வாளியோ, கர்ட்டனோ, முக்காலியோ, ஆணியோ, பெட்ஷீட்டோ—எதுவானாலும் வீடு பகுதியிலே கிடைக்கும்படி செய்யலாம். மேல்மாடி பொதுவான சமாசாரங்களுக்காக — ஸோ, தோட்ட உபகரணங்கள், விளையாட்டு அரங்க சாமான்கள்னு யோசிச்சுப் பார்த்து அமைக்கலாம் மொட்டை மாடியை ரெஸ்டாரண்டா மாத்திட்டா, துளி இடம் வீணாகாது. இது ஒரு 'அவசர யோசனைதான். நிதானமா ப்ளான் பண்ணினா, இன்னும் வசதியா, உயர்வா, திட்டமிடலாம் ஸார்.''

வாசுதேவன் புருவங்களைச் சுருக்கிக் கொண்டு அத்தனையையும் உன்னிப்பாய்க் கேட்டார்.

''ஐடியா நல்லா இருக்கு மிஸ் சுஜா—ஆனா, இந்த ஸ்டெப்புக்கு போகறத்துக்கு முன்னால, உத்தேசமா



சூப்பர் மார்கெட் கட்ட ஆகும் செலவைத் தீர்மானிச் சிடறது நல்லது இல்லியா?''

''ஐ அக்ரி மிஸ்டர் வாசுதேவன். என்னென்ன பகுதிகள் அமைக்கப் போறோம்னு தெரிஞ்சாத்தானே, அதுக்குனு தகுந்த மாதிரி கட்டிடத்தைக் கட்ட முடியும்? இவ்வளவு பிரிவுகள் இருக்கணும்னா, கண்டிப்பா ஆறாயிரம் சதுர அடிக்கு ஒவ்வொரு மாடியும் குறையக் கூடாதுனே நான் அபிப்ராயப்படறேன்.''

''சரி, அப்படியே வைச்சிக்கிட்டு கணக்குப் போட்டா?''

''இன்னி தேதிப்படி கட்டட செலவு சதுரத்துக்கு நூற்றி அம்பது ரூபானு வைச்சிகிட்டா, ஒரு தளம் கட்ட ஒன்பது லட்சம். நாலு மாடிக்கு முப்பத்தியாறு லட்சங்கள். கமர்ஷியல் லிஃப்ட் இரண்டாவது வேணும். நாலு லட்சம் வீதம் அது ஒரு எட்டு லட்சங்கள். ஆக, வெறும் எலும்புக் கூடு கட்டிடச் செலவு மட்டும் ஈஸியா நாற்பத்தாறு லட்சம் ஆகும். இது தவிர சென்ட்ரலி ஏ. ஸி. செய்ய ஆகும் செலவு, ப்ளஸ் உள் அலங்கார வேலைகள்...எப்படி யும் எழுபத்தைந்து லட்சத்தைத் தொட்டுடும்னே நினைக் கிறேன். நீங்க என்ன சொல்றீங்க ஸார்?''

வர்மா பக்கம் திரும்பி சுஜா கேட்க, ''யு ஆர் வெரி ரைட்'' என்றவர் வாசுதேவனைப் பார்த்து ''என்ன சொல் றீங்க மிஸ்டர் வாசுதேவன்? உங்க அபிப்ராயத்தைச் சொன்னிங்கன்னா, வீ கேன் கோ ஃபர்தர்'' என்றார்.

வாசுதேவன் கைக்கடிகாரத்தைப் பார்த்தார். தன்னோடு வந்திருந்த ப்ரீஃப் கேஸை எடுத்துக்கொண்டு எழுந்து நின்றார். புன்னகைத்தார்.

''ஈவ்னிங் ஃப்ளைட்ல டெல்லிக்குப் போறேன். புதன் கிழமை திரும்பி வருவேன். நீங்க இரண்டு பேரும் என் னோட பாண்டிக்கு வந்தா இடத்தைப் பார்த்திடலாம். நான் டெல்லிலேந்து வர்றத்துக்குள்ள சில ஸ்கெட்ச்களைத்

தயாரா வைச்சிருந்திங்கன்னா, ஐ'ல் பி ஹாப்பி. அப்ப நான் வரேன். மணி அஞ்சு. ஹோட்டலுக்குப் போயிட்டு, ஓய்வெடுக்க இளம்ப சரியாயிருக்கும். குட் நைட்.''

அன்று மாலை ஏழு வரைக்கும் அலுவலகத்திலேயே தங்கி, மனசுக்குத் தோணின விதத்தில் சூப்பர் மார்க்கெட்டுக்கான வரைபடங்கள் வரைந்து கொண்டிருந்த சுஜா, வெளி வேலைகள் முடிந்து அலுவலகத்துக்கு வந்த சங்கர் ''ஹேய் பிசாசு! நீ இன்னுமா இருக்கே! மை குட்னஸ்!'' என்று வியந்ததை லட்சியம் பண்ணாமல் ''யு நோ சங்கர், திஸ் வாசுதேவன், ஈஸ் ரியலி எ கிரேட் மேன். ரொம்ப ரொம்...ப பெரிய மனுஷர் மட்டுமில்லே. ரொம்ப அலாதியான மனுஷர். அவரை எனக்கு ரொம்ம்...ப பிடிக்கிறது'' என்றாள்.

# 11

''ஹலோ!''

''சுஜா!''

''எஸ்?''

''வாசுதேவன்.''

''ஓ! ஹல்லோ...எங்கேயிருந்து பேசறீங்க, ஸார்? உங்க ஊரா, எங்க ஊரா?''

''எப்படித் தோணுது?''

''குரல் கிட்ட. கேட்குற மாதிரிதான் தோணுது.''

''அப்ப நான் மெட்ராஸ்லேந்துதான் பேசறேன்.''

சின்னப் பெண் போல அவள் வினவ, அதற்கு ஈடாக அவர் பதில் கூற, இரண்டு பேரும் சிரித்தார்கள்.

''சொல்லுங்க ஸார்...பாண்டிலேந்து எஸ். டி. டி. லே தானே பேசறீங்க?''



''இல்ல சுஜா. இங்க வந்திருக்கேன். 'சோழா'லேந்து பேசறேன்.''

''போன வாரம் நான் பாண்டிக்கு வந்திருந்தப்ப, இன்னும் சில நாட்களுக்கு எங்கேயும் அசைய முடியாது. கழுத்து வரைக்கும் வேலை இருக்குனு சொன்னீங்களே, ஸார்?''

''அது நிஜம்தான்... ஆனாலும் அவசர வேலையா ஒரு நாள் வரவேண்டிய நிர்ப்பந்தம்.''

''சூப்பர் மார்க்கெட் மாடல் தயாராயிடிச்சானு கேட்க போன் பண்ணுயிருந்திங்கன்னா ஐ'ம் ஸாரி ஸார். இன்னும் ரெடி ஆகலை...அடுத்த வாரம்தானே உங்களைச் சந்திக்கப் போறோம்னு, வேற வேலைல கவனமா இருந்திட்டேன்''

''லோ, நான் எப்பப் பேசினாலும் ஆபீஸ் சம்பந்தமாதான் பேசுவேன், பேசணும்னு தீர்மானிச்சிட்டீங்க?''

''ஸார்?''

குழப்பத்துடன் சுஜா வினவ, வாசுதேவன் சிரித்தார்.

''இப்ப மணி என்ன சுஜா?''

மணிக்கட்டைத் திரும்பிப் பார்த்தாள். ''ஐந்தே கால்'' என்றாள்.

''எப்ப வேலை முடிஞ்சி வீட்டுக்குப் போவீங்க?''

இப்போது சுஜாவின் குழப்பம் இன்னும் அதிகமாகிப் போனது.

''அபௌட் ஸிக்ஸ் தர்ட்டி.''

''சாயங்காலம் ஏதாவது ப்ரோக்ராம் வைச்சிருக்கிங்களா?''

''அ! நோ ஸார்...ஏன் கேக்கறீங்க?''

''ஒண்ணுமில்லே...ஏழரை மணி வாக்குல உங்க வீட்டுக்கு வரலாமானு தெரிஞ்சிக்கத்தான் கேட்டேன்.''

'ஓ'—சுஜா சில கணங்களுக்கு மௌனமாய்இருந்தாள்.

என் வீட்டுக்கு வாசுதேவனா?

ஏன்?

கன்னங்கள் இரண்டிலும் வெது வெதுப்பை உணர முடிந்தது.

''என்ன சுஜா?''

''வித் ப்ளெஷர் ஸார்— ஆனா, வந்து...''

''எதுக்காக திடீர்னு வரீங்கன்னுதானே கேட்கப் போறீங்க. ராத்திரி சாப்பாட்டுக்கு உங்களை வெளிலே அழைச்சிகிட்டுப் போகலாம்னு ஒரு சின்ன ப்ளான். தட்ஸ் ஆல்...''

என்னடா இது!

முதலில் வீட்டுக்கு வருகிறேன் என்கிறார்.

அப்புறம், சாப்பிட வா என்கிறார்.

பழகின ஆண் நண்பர்களுடன் எப்பவாவது சாப்பிடப் போவதும், சினிமா ட்ராமா போவதும் புதுசில்லை என்றாலும் வாசுதேவனுடன் பழகும் இந்த ஒரு மாசமாய் இப்படி சாப்பிட வர முடியுமா என்று அவர் கேட்பது முதல் முறை என்பதால் சுஜா கொஞ்சம் தயங்கினாள்.

''இன்னிக்கு...வந்து...வேலை இருக்கு...அவசரமா ஒரு ஸ்கெட்ச் போடணும்.''

''நாழியாகாது சுஜா...சுருக்க திரும்பிடலாம்... ஆனா, வேற வேலை இருந்தாலோ, இல்லே ஏதாவது காரணத் தாலோ, நீங்க வர விரும்பாட்டி, ப்ளீஸ் சொல்லுங்க...நான் புரிஞ்சிப்பேன்.''

சிலரைப் போல மென்று விழுங்கிக் கொண்டு சாப்பிட அழைக்காமல், தயக்கமில்லாமல் கேட்க வேண்டியதைக் கேட்டதோடு, தான் யோசிப்பது புரிந்து, அதையும்சரியான கோணத்திலிருந்து வாசுதேவன் எடுத்துக் கொள்வது புரிய, சுஜா அவசரமாய்ப் பேசினாள்.



''எனக்கு நாக்கு ஒன்னரை முழம், நல்ல சாப்பாடு கிடைச்சாவிடமாட்டேன். ஏழரைக்குதயாராஇருக்கேன்.''

''தாங்க்யூ... உங்க விலாசம் சொல்றீங்களா?''

சொன்னாள்.

எழுதிக்கொண்டு ''ஸீ யூ...பை'' என்று சொல்லி வாசுதேவன் தொடர்பைத் துண்டித்ததும் சுஜா மெதுவாய் ரிஸீவரை வைத்தாள்.

கன்னத்தின் வெப்பம் காதுக்குப் பரவிவிட்ட மாதிரி இருந்தது.

உள்ளங்கை வியர்வையில் கசகசத்தது.

இருதயத் துடிப்பில் லேசான வேகம்.

ஒரு நிமிஷம் அப்படியே உட்கார்ந்துவிட்டு எழுந்து ஏ. ஸி. யிடம் சென்று முகத்தைக் காட்டினாள்.

சில்லென்று வீசிய காற்று, முகச் சூட்டுக்கு இதமாக இருந்தது.

இந்த ஒரு மாச காலத்தில் வாசுதேவனை நாலைந்து முறைகள் இங்கும், இரண்டு முறை பாண்டிச்சேரியிலும் சந்தித்துவிட்டது வரிசையாய் ஞாபகத்துக்கு வந்தன.

அந்த முறை டெல்லியிலிருந்து வாசுதேவன் வந்ததும், ஏற்கனவே தீர்மானித்திருந்த தினுசில் வர்மாவும், சுஜாவும் அவரோடு பாண்டிக்குப் போனார்கள்.

கடலூர் போகும் சாலையில், பாண்டிச்சேரியிலிருந்து நாலைந்து கிலோ மீட்டர் தள்ளி வாசுதேவனின் வீடு—ம்? இல்லை — பங்களா? ... ம்ஹூம் இல்லை — மாளிகை இருந்தது.

கருங்கல்லால் ஆன, உயரமான காம்பௌண்ட் சுவர். அந்த நாளைய ஜமீன்தார்கள் வீடுகளில் காணப்படும் வேலைப்பாடு கொண்ட கருப்பு இரும்பு கேட். நுழைந்தால் கிட்டத்தட்ட அரை பர்லாங் தூரத்துக்கு வீடு என்கிற நாம

தேயமே இல்லாமல் இரண்டு பக்கமும் உயர உயரமான மரங்கள். ஒழுங்காய் வெட்டிவிடப்பட்ட போகன் வில்லாக்கள். கிளிப்பச்சை நிறத்தில் புல்வெளி. வளைந்து சென்ற பாதையின் முடிவில் பிரும்மாண்டமாய் வீடு... ஸாரீ, மாளிகை.

ரோமாபுரி வகைச் சிற்பங்களைக் கொண்ட நீரூற்றைச் சுற்றி, படிகளுக்கு முன் வண்டி நிற்கும் முன்னரே, ஒரு ஆள் ஓடி வந்து கதவைத் திறந்தான்.

மரியாதையுடன் வணக்கம் சொன்னான்.

வீடு பழைய கம்பீரத்தோடு, ஆங்காங்கு புது நாகரீகமும் சேர்க்கப்பட்டு அழகாய் இருந்தது.

கருப்பு, வெளுப்பு சலவைக்கல் கட்டங்களால் ஆன தரை...உயர்ந்த விட்டம். பெரிசு பெரிசாய் வண்ணக் கண்ணாடிகள் பொருத்தப்பட்ட ஜன்னல்கள். தேக்கு மரக் கதவுகள். லஸ்தர் விளக்குகள், அறைக்கு அறை தப்பாமல் நின்று கொண்டிருந்த மார்பிள் சிலைகள்.

சுஜாவின் உபயோகத்துக்கு என்று முதல் மாடியில் ஒதுக்கப்பட்டிருந்த அறையின் ஜன்னலிடம் சென்று பார்த்தால் நீலமாய் கடல் 'ஹலோ' என்றது. விட்டத்திலிருந்து தொங்கிய லேஸ் கர்ட்டன், ஆலிவ் க்ரீன் கார்ப்பெட், தேக்குமர மேஜை, பெல்ஜியம் கண்ணாடி பதித்த ட்ரஸிங் டேபிள், வசதியான கட்டில், மெத்தை, சுவரை அலங்கரித்த 'டேகா' ஓவியம்—என்று அறை மஹா தடபுடலாய், எக்கச்சக்க பணக்காரத்தனத்துடன் இருந்தது. கதவைத் திறந்து கொண்டு அறையை ஒட்டியிருந்த பால்கனிக்கு வந்து நின்றதும் காற்று ஆளைத் தூக்கிக்கொண்டு போனது மேலே நிர்மலமான ஆகாயம்; கீழே அழகான ரோஜாத் தோட்டம்.

இத்தனை கொடைப் பணக்காரராக வாசுதேவன் இருப்பார் என்று எதிர்பார்க்காததால் சுஜா ரொம்பவும் தான் பிரமித்துப் போனாள்.



இது என்ன வீடு! தோட்டம்!

பரம்பரை பரம்பரையாய் ஜமீன்தாரராக இருந்த குடும்பமா!

மார்பிள் சிலைகளும், மரவேலைப்பாடுகளும் நிச்சயம் இந்த நாட்டுக் கைச்சரக்கு இல்லை!

இத்தனை அழகான பொருட்களைப் பாங்குறத் திரட்டியது யார்?

இத்தனை உசந்த ரசனை யாருக்கு? வாசுதேவனின் தாத்தா? அப்பா? இல்லை வாசுதேவன்!

முதலில் வாசுதேவனையும், அப்புறம் அவர் இல்லத்தையும் கண்டு அதிசயித்த சுஜா, அவர் மனைவி நிர்மலாவைச் சந்தித்த போது மட்டும் 'ஹா' என்று அடிப்பட்டுப் போனது நிஜம்.

வாசுதேவனின் தோளைக்கூடத் தொடாத உயரம். குண்டு என்றால் அப்படி ஒரு குண்டு. அழித்தால் சுலபமாய் சாதாரண சைஸில் நாலு பெண்களைச் செய்யலாம்.

இந்தப் பருமனைத் தூக்கலாய்க் காட்டிய கட்டம் போட்ட பட்டுப்புடவை. சிகப்பும், பச்சையுமாய் ஆளைப் பயமுறுத்தியது. நாலு விரற்கடை ஜரிகை. தாலிச் சரடு மட்டும் பதினைந்து பவுன் இருக்கும். அத்தனை கனம்! கை, விரல், மூக்கு, காது என்று ஒரு இடம் விடாமல் தங்கத்தில் கொட்டை கொட்டையாய் வைரம். நடக்கும்போது ஜலுங் ஜலுங் என்று குலுங்கின வண்டிச் சகட மெட்டிகள்.

எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்த மாதிரி சுஜாவைமிரள வைத்தது சவுரி வைத்து நீளமாகப் பின்னப்பட்ட அந்தப் பிசுக்கு ஜடை.

'வாங்க' என்று சாப்பிட டைனிங் ஹாலில் நுழைந்தவர்களை பெண்மையே இல்லாத கட்டைக் குரலில் வரவேற்று, திரும்பி நடக்கையில் ஏகத்துக்குப் பருத்திருந்த

ப்ருஷ்ட பிரதேசத்தில் பிரிபிரியாய்த் தொங்கின பின்னலின் நுனி இப்படியும் அப்படியும் அசைய, சுஜா வாஸ்தவமாக அதிர்ந்து போனாள்.

மிஸஸ் வாசுதேவன்—இவரா?

ஆஜானுபாகுவாய் நின்று, ரசனையுடன் உடுத்தி, அறிவு பூர்வமாகச் சிந்தித்து, பேசி, தன்னடக்கத்துடன் செயல்படும் வாசுதேவனின் மனைவி இவரா?

ரசனை மிக்க இந்த வீட்டுக்கும், தோட்டத்துக்கும் சொந்தக்காரர், இவரா?

குண்டாக இருப்பதாலோ, குள்ளமாக இருப்பதாலோ ஒருவரை மட்டம் என்று ஒதுக்கும் ரகம் கண்டிப்பாய் சுஜா இல்லைதான்.

அதேபோல, ஒருவர் கெட்டிச்சரிகை பட்டுப்புடவையும் நகைகளும் அணிவதும் அவளைப் பொறுத்தவரை தப்பில்லைதான்.

அவரவர் இஷ்டம்—அதில் தலையிட யாருக்கும் உரிமை கிடையாது—என்றே நினைப்பாள்.

ஆனாலும்?

பணம் காசு, நகை, புடவை எவ்வளவுதான் கொட்டிக் கிடந்தாலும், எதை எப்போது அணிவது, உடுத்துவது என்ற கட்டுப்பாடு வேண்டாமா?

பகல் ஒரு மணிக்கு, கல்யாணத்துக்குப் போகிற மாதிரி கோட் ஸ்டாண்டில் துணிகளை மாட்டி வைக்கிற மாதிரி, மிஸஸ் வாசுதேவன் ஏன் தன்னை அலங்கரித்துக் கொண்டிருக்கிறார்?

'வாங்க' என்ற வார்த்தையை உதிர்த்துவிட்டு, மேலே எதுவும் பேசத்தெரியாத அளவுக்கு ஒன்றும் தெரியாதவரா, இல்லை கூச்ச சுபாவம் உள்ளவரா?



விளக்க முடியாத சங்கடத்துடன் சுஜா சாப்பிட உட்கார்ந்தாள்.

பெரிய்ய மேஜையில் ஒரு பக்கமாய் வாசுதேவன், வர்மா, இவள்.

''மிஸஸ் வாசுதேவன் நம்மகூட சாப்பிடப் போறதில்லையா?''

ஒரு கணம் அவர் அடி உதட்டைக் கடித்து, எச்சிலை விழுங்கிக் கொள்கிற மாதிரி சுஜாவுக்குத் தோன்றியது.

''ஸாரி...அவங்க அப்புறமா சாப்பிடுவாங்க.''

''ஏன் ஸார்?''

''விருந்தாளிகளைக் கவனிச்சிட்டு சாப்பிடறதுதான் அவங்க பழக்கம்.''

வர்மாவுடன் சேர்ந்து சாப்பிட மிஸஸ் வாசுதேவன் தயங்குகிறாரா?

அதுதானா உண்மைக் காரணம்?

அவள் சிந்தனையைப் புரிந்துகொண்ட தினுசில் அன்று மதியம் ஸைட் பார்க்கச் சென்றிருந்தபோது, ஒரு நிமிஷம் தனிமை கிடைக்க, வாசுதேவன் சின்னக் குரலில் கூறினார்.

''நிர்மலா அதிகம் படிக்காதவங்க, மிஸ் சுஜா. அந்த காம்ப்ளெக்ஸ் அவங்களுக்கு உண்டு. தவிர அவங்க வளர்ந்த விதம் வேற...தாத்தா, பாட்டி ரொம்ப ஆர்த்தடாக்ஸ் பீபிள். கட்டுப்பாடா வளக்கறேன்னு சொல்லி, வெளி உலக அனுபவமே, ஏன், பள்ளிக்கூடப்படிப்புகூட இல்லாம செய்திட்டாங்க. நீங்க புரிஞ்சிப்பீங்கன்னு நினைக்கிறேன்.''

களிமண் பொம்மை மாதிரி பெண்டாட்டி உருவாவதை பார்த்துக்கொண்டு சும்மா இருந்துவிட்டு இப்போது சமாதானம் பேசுகிறாரே என்ற எண்ணம் 'ணக்' கென்று ஒரு கோபக்குமிழை வெடிக்கச் செய்தது.

''ஒரு பெண் எப்படி வளர்ந்திருந்தாலும், அவள் கணவன், தேவையான உரிமை, சுதந்திரம் கொடுத்து உலகத்தைப் புரிஞ்சிக்க உதவியிருக்கலாமே ஸார்?''

''நிர்மலாவுக்கு நான் சுதந்திரம் கொடுக்கலேனு நீங்க நினைக்கறீங்களா?''

பெண்கள் சுதந்திரம் பற்றியும், மேல்ஷாவனிஸம் பற்றியும் ஒரு பிடி பிடித்துவிடலாமா?

பிஸினெஸ் பேச வந்த இடத்தில் வீண் பேச்சு எதற்கு என்று ஒதுங்காமல் உறைக்கும்படி நாலு வார்த்தை கேட்டு விடலாமா!

வேகத்துடன் தலை நிமிர்ந்தவள் அந்த முகத்தையும், அதில் வாஸ்தவமாகத் தெரிந்த வேதனையையும் காண நேரிட்டதும் சட்டென்று நிதானத்துக்கு வந்தாள்.

இவரா?

மனைவிக்கு சுதந்திரம், மரியாதை கொடுக்காமல் அடக்கி வைத்திருக்கிறாரா?

இல்லையே—அப்படித் தோன்றவில்லையே?

பிரயத்தனப்பட்டு தன்னை அடக்கிக் கொண்டாள்.

புன்னகையை உதட்டில் நெளியவிட்டு ''மிஸ்டர் வர்மா கூப்பிடறார் போல இருக்கே'' என்று பேச்சை மாற்றினாள்.

அன்று மாலை வர்மாவும், சுஜாவும் சென்னைக்குத் திரும்பி விட்டார்கள்.

வண்டியில் வரும்போது வர்மா, வாசுதேவனைப் பற்றிக் கொஞ்சம் வம்படித்தார்.

''இத்தனை புத்தி, கம்பீரம் எல்லாம் இருக்குற வாசுதேவனுக்கு அந்த அம்மா மாதிரி ஒரு மனைவின்னா, திஸ் ஈஸ் ரியலி அன்ஃபேர்—இல்லியா சுஜா? நிர்மலா, வாசுதேவனோட முறைப்பெண்ணாம். சின்ன வயசிலேயே



பெரியவங்க முனைஞ்சி நின்னு கல்யாணத்தை முடிச்சிட்டாங்களாம். சாந்தாகிட்ட அந்தம்மாவே சொல்லி இருக்காங்க. குழந்தைங்க பிறக்கலைன்றது இன்னொரு வருத்தமான விஷயம். ஆனா, எது எப்படி இருந்தா என்ன, வாசுதேவன் அவங்களோட சந்தோஷமா இருக்குற மாதிரி தான் தெரியறது...இல்லே?''

எதற்கும் சுஜா பதில் சொல்லவில்லை.

மறுநாள் சங்கரிடம் மட்டும் தான் பார்த்து, கேட்டு. சந்தோஷித்து, அதிர்ந்தவைகளைப் பகிர்ந்து கொண்டாள்.

''நிர்மலாவுக்கு இன்னிக்கெல்லாம் முப்பத்தி ஏழு. முப்பத்தி எட்டு வயசு இருக்கும். அதுக்குள்ள மாமி மாதிரி ஏன் தான் நடந்துக்கறாங்களோ தெரியலை. இது அவங்க தப்பா, இல்லே அப்படியே அடக்கி வைச்சிகிட்டு இருக்குற வாசுதேவன் தப்பானு புரியலை சங்கர்...''

சங்கர் தலையை அசைத்து மெதுவாகச் சிரித்தான்.

''ஆரம்பிச்சிட்டியா உன் குதர்க்க வாதத்தை! எங்கடா இன்னிய கோட்டாவைக் காணமேனு பார்த்தேன். உன்னை ஒண்ணு கேக்கட்டுமா சுஜா? இதுல யார் தப்பு, யார் ரைட்டுனு தெரிஞ்சுகிட்டு நீ என்ன பண்ணப்போறே? ம்? வர்மா சொன்ன மாதிரி இப்படி இருக்கிறதுதான் அவங்க இரண்டு பேருக்கும் சந்தோஷத்தைத் தருதுன்னா, வொய் டு யூ பாதர்?''

சுஜா கண்களை இடுக்கிக் கொண்டாள்.

''ஒருத்தரோட பல மாசங்கள் சேர்ந்து பழக வேண்டிய நிர்ப்பந்தங்கள் வர்றப்போ, அவங்க எப்படி இருந்தா நமக்கென்னனு இருக்க முடியுமா சங்கர்?''

''அப்போ—மண்டையை உடைச்சுக்கோ.''

சிரித்தபடியே சொன்ன சங்கர், கதவிடம் சென்று நின்றான். சிரிப்பு மறந்து போக யோசனையுடன் பேசினான்.

''வழக்கமா இப்படி க்ளையண்ட்ஸ் குணங்கள்லேயும் அவங்க குடும்ப சமாசாரங்கள்லேயும் நுழையறவ நீ இல்லேயே சுஜா—வாட்ஸ் ஹேபனிங்?''

தெரியவில்லை.

பதில் ஏதும் கூறாமல் தோளைக் குலுக்கி அந்த நிமிஷத்தைச் சமாளித்து விட்டாலும், அப்புறம் வாசுதேவனைத் தொடர்ந்து சந்தித்து அவரைப் பற்றி இன்னும் அதிகமான விவரங்கள் புரிந்த பிறகு 'உங்களை மிஸ் சுஜானு சொல்லாம சுஜானு கூப்பிடலாமா?' என்று ஸ்வாதீனத்துடன் கேட்ட பிறகு, ஏனோ அவரைச் சுற்றின சிந்தனைகள் அதிகமாகிவிட்டன. இப்போது யோசிக்கும் வேளையில் பளிச்சென்று மனசில் சுழன்றது.

மேஜைமுன் வந்து அமர்ந்தவளுக்கு வேலை செய்ய வேண்டும்போல் இல்லாததால், ட்ராயரைப் பூட்டி வர்மாவிடம் சொல்லிக்கொண்டு வீட்டுக்கு வந்தாள்.

குளித்து, கரும்பச்சை பட்டுச் சூரிதார் கமிஸை உடுத்தி, குட்டியாய் பச்சையில் பொட்டும், சிகப்பு லிப்ஸ்டிக்கும் தரித்தாள். தலைமுடியை பம்மென்று ப்ரஷ் செய்து பறக்க விட்டாள். வாட்ச் அணிந்து கைப்பையுடன் கூடத்தில் வந்து உட்கார்ந்தாள்.

சரியாய் ஏழரைக்கு வாசல் மணியை அழுத்தின வாசுதேவன், கதவைத் திறந்தவளைப் பார்த்துப் புன்னகைத்தார்.

''குட் ஈவினிங் சுஜா... யூ லுக் ப்ரிட்டி.''

''தாங்க் யூ ஸார்...உள்ள வாங்க. வீட்டைத் தேட சிரமப்பட்டீங்களா?''

''ம்ஹூம். ம்ம்...உங்களைப் போலவே உங்க வீடும் அலாதி தனித்தன்மை, கம்பீரத்தோட இருக்குனு நான் சொன்னா தப்பா எடுத்துப்பீங்களா?''



இருதயத் துடிப்பு லேசாக அதிகரிப்பதை உணர்ந்த சுஜா, ''தாங்க்யூ. காபி சாப்பிடறீங்களா?'' என்றாள்.

''வேணாம்...நாம சுருக்க போனாத்தானே சீக்கிரமாத் திரும்ப முடியும்!''

''அப்ப கிளம்பலாமா?''

வண்டியை டிரைவர் ஓட்ட சுஜாவும் வாசுதேவனும் பின் இருக்கையில் அமர்ந்தார்கள்.

அடையார் கேட் ஹோட்டல்.

தொழிலைப் பற்றியும், சூப்பர் மார்க்கெட் பற்றியும், இந்தியாவின் பொருளாதாரம் பற்றியும் பேசிக்கொண்டே சாப்பிட்டார்கள்.

பத்து அடிக்க ஒரு சில நிமிஷங்கள் இருக்கையில், சுஜா வீட்டின் முன் கார் நிற்க, அவளுடன் வாசுதேவனும் இறங்கினார்.

''மேலே வரீங்களா?''

''இல்லேம்மா...நாழி ஆச்சு.''

''குட் நைட் அண்ட் தாங்க்யூ ஃபார் எ லவ்லி டின்னர்.''

''ப்ளெஷர் ஈஸ் மைன்...'' பேசிய வாசுதேவன் டிரைவர் பக்கம் திரும்பி ''டிக்கிலே இருக்கற பெட்டிய மாடிலே கொண்டு வைச்சிட்டு வந்திடுப்பா'' என்றார்.

பெட்டியா?

பரிசு காகிதம் சுற்றப்பட்டு உச்சித் தலையில் ரிப்பனுடன் இருக்கும் இதில் என்ன?

''என்னது மிஸ்டர் வாசுதேவன்?''

''போய்த்தான் பாருங்களேன்.''

''இல்லே...சாதாரணமா யார் கிட்டயிருந்தும் எந்த பரிசும்...நான்...''

''ப்ளீஸ்...மேலே போய் பிரிச்சுப் பாருங்க. பிடிக் கலைனா நான் திரும்ப வாங்கிக்கறேன்...குட்நைட்.''

கார் புறப்பட்டதும், சுஜா மெதுவாய் மாடிக்கு வந்தாள்.

பரிசு பேப்பரைப் பிரித்து, அட்டை டப்பா மூடிகளை விலக்கினாள்.

பளபளவென்று எவர்சில்வர் ப்ளேட்டிங் செய்யப்பட்ட 'நிஷா' காஸ் அடுப்பு.

மூன்று அடுப்புகள், நடு அடுப்பின் கீழ் க்ரில் செய்யும் வசதி, குமிழைத் திருகினால் பற்றி எரியும் அடுப்பு...

கூடவே வெள்ளைக்கவரில் இருந்த கடிதத்தைப் பிரித்தாள்.

அன்பான சுஜா—

உங்களைச் சந்தித்த முதல் நாள் நிக்கி—டாஷா அடுப்பைப் பற்றி நீங்கள் பேசிக் கேட்ட கணத்திலிருந்தே, முதல் 'நிஷா' அடுப்பு தயாரானதும் உங்களுக்கு அளிக்க வேண்டும் என்ற ஆசை...நிக்கி...டாஷா மாதிரி நன்றாக இருக்கிறதா?

அன்புடன்,

வாசுதேவன்.

ஸோ, இதைக் கொடுப்பதற்காகத்தான் அவசரமாகப் பாண்டியிலிருந்து அத்தனை வேலைகள் நடுவிலும் வந்திருக்கிறாரா?

# 12

''ப்ஷூ..''

கைப்பையை மேஜைமேல் வீசிய சுஜா நாற்காலியில் வேகமாய் உட்கார்ந்தாள்.

மணியை அடித்து, எட்டிப் பார்த்த ஜோஸப்பிடம் ''முதல்ல ஜில்னு தண்ணி, அப்புறம் காபி...ஸ்ட்ராங்கா...'' என்று கூறி, அவன் வெளியே போனதும் முஷ்டியால் ஓங்கி மேஜையைக் குத்தினாள்.

தன் இருக்கையில் அமர்ந்து, அவளுடைய செய்கைகளைப் பார்த்துக்கொண்டிருந்த சங்கர் மெல்லக் கனைத்தான்.

''என்னாச்சு? எதுக்காக இத்தனை படபடப்பு?''—அவனுக்கு பதில் சொல்லாமல் சுஜா ''செல்ஃபிஷ் பாஸ்டர்ஸ்'' என்று முணுமுணுத்தாள்.

''ஹேய், வாட்ஸ் த மேட்டர்?''

ஜோஸப் கொண்டு வைத்த தண்ணீரை ஒரே மூச்சில் குடித்தவள், சங்கரை கண்களை இடுக்கிக்கொண்டு பார்த்தாள்.

''பணம், காசு இருக்குற திமிர்ல, கண்ணைச் சுழட்டி மத்தவங்களோட கஷ்டத்தைப் புரிஞ்சிக்காம இருக்குறதோட, தாங்க எண்ணறதும், பேசறதும்தான் சரினு இருக்காங்களே, இவங்களை வரிசையாக நிற்க வைச்சி சுட்டுக் கொன்னாத் என்ன சங்கர்?''

''யார் மண்டை இன்னிக்கு உருளுது சுஜா? விவரமா சொன்னாத் தானே புரியும்.''

சுஜா நகங்களை சில கணங்களுக்கு ஆராய்ந்தாள் பெருமூச்சு இழுத்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ள முயன்றாள்.

''இன்னிக்கு மதர் தெரீஸாவோட ஹோம் ஃபார் த டையிங் டெஸ்ட்டிட்யூட்ஸுக்குப் போயிருந்தேன் சங்கர். அனாதையா அந்திம காலத்துல யாரும் இல்லாம தவிக்கிறவங்களை 'நாங்கஇருக்கோம், கவலைப்படாதே'னு சொல்லி கூட்டி வந்து, இருக்க இடம், உடுத்த உடை, சாப்பிட சாப்பாடு கொடுத்து கவனிச்சிக்கற இல்லம். இதுபற்றி நிறையக் கேள்விப்பட்டதால ரொம்ப நாளாவே போகணும்னு ஆசை. எண்ணூருக்கு ராமநாதன் ஃபாக்டரீ கன்ஸ்ட்ரக்ஷன் விஷயமா போனவ, அந்த இல்லத்துக்கும் போயிருந்தேன். மை...மை சங்கர்...நீ என் கூட வந்திருந்தாத்தான் நான்ஏன் இத்தனை உணர்ச்சிவசப்பட்டு போறேன்றது புரியும். நான் போனப்போ அங்கே ஒருத்தர் செத்திட்டார். வயசான பொம்பளை...ஜாதி, மற்ற உயர்வு தாழ்வு எதையும் பார்க்காம, பாக்கி அத்தனை கிழவர், கிழவிங்களுமா பைபிள் படிச்சி, ஸ்லோகம் சொல்லி, தங்களுக்குத் தெரிஞ்ச விதத்துலே துக்கம் அனுஷ்டிச்சி பிணத்தை எடுக்க உதவினதையும், எந்த நிமிஷம் வேணும்னாலும் நமக்கும் இந்தச்சாவு ஏற்படலாம்; அதனால அவஸ்தைப்படாம, நிம்மதியா சாவை எதிர் நோக்கறதுதான் சரின்ற விவேகத்தோட அவங்க ஒவ்வொருத்தரும் செயல்படற மாதிரியும் தோண, எனக்குள்ள இதுநாள் இல்லாத சாவு பத்தின விழிப்புணர்வு கூட ஏற்பட்டது சங்கர்.''



''சரீ—இதுக்கும், எல்லாரையும் நிக்க வைச்சி சுடணும்னு கோமேவியா மாறி உத்தரவு போட்டதுக்கும் என்ன சம்பந்தம்?''

''இரு...அவசரப்பட்டா எப்படி? இரண்டு மணி நேரங்களை ஹோம்ல செலவழிச்சி அந்தத் தள்ளாதவங்க தங்களால முடிஞ்சவரைக்கும் ஒருத்தருக்கு ஒருத்தர் உபயேகமா இருக்கறதையும், முடியாதவங்க துணிகளை ஹோம் ஸிஸ்டர்ஸ் சிரிச்ச முகத்தோட துவைச்சுப்போட்டு, துளி அழுக்கு இல்லாம இல்லத்தைப் பெருக்கி, துடைச்சி வைச்சிக்கறதையும் பார்த்து, சொந்த பந்தம் எதுவுமே இல்லாத இவங்களுக்காக இந்த ஸிஸ்டர்ஸ் தாய்மையான அன்போட இப்படி உழைக்கறாங்களே, நாம ஒண்ணுமே செய்யறதில்லையே'னு நெகிழ்ந்துபோய்க் கிளம்பினவ வர்ற வழிலே மிஸ்டர் அஷோக் வேலையையும் எட்டிப் பார்த்திட்டு வந்திடுவோம்னு நினைச்சி, அவரைச் சந்திச்சதுதான் தப்பாப்போச்சு.''

அஷோக் ஒரு மோட்டார் ஏஜன்ஸி கம்பெனியின் உரிமையாளர். கழுத்துவரை பணம். போட் க்ளப் ரோடில் உள்ள தனதுவீட்டைப் புதுப்பிக்கும் பணியை இவர்களிடம் விட்டிருப்பவர்.

வேலை நடந்துகிட்டிருக்குற இடத்துலே அஷோக், அவர் ஃப்ரெண்ட்ஸ் இரண்டு பேர் இருந்தாங்க...மனசு கனமா கனத்துகிட்டு இருந்ததால, அவங்க பேச்சுக்கும் சிரிப்புக்கும் என்னால ஈடு கொடுக்க முடியலை. 'உடம்பு சரியில்லியா சுஜா, ஏன் எப்படியோ இருக்கீங்க'னு அஷோக் கேட்டதும், யார்கிட்டயாவது மதர் தெரீஸா பத்தி பேசாட்டி தலை வெடிச்சிடும் போல இருக்க, பாத்ததையும், உணர்ந்ததையும் கொட்டித் தீர்த்திட்டு 'அவங்களுக்கு எதிர்ல நிக்கறப்போ ஒரு பூச்சி மாதிரி குறுகிப் போயிட்டேன்'னு குரல் தழுதழுக்கச் சொல்றேன்— அதுக்கு அந்தத் திமிர் பிடிச்சவன் சிரிச்சிட்டு 'இதையெல்லாம் தெரிஞ்சிப்பானேன், அப்புறம் பூச்சி மாதிரி குறுகிப்

போவானேன்! தலை எழுத்தா'னு அலட்சியமா பேசினப்போ, கன்னத்துல அறையத்தோணிச்சு...பதில் பேசாம புறப்பட்டு வந்திட்டேன். மனிதாபிமானமே இல்லாத இவங்கள்ளாம் இருந்து என்ன பிரயோஜனம் சங்கர்?''

சங்கர் எழுந்து வந்து அவள் தோளைத் தட்டினான்.

''சுஜி.. சுஜி...நம்ம கையை மீறின விஷயங்களுக்காக நாம குமுறிப்போறதுலே அர்த்தம் என்ன? ம்? அஷோக் குணம் தெரிஞ்சு அவன்கிட்ட இந்த மாதிரி உயர்வான விஷயங்களைப் பேசினது உன் தப்பு தானே?''

''என்ன பணம் இருந்து என்ன சங்கர்! பேஸிக்கா மனுஷனா இருந்து இரக்கஉணர்வோட இரண்டு வார்த்தை சொல்ல அவனுக்கு முடியாமப் போயிட்டது பார்! அதான் எனக்கு ஆத்திரம் வருது!''

''விடு. அவங்கள்ளாம் கண்ணைக் கட்டிவிட்ட குதிரைங்க தங்க வசதி, தங்க விருப்பு வெறுப்பு மட்டும் தான் தெரிஞ்சவங்க.''

''இவன் போய் வரிஞ்சு கட்டிகிட்டு ஹோமுக்கு உடம் பால உதவ வேண்டாம், பணத்தை வாரிக் கொட்ட வேண்டாம். 'ஆமா சுஜா. அந்த ஸிஸ்டர்ஸ் ரொம்ப உசந்தவங்கதான்'னு ஒரு வார்த்தை சொல்லக்கூடாதா?''

''அரே—லீவ் இட். மனசை இப்படி அல்லாட விடறது உன் குணத்துக்குப் பொருந்தாது. விடு. நம்மால முடிஞ் சதைச் செய்யணும். மத்தவங்க செய்யாததைப்பத்தி குறை சொல்ல நமக்கு உரிமை இல்லேனு சொல்லுவியே, மறந்து போச்சா, சுஜா.''

ஜோஸப் காபி கொண்டு வந்து நீட்ட, மௌனமாய் சுஜா எடுத்துப் பருகினாள்.



எதிர் மேஜையில் உட்கார்ந்து அவளையே அழுத்த மாகப் பார்க்கையில், அவன் கொதிக்கும் கொதிப்பைப் பூரணமாய் சங்கரால் புரிந்து கொள்ள முடிந்தது.

நாட்டைப்பற்றியும், அதன் பலவீனம், ஓட்டைகளைப் பற்றியும் வெகுவாக விமர்சித்துவிட்டு, வெறும் வாய் சவுடாலோடு நின்று, காரியத்தில் ஒன்றுமே செய்யாமல் இருக்கும் ரகம், கண்டிப்பாய் சுஜா இல்லை.

சமுதாயத்தில் சீரழிவு வாஸ்தவமாகப் பாதிக்க, அதன் உய்வுக்குத் தன்னால் முடிந்த வகையில் அவள் உழைப்பது யாருக்குத் தெரியுமோ தெரியாதோ, சங்கருக்குத் தெரியும்.

விஸ்ராந்தி— என்ற முதியோர் இல்லத்தின் அட்சய பாத்திர நிதிக்கு ஆயிரத்து ஐநூறு ரூபாய் கொடுத்து, அதன் வட்டியை வைத்துக்கொண்டு பாட்டிகளைப் பராமரிக்கும் ஒரு நாள் செலவை ஏற்றிருக்கிறாள்,

மன நோய்க்கு ஆளாகி, கணவன் வேண்டாம் என்று ஒதுக்கிவிட்ட பெண்மணிக்கு மாசம் ஐம்பது ரூபாய் சிகிச்சைக்காக டாக்டரிடம் தருகிறாள்.

பார்வை இழந்தவர்களுக்கு படித்துக் காட்ட, அவர் களுக்காகப் பரீட்சை எழுத 'ஸ்க்ரைப்' பாகத் தன்னைப் பதிவு செய்து கொண்டு வாரம் சில மணி நேரங்களை ஒரு மாணவருக்காக ஒதுக்குகிறாள்.

இவை தவிர மூன்று மாசத்துக் கொருமுறை கட்டாயம் ரத்ததானம் செய்கிறாள். தான் இறந்த பிறகு கண்களை எடுத்து, இல்லாதவருக்கு அளிக்க வேண்டும் என்று எழுதிக் கொடுத்திருக்கிறாள்.

''நான் திடும்னு இறந்திட்டா, என்னோட இருதயம், கிட்னி, தோல், இன்னும் யார் யாருக்கு, என்னென்ன உதவுமோ அத்தனையும் நீ கிட்ட இருந்து கொடுத்திடு சங்கர்...'' என்றும் சொல்லி இருக்கிறாள்.

இவை தெரிந்த சமாசாரங்கள். இன்னும் தெரியா தவை எத்தனையோ!

சுஜா தலையைத் திருப்பி சங்கரைப் பார்க்க, அவன் புன்னகைத்தான்.

''என்ன பார்க்கறே! மடத்தனமா இவ உணர்ச்சி வசப் பட்டுப் பேசறாளேன்னா?''

படபடப்பு மறையாத நிலையில் இருப்பவளின் புத்தியை வேறு திசையில் திருப்ப எண்ணி, சங்கர் முகத்தைக் குறும் பாக வைத்துக் கொண்டான்.

''நேத்து ராத்திரி ரேடியோல ஒலிபரப்பிய ஒரு கலந் துரையாடலை நீ கேட்டிருந்தா என்ன பண்ணியிருப்பேனு நினைச்சுப் பார்த்தேன்—சிரிப்பு வந்தது.''

''சிரிப்பு வர்ற அளவுக்கு என்ன செய்திருப்பேன். சங்கர்?''

''ரேடியோவைத் தூக்கிப் போட்டு உடைச்சிருப்பே.''

''யா?...''

சங்கர் வாய்விட்டுச் சிரிக்க, சுஜாவும் அவனோடு சேர்ந்து கொண்டாள்.

''என்ன கலந்துரையாடல் அது சங்கர்?''

''மூணு பிரமுகர்கள் கலந்துகிட்ட உரையாடல். 'கற்பு அன்றும், இன்றும்'னு தலைப்பு வேதகாலக் கற்பு, தமிழ்ப் பண்பாடு, ஹாய் ஊய்னு கால் மணிலே கேள்விப்பட்ட அத்தனை சமாச்சாரத்தையும் பேசித் தீர்த்தாங்களே தவிரவும், இன்றைய சூழ்நிலைக்கு உபயோகமாக, கன்ஸ்ட் ரக்டிவா ஒரு பாயிண்ட், ஒருத்தர் கூட சொல்லலை. எதுக் காக இப்படி அவங்க நேரம், நம்ப நேரம் இரண்டையும் வீணடிக்கறாங்களோனு எனக்கே தோணிச்சினா பாரேன்.''

சுஜா கைப்பையிலிருந்து ச்சூயிங்கம் பாக்கெட்டைப் பிரித்து சங்கரிடம் ஒன்று நீட்டிவிட்டு, தான் ஒன்றை வாயில் போட்டுக் கொண்டாள்,



''என்ன சுஜா...மடையன், முட்டாள்னு கத்துவேனு பார்த்தா, புஸ்வாணமா இருக்கே!''

''கற்புங்கறதைப்பத்தி நீ என்ன நினைக்கறே சங்கர்?''

சங்கர் கைகளைக் கூப்பி வேண்டுமென்றே பரிதாப மாகப் பார்த்தான்,

''ஒண்ணுமே நினைக்கலை...நீ என்ன நினைக்கிறியோ அதான் நானும் நினைக்கிறேன். அதனால வீணா சண்டைக்கு இழுக்காதே. நான் 'ஐயோ பாவம்' கேஸ்.''

சுஜா சிரித்தாள். பின், யோசனையுடன் ''விளையா டாதே சங்கர். நான் இது பத்திப் பேசணும்னுதானே டாபிக்கை எடுத்தே, ம்? சொல்லேன் ப்ளீஸ்'' என்றாள்.

அவன் மௌனமாய் இருக்க அவளே தொடர்ந்தாள்.

''உனக்கு ஒரு கதை தெரியுமா சங்கர்? ரேணுகா, ஜமதக்னி கதை? மஹா பதிவிரதையான ரேணுகா தினமும் மணல்லே குடம் பிடிச்சி, அதுலே தண்ணி எடுத்துக்கிட்டு வருவாங்களாம். ஒருநாள் ஆகாயத்தில் பறந்த இந்திர னோட நிழல் ஜலத்துல விழ, ஆஹா, என்ன அழகுனு ஒரு கணம் மனசுல நினைச்சதுல, அவங்க கற்பு பறிபோய் அன்னிக்கு குடம் பண்ண வராம போயிடுச்சாம். அதுக்கு தண்டனையா அவங்க தலையை பிள்ளை பரசுராமரை விட்டு புருஷன் வெட்டச் சொன்னதும், அவர் சாதுர்யமா அம்மா உயிரைத் திரும்பக் கேட்டதும் நமக்கு இப்ப வேணாம்.

''ரேணுகா, அவங்க கற்பு, இதை மட்டும் எடுத்துக்க லாம். மனசால ஒரு ஆணை நினைச்சாக்கூட தப்புங்கற அளவுகோலை இன்னிக்கு வைச்சுப் பார்த்தா, நாட்டுலே எத்தனை பெண்கள் தேறுவாங்கன்னு நீ நினைக்கறே!''

சங்கர் உயரத்தில் பெரிசாய்ஜீரோ ஒன்றைப் போட்டு காட்ட சுஜா தலை அசைத்து ஆமோதித்தாள்.

"யூ ஆர் ரைட். ஒருத்திகூடத் தேறமாட்டா. இது தான் நிஜம். நாம சொல்லறதைக் கேட்டு பெண்கள் வரிஞ்சு கட்டிகிட்டு சண்டைக்கு வரலாம்—ஆனா தனியா உட்கார்ந்துகிட்டு மனசிலே கைய வைச்சி யோசிச்சா, நாம சொல்லறது சரினு புரியும். சினிமாக்காரர்களோட அழகை அரசியல்வாதி அல்லது தொழிலதிபர்களோட சாமர்த்தியத்தை, தன் மேலதிகாரிகளோட குணங்களை ரசித்து, விமர்சிக்காத பெண்கள் யாரு இப்போ? கட்டுப்பெட்டியான வயசான பெண்கள்கூட 'பாலகிருஷ்ண சாஸ்திரிகள் சிகப்பு சால்வையை தோள்ல போட்டுக்கிட்டு என்ன கம்பீரமா கதை சொல்றார்'னு சொல்ற காலம் இது! ஆணோட உடம்பை, அது சம்பந்தப்பட்டதை விகல்பமில்லாம பெண்கள் ரசிக்கறது சகஜமாயிட்டது. அன்னிக்கு எங்க வீட்டுக்காரம்மா, வயசு அம்பது இருக்கும்; தோட்டத்துல நின்னு புருஷன்கிட்ட உரிமையோட 'நேத்து பார்த்த படத்துல சிவாஜி சஃபாரி ஸூட் போட்டுகிட்டு வந்தது அழகா இருந்துச்சுங்க. நீங்களும் போடுங்களேன்'னு சொல்லிட்டு இருந்ததைக் கேட்டேன். இதனால அவங்க கற்பு போயிட்டதுனு அர்த்தமா? காலம் மாறிட்டதை உணர்ந்து அளவுகோலை மாத்தணும். முக்கியமா தடலடிப் பேச்சை விடணும். என்ன சொல்றே சங்கர்?"

சங்கர் எழுந்து நின்று 'ஹியர் ஹியர்' என்று சொல்லிக் கை தட்டினான்.

"நூத்துக்கு நூறு ஒத்துக்கறேன். கூடவே நீ சொல்லறதுக்கு இன்னும் ஒரு படி மேல போகக்கூட நான் விரும்பறேன். முன்னே எல்லாம் பெண்கள் சமையற்கட்டைத் தாண்டாம இருந்தாங்க. சபல உணர்வுக்கு ஆளாகற சந்தர்ப்பங்கள் குறைஞ்சிருந்ததால் தெரிஞ்சோ, தெரியாமலோ கற்பு நல்ல விதமா பாதுகாக்கப்பட்டது. இன்னிக்கு வேலைக்குப் போற பெண்கள் அதிகமாயிட்ட நிலை. சபலங்களும், தவறுகளும் பெருகிட்டதுல அதிசயம் என்ன?"



"கரெக்ட்...வீட்டுலே புருஷன் திரும்பிப் பார்க்காம இருக்கறப்போ, பக்கத்து ஸீட் ஆண் 'இந்தப் புடவை உங்களுக்கு நல்லா இருக்குங்க'னு சொல்லறப்போ—இந்த வார்த்தையை அவன் தன் மனைவிகிட்ட சொன்னானா இல்லையான்றது வேற விஷயம்—இந்தப் பெண்ணுக்குள்ள ஒரு போதையும், புருஷனைவிட நண்பர் தன்மேல் அக்கறை உள்ளவர் என்ற பிரமையும் உண்டாகறது நியாயம். இதன் மூலம் சுலபமா சபலங்களுக்கு ஆளாகித் தவி..."

சுஜா முடிக்குமுன் போன் கிணுகிணுக்க, எடுத்துப் பேசிய சங்கர் "உனக்குத்தான்" என்றான்.

"எஸ்...சுஜா ஹியர்."

"......"

"ஓ! ஹலோ ஸர்...எப்ப வந்தீங்க? ம்ம்...ஃபைன்... இன்னிக்கா? எத்தனை மணிக்கு? ஏழு? ரைட்...ரெடியா இருக்கேன், பை."

ரிஸீவரை வைத்து நிமிர்ந்தவள், தானாகவே சங்கரிடம்—"வாசுதேவன்" என்றாள்.

"இங்க வந்திருக்காரா? இரண்டு நாள் முன்னேகூட வந்திருந்தார் போல இருக்கே?"

"யா—டெல்லிக்குப் போயிட்டு திரும்பறார், ராத்திரி டின்னருக்கு வா'னு கூப்பிட்டார்—சரினு சொன்னேன்."

தயக்கமில்லாமல் பேசியவளை சங்கர் நிமிர்ந்து பார்த்தான்.

"அடிக்கடி அவரோட டின்னர் சாப்பிடறாப்பல இருக்கு?"

சுஜா தலையைச் சாய்த்துப் புன்னகைத்தாள். அவன் கண்களை ஏறிட்டு பதில் கூறினாள்.

"டின்னர் மட்டுமில்லே சங்கர்...லஞ்சுக்குக்கூடப் போறேன்...அதை விட்டுட்டியே!"

''எந்த க்ளையண்ட்டோடும் தனிப்பட்ட முறைலே தொடர்பு வைச்சிக்கப் பிடிக்காத நீ, இவரோட அதிகமா பழகறது எனக்கு ஆச்சரியமா இருக்கு சுஜா!''

சுஜா பென்ஸிலை டேபின் மேல் உருட்டினாள்.

தணிந்த குரலில் பேசினாள்:

''ஐ லைக் ஹிம் சங்கர். அதான் காரணம்...இதுல புரியாம இருக்க என்ன இருக்கு!''

அவன் பதில் கூறாமல் இருக்க, என்னைப் புரிந்துகொள்ளேன் என்கிற பார்வையைப் பார்த்தாள். சின்னதாய்ப் புன்னகைத்தாள்.

அன்று மாலை வாசுதேவனோடு வெளியில் போவதை எதிர்பார்த்துத் தயாராகையில் உடம்பில் ஒரு சூடு பரவுவதையும் இருதயம் தம் தம் என்று எகிறிக் குதிப்பதையும் அவளால் உணர முடிந்தது.

வாசுதேவனைப் பற்றின பேச்சை எடுத்துவிட்டாலே கொஞ்ச நாளாய் இந்த அவஸ்தைகள் தோன்றிவிடுவது அவளுக்குப் புரிந்ததுதான்.

ஐ லைக் ஹிம் சங்கர்.

எனக்கு அவரைப் பிடிக்கிறது சங்கர்.

அவ்வளவுதானா?

உட்கார்ந்து யோசிக்கையில் வெறும் பிடிக்கிறதுமட்டும் இல்லை; அதற்கும் மேலேயே புள்ளி குத்த முடிந்தது.

இந்த உணர்வு சரிதானா?

இதை வளர்க்கலாமா?

இல்லை, கிள்ளிவிட வேண்டுமா?

நிதானமாக அலசின வரைக்கும் வாசுதேவன் பழக்கம் மனசுக்கு அலாதி சந்தோஷத்தையும், திருப்தியையும்



தருவதும், இதனால் யாருக்கும் எந்தவித வருத்தமும் ஏற்படவில்லை என்பதும் புரிய, குற்றமனப்பான்மை எதுவும் இன்றி இருக்க முடிந்தது.

இந்தத் தெளிவும் உறுத்தல் இளமையும் சேர்ந்து உந்தியதாலோ என்னமோ அன்று முதல் முறையாக இரவு விருந்தின் போது 'உன்னைப் பார்க்கப் பார்க்க உன் மேல் நான் வைத்திருக்கும் மதிப்பும், அன்பும் அதிகமாகிறது, சுஜா'—என்று கூறி அவள் விரல்களை வாசுதேவன் பற்ற, பதிலுக்கு இவளும் தன் பிடியை இறுக்கியதும், வீட்டில் இறக்கிவிடும் முன் 'ஐ லவ் யூ சுஜா'—என்று கனமான குரலில் கூறி மென்மையாய் முத்தமிட்டபோது அந்த ஸ்பரிசத்தில் குழைந்து போனதும் சுஜாவுக்கு இயல்பாக இயற்கையாகத் தோன்றியது.

## 13

காபியும் கையுமாய் பேப்பர் படிக்க உட்கார்ந்த சுஜாவுக்கு புத்தி அதில் லயிக்கவில்லை.

வாசுதேவன்...

அந்தப் பேச்சு, சிரிப்பு...

ஸ்பரிசம்...

முத்தத்தின் மென்மை.

உடம்பு பூராவும் ஜிலுஜிலுவென்று ஒருவித சிலிர்ப்பு கோடு போட, பேப்பரைத் தள்ளி வைத்தாள்.

இருபத்தி ஏழுவயசு ஆகிறதே தவிர, இதுநாள் வரை சுஜாவினுள் இப்படி ஓர் உணர்வு எட்டிப் பார்த்ததில்லை.

கல்லூரியில் படிக்கும் நாட்களிலும், அப்புறம் வர்மாவிடம் சேர்ந்து வேலை பார்க்கத் துவங்கிவிட்ட சமயங்களிலும் இரண்டொரு ஆண்கள் தன்னோடு கொஞ்சம் நெருக்கமாகப் பழக அவள் அனுமதித்தது உண்டுதான்.

நெருக்கம் என்றால், சினிமாக்களில் கையைப்பிடித்துக் கொண்ட நெருக்கம், நடக்கும்போது தோளைக் கையால் அணைத்துக்கொண்ட நெருக்கம், அவ்வளவுதான்.

ஒருதரம், ஒரு சக மாணவன்—அவன் பேர் என்ன? ம்ம்...? ஆத்மா? எஸ், ஆத்மாதான், காந்தி மண்டபத்து இருட்டைப் பயன்படுத்திக்கொண்டு, அவளை முத்தமிட்டதுண்டு.

அவளுடைய முதல் முத்தம் அதுதான்.

கதைகளில் வருகிற தினுசில் உடம்பு சிலிர்க்கும், புளகாங்கிதமடையும் என்று எதிர்பார்த்த விதத்தில் எதுவுமே உள்ளுக்குள் வெடிக்காமல் இருக்க, உதடுகளை அழுந்தத் துடைத்துக்கொண்டு அவனை நிமிர்ந்து பார்த்து 'நாம நல்ல ஸ்னேகிதர்களா இருக்கறதை ஏன் கெடுத்துக்கணும் ஆத்மா?'' என்று நிதானமாய்க் கேட்டு நடந்துவிட்டாள்.

ஆண்களின் பரந்த மனப்பான்மை, பேச்சு, நட்பு கவர்ந்த விதத்தில் அவர்களுடைய உடம்பு அவளை மயக்காதது எவ்வளவு நிஜமோ, அவ்வளவு நிஜம், இந்தக் கருத்தை யார் ஏற்றால் என்ன, நம்பாவிட்டால் என்ன— என்ற அலட்சியத்துடன் அவள் இதுநாள்வரை இருந்ததும்.

ஆனால், இப்போது வாசுதேவனின் அறிமுகம் ரொம்ப வித்தியாசமாக இருப்பதோடு— உட்கார்ந்தால், படுத்தால் ஓயாமல் அவரைப்பற்றியே நினைக்க வைக்கிறது. தவிர, அவர் குரலைக் கேட்டால் நெஞ்சு பித்துக்குளித்தனமாய்க் குதிக்கிறது: கிட்ட வந்துவிட்டாலோ கணகணவென்று உடம்பில் சூடேறுகிறது.



இந்த அனுபவங்கள் எல்லாம் சுஜாவுக்குப் புதுசு... ரொம்ப ரொம்பப் புதுசு.

முதல் நாள்வாசுதேவனைச்சந்தித்த போது அவர்பால் தான் அலாதியாக ஈர்க்கப்பட்டதைப் புரிந்துகொள்ள முடிந்தாலும், சங்கரிடம், இதர ஓரிரு நண்பர்களிடம் விழுந்த நல்ல அபிப்பிராயத்தைப் போலத்தான் இதுவும் என்றே நினைத்தாள்.

நோ—திஸ் இஸ் நாட் த ஸேம்.

இது வெறும்புத்தி, நட்பு மட்டும் சம்பந்தப்பட்டது அல்ல; உடம்பையும் ஆட்டி வைக்கிறது.

ஸோ?

''மணி எட்டரைம்மா—குளிக்கலையா?''

ராணி கிட்ட வந்து கேட்க, சின்னதாக ஒரு சோம்பல் முறித்து எழுந்து தன் அறைக்குச் சென்றாள்.

குளித்து தயாராகி டிபன் சாப்பிட டேபிள் முன் உட்கார்ந்த நிமிஷத்தில் வாசல் அழைப்பு மணி டின்—டான் என்றது.

கதவைத் திறந்துவிட்டு வந்த ராணியின் கையில் வெள்ளை வெளேரென்ற நில சம்பங்கிகளைப் பின்னாலும், ரத்தச் சிகப்பு மொட்டு ரோஜாக்களை முன்னாலும் வைத்துக் கட்டப்பட்ட அழகான மலர்க்கொத்து.

கையெழுத்துப் போட்டு, வந்திருந்த கடை சிப்பந்தியை அனுப்பினபின், பூங்கொத்தின் அடியில் இணைக்கப் பட்டிருந்த கவரைப் பிரித்துப் பார்த்தாள்.

என் சுஜாவுக்கு—
மிகுந்த காதலுடன்—
வாசு—

வாசுதேவன் எதிரில் நிற்கிற உணர்வை அந்தக் கடிதம் உண்டாக்க, சட்டென்று கன்னங்கள் வெதுவெதுத்தன.

மெதுவாய்க்குனிந்து சம்பங்கிகளை முகர்ந்து, ரோஜாக்களைக் கன்னத்தோடு அணைத்தாள். சட்டென்று வாசுதேவன் உதடுகளில் ஸ்பரிசத்தை மீண்டும் உணர முடிய, இருதயம் ஜில்லென்றது.

மை காட்!

எனக்கு என்னாயிற்று!

ஆம் ஐ இன் லவ்?

இதுதான் காதலா?

தன்னைவிட வயதில் ரொம்ப மூத்தவர், திருமணமாகி மனைவியுடன் வசிப்பவர் என்ற எந்த நினைவும் எழுந்து பிராண்டாமல் வாசுதேவனை நான் காதலிக்கிறேன்—என்ற விபரம் மட்டும் சந்தோஷமாக மனசை ஆக்ரமிக்க, சுஜாவின் உதடுகளில் புன்னகை இடம் பிடித்தது.

பாதி டிபனில் அப்படியே எழுந்து கை கழுவி நல்லதாய் இரண்டு ஜாடிகளைத் தேர்ந்தெடுத்தாள்.

சம்பங்கிகளைத் தனியாய் ஒன்றில் அடுக்கி, கூடத்தில் வைத்தாள்.

ரோஜாக்களை படுக்கை அறைக்கு எடுத்துச்சென்றாள்.

''டிபனை சாப்பிடாம எழுந்திட்டீங்களேம்மா?''

''போதும் ராணி, காபி குடு.''

''ஏம்மா? நல்லா இல்லியா?''

''அருமையா இருக்கு; ஆனா எனக்குப் பசிக்கலை.''

சிரித்துக்கொண்டே பேசிய சுஜா, கைப் பையிலிருந்து ஐந்து ரூபாய்த் தாளை எடுத்து அவளிடம் நீட்டினாள்.



''ரஜினிகாந்த் நடிச்ச 'பாயும் புலி' படம் ரிலீஸ் ஆகி இருக்கே! நீ பார்க்க வேணாமா? மாட்னிக்குப் போயிட்டு வந்திடு.''

சுஜாவின் இந்த சந்தோஷம் ஆபீஸுக்கு வந்தபிறகும் வெளிப்படையாகத் தெரிய, சங்கர் ''என்ன விஷயம் சுஜா? லாட்டரிலே பம்பர் ப்ரைஸ் விழுந்திருக்கா?'' என்றான்.

வர்மாவுடன் சேர்ந்து சில வேலைகளைப் பற்றின ஆலோசனைக் கூட்டத்தை முடித்துக்கொண்டு, அவர் வெளியில் 'ஸைட்' இன்ஸ்பெக்ஷனுக்குப் புறப்பட்டுச் சென்றதும், செய்யவேண்டிய வேலைகளைக் கவனிக்க சுஜா தன் அறைக்கு வந்தாள்.

பதினொன்றரைக்கு வாசுதேவன் போனில் பேசினார்.

''குட் மார்னிங் மை டியர்'' ரிஸீவர் வழியாக அவர் குரல் காதை வருட, சுஜாவுக்குள் குமிழ் குமிழாக ஆனந்தம் மலர்ந்தது.

''குட் மார்னிங் ஸார்! பூக்கள் ரொம்ப அழகாயிருக்கு, தாங்க்ஸ் எ லாட்.''

தாங்க்ஸை போன்லதான் சொல்லணுமா? நேர்ல சந்திச்சு சொன்னா இன்னும் சந்தோஷப்பட மாட்டேனா?''

''நேர்லயா? அப்படின்னா நீங்க இப்ப பாண்டிலேந்து பேசலியா? காலைல ஊருக்குக் கிளம்பிடுவீங்கனு நினைச்சேன் ஸார். இல்லைனா போன் பண்ணி உங்ககிட்ட அப்பவே தாங்க்ஸ் சொல்லி இருப்பேனே!''

''இல்லே சுஜா...பயணத்தை ஒத்திப் போட்டுட்டேன். என்னோட லஞ்சுக்கு நீங்க வர்றதா இருந்தா, சாயங்காலம் புறப்படுவேன். 'வேலை இருக்கு, ராத்திரி டின்னருக்கு வரேன்'னு சொன்னா, நாளைக்குப் புறப்படுவேன். லகான் உங்க கையிலே.''

''ஸப்போஸ்—இன்னி பூரா நான்—பிஸினு சொன்னா?''

''நாளைக்கும் பிரயாணம் இல்லே. ஸ்டாண்ட்ஸ் போஸ்ட் போன்ட்—ஸிம்பிள்.''

''பாண்டிலே தலைக்கு மேல வேலை இருக்குனு சொன்னீங்களே ஸார்?''

''எஸ்...ஆனா, உங்களை திரும்ப சந்திக்காம, நான் புறப்பட விரும்பலை. ராத்திரி ட்ரிங்க்ஸ்போதைல சொல்லி இருந்தேன்னு நீங்க நினைச்சிங்கன்னா, திரும்ப இப்ப சொல்றேன். ஐ லவ் யூ சுஜா...''

திடுமென கையும், நெஞ்சும் மெழுகில் செய்த பகுதிகளாய் மாறி உருகிப் போக, ஓடிச்சென்று, வாசுதேவனின் தோளில் சாய்ந்து 'ஐ லவ் யூ டூ' என்று கூற வேண்டும் போல உள்ளம் பரபரத்தது.

''எப்ப சந்திக்கலாம் சுஜா?''

சுஜா டெஸ்க் காலெண்டரைப் பார்த்தாள். இரண்டு மணிக்கு குமாரஸ்வாமியுடன் மீட்டிங்... நாலரைக்கு கண்ட்ராக்டர்கள் சந்திப்பு.

குமாரஸ்வாமிக்கு போன் பண்ணி 'நாளைக்கு பார்க்கலாம்' என்று சொல்லிவிட்டால் நாலு மணிவரை ஃப்ரிதான்.

''எங்கே, எப்ப சந்திக்கலாம் ஸார்?''

பன்னிரண்டரைக்கு வண்டி அனுப்பறேன். சோழாவுக்கு வந்திடுங்க. இங்கேயே சாப்பிடலாம்.''

ரிஸீவரை வைத்துவிட்டு, சுஜா கைப்பையை எடுத்துக்கொண்டு பாத்ரூமுக்குள் சென்று கண்ணாடிக்கு முன் நின்றாள்.

மஞ்சள் சந்தேரி காட்டன் புடவை...

அதே நிறத்தில் ஸ்லீவ்லெஸ் ரவிக்கை.

ரப்பர் பேண்டால் கட்டப்பட்ட முடி...

சின்னதாய் கறுப்பு ஒட்டுப் பொட்டு...



போதுமா?

வாசுதேவனுடன் சோழாவில் லஞ்ச் சாப்பிட இந்த அலங்காரம் போதுமா?

வீட்டுக்குப் போய் வேறு உடை அணிந்துகொண்டு வரலாமா என்று நினைத்தவள், அந்த நினைப்பை உதறி சிரித்துக் கொண்டாள்.

என்னாயிற்று எனக்கு?

எப்பேர்ப்பட்ட சினிமாக்காரர், அரசியல்வாதி, பணக்காரரைச் சந்திக்கச் சென்றபோதும் என் அலங்காரத்தைப் பற்றி ஒருகணம்கூட யோசித்துப் பார்க்காதவள், இன்று இத்தனை தயங்குகிறேன்.

நான் நானாக இருந்து புத்திசாலித் தனத்தால் பிறரைக் கவர வேண்டுமே தவிர, எதற்காக உடைக்கும், ஒப்பனைக்கும் முக்கியத்துவம் தரவேண்டும் — என்று பிடிவாதமாய் இது நாள் வரைக்கும் செயல்பட்ட நானா இன்று வீட்டுக்குப் போய் உடை மாற்றிக்கொண்டு வரலாமா— என்று நினைக்கிறேன்?

சுவரில் சாய்ந்து கொண்டவளுக்கு எரிச்சல் எழாமல், சிரிக்கவே தோன்றியது.

கண்ணாடிப் பக்கம் திரும்பி ஈ என்று சொல்லி பற்களை அழகு பார்த்தாள். வெளியே எட்டிப் பார்த்த தெத்திப்பல் வாசுதேவனுக்குப் பிடிக்காமல் போகுமோ, என்று'கவலைப்பட்டாள்.

தலையை வாரி, மீண்டும் ரப்பர் பேண்ட் போட்டாள்.

லிப்ஸ்டிக் பூசி,செண்ட் தெளித்து, புடவையில் சுருக்கம் இல்லாமல் நீவி விட்டுக்கொண்டு வெளியில் வந்தாள்.

வாசுதேவன் அவளுக்காக வரவேற்பிலேயே காத்து நின்றிருந்தார். உள்ளே நுழைந்தவளின் கையைப் பற்றி மெல்ல அழுத்தினார்,

''ஹலோ சுஜா.''

''ஹலோ ஸார்.''

''மேலே சைனீஸ் சாப்பிடப் போலாமா, இல்லே, கீழே பூஃபே யா?''

''உங்க இஷ்டம் ஸார்.''

''இல்லே, உங்க இஷ்டம்தான்.''

''ம்ம் சைனீஸ்...''

லிஃப்டில் மேலே போனார்கள்.

கூட்டம் அதிகமாய் இல்லாவிட்டாலும், ஒர மேஜை ஒன்றைத் தேர்ந்தெடுத்து அமர்ந்தார்கள்.

முதலில் ஜூஸ் கொண்டுவரச் சொல்லிவிட்டு, அது வரும் வரைக்கும் ஏதும் பேசாமல் இருந்தனர்.

கண்களை உயர்த்தும் போதெல்லாம், வாசுதேவன் தன்னையே அழுத்தமாகப் பார்ப்பது புதுசாக லஜ்ஜையை ஏகத்துக்கு உண்டாக்க, சுஜா நாக்கால் அடிக்கடி உதடுகளை ஈரப்படுத்திக் கொண்டாள்.

சின்னதாக நடுங்கும் விரல்களால் மேஜையில் கோலம் போட்டாள். கண்ணாடி தம்ளர் விளிம்பில் சுண்டினாள்.

நடுநடுவில், கடவுளே நான் ஏன் இப்படிப் பதினைந்து வயசுப் பெண் போல நடந்து கொள்கிறேன்—என்று தன்னைத்தானே கடிந்து கொண்டாள்.

''எளிமையான காட்டன் ஸாரில கூட நீங்க அலாதி அழகோட இருக்கீங்க சுஜா.''

''தாங்க்யூ ஸார்.''

வாசுதேவன் முன்னால் சாய்ந்து, மேஜைமேல் இருந்த கரத்தைப் பற்றிக் கொண்டார்.

''இன்னும் ஸார்தானா சுஜா?''



''ஸார்?''— நிமிர்ந்து, கண்களை விரித்து குழந்தைத் தனமாய் அவள் வினவ, வாசுதேவன் சிரித்தார்.

''இத்தனை நெருக்கமா வந்த பிறகும் ஸார்தானா? எனக்கு ரொம்ப வேண்டியவங்க என்னை வாசுன்னுதான் கூப்பிடுவாங்க.''

''அ... அது எப்படி? ஆபிஸிலேயும் நாம் சந்திக்கணும்... மிஸ்டர் வர்மாவே உங்களை இன்னும் மிஸ்டர் வாசுதேவன்னு கூப்பிடறப்போ நான் வந்து...எப்படி ஸார்...?''

''வர்மா அப்படியே கூப்பிடட்டும். அதுதான் மரியாதை. பட், அவரும் நீங்களும் ஒண்ணா சுஜா?''

''நீங்க, வாங்கனு எனக்கு மரியாதை கொடுத்துப் பேசறது மட்டும் சரியா?''

''ஓ. கே, கூப்பிடலை. சுஜா, நீ கவனிச்சுக்கோ, நீ என்னை வாசுதேவன்னு பேர் சொல்லிக் கூப்பிடணும்னு நான் விரும்பறேன்.''

சுஜா பதில் சொல்லாமல் புன்னகைத்தாள்.

சாப்பிட்ட நாழிகையில் சுஜாவின் சின்ன வயசு நாட்களைப் பற்றி வாசுதேவன் கேட்டார். சொன்னாள்.

நடுவில் புகுந்து ஒரு வார்த்தை பேசாமல் அத்தனையும் உன்னிப்பாய் கேட்ட வாசுதேவன் அனுசரணையுடன் அவளை ஏறிட்டு வினவினார்.

''ஸோ, அந்த ஐம்பதாயிரத்தை பாங்கில டெப்பாசிட் பண்ணி வட்டிய எடுத்துதான் படிச்சியா சுஜா? அதுக்குள்ள செலவுகளை சமாளிக்க முடிஞ்சிதா?''

''மாசத்துக்கு கிட்டத்தட்ட ஐநூறு ரூபா வந்ததால அத்தனை கஷ்டம்னு சொல்ல மாட்டேன். ஆனா, இப்படி அப்படி கவனத்தைச் செலுத்தாம படிப்பும், பட்டமும், வேலை கிடைப்பதுதான் முக்கியம்னு படிச்சது உண்மை.''

‘‘ஒரு வயசுப் பெண்ணோட சாதாரண வாழ்க்கை மாதிரி உன்னுது இல்லேனு சொல்லு!’’

‘‘ஆண்கள், காதல், சினிமா, ஊர் சுற்றல் இதையெல்லாம் மீன் பண்ணிங்கன்னா, யெஸ், என் கல்லூரி வாழ்க்கையிலும் சரி, மூணரை வருஷ வேலை நாட்களிலேயும் சரி—நோ— இருந்ததில்லே.’’

வாசுதேவன் அவள் கை விரல்களை எடுத்து சுத்தமாக வெட்டி விடப்பட்டிருந்த நகங்களை சில கணங்களுக்கு ரசித்துப் பார்த்தார்.

‘‘இப்ப இருக்கிற வேலை, படிச்ச உடனேயே கிடைச்சுதா?’’

‘‘அந்த விஷயத்துலே நான் ரொம்ப லக்கி ஸார்... ஸாரி... பழக்கதோஷம் விடமாட்டேங்குது. மூணாம் வருஷத்துலேந்து லீவு நாட்கள்ல ட்ரெயினிங்காக உழைக்கத் துவங்கினப்போ, அதிருஷ்டவசமா மிஸ்டர் வர்மாகிட்ட சேர்ந்தேன். என் மேல் அவருக்கு நம்பிக்கை வரும் அளவுக்கு எமத்தனமா உழைச்சேன். கை மேல பலன் ...டிகிரி முடிச்ச கையோடு, வேலைல சேர்த்துக்கிட்டார்.’’

வாசுதேவன் அவளைக் கனிவுடன் பார்த்தார்.

‘‘நீ சந்தோஷமா இருக்கியா, சுஜா?’’

‘‘சந்தோஷம்னா என்ன? அதைத் தீர்மானிக்கறது சிரமம். என்னைப் பொறுத்தவரை வேலை எனக்கு திருப்தியா இருக்கு. நான் உண்டு, என் வேலை உண்டுனு இருக்கிற வாழ்க்கை நிம்மதியாத்தான் இருக்கு.’’

‘‘உங்கம்மாவை நீ அப்புறம் சந்திக்க முயற்சிக்கவேயில்லியா?’’

‘‘ம்ஹூம்...கடிதம் போட்டதுக்கு பதில் இல்லை. கோர்ஸ் முடிஞ்சி ஐம்பதாயிரத்தை அவங்களுக்கு அனுப்பினதும் திரும்பி வந்திடிச்சி. ஒரு வரி ‘சௌக்கியமா’ன்னு விசாரிக்கக்கூட அவங்களுக்கு ஏனோ தோணலை, என் மேல அத்தனை வெறுப்பு...கோபம்...இன்னி வரைக்கும் எந்த வித தப்பும் பண்ணாம, நல்ல பெண்ணாத்தான் நான் வாழ்ந்திட்டிருக்கேன். ஆனா...ஆனா அவங்க என்னைப் புரிஞ்சிக்க மறுக்கறதோட, நான் விளக்கவும் சந்தர்ப்பம் கொடுக்க மறுக்கிறாங்க, தென் வாட் கேன் ஐ டு?’’



குரல் தழுதழுக்கிற மாதிரி தோன்ற, வாசுதேவன் பிடித்திருந்த கையைத் தட்டிக் கொடுத்தார்.

‘‘உன் அருமை அவங்களுக்குத் தெரியலையேன்னு எனக்கும் வருத்தமா இருக்கு சுஜா’’ என்றவர், பேச்சை அவசரமாய் மாற்றினார்.

டிஸர்ட் சாப்பிடும்போது பேச்சு சங்கர் பற்றி எழுந்தது.

‘‘முதல் நாள் உங்க இரண்டு பேரையும் சேர்ந்து பார்த்தப்போ, எனக்குள்ள சின்னதாக ஒரு பொறாமை, தெரியுமா, சுஜா?’’

திடுமென்று சின்னப் பையனின் குறும்புடன் வாசுதேவன் வினவ, சுஜா புருவங்களை ஏன் என்று உயர்த்தினாள்.

‘‘எஸ்...உங்க இரண்டு பேர் நடுவுலே இருந்த அன்யோன்யம் என்னால தாங்கிக்க முடியாததா இருந்தது. நீங்க ‘லவ்வர்ஸ்’னு கூட நான் நினைச்சிட்டேன்.’’

சுஜா தலையைப் பின்னுக்குச் சாய்ந்து பெரிசாய் சிரித்தாள்.

‘‘நான், சங்கர்? லவ்வர்ஸ்? கடவுளே! இந்த வருஷத்தோட சிறந்த ஜோக் இதுதான் ஸார்.’’

‘‘வாசு.’’

‘‘ஓ. கே. வாசு.’’

‘‘அப்புறம் பழகப் பழக விவரம் புரிஞ்சுது. ஆனாலும் முதல்ல நான் ஸ்டுப்பிடா பொறாமைப்பட்டதை உன்கிட்ட ஒத்துக்கணும் இல்லியா?’’

''சங்கர் என் இனிய நண்பர்களில் ஒருத்தன். என்னை நல்லா புருஞ்சிக்கிட்டவன். தட்ஸ் ஆல். ஆமா, எங்க நட்பைப் பார்த்து ஏன் பொறாமைப்படணும் ஸார்? ஸாரி, வாசு?''

வாசுதேவன் அவளை அழுத்தமாகப் பார்த்தார்.

''பதினெட்டு வயசுப் பையன் மாதிரி என்னை நீ துள்ள வைக்கிறது உனக்குத் தெரியுமா, சுஜா? உன் பக்கத்துலே இருக்கறப்போ ஐ ஃபீல் லைக் எ டீன் ஏஜர். முதல் நாள் உன்னைப் பார்த்து, உன் சிரத்தையான குடும்பக் கட்டுப்பாட்டு பேச்சைக் கேட்ட நிமிஷத்துலே தலைகால் புரியாம உன்னை நான் காதலிக்க ஆரம்பிச்சது நிஜம்... ஆனா, இப்படியெல்லாம் பேசற நான் இதுவரைக்கும் என் மனைவியைத் தவிர வேறு எந்தப் பெண்கிட்டயும் நெருக்கமாப் பழகாதவன், புத்தியை அலையவிடாதவன்னு சொன்னா, அதை சத்தியமான பேச்சா நம்புவியா சுஜா?''

அந்தக் குரலில் இருந்த பரிதவிப்பும், வாஸ்தவமான அன்பும் மனசை என்னமோசெய்ய, சுஜா அவர் கன்னத்தை மெதுவாகத் தொட்டாள்; கிசுகிசுப்பாய்ப் பேசினாள்.

''ஐ லவ் யூ டூ வாசு.''

## 14

உள்ளே நுழைந்த சங்கர் சுற்றிலும் பார்த்துவிட்டு சின்னதாய் விசில் அடித்தான்.

''ஹேய்...இது உன் வீடுதானே?'' என்று உரக்க வியந்தான்.

''அலாடீன் விளக்கு ஏதாவது கைக்கு கிடைச்சிருக்கா! இரண்டுமாசத்துல வீடு இப்படி தடபுடலா மாறிடணும்னா நிச்சயம் இது ஜீபூம்பா வேலைதான்... என்ன ஆச்சு?''



சுஜா தலையைப் பின்னால் தள்ளி உரக்கச் சிரித்தாள்.

''தெரியாதா உனக்கு! முன்னே மூர்மார்க்கெட்ல ஒரு பித்தளை விளக்கு வாங்கினேன் பாரு. அதை பாலிஷ் போடறப்போ பூதம் வந்தது.

''அப்ப, இரண்டு நாள் நைஸா என்கிட்ட அதைத் தள்ளிவிடேன். நானும் கொஞ்சம் சௌகரியம் பண்ணிக்கறேன்.''

''ம்ஹூம் நடக்காது. என்னைத் தவிர இந்த பூதம் வேற யார் கிட்டயும் பணியாது.''

உதட்டைப் பிதுக்கி, தோளைக் குலுக்கி பரிதாபமாய் 'பாட் லக்' என்று சங்கர் புலம்ப, சுஜா இன்னும் பெரிசாய்ச் சிரித்தாள்.

''வா...வா...முதல்ல உட்காரு. காபி சாப்பிடறியா, இல்ல, பசிய கெடுத்துக்க வேணாம்னா, பதினைஞ்சு நிமிஷத்துல டின்னர் ரெடி...என்ன சொல்றே?''

''மெனு என்ன?''

''க்ரீம் கார்ன் சூப், நூடுல்ஸ், ஸ்வீட் அண்ட் ஸவர் போர்க்...அப்புறம் சாக்லெட் புட்டிங்.''

''வாவ்! எனக்கு காபி வேணாம்.. பதினைஞ்சு நிமிஷம் இல்லே, இப்பவே சாப்பிடக்கூட நான் ரெடி.''

''சோபால உட்கார்ந்து ஏதாவது படி. இல்லே பாட்டு கேளு. நான் பத்து நிமிஷத்துல டின்னர் ரெடி பண்ணிட்டு கூப்பிடறேன்.

அவள் சமையல் அறைக்குள் புகுந்து கொள்ள, சங்கர் டீபாய் மேல் இருந்த டைம் பத்திரிகையை எடுத்துப் புரட்டினான்.

ஒரு பக்கம் படிப்பதற்குள் புதுசாய் அந்த அறையை அலங்கரித்துக் கொண்டிருந்த பொருட்களின் மேல் கவனம் சென்றது.

வசதியான, உட்கார்ந்தால் ஆளை விழுங்கக்கூடிய சோபாக்கள். அந்தப் பக்கம் புது சாப்பாட்டு டேபிள். சாயும் இடத்தில் ரோஜாப்பூ போல வேலைப்பாடு செய்யப் பட்ட நாற்காலிகள்.

கார்பெட், கர்ட்டன்கள் கூடவா புதுசு?

சென்ற முறை எப்போது நான் இந்த வீட்டுக்கு வந்தேன்?

ஒண்ணரை மாசம்? இரண்டு மாசம்?

ஈஸி. அதற்கும் மேலேயே இருக்கும்.

கோத்தகிரி எஸ்டேட் வேலை காரணமாய் இப்போ தெல்லாம் நான் ஊரில் முக்கால்வாசிப் போது இருப்ப தில்லை. இருக்கும் ஓரிரண்டு நாட்களும் மத்த வேலை டிஸ்கஷனில் போய்விடுகிறது.

புத்தகத்தை மூடி வைத்துவிட்டு சங்கர் எழுந்தான்.

ஸ்டீரியோவிடம் சென்று ஜக்ஜித், சித்ரா சிங் கஜல் கேஸட்டைத் தேர்ந்தெடுத்து ரிகார்டரில் பொருத்தினவன் கண்களில் பக்கத்தில் இருந்த டி. வி. விழுந்தது.

ஒரு உந்துதலின் காரணமாய் அதன் மேல் இருந்த விரிப்பைத் தூக்கினான்.

ஸோனி—வெளிநாட்டு கலர் டி. வி.

மை காட்!

இவை அத்தனைக்கும் ஒரே மூச்சில் செலவழிப்பது சுஜாவுக்கு எப்படிச் சாத்தியமாயிற்று!

புது சோபா ஸெட் ஈஸியாய் ஏழெட்டாயிரம் இருக்கும். டைனிங் ஒரு நாலாயிரம். அப்புறம் ஸோனி கலர் டி. வி! எல்லாமாய் இருபத்தைந்தையாவது தாண்டி இருக்கும்!



அம்மா பணம் என்று ஒதுக்கி வைத்திருந்ததை சரி, இனியும் எதற்காக வைத்திருப்பது அனுபவிக்காமல்—என்று முடிவுக்கு வந்து விட்டாளா?

சுஜாவா?

அந்த ஐம்பதாயிரத்தில் கை வைத்து விட்டாளா?

''என்ன கஷ்டம் வந்தாலும் அந்தப்பணத்தைத்தொடக் கூடாதுனு நான் இருக்கேன் சங்கர், அது என் பணம் இல்லே எங்கம்மாவுக்குச் சொந்தமான பணம். அம்மா என்னைப் படிக்க வைக்க அனுமதி தராத கோபத்தில், 'கல்யாணம் பண்ணா ஆகற காசைக்கொடு'னு நான்கேட்டது உண்மை. ஆனா, படிப்பு மேல இருந்த வெறியால அப்படிக் கேட் டேனே ஒழிய, பண ஆசையில நிச்சயம் இல்லே...படிப்பை முடிச்சு, இப்ப நான் நல்ல வேலைல இருக்கேன். என் சம்பளமே என்தேவைகளுக்கு அதிகம். இந்தப் பணத்தை ஃபிக்ஸெட் டிபாசிட்லே போட்டு வைச்சிருக்கேன். என்னிக் காவது அம்மா மனசு மாறமாட்டாங்களா? என்னை சரியா புரிஞ்சிக்க மாட்டாங்களா? அன்னிக்கு இந்தாங்கம்மானு அத்தனையும் ஒரு பைசா விடாம கொடுத்திடுவேன்.''

எப்பவோ ஒருமுறை சுஜா கூறினது நினைவுக்கு வர, அந்தப் பணத்தையா சுஜா எடுத்துச் செலவழித்து விட்டாள் என்று மீண்டும் ஆச்சரியப்பட்டான்.

உடனே இதுபற்றி அவளிடம் கேட்டுவிட எண்ணி, சமையல்கட்டினுள் நுழைந்தான்.

வாசனை அமர்க்களமாய் ஆளை வரவேற்றது. சூடாக்கப்பட்டு தயாராக பாத்திரத்தில் வைத்திருந்த இனிப்பு, புளிப்பு, மாமிசம் ஒரு பக்கம். வாட்டப்பட்ட ரொட்டித் துண்டங்கள் ஒரு தட்டில். கூடவே வெண்ணெய்ச்சீஸ்.

ஒரு அடுப்பில் சோள சூப்...வெள்ளை ஸாஸுடன் கலக்கப்பட்டு பரிமாறும் சூட்டில் இருந்தது.

இன்னொரு அடுப்பில் பெரிய வாணலியைப் போட்டு, ஒரு கரண்டி எண்ணெயை ஊற்றி அது புகைவதற்காகக் காத்திருந்த சுஜா இவனைப் பார்த்து, ''என்ன, ரொம்ப பசிக்குதா?'' என்றாள்.

ராணி பக்கத்திலேயே நின்றிருந்ததால், இப்போது சுஜாவிடம் ஏதும் கேட்க வேண்டாம் என்று நினைத்தவன், ''நிஜமாகவே நீதான் சமைக்கிறயா, இல்லே ஹோட்டல் லேந்து வாங்கிகிட்டு வந்து டபாய்க்கிறியானு பார்க்க வந்தேன்'' என்றான்.

''இனிமேதான் உன்னை நான் ஏமாத்தணுமா? இது வரைக்கும் எத்தனை தடவை மூக்குப் பிடிக்க இங்க சாப்பிட்டிருக்கே?''

எண்ணெய் புகைந்துவிட, விரல் விரலாய் மெல்லிசாய் நறுக்கி வைத்திருந்த காரட், கோஸ், பீன்ஸ், குடமிளகாய், வெங்காயத் துண்டுகளை எண்ணெயில் போட்டு தீயைக் குறைக்காமல் வதக்கினாள்.

இரண்டு நிமிஷங்கள் வதக்கினபின் தேவையான உப்பு, அரை ஸ்பூன் அஜினோமோட்டோவைத் தூவி, தீயைக் குறைத்து கைவிடாமல் கிண்டினாள்.

''இது உப்பு, அது என்ன சுஜா?''

''அஜினோமோட்டோ.''

''தெரியாம கேட்டுட்டேன். அதுக்காக திட்டணுமா?''

சுஜா வாய்விட்டுச் சிரிக்க, ராணி மரியாதையுடன் சிரிப்பை அடக்கிக் கொண்டாள்.

''இல்லே சங்கர். இதோட பேர் அதுதான். காய்கறி களோட சுயவாசனை கூடித் தெரியறத்துக்கு சைனாலே சகஜமா உபயோகிப்பாங்க.''

''சைனாலேந்தா வரவழிச்சே?''



''இல்லி...மெட்றாஸ்ல இது கிடைக்காத கடை இல்லே.''

இதற்குள் காய்கறி திட்டமாய் வதங்கிவிட, ஏற்கனவே உப்பு போட்டு வேக வைத்து வடிய வைத்திருந்த நூடுல்ஸ் களை வாணலியில் போட்டு ஸோயா ஸாஸ் ஒரு டேபிள் ஸ்பூன் விட்டு வேகமாய்க் கலந்தாள்.

''சாப்பிடலாமா? எல்லாம் ரெடி. சைனீஸ் சமையல்ல இதுதான் ஒரு சௌகர்யம். ஒவ்வொரு ஐட்டத்தையும் கால் மணிலே தயார் பண்ணிடலாம். காய்கறிகளை வேக வைச்சு, வதக்கி, சத்தை எடுத்துட்டு சக்கையைக் கொடுக் காம, சூடான எண்ணைல அரை வதக்கல்... காயும் வெந்துடும். வாய்க்கும் ருசி.''

பேசிக்கொண்டே பதார்த்தங்களை டேபிளுக்குக் கொண்டு வந்தாள்.

சூப்பை கிண்ணத்தில் விட்டு சங்கர் முன் வைத்தாள். வாட்டின ரொட்டி, இதர வகைகளை வரிசையாய் இருவருக்கும் எட்டும் இடங்களில் வைத்தாள்.

விளிகரில் வைத்திருந்தபச்சைமிளகாய்த் துண்டங்களை சூப்பில் போட்டுக் கொண்டு, ஒருவாய் குடித்தவன் 'ம்ம்' என்று ரசித்தான். இன்னும் இரண்டு ஸ்பூன்கள் எடுத்துக் குடித்து, வாட்டின ரொட்டியில் வெண்ணெய் தடவி ஒரு கடி கடித்துவிட்டு, ''பிரமாதம் சுஜா...சைனீஸ் ரெஸ்டா ரண்ட்ல கொடுக்கற சூப் இதுக்கு கிட்டகூட வர முடியாது'' என்று பாராட்டினான்.

''தாங்க்ஸ்...சங்கர்...இன்னும் கொஞ்சம் சூப்? ஒரே ஒரு கரண்டி...ப்ளீஸ்...''

சூப்பை அருந்ினதும் ஆவி பறக்க இருந்த நூடுல்ஸ் களையும் தொட்டுக் கொள்ள ஸ்வீட் அண்ட் ஸவர் போர்க் கையும் தட்டில் வைத்தாள்.

''எக்ஸலென்ட்...இன்னும் கொஞ்சம் போடு...ம்ம்... வெரி டேஸ்ட்டி...''

அனுபவித்துச் சாப்பிட்ட சங்கர், நினைப்பு வந்த தினுசில் ''என் சுஜா, அந்தப் பணத்தைச் செலவழிக்கத் தீர்மானிச்சிட்டியா?'' என, ''எந்தப் பணத்தை'' என்று சுஜா விழித்தாள்.

''அதான் அந்த ஐம்பதாயிரத்தை...''

''ஓ! அதுவா! ம்ஹூம்...அது என் பணம் இல்லியே சங்கர், அம்மாவோடது ஆச்சே! அதை எப்படி நான் செல வழிக்க முடியும்?''

''அப்புறம் இதெல்லாம்?''

புருவங்களை உயர்த்தி சங்கர் கையைச் சுழட்ட, சுஜா பார்வையைச் சில கணங்களுக்கு தழைத்துக் கொண்டாள். அப்புறம் தயக்கத்துடன் பேசினாள்.

''உன்கிட்ட பேசணும்னு தானே இன்னிக்கு இங்க வரச் சொன்னேன்! முதல்ல சாப்பிடு. காபியோட சோபால உட்கார்ந்துகிட்டு நிதானமா பேசலாம், என்ன?''

இது என்ன மூடு மந்திரம் என்கிற பாவத்துடன் சங்கர் கொஞ்சம் யோசித்தான்.

கிட்டத்தட்ட' பதினைந்து நாட்களுக்குப் பிறகு இன்று தான் ஊட்டி, கோயமுத்தூரிலிருந்து அவன் திரும்பி இருக்கிறான்.

காலையில் அலுவலகத்தில் நுழைந்து ''ஹாய் சுஜ்'' என்றவனிடம் ''இன்னிக்கு ராத்திரி என் வீட்டுக்கு நீ சாப்பிட வரே... எந்த எக்ஸ்கியூஸையும் ஏத்துக்க மாட்டேன்'' என்றாள் சுஜா.

''என்ன விசேஷம்? பிறந்த நாளா? இருக்காதே?''

''உன்கிட்ட பேசணும் சங்கர்.''

மேலே எதுவும் கேட்க முடியாமல் வர்மா அழைத்து விட, வேலையில் அமுந்திப் போய்விட்டு, இப்போது வந்திருக்கிறான்.

''காபி எடுத்துக்கிட்டு. அங்க போயிடலாமா?''

''ம்...''



இருவரும் சோபா ஹாலுக்குச் சென்றனர்.

ஸ்பூனால் காபியைக் கலக்கியபடி, பாத்திரங்களுடன் ராணி சமையல்கட்டுக்குப் போய்விட்டதைப் புரிந்து கொண்டு சுஜா வினவினாள்.

''சோபாசெட், டைனிங் செட், கலர் டி. வி. இதெல் லாம் பார்த்தியா சங்கர்?''

''ம்...''

''ஏதுனு ஆச்சரியப்பட்டியா?''

''ம்''

''அம்மா பணத்தை எடுத்துக்காட்டி, வேறு ஏது பணம்னு திகைச்சிப் போயிருப்பியே!''

''ம்...''

சுஜா காபியை ஒரு வாய் குடித்தாள். கப்பை டீபாயில் வைத்தாள். மெல்லிய தொனியில் பேசினாள்.

''வாசு வாங்கிப் போட்டிருக்கார் சங்கர்.''

''யா...யாரு?''

''வாசு—தேவன்.''

''பாண்டிச்சேரி? மிஸ்டர் வாசுதேவன்?''

ஆம் என்று தலைஅசைத்த சுஜா சங்கரின் அதிர்ச்சியை எதிர்நோக்கத் தயாராக இருப்பதை உணர்த்தும் வகையில் அவனையே தீர்க்கமாய்ப் பார்த்தாள்.

''எனக்கு ஒண்ணும் புரியலை சுஜா—குழப்பமா இருக்கு.''

''கிட்டத்தட்ட இரண்டு மாசமாவே உன்னோட பேசணும்னு நான் தவிச்சிட்டு இருக்கேன். ஆனா, நீ எங்க மெட்றாஸிலே இருக்கே, வந்தாலும் ஒருநாள், இரண்டு நாள்...அப்புறம் நிதானமா பேச, சமயம் ஏது? ஆனாலும், நடுவிலே இரண்டு தரம் உன்னை நான் கூப்பிட்டேன். உன்னால வர முடியாம போயிடிச்சி, ஞாபகம் இருக்கா?''

''அது இருக்கட்டும். மிஸ்டர் வாசுதேவன் ஏன் இதெல்லாம் உன் வீட்டுக்கு வாங்கிப் போடணும் சுஜா?''

''புரியலை?''

''ம்ஹூம்.''

''நாங்க ரொம்ப நெருங்கி வந்திட்டோம் சங்கர்.''

''அ...அப்படின்னா?''

''ரொம்...ப...வி லவ் ஈச் அதர்...''

''சுஜா!''

''உன் அதிர்ச்சி எனக்குப் புரியுது சங்கர். ஆனா, உன்கிட்டேயிருந்து நான் எதையும் மறைக்க விரும்பலை. என்னோட ஒரு நல்ல நண்பன் நீதானே!''

சங்கர் கப்பை மேஜை மேல் வைத்துவிட்டு எழுந்து இப்படியும் அப்படியும் நடந்தான்.

''நிஜமாவா சுஜா?''

''ப்ராமிஸ்.''

''ஏன் சுஜா...வொய்?''

''என்ன ஏன்? அவர் ஆண், நான் பெண். காதலிக்கறது தப்பா?''

''குதர்க்கமா வாதம் பண்ணாதே சுஜா. அவர் கல்யாணமானவர், உன்னைவிட ரொம்ப வயசு மூத்தவர்''

சுஜா தோளைக் குலுக்கி ''ஸோ வாட்?'' என்றாள்.

''அதனாலஎன்னவா? மனைவியோட வாழற மனுஷன்கிட்ட உனக்கு எப்படி பாதுகாப்பானவாழ்க்கை கிடைக்கும் சுஜா?''

''கிடைச்ச வரைக்கும் போதும்கிற திருப்தியோட நான் இருந்திட்டா?''

''யோசிக்காம, டீன் ஏஜ் கேர்ல் மாதிரி பேசினா எனக்குக் கோபம் வரும் சுஜா!''



''ஐ'ம் ஸாரி சங்கர். ஐ லவ் வாசு—இதை நீ ஏன் புரிஞ்சிக்க மாட்டேங்கறே?''

சங்கர் அவள் அருகில் உட்கார்ந்து கையைப் பற்றிக் கொண்டான்.

''வாசுதேவன்கிட்ட பணம், வசதி, கம்பீரம் எல்லாம் இருக்கு, ஒத்துக்கறேன். ஆனா, அவர் இன்னொரு பெண்ணுக்கு ஏற்கனவே சொந்தமாயிட்டவர் சுஜா—யு ஆர் கமிட்டிங் அடல்ட்ரி...''

''என்கூட பழகறதால வாசு அவளுக்கு எந்தக்குறையும் வைக்கலை சங்கர். அதை நான் தீர்மானமா சொல்ல முடியும். நிர்மலா மேல அவர் வைச்சிருக்குற அன்போட அளவு குறையலே. இருதயத்துல இதுவரை மூடி இருக்கில் வைச்சிருந்த இடத்தை எனக்குத் திறந்துவிட்டிருக்கார். அவ்வளவுதான். எங்களை சரியா புரிஞ்சிக்காம அவசரப்பட்டு எதை எதையோ சொல்லிடாதே சங்கர். ப்ளீஸ்... எங்களோட செய்கையால மூணாவது நபரைப் புண்படுத்தாம நாங்க இருக்கிற வரைக்கும் எதுவும் சரிதான்... புரியுதா சங்கர்?''

''மடத்தனமா பேசறியே—அவர் மனைவியை உங்க நடவடிக்கை புண்படுத்தாதா சுஜா?''

சுஜா உதட்டைக் கடித்து கண்களை மூடிக் கொண்டாள்.

''நிச்சயமா புண்படுத்தும். ஆனா, அவங்களுக்குத் தெரிஞ்சாத்தானே?''

''இது விதண்டாவாதம்.''

கண்களைத் திறந்து சுஜா மறுபடி அவனை ஏறிட்ட போது கண்ணோரங்களில் நீர் பளபளத்தது.

''நாங்க செய்யறது முழுக்க முழுக்க சரினு நான் வாதம் பண்ணலை சங்கர். ஒருத்தர் மனசை காயப்படுத்திட்டு, நிம்மதியா என்னால வாழ முடியாது. யு நோ தட்... ஆனா,

நிர்மலா வரைக்கும் நிச்சயமா இந்த விஷயம் போகாதுங்கற நம்பிக்கை எனக்கு இருக்கு. ப்ளீஸ் சங்கர் என்னைப் புரிஞ்சிக்கயேன். இதுநாள் வரைக்கும் எந்தப் பொருளுக்காவது, இல்லே யார் மேலயாவது நான் ஆசைப்பட்டு நீ பார்த்திருக்கியா? இப்ப...இன்னிக்கு.. ஐ லவ் வாசு. சத்தியமா அவரை நான் விரும்பறேன். அவரும் என்கிட்ட ஆத்மார்த்தமான அன்போட இருக்கார் சங்கர். வீ நீட் ஈச் அதர்...ப்ளீஸ் புரிஞ்சிக்கயேன்.''

சங்கர் சோபாவில் சாய்ந்து கையால் தலையைத் தாங்கிக் கொண்டு, தாடையை இறுக்கி, பொங்கின கோபத்தை அடக்கப் பார்த்தான்.

''கேட்கறேனேன்னு கோவிக்காதே சுஜா. இந்த சாமானெல்லாம் அவர் உனக்கு வந்து... அவரோட நெருங்கிப் பழகறத்துக்காகக் கொடுத்ததா?''

சுஜா சக்கென்று தலையை நிமிர்த்தி அவனை வெறித்தாள்.

''பணத்தை வாங்கிக்கிட்டு படுத்துக்கற ப்ராஸ்டிட்யூட் கிட்ட கேட்கறமாதிரி...நீ என்னை...என்ன சங்கர் இது?''

''ஐ'ம் ஸாரி... கொஞ்சம் அப்படித்தான் எனக்குப் பட்டுச்சு.''

முரட்டுத்தனமாய் அவன் பேச, சுஜா அடிபட்டுப் போனாள். கண நேரத்தில் விழியோரங்களில் நீர் பளபளத்தது.

''ஓ, காட்...நீ இப்படிநினைச்சிட்டியேசங்கர். காலேஜ் நாள்லேந்தே என்னை உனக்குத் தெரியும். எப்பவாவது, ஒரு தரமாவது அசிங்கமா ஏதாவது காரியத்தை நான் செய்து பார்த்திருக்கியா? சத்தியமாச் சொல்லேன். ஐ லவ் வாசு, அண்ட் ஹி லவ்ஸ் மீ... தன் வீடு இதுன்ற ஸ்வாதீனத்தோட அவர் இதெல்லாம் வாங்கிப் போட்டதாலதான் நான் சரின்னு ஏத்துக்கிட்டேன்... மத்தபடி... மத்தபடி.''



நினைப்பதையெல்லாம் ஒளிக்காமல் சங்கரிடம் சொல்லிவிட வேண்டும் என்கிற தீவிரத்துடன் பேசியவளுக்கு மேலே எதுவும் பேச முடியாதபடி தொண்டை அடைத்துப் போக, தலையைக் குனிந்து கொண்டாள், சன்னமாய் விசும்ப முற்பட்டாள்.

# 15

சங்கர் ஒரு கணத்தில் தன்னைச் சுதாரித்துக் கொண்டான். வேகமாய் எழுந்து சுஜாவுக்கருகில் நின்று, தோளைத் தட்டி, ''என்னம்மா இது... சுஜா...சுஜா...'' என்று பரிதவித்தான்.

பக்கத்தில் உட்கார்ந்து கர்சிப்பை எடுத்து நீட்டி ''துடைச்சிக்கோ ப்ளீஸ் சுஜா'' என்றான்.

சுஜா அடி உதட்டைக் கடித்துக் கொண்டாள். சங்கர் நீட்டிய கர்ச்சிப்பை வாங்கி கண்களைத் துடைத்து, மூக்கைச் சிந்தி ஆசுவாசப்படுத்திக் கொள்ள முயன்றாள்.

சங்கரை நிமிர்ந்து பார்த்து ''ஐ ம் ஸாரி'' என்றாள்.

அவன் பதில் ஏதும் பேசாமல் புறங்கையைத் தட்டிக் கொடுக்க அவளே தொடர்ந்து பேசினாள்.

''எங்கப்பா செத்தப்போ நான் அழுதிருக்கேன். அப்புறம் இத்தனை வருஷமா எந்த இழப்புக்காகவும் வேதனைக்காகவும் சொட்டு ஜலம் விட்டதில்லே. இன்னிக்குத்தான்...

''ஐ'ம் ஸாரி சுஜா...''

''அம்மா, வீட்டைவிட்டுப் போ—இனி உனக்கும், எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லே'ன்னு சொன்னப்பக்கூட

அழுது ஆர்ப்பாட்டம் பண்ணாதவ, இன்னிக்கு தே... தேவடியாத்தனம் பண்றதா நீ சொன்னதும் ரொம்ப அடிபட்டுப் போயிட்டேன் சங்கர்.''

''ஐ'ம் ஸாரி சுஜா என்னை மன்னிச்சிடு. அந்த மாதிரி அர்த்தத்துல பேசினது தப்புதான். அசிங்கம்தான். உன்னை இத்தனை வருஷமா தெரிஞ்ச நான், அப்படிப் பேசி இருக்கக் கூடாது. ஐ'ம் வெரி வெரி ஸாரிம்மா.''

''...... ...''

''உன் மேல நான் வைச்சிருக்குற அன்போட ஆழம் உனக்குத் தெரியும் சுஜா. இத்தோட, உன் பேச்சு, சிந்தனை, செயல் எல்லாத்தையும் முழு மனசோட ஆதரிக்கறவன்றதும் உனக்குத் தெரியும். இன்ஃபாக்ட், உன்னை வெகுவா மதிக்கிறேன்னுகூட சொல்லலாம். மனசுக்குள்ள ஒரு பீடம் போட்டு உன்னை உட்கார வைச்சிருக்கறது நிஜம்—அதனால, திடும்னு கொஞ்சம்கூட எதிர்பார்க்காத நினுசுலே நீ எதையோ சொன்னதும், நான் பொங்கிப் போயிட்டேன். நீ சந்தோஷமா, நிம்மதியா இருக்கணும் சுஜா... இது எனக்கு ரொம்ப முக்கியம்—யூ நோ தட், டோண்ட் யூ?''

சுஜா தெரியும் என்கிற மாதிரி தலை ஆட்டினாள். ஒரு நிமிஷம் அப்படியே உட்கார்ந்துவிட்டு எழுந்தாள்.

''போய் முகத்தைக் கழுவிகிட்டு வந்திடறேன். காபி இன்னொரு கப் சூடா சாப்பிடலாமா?''

பேசினவள் அவன் பதிலுக்காகக்காத்திராமல் சமையல் கட்டு வாசலில் நின்று 'இரண்டு காபி கலந்து கொண்டா, ராணி' என்று கூறிவிட்டு, தன் அறைக்குச் சென்றாள்.

முகம் கழுவி, கலைந்திருந்த முடியைச் சீர்செய்து லேசாக பவுடர் பூசி, கொஞ்சம் யூடிகோலோனையும் தெளித்துக் கொண்டு மீண்டும் கூடத்துக்கு வந்து சங்கரின் எதிரில் அமர்ந்தாள்.



''நீ என்மேல அலாதி அன்பு வைச்சிருக்கற மாதிரி, எனக்கும் உங்கிட்ட அன்பு, பிணைப்பு, மதிப்பு இருக்கறதாலத்தான் வாசுதேவன் பத்தின விஷயம் எதையும் மறைக்காம சொல்லிட நான் விரும்பினேன்.''

சங்கர் முன்னால் சாய்ந்து உட்கார்ந்தான்.

''எனக்கு இப்ப புரியுது சுஜா...ஒன்ஸ் அகெய்ன் ஐ'ம் ஸாரி...சொல்லு...ஒண்ணு விடாம எல்லாத்தையும் சொல்லு, எத்தனை நாளா இந்த அன்யோன்யம்?''

''இரண்டு மாசத்துக்கும் மேல ஆயிடிச்சி.''

''ஏன் என்கிட்ட இத்தனை நாளா இதுபத்தி பேசவேயில்லே?''

''சொல்லக் கூடாதுன்னு இல்லே...இரண்டு மாசமா நீ அடிக்கடி வெளியூர் போயிடறே. இருக்குற ஓரிரண்டு நாட்களிலும் உனக்கு வேலை இருந்தது. ஒரு சமயம் ஃப்ரீயா இருந்து, நீ சினிமாக்குக்கூட கூப்பிட்டே; ஆனா அன்னிக்கு வாசு ஊர்ல இருந்ததால என்னால வர முடியலை. ஆபீஸ்ல இதுபத்திப் பேச நான் விரும்பலை.''

''இந்த விவரம் வேற யாருக்குத் தெரியும்?''

''ராணிக்கு மட்டும்தான். அதுவும் அவ என்னோட இந்த வீட்டுலேயே இருக்கறதால.''

''வாட் அபௌட் வர்மா?''

''அவருக்கோ, இல்ல ஆபீஸ்ல வேற யாருக்கோ எந்த சந்தேகமும் இல்லே. ஏன், உனக்குக்கூட நான் சொல்லித்தானே தெரியும்! வாசுதேவனோட வேலைய நான் கவனிக்கறதால, அது விஷயமா சந்திக்கறோம்னே எல்லாரும் நினைக்கறாங்க.''

சங்கர் கொஞ்சம் தயங்கினான். எதையோ கேட்க விரும்புவது போல வாயைத் திறந்துவிட்டு மீண்டும் மூடிக்

கொள்ள ''எதுவானாலும் தயங்காம கேளு சங்கர். எந்த சந்தேகத்தையும் மனசிலே பூட்டிவைச்சிக்காதே. இது நம்ப நட்புக்கு நல்லதில்லே.'' என்று சுஜா சொல்ல, கேட்டான்.

''மிஸ்டர் வாசுதேவன் வீட்டுல இதுபத்தி யாருக்குத் தெரியும்?''

''யாருக்குமில்லே. கார்ல வந்தாலும் எங்க தொடர்பு ரொம்ப நெருக்கமான பிறகு, என்னைச் சந்திக்க வர்றப்ப எல்லாம் வாசு, காரை தானே தான் ஓட்டிகிட்டு வரார்.''

சங்கர் இருப்புக் கொள்ளாமல் எழுந்து நின்றான், டி.வி. மேல் போட்டிருந்த விரிப்பை நீவி விட்டான். கை விரல்களைக் கோர்த்துப் பிரித்தான்.

''நிஜம்மா நீ சந்தோஷமா இருக்கியா, சுஜா?''

''என்னைப் பார்த்தா எப்படித் தெரியுது?''

காலையில் ஊரிலிருந்து திரும்பியதும் அவளைச் சந்தித்து நிமிஷத்தில் ''ஹேய் என்னாச்சு உனக்கு! ஹில் ஸ்டேஷன் எதுலியோ ஹாலிடே இருந்திட்டு வந்த மாதிரி பளபளனு ஜோரா இருக்கே!'' என்று வியந்தது ஞாபகத் துக்கு வந்தது.

சுஜாவுக்கும் அந்த வார்த்தைகளின் நினைப்பு எழுந் திருக்க வேண்டும். புன்னகையுடன் அவனை ஏறிட்டு ''நீயே காலைல ஒத்துக்கலியா—ஐ லுக் குட்'னு?'' என்றாள்.

அது என்னமோ வாஸ்தவம்தான்.

சுஜாவின் தோலில் ஒரு மெருகு, கண்களில் ஒரு ஜொலிப்பு—அலங்காரத்தில் ஒரு கவனம் கூடி இருப்பது இன்று மட்டுமா, கொஞ்ச நாட்களாகவே அவன் உணர்ந்த சங்கதிதான்.

சரியாய்ச் சாப்பிட்டு, நேரத்தோடு படுத்து நன்றாகத் தூங்கி—தேகப் பயிற்சி பண்ணி, அமைதியாக வாழ்வதால்



விளைந்த மாற்றங்கள் என்று நினைத்து சந்தோஷித்தது இல்லையா?

இதற்குக் காரணம் வாசுதேவனா?

அவரின் காதலா?

அவரோடு இவள் கொண்டுவிட்ட பிணைப்பா?

''நல்லா யோசனை பண்ணிட்டுதானே இந்த முடிவுக்கு வந்திருக்கே, சுஜா?''

''ந...ல்...லா...''

''நிச்சயமா இப்படி நடந்துகிட்டோமேன்னு நாளைக்கு வருத்தப்பட மாட்டியே?''

''ம்ஹூம்.''

கேட்கும் கேள்விகளுக்குத் தயங்காமல் சட் சட்டென்று சுஜா பதில் சொல்ல,

''தப்பு பண்ணற உறுத்தல் கூடவா உனக்கு இல்லேன்னு சொல்றே சுஜா?''—என்று சலிப்பு கலந்த எரிச்சலோடு சங்கர் வினவ, சுஜா சின்னதாய்ப் புன்னகைத்தாள்.

''தப்பு, ரைட்டுனா என்ன சங்கர்?''

''ஓ! காட்! என்னை அடிமட்டத்துக்கே கூப்பிடறியா?''

''இல்லே, பேசி தெளிஞ்சிடறது நல்லதுதானே? இனிமே நான் கலங்க மாட்டேன். நீ என்ன சொல்லித் திட்டினாலும் அடிபட்டுப் போக மாட்டேன். கமான், நான் கேட்டதுக்கு பதில் சொல்லு.''

''சமுதாயத்துலே இன்னது செய்தா தப்புன்னு குறிச்சி வைச்சிருக்காங்க சுஜா. அந்தக் கணக்குப்படி நீ செய்யறது பெரிய குத்தம்.''

''இந்த மாதிரி ஒட்டு மொத்தமாக நீ பேசறதுதான் எனக்குக் குத்தமா படுது. சமூகத்தை விடு—அது போட்டி

ருக்குற வேண்டாத சட்டங்களை விடு. நீ என்ன நினைக்கறே! உன் தனிப்பட்ட கருத்தைச் சொல்லு.''

'தப்புக் காரியம் ஒண்ணை செய்துகிட்டு அது தப்பு இல்லேன்னு நீ வாதம் பண்ணறதால, சரியானதாயிடுமா?'

''நான் வாதமே பண்ண விரும்பலை. தப்பு, ரைட் பத்தி பேச்செடுத்தது நீ. இருந்தாலும், என் கருத்தைச் சொல்றேன் கேட்டுக்கோ. எனனைப் பொறுத்தவரை எதுவுமே தப்பு இல்லே. அவரவர் மனசாட்சி முக்கியம். அது உறுத்தாம இருக்கிற வரைக்கும் எதுவும் தப்பு இல்லே.''

''அப்படின்னா, கொலை செஞ்சு, கொள்ளை அடிக்கற வனோட மனசாட்சி அவனை உறுத்தலைனா, அதுகூடத் தப்பில்லையா?''

''நீ தப்பா உதாரணம் காட்றே சங்கர். ஒரு உயிரை வதம், சித்ரவதை பண்ண யாருக்குமே உரிமை கிடையாது. அது தப்பு, பாவம். கொள்ளை அடிக்கறவன் மனசாட்சி கண்டிப்பா அவனை உறுத்தத்தான் செய்யும். மீறிகிட்டு அவன் வாழறப்போ அது நிச்சயம் தப்புதான். சமுதாயத் தோட சீரான போக்குக்காக சில சட்டதிட்டங்களை வைச்சிருக்கறதை ஒவ்வொருத்தரும் மதிச்சே ஆகணும். நான் இல்லேன்னு சொல்லலை. ஆனா, குறிப்பிட்ட ஒரு விதியை நம்ம சந்தோஷத்துக்காக மீறவேண்டி வந்தா, அந்தச் செய்கையால யாருக்கும் நாம துன்பம் தராம இருந்தா, அது தப்பு இல்லேன்னுதான் நான் சொல்ல வரேன்.''

சங்கர் தன் எரிச்சலை அடக்காமல் பேசினான்.

''இது அசல் விதண்டாவாதம். ஏன் குதர்க்கவாதம் கூட. சரி, இந்த செய்கையால யாருக்கும் துன்பம் வரலைனு நீ எப்படித் தீர்மானமா சொல்றே? கமான், ஆன்ஸர் மீ?''

''இன்னி வரைக்கும் வரலை...எனக்குத் தெரியும்.''



''நாளைக்கு?''

''நாங்க விழிப்போட நடந்துக்கிட்டா வராதுனே நினைக்கறேன்.''

பிடிவாதமாகத்தான் பேசியதையே சுஜா பேச, சங்கர் கைகளை விரித்து நான் என்ன செய்வேன் என்கிற பாவனை யுடன் நாற்காலியில் உட்கார்ந்தான்.

''ஸோ—நீ தீர்மானம் பண்ணிட்டே, இனி உன் முடிவுலே மாற்றம் இருக்காது?''

சுஜா ஒரு பக்கமாய் உதட்டைச் சுழித்துச் சிரித்தாள்.

''டு லேட்.''

''ஆல் ரைட். இனியும் உன்னோட நான் ஆர்க்யூ பண்ண விரும்பலை. நீ புத்திசாலி, விவேகி... யதார்த்த வாதி ... நாலையும் யோசனை பண்ணிட்டுதான் இந்த முடிவுக்கு 'வந்திருக்கேன்னு நான் நம்ப முயற்சிக்கிறேன்—நீ சந்தோஷமா இருக்கணும். அது எனக்கு முக்கியம். இப்ப சொல்லு, உன் எதிர்காலத்தைப் பத்தி என்ன திட்டம் போட்டிருக்கே?''

''எதிர்காலம் பத்தின்னா?''

''இப்படியே இருந்திட முடியுமா சுஜா? கல்யாணத்தை நினைக்கலியா? நாளைக்கு உனக்குன்னு குடும்பம்; குழந்தை களைப் பத்தி யோசிக்கலியா?''

''ம்ம்?''—சுஜா எழுந்து ஜன்னலருகில் சென்று நின்றாள்.

வெளியே தெரிந்த இருட்டையும், தூரத்து வானத் தில் பொட்டு பொட்டாய்த் தெரிந்த நட்சத்திரங்களையும் ஒரு கணம் ரசித்தாள்.

''இப்ப இருக்கற ஏற்பாடே எனக்குத் திருப்தி, சந்தோஷத்தைத் தர்றதா இருக்குன்னு சொன்னா நீ ஒத்துப்பியா?''

சங்கர் ஆத்திரத்துடன் சோபா கைப்பிடி மேல் குத்தினான்.

''நான்சென்ஸ்.''

''நான்சென்ஸ் இல்லே. வி போத் லவ் ஈச் அதர். சின்ன வயசுக்காரங்க மாதிரி இப்ப நாங்க ஃபீல் பண்ணறதும், ஆத்மார்த்தமா, ஒருத்தரை ஒருத்தர் அவங்க இருக்குற சூழ்நிலையோடயே சந்தோஷமா ஏத்துக்கிட்டிருக் கறதும் நிஜம் சங்கர்.''

''......''

''வாசு கல்யாணமானவர், மனைவிகிட்ட பிரியம் வைச்சிருக்கிறவர், அவ மனசை நோக அடிக்க விரும்பா தவர்னு எல்லாத்தையும் புரிஞ்சிக்கிட்டுதான் அவரை நான் ஏத்துகிட்டு இருக்கேன். ப்ளீஸ் அண்டர்ஸ்டாண்ட் தட்.''

சங்கர் சட்டென்று குரலை எழுப்பிக் கத்தினான்.

''அதான் சொல்லிட்டியே...பட், வொய்?''

''அதான் நானும் சொல்லிட்டேனே—ஐ லவ் ஹிம்'னு.''

சுஜா சப்தமில்லாமல் சிரிக்க, சங்கர் அவளை வெறித் தான்.

''நீ கோபப்படறதுல அர்த்தம் இல்லே சங்கர். என் சந்தோஷம் உனக்கு முக்கியம்னு சொல்லிட்டு, நான் சந்தோஷமா இருக்கேன்னா மட்டும் ஏன் நம்ப மாட்டேங்கறே?''

சுஜா இரட்டை சோபாவில் உட்கார்ந்தாள்.

''இப்படி உட்காரு சங்கர். கோபப்படாம, அமைதியா நான் சொல்றதைக் கேளு. படிப்படியா எங்க அன்பு நெருக்கம் எப்படி வளர்ந்ததுன்னு சொல்றேன் கேளு.''



வர்மா வீட்டுப் பார்ட்டியில் துவங்கி, நிஷா அடுப்புக் கொடுத்ததை, பூக்கள் அனுப்பியதை என்று துவக்கத்தி லிருந்து ஒன்று விடாமல் மெல்லிய குரலில் கூறினாள்.

''முதல் நாள் நம்ம இரண்டு பேரையும் பார்த்து, நாம லவ்வர்ஸ்னு வாசு நினைச்சி பொறாமைப்பட்டாராம் சங்கர்—நல்ல வேடிக்கை இல்லே?

''வீடியோ வாங்கித் தரேன், உன்னோடு அடிக்கடி பேச வசதியா இருக்க டெலிபோன் ஒண்ணை வைச்சிடறேன்னு வாசு சொல்றார். நான்தான் வேணாம்னுட்டேன்.

''நிஜம்மாவே நான் ரொம்ப சந்தோஷமா இருக்கேன் சங்கர். ஐ'ம் இன் லவ். இன் லவ்...இன் லவ். முடிஞ்சப்ப எல்லாம் வாசு இங்க வந்திடறார். ஒ! ஹி ஈஸ் எ ஜெண்டில் மேன் சங்கர். வாழ்க்கைல சிலவிஷயங்கள் எல்லாம் தனக்கு இல்லேனு ஒதுக்கி வைச்சி வாழ்ந்துகிட்டிருந்தவர், இப்ப தேன் குடிச்ச நரி மாதிரி, இல்லே, ஒரு காலேஜ் பையன் மாதிரி கேலியும், சிரிப்புமா இருக்கறதைப் பார்க்க, எனக்கே ஆச்சரியமா இருக்கு. பிஸினெஸ் மாக்னெட் வாசுதேவனா, இவரா, இவருக்குள்ள இத்தனை குழந்தைத் தனமான்னு திகைப்பா இருக்கு?

''உன்கிட்ட இதையெல்லாம் சொல்லப் போறேன்னு வாசுகிட்ட சொல்லியிருக்கேன். அவரை ஒருதரம் என்கூட நீ சந்திக்கணும். எங்க இரண்டு பேரையும் சேர்த்துப் பார்த்திட்டா, உன் சந்தேகங்கள் எல்லாம் கண்டிப்பா மறஞ்சிடும்...சங்கர்.''

வாசு...வாசு...வாசு...வாசு...

வாசு இதைச் செய்தார், வாசு அதைச் செய்தார். வாசு அப்படிச் சொன்னார், வாசு இப்படிச் சொன்னார்.

பதினெட்டு வயசுப் பெண் மாதிரி கண்களைக் குடை யாய் விரித்துக் கொண்டு, வெகுவான ஆர்வத்துடன் முகம் முழுக்க காதலில் தகதகக்க சுஜா பேசப் பேச, சங்கர் அத்தனையையும் வாய் திறக்காமல் கேட்டுக்கொண்டான்,

கேட்டது எதையும் நம்ப முடியாத அவஸ்தையுடன் பெருமூச்சு ஒன்றை இழுத்து வெளியிட்டான்.

எழுந்து நின்றான்.

''உன் வாழ்க்கை இதுதான்னு நீ தீர்மானிச்சப்புறம், நான் குறுக்க நிக்கறது தப்பு. ஆல் தி பெஸ்ட். மிஸ்டர் வாசுதேவன் கிட்டயும் என் வாழ்த்துக்களைச் சொல்லு. நிச்சயம் உங்க இரண்டு பேரையும் நான் ஒண்ணா சந்திக்க விரும்பறேன். ஆனா சுஜா, கவனமா இரு. கயத்து மேல நடக்க ஆசைப்படறே. கீழ விழுந்து அடிபட்டுக்காம, ஜாக்கிரதையா இரு... ஓ. கே? நான் வரேம்மா. ஒன்ஸ் அகெய்ஸ் பெஸ்ட் ஆஃப் லக். அண்ட் குட் நைட்.''

## 16

சுஜா பூனைக்குட்டி போல சுருண்டு வாசுதேவனின் தோளில் ஒண்டிக் கொண்டாள்.

இடது கையை ஸ்டீரிங் வீலிலிருந்து எடுத்து அவளை இறுக அணைத்த வாசுதேவன், குனிந்து உச்சந்தலையில் மென்மையாய் முத்தமிட்டார்.

''சுஜா?''

''ம்?''

''குளிருதா? ஏ. ஸி.யை வேணா நிறுத்திடட்டுமா?''

சுஜா வேண்டாம் என்று தலை அசைத்தாள். பார்வையை உயர்த்தி வாசுதேவனை ஒருதரம் பார்த்தாள். நீளமான பெருமூச்சுடன் கண்களை மூடி இன்னும் நெருக்கமாக ஈஷிக் கொண்டாள்.

''சுஜா...''

''ம்?''



''ஹாப்பி?''

''ம்ம்...''

''லவ் மீ?''

''ம்...''

''எவ்வளவு?''

சுஜா மூக்கை வாசுதேவனின் கோட்டின் தேய்த்து, கிசுகிசுப்பாய் ''ரொம்...ம்...ப'' என்றாள் தம் பிடித்து.

வாசுதேவன் அணிந்திருந்த கோட்டின் சொரசொரப்பு கன்னத்தில் குறுகுறுத்தது.

அவர் மேலிலிருந்து வீசிய ப்ருட்டின் மணம் ஆம்பிளைத்தனமாய் ஆளை மயக்கியது.

சுஜா இரண்டு கைகளையும் அவர் மார்பின் பின்பக்கம், முன்பக்கமாய் நீட்டி அணைத்து, தலையைத் தோள்மீது சாய்த்தாள்.

''ஹேய்...இந்த மாதிரி எல்லாம் எக்ஸைஸ் பண்ணா, நான் காரை எப்படிஓட்டறது? பேசாம நிறுத்திடட்டுமா?''

வாசுதேவன் கார் ஓட்டுவதும், தான் இத்தனை அருகாமையில் வெகு ஸ்வாதீனத்துடன் அமர்ந்திருப்பதும் புதுசாய் ஒருவித குதூகலத்தை தந்து சின்னப் பெண்மாதிரி துள்ள வைக்க, சுஜா சிரித்தாள்.

''நான் ரொம்ப சந்தோஷமா இருக்கேன் வாசு.''

''குட்.''

''பாண்டிச்சேரில காரை நிறுத்தாம இப்படியே போய்க்கிட்டே இருந்தா தேவலை போல இருக்கு.''

''பாண்டிச்சேரில நிறுத்தாம, நேர போனோம்னா, கடல்தான் பரவாயில்லையா?''

சுஜா முஷ்டியால் மார்பில் வலிக்காமல்—என்ன கேலி இது—என்ற பாவனையில் குத்தினாள்.

''இப்படி உங்க பக்கத்துல உட்கார்ந்துகிட்டு போறது சுகம்மா இருக்குன்னு சொல்ல வந்தா...''

வாசுதேவன் அவள் தலையில் செல்லமாய் முட்டி சிரித்தார்.

''ரொம்ப நாளாவே உன்னைக்கேட்கணும்னு...நீ ஏன் கார் ஓட்டக் கத்துக்கவேயில்லே?''

''அதுக்கெல்லாம் டைம் எங்க வாசு?''

''டைம் இல்லியா, இல்லே கத்துக்கணும்ன்ற ஆசை இல்லியா?''

''இரண்டும்தான்...இப்போதைக்கு கார் வாங்கக்கூடிய அந்தஸ்து எனக்கு வரும்னு தோணலை. சம்பளம் நிறைய வருதுன்னாலும் வீடு, அது, இதுனு சரியாப் போயிடுது. கொஞ்சம் கொஞ்சமா சேர்த்து, ஒரு சின்ன ப்ளாட் வாங்கினாலும் பிரயோஜனம். இதோட நேரமும் சுத்தமா இல்லே. நிலைமை இப்படி இருக்கறப்ப, கார் ஓட்டக் கத்துக்கிடறது அனாவசியம்தானே வாசு?''

''என்னைப் பக்கத்துல வைச்சிகிட்டு நீ இந்த மாதிரி பேசினா எனக்கு வருத்தமா இருக்கு சுஜா. நீ'ம்'னு சொல்லு. நாளைக்கே அருமையான வீடு ஒண்ணை மெட்றாஸ்ல வாங்கிடலாம். கார் ஓட்ட உனக்கு நானே கத்துத் தரேன். உன் புத்திசாலித்தனத்துக்கு ஒரு வாரம் கூடத்தேவையில்லே—லைசன்ஸ் எடுத்துக் கொடுக்கறப்ப, என் பரிசா இந்த பென்ஸையும் உனக்குக் கொடுத்திடறேன் என்ன டார்லிங்?''

வாஸ்தவமான அன்புடன் வாசுதேவன் பேச, அந்தப் பேச்சு மனசை நெகிழ்த்த, சுஜா எம்பி அவர் கன்னத்தில் முத்தமிட்டாள்.

''தாங்க்ஸ் வாசு, வேணாம்...ஆனா, நீங்க உண்மையிலேயே ஒரு பெரிய மனுஷர்தான்,''

''எனக்கு காம்ப்ளிமென்ட் அப்புறம் கொடுக்கலாம். ஏன் வேணாம்? நாம இவ்வளவு தூரம் ஒருத்தர்மேல ஒருத்தர் அன்பு செலுத்தறப்போ, சரின்னு சொல்ல ஏன் தயங்கறே?''



சுஜாவுக்கு சங்கர் அன்று கேட்ட கேள்வி சட்டென்று ஞாபகத்துக்கு வந்தது.

'ஸோ, அவர்கூட நீ பழகறதுக்காகத்தான் இந்த சாமானெல்லாம் வாங்கிப் போட்டிருக்காரா?'

டி. வி. க்கும், சோபா செட்டுக்குமே அந்தக் கேள்வி கேட்ட சங்கர், இன்று இவர் வீடும், வெளிநாட்டுக் காரும் தரத் தயாராக இருப்பதை அறிந்தால் என்ன நினைப்பான்?

அன்றைக்கு அப்படிக் கேட்டுவிட்டாலும், இவர்கள் இருவரையும் சில முறைகள் சேர்ந்து பார்த்துவிட்ட பின்பு சங்கர் தன் கருத்தை மாற்றிக் கொண்டுவிட்டது நிஜம். இவர்களின் அழுத்தமான பிணைப்பை உணர்ந்து விட்டது நிஜம். ஆனாலும்? அந்தக் கேள்வி நிச்சயமாய் நெஞ்சை இன்னமும் பிராண்டத்தானே செய்கிறது?

''என்ன சுஜா—பதில் பேசாம இருந்தா...''

''ஸாரி வாசு... என்ன சொல்லறதுனு தெரியலை. அதான் நீங்க புரிஞ்சிக்கணும். என்கிட்ட நீங்க இத்தனை ப்ரியமா இருக்கற விஷயமே என்னைத் திக்குமுக்காட வைக்குது. இப்போதைக்கு இதுவே போதும். அவசரப்பட்டு வீடு, கார்னு வாங்கக் கிளம்பிடாதீங்க. ப்ளீஸ் ..''

''நீ என்னை அன்னியமா நினைச்சு வேணாம்னு சொல்லலியே சுஜா?''

''அன்னியமா? நீங்களா? உங்களை விட்டா பந்தம்னு சொல்லிக்க எனக்கு வேறு யாருமே இல்லே வாசு. ரைட் நௌ யு ஆர் எவ்ரிதிங் டு மீ...''

வாசுதேவன் அவளை அணைத்திருந்த பிடியை இறுக்கினார்.

''ஆல்ரைட், நீ சொல்லறதை ஏத்துக்கறேன். ஆனா, ஒரு விஷயத்தை நீயும் புரிஞ்சிக்கணும். உனக்கு நான் எல்லாம்ன்ற மாதிரி, எனக்கும் நீ—இதை எப்பவும்

ஞாபகத்துல வைச்சிக்கணும். உன் சுக துக்கம் எல்லாத்துலேயும் எனக்குப் பங்கு உண்டு. உனக்கு எது தேவைப்பட்டாலும் அதை உடனே உரிமையோட கேட்க தயங்கக்கூடாது. அது ஒரு ரூபாய் விஷயமோ, இல்லே அஞ்சு லட்சம் சமாசாரமோ...யு ஷுட் நாட் ஹெஸிடேட்...நான் அவ்வளவு வசதிகளோட வாழறப்ப, நீ சௌகரியக் குறைச்சலா வாழ்ந்தா, அது என்னைக் கஷ்டப்படுத்துது. இதை நீ புரிஞ்சுக்கணும். உன் ஹாப்பினஸ் எனக்கு ரொம்ப முக்கியம். எந்த சந்தர்ப்பத்துலேயும் உனக்குத் தயக்கமே இருக்கக் கூடாது. வில் யு ப்ராமிஸ் மீ தட்?''

சுஜா கண்களில் திரண்ட நீரை இமைகளை இரண்டு தரம் சிமிட்டி அடக்கினாள்.

''ஐ பிராமிஸ் வாசு'' என்றாள் மெல்லிய குரலில்.

முதல் நாள் இரவு கிட்டத்தட்ட ஒன்பது மணி இருக்கும்.

மூன்று இட்லி, ஒரு ஆப்பிள், டம்ளர் மோரைச் சாப்பிட்டுவிட்டு டி.வி. பார்க்க, பாட்டு ஏதும் கேட்கப் பிடிக்காமல், இர்வின் ஷா எழுதிய 'தி டாப் ஆஃப் தி ஹில்' புத்தகத்துடன் சுஜா படுக்கப் போய்விட்டாள்.

ஏ.ஸி. செய்யப்பட்ட அறைக் கதவைத் தட்டிக் கொண்டு உள்ளே அவசரத்துடன் எட்டிப் பார்த்த ராணி 'அய்யா வந்திருக்காரும்மா' என்று சொல்ல, ஐயாவா? இப்பவா? அவர் எங்கிருந்து முளைத்தார்?—என்று சில கணங்களுக்கு விழித்துவிட்டு, நைட் ட்ரெஸ்ஸுடன் வெளியில் ஓடிவந்தாள்...வாசுதேவன்.

''ஹலோ டார்லிங்...ஸர்ப்ரைஸ்.''

சுஜா அவர் நீட்டிய கரங்களுக்குள் புகுந்துகொண்டாள்.

''நிஜம்மா ஸர்ப்ரைஸ்தான். ஓ!... வாசு... இப்படி திடீர்னு சொல்லாம கொள்ளாம நீங்க வந்தது எனக்கு எத்தனை சந்தோஷத்தைத் தருது தெரியுமா?''



நுனிக் காலில் நின்று அவர் கழுத்தில் கைகளைக் கோர்த்து, கண்கள் பளபளக்கப் பேசிய போது அந்தக் குழந்தைத் தனத்தை வாசுதேவன் ரசித்தார்.

''இந்த மாதிரி வரவேற்பு கிடைக்கும்னா, நான் ஒண்ணு விட்டு ஒரு நாள்கூட சொல்லாம வர ரெடி.''

சுஜா விலகினாள்.

''சாப்பிட்டீங்களா?''

''ம்ஹூம்...ஆறு மணிக்கு நினைச்சுக்கிட்டேன். ஆபீஸ்லேந்து நேரா கிளம்பிட்டேன்.''

''இட்லி சாப்பிடறீங்களா? பத்து நிமிஷத்துல ரெடியாயிடும். ஹவ் அபௌட் ச்சீஸ் ஆம்லெட்? உங்களுக்குப் பிடிக்குமே...பண்ணட்டுமா?''

அவர் பதிலுக்காகக் காத்திராமல் சுஜா படுக்கை அறைக்குச் சென்று ஹவுஸ் கோட்டை அணிந்து சமையல் கட்டில் நுழைந்தாள்.

ராணியை இட்லி ஊற்றி சட்னி அரைக்கச் சொன்னாள்

ச்சீஸை பொடியாய்த் துருவி முட்டைகளை அடித்து ஃப்ரெஞ்ச் ஆம்லெட் செய்தாள்.

வாசுதேவனுக்கு ஸாலட் பிடிக்கும் என்பதால் ஃப்ரிஜ்ஜில் இருந்த பெரிய தக்காளிகளை வில்லைகளாய் நறுக்கி, உப்பு, மிளகுத் தூள் தூவினாள்.

''வாங்க வாசு!''

எண்ணி பத்து நிமிஷத்தில், சொன்னபடி அவள் அழைக்க, அதற்குள் குட்டியாய்க் குளித்து, பைஜாமா, ஜிப்பா மாற்றிக் கொண்டுவிட்ட வாசுதேவன் டேபிளுக்கு வந்தார்.

''ஏ.ஸி. சரியா வேலை பண்ணுதா சுஜா?''

''பர்ஃபெக்ட்! சத்தமே இல்லே.''

அவள் வேண்டாம் என்று தடுக்கத் தடுக்க அந்த வீட்டில் புகுந்துவிட்ட பொருட்களில் படுக்கை அறை ஏ.ஸி.யும் ஒன்று.

''உனக்கு வேணாம்...ஆனா எனக்கு பழகிப் போச்சே—ஏ. ஸி. இல்லாட்டி தூக்கம் வராதே!''—அவள் வாயை அடைக்க, வாசுதேவன் தயாராய் விளக்கம்வைத்திருந்தார்.

''இன்னும் ஒருஇட்லி வாசு?''

''ஓ...நோ...ஆம்லெட் ரொம்ப ஹெவியாப் போச்சு.''

''மெட்ராஸிலே திடீர் வேலையா?''

வாசுதேவன் சின்னப்பையனாட்டம் வெட்கப்பட்டார்.

''வேலையே இல்லே.''

''அப்புறம்?''

''உன்னை பாண்டிக்கு அழைச்சிட்டுப் போய் என்கூட இரண்டு நாள் வைச்சுக்கணும்னு தோணிச்சு. பே பண்ணி வா'னு சொன்னா, வேலை இருக்குனு சொல்வே... அதான் நானே கிளம்பி வந்திட்டேன்.''

''இரண்டு நாள்; நான் பாண்டிலே? வாசு உங்களுக்கு என்னாச்சு?''

''ஒண்ணுமாகலை.''

குழப்பம் நீங்காமல் சுஜா விழித்தாள்.

''சூப்பர் மார்க்கெட் வேலைல ஏதாவது கோளாறா?''

''ம்ஹூம்.''

''ஐயோ! விவரமா சொல்லப் போறீங்களா. இல்லியா?''

வாசுதேவன் கையைக் கழுவிக் கொண்டார்.

அவள் இடுப்பை அணைத்து படுக்கை அறைக்கு இட்டுச் சென்றார்.

''என் வீட்டுலே—உன்னோட இரண்டு நாள் ஃப்ரீயா இருக்கணும்னு ஆசை.''



சுஜா அவரிடமிருந்து ஓரடி தள்ளிப்போய் நின்று புருவங்களை உயர்த்தினாள்.

''எனக்கு ஒண்ணுமே புரியலை வாசு.''

நிர்மலா இன்னிக்கு திருச்சிக்குப் போயிருக்காங்க சுஜா. சொந்தக்காரங்க வீட்டுலே கல்யாணம் நான் போகலை. இந்த எண்ணம் சத்தியமா எனக்கு காலைல இல்ல... திடும்னு சாயங்காலம் ஆறுமணிக்கு தோணுச்சு. தாங்க மாட்டாம காரை நானே ஓட்டிக்கிட்டு வந்திட்டேன். நாளைக் காலைல கிளம்பினா, பத்து மணிக்கு போயிட லாம். என்ன சுஜா...லீவு போட முடியும் இல்லே?''

முடிந்தது.

கிளம்பி விட்டாள்.

பாண்டிச்சேரியை அடைந்ததும் முதலில் ஸைட்டுக் குப் போனார்கள்.

இரண்டாம் மாடியைத் தொட்டுவிட்ட கட்டிடத் தைச் சுற்றி வந்து, வேலையில் அமிழ்ந்து போனார்கள்.

அப்புறம் வீட்டுக்கு வந்தார்கள்.

சாப்பாடு ஆனதும் இரண்டு பேரும் கொஞ்ச நேரத் துக்கு செஸ் ஆடினார்கள்.

நாலு மணிக்கு ''கிளம்பு சுஜா, 'உங்க பாண்டி எப்படிப்பட்ட ஊர்னே எனக்குத் தெரியாது. இத்தனை தடவை வந்தும் ஊரை எங்க சுத்திப் பார்க்க முடிஞ்சிது'னு அன்னிக்கு சொன்னே இல்லே! ஐயா இன்னிக்கு உனக்கு கைட், வா...போகலாம்'' என்று சொல்லி அவளை அழைத்துக்கொண்டு கிளம்பினார்.

சதுரம் சதுரமாய் அமைக்கப்பட்ட தெருக்களில் வலம் வந்து முடிவில் அரவிந்தர் ஆசிரமத்துக்குப் போனார்கள்.

மலர்களால் அலங்கரிக்கப்பட்ட சமாதியில் மௌன மாக நின்று அஞ்சலி செலுத்திவிட்டு, ஊருக்கு வெளியில்

இருந்த ஆரோவில், ஜிப்மர் பகுதிகளைக் காரில் இருந்தபடியே சுற்றிப் பார்த்தார்கள்.

ரூபி சஃபரினில் கண்ணாடி மாளிகை, ஈஸ்வரன்கோவில் தெருவில் பாரதியார் வாழ்ந்த வீடு, மகாத்மா காந்தி தெருவில் செப்புக்கொடி கட்டி வாழ்ந்த சின்னய்யா முதலியார் வீடு.

''இந்த சின்னய்யா முதலியார் சொத்துக்களைத் தவிர பணமா கோடி ரூபாய் பிரஞ்சு கவர்மெண்ட்கிட்ட காட்டினத்துக்காக அவங்க கொடுத்த கௌரவம் இந்த செப்புக் கொடி.

''ஒவ்வொரு தெருவுலேயும் தப்பாம வீடுகளை ஒட்டி ஆளோடிகளை—ஐந்தடி அகலம், அரை அடி உயரத்துல ஒரு பிளாட்பாரம் நெடுக ஓடுது பார். அதான்—கட்டணும்ன்றது பிரஞ்ச் அரசாங்கத்தோட ரூல். இந்த ஆளோடிகளுக்குக் கூரையும் அவசியம். வெயில், மழைக் காலத்துல ஜனங்க கஷ்டப்படாம நடக்க இந்த ஏற்பாடு.

''ப்ரெஞ்ச் கவர்மெண்ட்ல வேலை பார்த்தவங்களுக்கு நாலாயிரம், ஐயாயிரம்னு பென்ஷன் பணம் வர்றதால, நிறைய ஜனங்க இங்க வசதியாத்தான் வாழறாங்க. உங்க ஊர் மாதிரி எங்க ஊர்ல தண்ணி, மின்சாரப் பஞ்சம் என்னிக்கும் கிடையாது.

''எங்க பாண்டிலே பச்சை முந்திரி விக்கறதை ஒரு தரம் நீ சாப்பிடணும் கஜா—யு வில் லவ் இட்.

''இது கவர்னர் மாளிகை, எதிர் பூங்கா நடுவுலே தெரியுது பார், இதான் ஆயி மண்டபம். ஒரு தாசியோட கொடைக் குணத்தைப் பாராட்டுற விதத்துல துரை கட்டின மண்டபம் இது.''

கடைசியாய் குபேர் தெருவுக்குச் சென்று உயர உயரமான ஸ்தூபங்கள் நடுவில் காந்திஜியும், எதிரில் நேருஜியும் நின்றிருந்த இடத்தில் வாசுதேவன் காரை நிறுத்தினார்.



இருட்டிவிட்டது.

''வேலைப்பாடு கொண்ட இந்த ஸ்தூபங்கள் செஞ்சி ராஜா டியூப்ளேக்கு கொடுத்த பரிசுகள். கிட்டப் போய்ப் பார்க்கலாம் வரியா?''

இறங்கினார்கள்.

வலது பக்கம் ஹோஷ், ஹோஷ் என்று ஆர்ப்பரிக்கும் கடல்.

விளக்குக் கம்பத்தடியில் ஐயர் ஒருவர் சுண்டல் விற்றுக் கொண்டிருக்க, நீளமாய் நடந்தார்கள்.

எதுவும் பேசப் பிடிக்காமல் இருட்டில் கை கோர்த்து நின்று காற்றை அனுபவித்தார்கள் தூரத்தில் தெரிந்த கப்பல்களின் விளக்குகளை வேடிக்கை பார்த்தார்கள்.

எட்டுமணி சுமாருக்கு வீட்டுக்கு வந்து சாப்பிட்டார்கள். நிறையப் பேசினார்கள். நிறையச் சிரித்தார்கள். வீட்டில் ஆட்களின் அமளி அடங்கும்வரை வீடியோவில் படம் பார்த்துவிட்டு படுக்கச் சென்றார்கள்.

மறுநாள் காலையில் மணக்குள விநாயகர் கோவிலுக்குச் சென்றார்கள்.

பிக்னிக் மாதிரி உணவுப் பொருட்களைத் தயாரித்து எடுத்துக் கொண்டு, காரைக்கால் வரை சென்று வந்தார்கள்.

இருள் சூழ்ந்துவரும் சமயம் அசந்து போய் வீட்டுக்குத் திரும்ப, வாசலில் நின்றிருந்த வெள்ளை அம்பாஸிடரைப் பார்த்து வாசுதேவன் லேசாகத் திடுக்கிட்டார்.

''நிர்மலா வந்துட்டாங்களா என்ன? கார் நிக்குதே!''

வாசல் வரவேற்பறையில் ஒரு சினிமா பத்திரிகையுடன் அமர்ந்திருந்த நிர்மலா இவர்களைக் கண்டதும் எழுந்து நின்று 'வாங்க' என்றாள்.

''தஞ்சாவூர் போயிட்டு நாளைக்கு வரலாம்னு நினைச்சிருந்தோம். ஆனா, உடம்புக்குக் கொஞ்சம் முடியாம இருந்திச்சு. அதான் இன்னிக்கு வந்திட்டோம்.'' பேசியவள் சுஜாவைப் பார்த்து வெகுளியாய்ப் புன்னகைத்து ''காப்பி சாப்பிடறீங்களா?'' என்றாள்.

''முகம் கழுவிகிட்டு வந்திடறேன்'' என்று சொல்லி மாடிக்கு வந்தவளுக்கு விவரிக்கத் தெரியாத சங்கடத்தில் அடிவயிற்றில் வெட்டுக்கிளிகள் தாவின.

இரவு சாப்பாடானதும் வாசுதேவன், நிர்மலாவிடம் 'அலுப்பா இருக்கு—படுக்கப் போறேன்! குட்நைட்' என்று சொல்லி மாடிக்கு வந்துவிட்டு தூக்கம் வராமல் ரொம்ப நேரத்துக்கு பால்கனியிலேயே நின்று இருட்டாய்த் தெரிந்த கடலை வெறித்தாசுஜா.

''நீங்களும் நிர்மலாவும் ஒரே அறைலதான் படுப்பீங்களா வாசு?''

இருவர் நடுவிலும் தொடர்பு உண்டானபின், ஒரு பலவீனமான கணத்தில் தாளமாட்டாமல் அந்தக் கேள்வியை எழுப்பியதும் அதற்கு பதில் கூற இயலாமல் வாசுதேவன் பார்வையைத் தழைத்துக் கொண்டதும் ஞாபகத்துக்கு வந்தது.

கூடவே, இப்போதும், இந்த நிமிஷத்திலும் அவர்கள் ஒன்றாக, ஒரே அறையில் படுத்திருப்பார்கள் என்ற நினைப்பு பளிச்சென்று சீற, முதல் முறையாய் சுஜாவினுள் பொறாமை எட்டிப் பார்த்தது.

# 17

இண்டர்காம் 'பே' என்று இரண்டாவது முறையாக அழைப்பது கவனத்தில் பதியாமல், சுஜா சிந்தனை வயப்பட்டிருந்தாள்.

ஒரு கையை முகவாயில்கொடுத்து, மேஜையில் சாய்ந்து உட்கார்ந்திருந்தவள் வலக்கையால் பென்சிலை டேபிள் மேல் உருட்டினாள். வாயில் வைத்துக் கடித்தாள். பேப்பரில் சுழி சுழியாய்ப் படம் போட்டாள்.

''சுஜா.''

கதவைத் திறந்துகொண்டு சங்கர் குரல் கொடுக்க திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

''என்னாச்சு உனக்கு? வர்மா அஞ்சு நிமிஷமா இண்டர்காம்லே கூப்பிட்டுகிட்டே இருக்கார். உடம்பு சரியில்லியா?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே.''

''இங்கதானே இருந்தே? இண்டர்காம் சப்தம் கேக்கலை?''

சுஜா பதில் சொல்லாமல் பெருமூச்சொன்றை இழுத்து கண்களை இடுக்கிக்கொண்டு அவனைப் பார்த்தாள்.

''மிஸ்டர் வர்மா எதுக்குக் கூப்பிடறார் சங்கர்?''

''புது வேலை பத்தின டிஸ்கஷனுக்கு.''

சுஜா சலிப்புடன் நாற்காலியில் சாய்ந்து 'ஓ காட்' என்று முனகினாள்.

"மனசு இருக்கற நிலைலே இன்னிக்கு எனக்கு வேலை பார்க்கவே பிடிக்கலை சங்கர்!"

"அப்படி என்ன நிலை சுஜா?"

அவள் வாயைத் திறந்து பேச ஆரம்பிக்குமுன் இண்டர்காம் மீண்டும் 'பேங்' என்றது.

சங்கர் பட்டனை அமுக்கி 'ஸார்?' என்றான்.

"வரலியா? சுஜா எங்க? நாழி ஆவுது சங்கர்!"

"இதோ, வந்துகிட்டே இருக்கோம் ஸார்."

பட்டனை விட்டவன், "எந்திரு சுஜா—விவரமா அப்புறம் பேசலாம்" என்றான்.

இரண்டு பேரும் வர்மாவின் அறைக்குச் சென்றார்கள்.

"கம் இன்...உட்காருங்க. என்ன சுஜா உன்னை கண்ணுலேயே காணோம். எந்த வேலைல அத்தனை ஸ்வாரஸ்யமா மூழ்கிப் போயிருக்கே!"

உட்கார்ந்தார்கள்.

"பாண்டி வொர்க் எந்த அளவுலே இருக்கு? மிஸ்டர் வாசுதேவன் இங்க வந்து கொஞ்ச நாளாச்சு போலிருக்கே. ஏன், என்னனு விசாரிச்சியா?"

"எல்லாம் ஷெட்யூல்படி தான் போயிட்டிருக்கு ஸார்... பூச்சு வேலை நடந்துகிட்டிருக்கு. மொஸைக் பாலீஷிங், இன்டீரியர் டெகரேஷன் ஆயிடிச்சின்னா வேலை முடிஞ்சாப்பலதான்."

"இன்டீரியர் டெகரேஷன் யார் பண்ணறாங்களாம்? அப்ப கேட்டப்போ, யோசிச்சுச் சொல்றேன்னு மிஸ்டர் வாசுதேவன் சொன்னார். அதுபத்தி விசாரிச்சியா?"

"நாம செய்யறோம்னு சொன்னா, கண்டிப்பா அவர் மறுக்கமாட்டார் ஸார்."



வர்மா சிகரெட் பெட்டியிலிருந்து ஒன்றை எடுத்து பற்ற வைத்துக் கொண்டார்.

நெருப்புக் குச்சியை ஆட்டி அணைத்தார்.

"அதை எப்படி அத்தனை நிச்சயமா சொல்ல முடியும் சுஜா? பெரிய வேலை. இருக்குனே இருக்குற கம்பனிங்க போட்டி போட மாட்டாங்களா? நான் மிஸ்டர் வாசுதேவனைப் பார்த்து மூணு மாசத்துக்கும் மேலே ஆச்சு. வேலை ஒழுங்கா நடக்குது, பேமெண்ட் டாண் டாண்ணு வந்திடுது. நீ அத்தனையும் பொறுப்பா பார்த்துக்குறே. வேற வேலைகள்ல கவனம் செலுத்தினா லும் உண்டுனு, நான் ரொம்ப பட்டுக்கறதில்லே."

அதுவும் சரிதான்.

கடந்த சில மாதங்களாக, வர்மா அண்ட் அஸோஸியேட்ஸ"க்கு வேலை மென்னியைப் பிடிப்பது உண்மைதான்.

உள்நாட்டு வேலைகள் போதாது என்று ஜெர்மனியில் நடக்கும் எக்ஸிபிஷனில் ஒரு பெவிலியன் கட்ட ஒப்பந்தம் ஆகியிருப்பதோடு, குவெய்த்தில் வாழும் இந்தியர் ஒருவர் தன் ரெஸ்டாரண்டை இந்திய பாணியில் கட்டி அலங்கரிக்கும் வேலையையும் இவர்களிடம் விட்டிருப்பதில் வர்மா பாடு குஷிதான்.

காடாறு மாசம், நாடாறு மாசம் என்பதுபோல இரண்டு மாசங்களாய் பாதி நேரம் வெளிநாட்டில்தான்.

கோத்தகிரி, கோயமுத்தூர் வேலைகள் முடிந்துவிட, சென்னை வேலைகளைக் கவனிக்க சங்கர் ஃப்ரீ...அப்புறம் என்ன?

"காபி சாப்பிடலாமா?"

குடித்தார்கள்.

"நேத்து பூரா நான் மிஸ்டர் முத்தையா செட்டியாரோடதான் இருந்தேன். பூந்தமல்லி நெடுஞ்சாலைல அவருக்கு இருபது க்ரவுண்ட் நிலம் இருக்காம். அதுலே

ஃப்ளாட், கட்டவோ, தியேட்டர்ஸ் எழுப்பவோ அவருக்கு விருப்பம் இல்லே. வசதியான கல்யாண மண்டபம் ஒண்ணைக் கட்டணும்னு ஆசைப்படறார். இன்னிக்கு உங்க கூட டிஸ்கஸ் பண்ணிட்டு, நாளைக்கு விவரங்களைச் சொல்றேன்னு சொல்லியிருக்கேன். கட்டப்போற மண்டபம் ஆபட்ஸ்பரி, குசலாம்பாள், ஏ. வி. எம். ராஜேஸ்வரி கல்யாண மண்டபங்களை மிஞ்சற விதத்துல இருக்கணு மாம். இதுவரை எந்த மண்டபத்துலேயும் இல்லாத வசதிகளோட இது அமையறது முக்கியமாம். பணம் எவ்வளவு செலவானாலும் பரவாயில்லையாம். என்ன சொல்றீங்க?''

சிகரெட்டை ஆஷ்ட்ரேயில் தேய்த்து அணைத்துவிட்டு, வர்மா முன்னால் சாய்ந்து உட்கார்ந்தார்.

''சுமார் பட்ஜெட் எவ்வளவு ஸார்?''

''ப்ளானிங்கை முதல்ல செய்வோம். அப்புறம் பட்ஜெட்டுக்கு வருவோம்.''

''ஓ. கே. ம்ம் அத்தியாவசியமான விஷயங்களைக் குறிச்சிக்கலாம். கல்யாண கூடம், சாப்பாட்டுக்கூடம், சமையல்கட்டு, பிள்ளை, பெண்வீட்டார் தங்க இடம்... என்ன ஸார் இவ்வளவு தானே?''

சங்கர் வினவ, வர்மா அதை ஆமோதிக்க, சுஜா குறுக்கிட்டாள்.

''வாட் அபௌட் ரிஸப்ஷன் ஹால் ஸார்?''

''அது எதுக்கு தனியா சுஜா? கல்யாணக்கூடத்தையே சாயங்காலம் ரிஸப்ஷனுக்கு உபயோகிச்சுகிட்டா சரிப்படாதா?''

''அதானே?''

சுஜா 'நோ' என்று தலை ஆட்டினாள்.

''இப்பல்லாம் ஷோவா கல்யாணம் பண்ணற பழக்கமே குறஞ்சிகிட்டு வருது. நிறைய விருந்தாளிகளை அழைச்சு தடபுடலா மூணு வேளை கல்யாணம் பண்ணறவங்களை



விரல்விட்டு எண்ணிடலாம். முஹுர்த்த கூடத்தை சுமார் சைஸ்லே கட்டிட்டு பெரிசா ஒரு ஹாலைக் கட்டி, அதுலே மேடை, மேக்கப் அறை எல்லாத்தையும் பக்காவா உருவாக்கி, வசதியான நாற்காலிகள், ஃபேன், லைட்ஸ், எட்ஸெட்ராக்களைப்போட்டு வச்சிட்டா, பெரிய மனுஷங்க வீட்டுக் கல்யாணத்துலே ரிஸப்ஷனுக்கும் உபயோகிச்சிக்க லாம். பாக்கி சமயங்களிலே, சபாக்காரங்க, மீட்டிங் போடறவங்களுக்கு ஹாலை வாடகைக்கு விட்டு, அந்த விதமாயும் வருமானத்தைப் பெருக்கிக்கலாம். இத்தனை பணம் செலவழிச்சிக் கட்டிட்டு ஆடி மாசம், மார்கழி மாசம்னு பூட்டிப் போட்டு, பணத்தை முடக்கி, கட்டடத் தையும் பழசாக்குவானேன்?''

வர்மா சந்தோஷத்தோடு 'எக்ஸலண்ட் ஐடியா' என, சங்கர் மேஜை மேல் லேசாகத் தட்டி, தன் பாராட்டைத் தெரிவித்தான்.

''ஓ. கே...அப்ரூவ்...மூணு கூடங்கள். இதுல ரிஸப்ஷன் ஹால் அலாதி கவனத்தோட உருவாக்கப்படணும். ரைட்...அப்புறம்?''

''மீதியெல்லாம் ஓரளவுக்கு மாமூலான விஷயமாதான் இருக்கும். சமையல், ஸ்டோர் அறைகள், பாத்திரம் கழுவி, காய்கறி நறுக்க இடங்கள்; பொதுவான குளியல், கழிவறைகள், ஆபீஸ் ரூம், வாட்ச்மேன் அறை, இந்தப் பக்கம் நாலு ரூம்ஸ், வித் அட்டாச்ட் பாத்—மாப்பிள்ளை வீட்டார் தங்க, அந்தப் பக்கம் அதே மாதிரி— பெண் வீட்டார் தங்க.''

''சின்னதா ஒரு கோவில் கட்டிடறது நல்லது இல்லே''

''எஸ்...ரொம்ப அவசியமானது.''

''ஏ. ஸி. உண்டா?''

''முஹுர்த்த கூடத்துக்கு வேணாம். சாப்பாடு, ரிஸப்ஷன் ஹால்களுக்கு இருந்தா தேவலை. அதுவும் சுஜா

சொல்லற மாதிரி ரிஸப்ஷன் ஹாலை சபாக்களுக்கு ட்ராமா, டான்ஸ் நடத்த வாடகைக்கு விடற எண்ணத்தோட கட்டினா, ஏ. ஸி. அதிக பணத்தை சம்பாதிச்சித் தரும். ஜெனரேட்டர் வைச்சிடலாம். இது பத்தி செட்டியார்கிட்ட பேசிட்டு, அப்புறம் முடிவு எடுக்கலாம்''

''கட்டிடங்கள் என்ன அளவுல அமைக்கப்படணும்னு பார்த்திடலாமா?''

அடுத்த ஒரு மணியில் ஒவ்வொரு கூடம், அறையின் நீள அகலங்களைக் குறித்துக்கொண்டு, மொத்த சதுர அடிகளையும், உத்தேச பட்ஜெட்டையும் கணக்கிட்டு முடித்தார்கள்.

மணி ஒன்றே முக்காலைத் தொடுகையில் பேனாவைக் கீழே வைத்துவிட்டு, வர்மா இருக்கையில் சாய்ந்து உட்கார்ந்தார்.

''பெரிய வொர்க்தான். செட்டியார் அப்ருவ் பண்ணிட்டார்னா மளமளனு வேலைகளைத் துவக்கிடலாம்.''

''சிமெண்ட்டுக்கு என்ன செய்யப் போறோம் ஸார்?''

வர்மா சிரித்தார்.

''சிமெண்ட் பத்தி கவலைப்படாதீங்க எத்தனை டன் வேணும்னு சொல்லிடுங்கனு செட்டியார் நேத்தே பச்சைக் கொடி காட்டிட்டார். பெரிய மனுஷர். எக்கச்சக்க பணம். எல்லா பெரிய இடத்துலேயும் தொடர்பு. அப்புறம் எதுக்கு ஷார்ட்டேஜ் இருக்கும்?''

ஒரு நிமிஷம் மௌனமாய் நகர்ந்தது.

''ட்ரைவ்—இன் தியேட்டர் சொந்தக்காரர்கிட்ட நீங்க ஒருதரம் பேசிட்டா தேவலை. லாஸ்ட் பேமெண்ட் இன்னும் வந்து சேரலை.''

''பேசிடறேன். வேற...''



வர்மா முடிக்குமுன் டெலிபோன் அழைத்தது.

''நானா சொல்ற வரைக்கும் எந்த காலையும் கொடுக்க வேணாம்னு சொல்லி இருந்தேனே...''

எரிச்சலுடன் ரிஸீவரை எடுத்துக் கேட்ட வர்மாவின் குரல் சட்டென்று மாறியது.

''இல்லே...லைனைக்கொடு. நான் அவசியம் அவரோட பேசணும்.'' ஆபரேட்டர் தொடர்பைத் தருமுன் ரிஸீவர் வாயைப் பொத்தி, 'வாசுதேவன்' என்று கிசுகிசுத்தார்.

''ஹலோ ஸார் எப்படி இருக்கீங்க? லாங் டைம் நோ ஸி.. அ? லண்டனா? ஓ...ஐ...ஸி...சூப்பர் மார்க்கெட் வேலை திருப்தியா இருக்கா? இப்பகூட சுஜாகிட்ட கேட்டேன். ஆமா ஸர்டென்லி...வெரி குட்...இருக்கா... இங்கதான். ஒரு நிமிஷம்.''

ரிஸீவரை சுஜா பக்கம் நீட்டிய வர்மா ''உன்னோட பேசணுமாம்'' என்றவர், ''இன்டீரியர் டெகரேஷன் பத்தி கேளு சுஜா'' என்றார் அவசரமாய்.

சுஜா ரிஸீவரை வாங்கிக் கொண்டாள்.

வாசுதேவனோடு அவள் பேசி சரியாக ஒரு வாரம் ஆகிவிட்டது. லண்டனில் ஒரு அவசர வேலையாய்ச் சென்று முழுசாய் எட்டு நாட்கள் ஆகிவிட்டன. போன உடன் ஒரு தரம்போனில்பேசினார், அவ்வளவுதான். வாசுதேவனோடு பிணைப்பு ஏற்பட்டபின், ஏழு நாட்கள் போலப் பேசாமல் இருப்பது இதுதான் முதல் முறை.

கன்னங்கள் சூடேறி சிவப்பதை வர்மா பார்க்காமல் இருக்கும் பொருட்டு லேசாகத் திருப்பிக் கொண்டாள்.

''குட்மார்னிங் ஸார்.''

பிரயத்தனத்துடன் சாதாரணமாகப் பேசினாள்,

‘‘இப்பவா? பார்க்கறேன் ஸார் ... ம்ம் ... ம் ... ஒரு மீட்டிங்ல இருக்கேன். ம்...ஹவ் வாஸ் யுவர் ட்ரிப்...ஓ. கே. ஸார்... உங்களுக்கு நான் போன் பண்ணறேன். தாங்க்யூ ஸார்—பை...’’

ரிஸீவரை வைத்துவிட்டு நிமிர்ந்தவள் சங்கரைப் பார்க்க, அவன் குறும்பாய்ப் புன்னகைப்பது புரிந்தது.

‘‘என்ன சொல்றார் சுஜா? ஏன் இன்டீரியர் டெகரேஷன் பத்தி ஒண்ணுமே கேட்கலை?’’

சுஜா நாக்கால் உதட்டை ஈரப்படுத்திக் கொண்டாள்.

‘‘போன்ல கேட்டா நல்லா இருக்காது ஸார். லண்டன் லேர்ந்து இப்பத்தான் வந்தாராம். சூப்பர் மார்க்கெட் விஷயமா பேசணும், வர முடியுமானு கேட்டார். லெட் மீ ஸீனு சொன்னேன்.’’

‘‘அவர் ஃப்ரியா இருக்கறப்போ போயிட்டு வந்திடு சுஜா. நம்ம மீட்டிங்தான் முடிஞ்சாச்சே. நானும் வரட்டுமா?’’

சங்கர் அவசரமாய் அவள் உதவிக்கு வந்தான்.

‘‘உங்ககிட்ட எனக்கு கோயமுத்தூர் வேலையைப்பத்தி பேச வேண்டி இருக்கு ஸார். தவிர, ட்ரைவ்—இன் தியேட்டரை நீங்க வந்து பார்க்கவே இல்லேனு மிஸ்டர் நாகராஜன் குறைபட்டுக்கறார். போய்ப் பார்த்திட்டு, பணத்தையும் அனுப்பச் சொல்லிட்டா தேவலை.’’

‘‘ஓ, கே. தென்... நீ கிளம்பு சுஜா...நான் வரலை.’’

சுஜா கண்களால் சங்கருக்கு நன்றி சொல்லிவிட்டுக் கிளம்பினாள்.

லைனைத் தன் அறைக்கு நேரடித்தொடர்பு கொடுத்து விட்டு, ஆபரேட்டர் சாப்பிடப் போயிருப்பது தெரிந்து போனில் வாசுதேவனை அழைத்தாள்.

‘‘வாசு?’’



‘‘டார்லிங்...எப்படி இருக்கே?’’

‘‘டெரிபிள்...நீங்க?’’

‘‘ஏன் டெரிபிள் சுஜா? உடம்பு சரியில்லையா?’’

‘‘உடம்பு கல்லு குண்டாட்டம் இருக்கு. மனசுதான் சரியில்லே.’’

‘‘என்னாச்சு டார்லிங்?’’

‘‘உங்களைப் பார்த்து எட்டு நாள் ஆச்சு. பேசி ஏழு நாள். என்னால இந்த வேதனையைத் தாங்க முடியலை வாசு. ஐ மிஸ்ட் யூ...’’

‘‘நான் கூட உன்னை ரொம்ப...மிஸ் பண்ணேன் டார்லிங். நேரா பார்த்தா எத்தனைனு புரிய வைப்பேன். எப்ப பார்க்கலாம்.’’

‘‘இப்ப!’’

‘‘பத்து நிமிஷத்துல நான் வந்து பிக்கப் பண்ணிக் கறேன்.’’

‘‘கீழ வந்து காத்துகிட்டு இருக்கேன். ஓ. கே?’’

‘‘ஸி யூ லவ்’’

லண்டனிலிருந்து வாசுதேவன் அவளுக்குப் புடவைகள், ஏகப்பட்ட ஒப்பனை சாதனங்கள், செண்ட், ஹேர் ட்ரையர், இத்யாதிகளுடன் அவள் இத்தனை நாட்களாய் வேண்டாம் என்று மறுத்திருந்த வீடியோவையும் வாங்கி வந்திருந்தார்.

அன்றைக்குதான் அவர் மார்பில் சாய்ந்து சந்தோஷித்த கணத்தில்தான் சுஜா, ‘‘உங்களைப் பிரிஞ்சு என்னால இருக்க முடியலை வாசு. எப்பவும் உங்க கூடவே இருக்க ணும்ன்ற வெறி நாளுக்கு நாள் அதிகமாகுது. நான் சீக்கிரமே பைத்தியமா ஆயிடுவேன்னு தோணுது’’ என, ‘‘நீ இனிமே தானே ஆகணும்? நான் எப்பவோ

ஆயாச்சே!'' என்று அவர் பதில் கூற, சுஜா தலையைத் தூக்கி அவர் கண்களை உற்றுப் பார்த்தாள். பின்பு கெஞ்சலாய் சின்ன தொனியில் கேட்டாள்.

''நிர்மலாவ விவாகரத்து பண்ணிட்டு, என்னை நீங்க கட்டிக்கிட்டா என்ன வாசு?...ப்ளீஸ்......ப்ளீஸ்...ப்ளீஸ்..''

## 18

இரண்டு பெண் குழந்தைகள் ப்ராக் காற்றில் பறக்க, சறுக்குமரத்தில் ஏறி சறுக்கின.

முகத்தில் பெரிய மதுரை வீரன் பெருமையுடன் ஒரு ஆறு வயசு வாண்டு குதிரை மேல் சவாரித்தது.

அப்பா வாங்கிக் கொடுத்த கோன் ஐஸ் கிரீம் புறங்கையில் வழிந்து, முட்டிவரைக்கும் வந்துவிட, குனிந்து முழங்கையிலிருந்து நக்கியது ஒரு பிள்ளை.

'நான் ஆடணும்...நேக்கு ஜுலா' என்று விடாப்பிடியாய் உழக்கு உயரத்தில் நின்றிருந்த பெண், வீசி வீசி ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருந்த இன்னொன்றிடம் கெஞ்சியது.

பயமே இல்லாமல் சர்வர் வைத்துவிட்டுச் சென்ற ட்ரேயில் வந்தமர்ந்து, ஸ்வாதீனத்துடன் க்ளாஸில் அலகை விட்டு காகம் ஒன்று தாக சாந்தி செய்தது.

சங்கர் சுஜாவின் தோளில் தட்டினான்.

''ஹேய்...''

''ம்?''



''என்னமோ அவசரமா பேசணும்னு சொல்லி அழைச்சிக்கிட்டு வந்திட்டு, மௌன சாமியாரா உட்கார்ந்திருந்தா என்ன அர்த்தம்?''

''சொல்றேன். முக்கியமா இரண்டு சமாசாரங்களைப் பத்திப் பேசணும். எங்க ஆரம்பிக்கறது, எதை முதல்ல சொல்லறதுனு யோசிச்சுக்கிட்டிருக்கேன்.''

அவளுடைய நெற்றிச் சுருக்கத்தைக் கண்ட சங்கர் சின்னதாகக் கவலைப்பட்டான்.

''ஏதாவது பாட் நியூஸா சுஜா?''

''ஒண்ணு நிச்சயமா நல்லதுதான்... இன்னொண்ணை எப்படி எடுத்துக்கறதுனு எனக்குத் தெரியலை...ஐ'ம் கன்ஃப்யூஸ்ட்.''

''முதல்ல நல்லதைச் சொல்லு. இதைச் சொல்லிகிட்டு வர்றப்ப, தானே அடுத்ததும் வந்திடும்.''

''ஆல்ரைட்...இன்னிக்கு என் தங்கைகிட்டயிருந்து லெட்டர் வந்திருக்கு சங்கர்.''

''வாட்! லெட்டர்! உன் தங்கை! மை காட்! எத்தனை சாவகாசமா இதை நீ சொல்றே! பயப்பட வேண்டிய விஷயம் ஒண்ணும் இல்லியே?''

சுஜா புன்னகைத்தாள்.

''நல்லதுனு சொன்னதை மறந்திட்டு இப்படிக் கேட்டா? நோ...பயப்பட எதுவும் இல்லே இன்ஃபாக்ட் இந்த ஒன்பதரை வருஷங்கள்ல என் வீட்டுலேந்து எனக்கு வர்ற முதல் லெட்டர் இதுதான்.''

''அப்ப சந்தோஷத்தோட ஹா ஹானு குதிக்காம, ஆற அமர என்ன தயக்கம் இது!''

''மனசு சரியில்லே சங்கர். இல்லேன்னா கண்டிப்பா உடனே ஆபீஸ்லேயே உன்கிட்ட இதப்பத்திப் பேசியிருப்பேன்.''

சங்கர் அவளைக் கனிவுடன் ஏறிட்டான்.

''ஏன் மனசு சரியில்லே சுஜா? நேத்தே இதுபத்தி கேட்கணும்னு நினைச்சேன். வேலைல ஸ்வாரசியம் இல்லாத மாதிரி ஏதோ வருத்தத்துல அமுங்கி இருக்கற மாதிரி பட்டுச்சி... அதுக்குள்ள கல்யாண மண்டபம் டிஸ்கஷன்லே உட்காரவே மறந்திட்டேன். வாட்ஸ் பாதரிங் யூ?''

''சொல்றேன்...சொல்லத்தானே வந்திருக்கேன்.''

''வாசுதேவனுக்கும், உனக்கும் நடுவுலே ஏதாவது ப்ராப்ளமா சுஜா?''

''பிரச்சனைனு சொல்லமுடியாது. ஆனா...பிரச்சனை தான்.''

இது என்ன புது வியாக்யானம் என்று சங்கர் விழிக்க அந்தத் திருதிருப்பு சுஜாவின் அதரத்தில் கோடு போட்டது.

''என்னவோ ஏதோனு மண்டைய உடைச்சிக்காதே சங்கர். பெரிசா ஒண்ணுமில்லே. அதைச் சொல்றத்துக்கு முன்னால என் தங்கை லெட்டரைப் பத்திப் பேசிடலாம்.''

சர்வர் இவர்கள் ஆர்டர் பண்ணியிருந்த தயிர்வடை; மங்களூர் போளிகளைக் கொணர்ந்து வைத்துவிட்டு, அப்புறம்? என்றார்.

''காபி.''

அவர் நகர்ந்தார்.

''லெட்டர் போட்டிருக்கறது என் கடைசி தங்கை மஞ்சுளா...சந்திரிகா எனக்கு அடுத்தவ. அவதான் நான் வேணாம்னு சொன்ன மாமா பிள்ளை சுகுமாரைக் கட்டிக் கிட்டவ. இவளுக்கு இப்ப வயசு இருபது இருக்கும். நா[illegible] வீட்டை விட்டுப் புறப்படறப்ப பதினோரு வயசுப் பெண். ஆறுமாசம் முன்னால இவளுக்குக் கல்யாணம் ஆயிடுச்சாம். புருஷன் தூத்துக்குடிலே பிஸினெஸ் செய்துகிட்டு



இருக்காராம். அம்மா என்னை அடியோட ஒதுக்கிட்டதைக் குறிச்சி வருத்தப்பட்டு எழுதியிருக்கா, 'என் புருஷன்கிட்ட எல்லாம் சொல்லிட்டேன். உங்க அக்கா கூட நீ அன்யோன்யமா இருக்குறதுல எனக்கு ஆட்சேபணை இல்லே. உடனே தபால் போடு'னு அவரே சொன்னதால லெட்டர் போடறேன். பதில் போடு. உன்னைப் பார்க்கணும் போல இருக்கு. நீ இங்க வர்றியா, இல்ல நாங்க அங்க வரட்டுமா'னு கேட்டிருக்கா.''

சங்கர் மெல்லிசாய் விஸில் அடித்தான்.

''குட், வெரி குட்'' என்றான்.

''அவ லெட்டரைப் படிச்சதிலேந்து எனக்கு அலாதி நிம்மதி உண்டாயிருக்கு சங்கர். கடைசிலே என்னை, என் கூடப் பிறந்தவளாவது சரியா புரிஞ்சிகிட்டாளேனு சந்தோஷமா இருக்கு.''

''பதில் போட்டுட்டியா?''

''இல்லே. நாளைக்குதான்.''

''உங்க அம்மா, மத்தவங்க பத்தி ஏதாவது எழுதியிருக் காங்களா?''

''ம்...காட்ரேக்ட் வளர்ந்து, கண் பார்வை மங்கி அம்மா கஷ்டப்படறாங்களாம். ஆனாலும் தங்கைங்ககூடப் போய் இருக்க மாட்டேன்னு பிடிவாதமா தனியாத்தான் இருக்காங்களாம்.''

''ஸோ, பிடிவாத குணத்துக்கு நீ யாரைக் கொண் டிருக்கேனு இப்பத் தெரிஞ்சு போச்சு!''

அவன் ஜோக்கை ரசிக்காமல் சுஜா ''லெட்டர் வந்தது லேந்து அம்மாவைப் பார்க்கணும்போல இருக்கு சங்கர்'' என்றாள் பொதுவாக.

சங்கர் தண்ணீர் க்ளாஸை எடுத்து ஒரு வாய் குடித்தான்.

''போகலாமா? நானும் கூட வரேன். அப்படி என்ன செய்திடுவாங்க அவங்க?''

சுஜா தலை அசைத்து வேண்டாம் என்றாள்.

''முதல்ல மஞ்சுக்கு பதில் போட்டு முடிஞ்சப்ப அவளையும், அவ புருஷனையும் பார்த்திட்டு அப்புறமா அம்மாவைச் சந்திக்கறதை வைச்சுக்கலாம்னு தோணுது. என்ன சொல்றே?''

''உன் இஷ்டம்.''

சுஜா அத்துடன் விஷயம் முடிந்தது என்கிற பாவனையில் சில நிமிஷங்களுக்கு மௌனமாய் டிபனைச் சாப்பிட்டாள்.

காபி அருந்தி, பில்லுக்கு பணம் கொடுத்து அனுப்பின பின் 'சங்கர்' என்றாள் மெள்ள.

''ம்?''

''நேத்து வாசுவந்திருந்தப்போ, யோசிக்காம அசட்டுத் தனமா ஒரு கேள்விய கேட்டுட்டேன்.''

''......''

''வர வர அவரைப் பார்க்காம, அவரோட பேசாம என்னால இருக்க முடியலை. எப்பவும் அவர்கூட சேர்ந்தே இருக்கணும்னு தவிப்பா இருக்கு. ஒரு வாரம் லண்டன் போயிட்டப்ப, அந்தப் பிரிவு தாங்கமாட்டாம இருந்தது. வேலை பண்ணப் பிடிக்கலை. யாரோடயும் எதுவும் பேசப் பிடிக்கலை. நெஞ்சுக்குள்ள ஒரு அவஸ்தை. இருப்புக் கொள்ளாமை. இது வெளிப்படையா தெரியக்கூடாதுனு ட்ரை பண்ணேன். முடியலை. அந்த அளவுக்கு ஐ மிஸ்ட் வாசு.''

''அதான் நேத்துகூட, அப்படி டல்லா இருந்தியா?''

''ம்...ஒரு வாரத்துல இத்தனை வேதனை உணர முடியும்னு நான் இது வரைக்கும் நினைச்சதில்லே, அவரை அடிக்கடி பார்க்க முடியாட்டிப்போனாலும், தினமும் பேசிக்கவாவது செய்யறதால, இந்த அளவுக்கு பாதிப்பு இருந்ததில்லே.''



''ஸோ?''

''நேத்து வாசு ஊர்லேந்து வந்ததும், காணாததைக் கண்ட ஒரு வேகம். இனி இந்த மனுஷரை விட்டு ஒரு நிமிஷம் பிரிஞ்சு வாழறது இம்பாஸிபிள்னு தோணிப் போச்சு. அதனால...''

சங்கர் குறுக்கே பேசாமல் காத்திருந்தான்.

''ஒருத்தரை விட்டு ஒருத்தர் பிரிஞ்சு இருக்க முடியலையே வாசு, இந்த அவஸ்தை இனியும் எதுக்கு? நீங்க நிர்மலாவை டிவோர்ஸ் பண்ணிட்டு, என்னைக் கல்யாணம் செய்துக்கக் கூடாதா?'னு உணர்ச்சி வசப்பட்டுக் கேட்டுட்டேன் சங்கர்.''

இதற்கும் பதில்ஏதும் பேசாமல் சங்கர் மௌனித்தான்.

''வாசு அதிர்ந்து போயிட்டார். என்ன பேசற'நீன்னு கேட்கற தினுசுலே ஒருபார்வை பார்த்தார். 'என் நிலைமை புரிஞ்சும் நீ இந்த மாதிரி பேசறது நியாயமா சுஜா?'னு கேட்டார். அவ்வளவுதான், அப்புறம் எதுவும் பேசலை. நான் மட்டும் 'ஸாரி வாசு—ஐ டின்ட் மீன் இட்'னு சொன்னேன். காலைல ஊருக்குப் போயிட்டார். கோபம், கத்தல், சண்டைனு எதுவும் இல்லாட்டியும், என்னடா இது வழக்கத்துக்கு மாறா இப்படிப் பேசிட்டமேனு உறுத்தலா இருக்கு.''

கடைசி வார்த்தைகளைச் சரியாகப் பேச முடியாதது போல சுஜாவின் குரல் செம்மிப் போயிற்று. ஒரு நிமிஷத்துக்கு உதட்டைக் கடித்து, வேதனையை அடக்குகிற பாவனையில் உட்கார்ந்திருந்தவள், திடுமென தாளமாட்டாத அவசரத்துடன் பேசினாள்.

''யதார்த்தம், நிதானம், புத்திசாலித்தனம்றதெல்லாம் பேச நல்லா இருக்கு சங்கர். ஆனா நாம உணர்ச்சி வசப்பட்டுப் போறப்போ, சந்தோஷமா வருத்தமான்ற

கேள்வி எழும்பறப்போ எல்லாம் அடிபட்டுப் போயிடறது நிஜம். இது நான் அனுபவிச்ச உண்மை. வாசு நிலையை உணர்ந்து தான் அவரை ஏத்துக்கிட்டேன். ஆனா, அவரோட பழகப்பழக, அவர் மேல உள்ள அன்பு அதிகமாக அதிகமாக, அவர் எனக்கே எனக்கு வேணும்னு தோணுதே ...நான் என்ன செய்வேன்? ஒரோரு சமயம் அந்த நிர்மலாகிட்டேயே 'போயி, 'நாங்க இரண்டு பேரும் மனசார காதலிக்கிறோம்—எங்களால பிரிஞ்சி இருக்க முடியலை. நீங்க இதைப் புரிஞ்சிகிட்டு அவர் வாழ்க்கைலேந்து விலகிடுங்க'னு சொன்னா தேவலை போல ஒரு ஆத்திரம்கூட வருது. எ...எதனால இப்படி ஒரு வேகம் சங்கர்? நான்...ஏன் இப்படி ஆயிட்டேன்?...இந்தப் பொறாமை உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாமப் போயிடுமோனுகூட பயமாயிருக்கு சங்கர்...வாட் கேன் ஐ டு?''

குரல் இன்னும் கிசுகிசுப்பாகி, அவள் பரிதவிக்க சங்கர் முன்னால் சாய்ந்து அவள் புறங்கையைத் தட்டிக் கொடுத்தான்.

சின்ன குரலில் 'ஈஸி ஈஸி' என்றான்.

''வீணா உன்னை ரொம்ப குழப்பிக்கறேன்னு எனக்குத் தோணுது சுஜா...இந்த பயம் எதுக்காக? ஸில்லி...கனவுல கூட ஒருத்தருக்கு தீங்கு செஞ்சிட்டு நிம்மதியா உன்னால வாழ முடியாது. நீ அந்த ரகம் இல்லே. இது உனக்கே தெரியும் வாசுவை நீ எக்கச்சக்கமா காதலிக்கலாம். அவர் உனக்கே சொந்தமாயிடணும்னு நினைக்கலாம். ஆனாலும் அவர் மனைவிகிட்ட போயி உண்மையைச் சொல்லியாவது வாசுவை அடையற காரியத்தை சத்தியமா உன்னால செய்ய முடியாது. ஐ நோ தட்...அசட்டுத்தனமா எதை யாவது கற்பனை பண்ணிக்காதே சுஜா.''

''அப்புறம் அந்த வெறி மட்டும் எனக்குள்ள ஏன் தோணுது? நேத்து எதனால வாசுகிட்ட அப்படிக் கேட்டேன்?''



''எமோஷனலா இருக்கறப்ப நிதானம் இழக்கறது யாருக்கும் சகஜம்தான் சுஜா. அதுதான் உன் விஷயத்துலேயும் நடந்திருக்கு. யோசிச்சு பாரு; உனக்கே புரியும்.''

சுஜா பரிதாபமாக அவனை ஏறிட்டாள்.

''அப்படி நான் கேட்டது மொமென்ட்ரி வீக்னஸ்னே வைச்சிகிட்டாலும் வாசு எனக்கு வேணும். எப்பவும் வேணும்னு தோணுதே. அதுக்கு என்ன பண்ணட்டும் சொல்லேன்...ப்ளீஸ்.''

''நௌ யு ஆர் ரியலி டாக்கிங் ஸில்லி...இப்படி பதட்டப்பட்டு பேசற பெண் நீ இல்லியே சுஜா! அன்னிக்கு பேசினப்ப, வாசுவோட நிலைமை புரிஞ்சுகிட்டுதான் ஏத்துகிட்டிருக்கேன்னும், நிர்மலா மேல அவர் வைச்சிருக்கற அன்பு குறைய நான் காரணமா இருக்க மாட்டேன்னும் ரொம்பத் தெளிவா இருந்த சுஜாவா இன்னைக்கு இத்தனை கலங்கிப்போய்ப் பேசற? ஐ'ம் ஸர்ப்ரைஸ்ட் என்னாச்சு உனக்கு? ம்?''

''தெரியலை...ஐ லவ் வாசு—அது மட்டும்தான் புரியுது. ஏன் சங்கர், அந்த நிர்மலாவுக்கு நான் எந்த விதத்துலே குறைஞ்சி போயிட்டேன்! புத்தி, அழகு, படிப்பு? எதுல? அவங்களுக்கு குழந்தைகூட இல்லியே சங்கர்? வாசுக்கு நிச்சயம் நான் பெட்டர் வொய்ஃப் ஆகமாட்டேனா? சொல்லேன்.''

கண்கள் கலங்க, உதடுகள் துடிக்க அசட்டுத்தனமாய் பிடிவாதம் பிடிக்கும் இந்த சுஜா சங்கருக்கு ரொம்பப் புதுசு.

சில கணங்களுக்கு அப்படியே அமர்ந்து அவளை வெறித்தான்.

பின் மெதுவாகப் பேசினான்.

''நீ இத்தனை குழம்பிப் போய் பேசறதைக் கேட்டா எனக்கு ரொம்ப வருத்தமா இருக்கு. சுஜாவா, இத்தனை வருஷங்களா நான் பழகி, மதிக்கிற சுஜாவானு மனசு

பதறுது. ப்லீஸ் மீ...நீ இப்படி உணர்ச்சி வசப்பட்டுப் பேசறதை என்னால நம்பக்கூட முடியலை. நிஜத்தைச் சொல்லணும்னா, எஸ், நிர்மலாவைவிட எல்லா விதத்து லேயும் நீ வாசுவுக்கு ஏத்த மனைவிதான். அக்ரீட்...ஆனா ...சுஜா...இது நடக்கற காரியமா? அவங்களை ஒதுக்கிட்டு, வாசுவோட உன்னால நிம்மதியா வாழ முடியுமா? அந்தம்மா மனசை மிதிச்சி காயப்படுத்திட்டு, சுத்த மனப் பான்மை இல்லாம உன்னால இருக்க முடியுமா? ஹேய் சுஜா...ஷேக் யுவர்செல்ஃப் ஐ ஸே இந்த உறவு இப்படித் தான் இருக்கும்ன்றது உனக்கு துவக்கத்திலேயே தெரிஞ்சது தானே?...அப்புறம்?...கமான் சுஜா...ப்ளீஸ்...வேண்டாத சிந்தனைகளை வளர்த்துகிட்டு அவஸ்தைப்படாம, அத்தனையும் ஒதுக்கித் தள்ளு. எப்பவும் இருக்குற மாதிரி தெளிவோட இரு. கமான்...ஐஸே ..''

தணிந்த குரலில் நிதானமாக ஒவ்வொரு வார்த்தை யாக அவன் பேச, சுஜாவின் படபடப்பு மெதுவாக மறையத் தொடங்கியது.

என்மேல் இவனுக்கு இருக்கும் நம்பிக்கை எனக்கு எப்படி இல்லாமல் போயிற்று என்று வெட்கம் தோன்ற, ஸீட்டில் சாய்ந்துகொண்டு சில நிமிஷங்களுக்கு யோசித் தாள். பின் சங்கரைப் பார்த்து வருத்தத்துடன் புன்னகைத் தாள்.

''யு ஆர் ரைட் சங்கர். நான் அளவுக்கு மீறி குழம்பித் தான் போயிருந்தேன். ஐ'ம் ஸாரி...ட்ரூலி ஸாரி...இப்ப நிதானத்துக்கு வந்திட்டேன். இன்னொரு தரம் வாசுகிட்ட யோ, இல்லை உன்கிட்டயோ இப்படிப் பேசமாட்டேன். ஐ ப்ராமிஸ்...இருட்டிகிட்டு வருதே...கிளம்பலாமா?''

காரை ஓட்டிய நாழிகையில் சங்கர் மெதுவாக 'சுஜா' என்று அழைத்தான்.

''ம்?''

''கப்பல் பறவை'னு கேள்விப்பட்டிருக்கியா?''



''ம்ஹூம்—என்னது?''

''ஹார்பர்ல கப்பல்கள் நின்னுகிட்டு இருக்குறப்போ, அதுல உட்கார்ந்திடற பறவைங்க, கப்பல் நகரத் தொடங் னது புரியாம அப்படியே இருக்கும். நடுக்கடலுக்குக் கப்பல் போனப்புறம் திடும்னு நிலைமை புரிஞ்ச மாதிரி தவிச்சி கிட்டு நிலத்துக்குப் போகப் பறக்கும். முடியாது. எத்தனை பறந்தாலும் திசை புரியாம, நிலம் கண்ணுக்குத் தெரியாம திரும்பத் திரும்ப கப்பலுக்கே வந்து தவிக்கிற பறவையைத் தான் கப்பல் பறவைனு சொல்வாங்க... இப்ப நீ கூட ஒரு கப்பல் பறவையாயிட்டயோனு பயமா இருக்கு. புரியுதா நான் என்ன சொல்றேன்னு?''

சுஜா தலையைத் திரும்பி சங்கரை ஏறிட்டாள்.

எதிரில் வந்த வண்டிகளின் விளக்கு வெளிச்சத்தில் அவ்வப்போது சங்கரின் முகம் பளிச்சிட, பதில் எதும் சொல்லாமல் மௌனித்தாள்.

வண்டி வீட்டு முன் நின்றதும் இறங்காமல், சங்கரை நிமிர்ந்து பார்த்துப் பேசினாள்.

''ஏதோ பலஹீனமான சமயத்துல வாசுகிட்டவும், உன் கிட்டயும் குழந்தை மாதிரி பேசினதை வைச்சி இந்த முடிவுக்கு வந்திடாதே சங்கர். கப்பல் பறவை தெரியாம கப்பல்லே உட்கார்ந்திட்டு அவஸ்தைப்படுது. நான் அப்படி இல்லே தெரிஞ்சேதான் வாசுவோட என்னைப் பிணைச் சிக்கிட்டேன். நான் கப்பல் பறவை இல்ல. நிச்சயம் இல்ல. நீ ஒத்துக்கிட்டாலும் சரி, மாட்டேன்னாலும் சரி—தட் ஈஸ் த ட்ருத்.''

பேசியவள் இறங்கி, குனிந்து எதுவுமே நடக்காத மாதிரி அழகாய்ப் புன்னகைத்து 'குட்நைட் சங்கர்' என்று கூறி, நிதானமாய்த் திரும்பி நடக்க, புருவங்கள் முடிச்சு முடிச்சாகச் சுருங்க, சங்கர் கியரைமாற்றி ஆக்ஸிலேட்டரை அழுத்தினான்.

# 17

வர்மாவுக்கு லேசான ஏமாற்றம்.

இந்தியாவிலேயே இப்படிப்பட்ட சூப்பர் மார்க்கெட் கிடையாது. வெளிநாட்டுக் கடைக்கு ஒப்பாகக் கட்டிட அமைப்பைச் சொல்லலாம் — என்று பார்த்தவர்கள் அத்தனை பேரும் ஓஹோ என்று புகழும் நிஷா சூப்பர் மார்க்கெட்டுக்கு தடபுடலாய் முதல் மந்திரி மத்திய மந்திரி என்று யாரையாவது விட்டு திறப்பு விழா நடத்தி, ஊரையே ஒரு கலக்குக் கலக்காமல், இந்த வாசுதேவன் எளிமையான விழா போதும் என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டதில் வருத்தம்தான்.

''இது உங்களுக்கு மட்டுமில்லே மிஸ்டர் வாசுதேவன்— எங்களுக்கும் ஒரு பெரிய சந்தர்ப்பம். கச்சிதமா திட்டமிட்டு, சொன்ன நாளுக்குள்ள இத்தனை அழகா வேலைய முடிச்சதுக்கு உண்டான விளம்பரம் எங்களுக்குக் கிடைச்சா ரொம்ப உதவியா இருக்கும். உங்க முடிவை மாத்திக்குங்களேன்''—என்று கடைசி அஸ்திரமாய்க் கெஞ்சிக்கூடப் பார்த்து விட்டார்.

ம்ஹூம்—வாசுதேவன் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள்தான்.

''பிரமுகரைக் கூப்பிட்டு விழாவ அமர்க்களமா செய்ய எனக்கு விருப்பம் இல்லே. உங்களுக்கு இந்த விழா மூலம் கிடைக்கவேண்டிய விளம்பரம் தவறிப்போவுதுனு நீங்க நினைச்சா, ஐ'ம் ஸாரி...ஐ ஜஸ்ட் காண்ட் ஹெல்ப் இட்... நீங்க புரிஞ்சுக்கணும்.''

தனியாய்த் தன்னோடு இருக்கையில் கண்டிப்பாய் ஒரு வார்த்தை பேசத் தெரியாத வாசுதேவன், பிஸினெஸ்



பேச்சு என்று வந்துவிட்டால் மட்டும் ஆளே மாறிப்போய் விடுவது சுஜாவுக்கு எப்போதும் ஆச்சர்யத்தைத் தரும் ஒரு சமாசாரம்.

வர்மா தோற்றுவிட்ட சலிப்புடன் தோளைக் குலுக்கினார்.

''ஆல் ரைட்.. யு ஆர் த பாஸ். என்ன விதத்துலே சூப்பர் மார்க்கெட் திறப்பு விழாவை நடத்த நினைச்சிருக்கீங்க? அதையாவது தெரிஞ்சிக்கலாமா?''

வாசுதேவன் மெல்லச் சிரித்தார்.

''நீங்க தெரிஞ்சிக்காம! இந்த ப்ராஜெக்டோட வெற்றிக்கு முழுக்க முழுக்க நீங்கல்லாம்தானே காரணம்? உங்ககிட்ட ஏற்கனவே சொன்னமாதிரி வர்ற இருபத்தி ஏழாம் தேதி என் தொழிற்சாலைல ரொம்ப வருஷமா இருக்குற கந்தசாமி ரிப்பனை வெட்டி திறப்புவிழாவ நடத்துவார். கலியமூர்த்தின்ற இன்னொரு பெரியவர் குத்துவிளக்கை ஏத்துவார். விழானு சொன்னா இவ்வளவுதான். காலைல பத்து பத்தரை நல்ல நேரம்னு ஐயர் குறிச்சிக் கொடுத்திருக்கார். பதினோரு மணிக்கு ஆனந்தா கல்யாண மண்டபத்துல நண்பர்களுக்கும் என் தொழிலாளிகள், கட்டடத்தைக் கட்ட உதவின மேஸ்திரி, சித்தாள், இதர தொழிலாளிங்களுக்கும் விருந்து. அன்னிக்கு ராத்திரி முக்கிய நண்பர்களுக்கு என்வீட்டுல எக்ஸ்க்ளூஸிவா ஒரு டின்னர்.''

வர்மா முகத்தைச் சுளித்துக் கொண்டு பதில் பேசாமல் இருக்க, வாசுதேவன் சங்கர், சுஜாவைப் பார்த்துக் குறும்புடன் சிரித்தார்.

''என்ன, ஒருத்தரும் ஒண்ணுமே சொல்ல மாட்டேங்கறீங்க?''

''உண்மையிலேயே எக்ஸலெண்ட் ஐடியா மிஸ்டர் வாசுதேவன். சுயவிளம்பரம் தேடிக்க எல்லோரும் என்னென்

ணவோ செய்யத் துடிக்கிற இந்த நாள்ல, யு ஆர் ரியலி க்ரேட்.''

வாசுதேவனை நன்கு புரிந்துகொண்டவள் என்ற ரீதியில், அவர் தொழிலாளியைக் காக்காய்ப் பிடிக்கவோ, இல்லை, ஏழைப் பங்காளன் என்ற பெயரை வாங்கவோ இந்த ஏற்பாட்டைச் செய்யவில்லை; நான் வசதியாக வாழ்வதற்கு என் தொழிலாளிகள் காரணம்; அவர்களைக் கௌரவிப்பது என் கடமை—என்று சத்தியமாக எண்ணி, பேசுவது புரிய சுஜாவும் சங்கர் கூற்றை ஆமோதிக்கும் வகையில் குதூகலத்துடன் தலை அசைத்தாள்.

இருபத்தி ஆறாம் தேதி காலையிலேயே வர்மா, சாந்தா, சங்கர், சுஜா எல்லோரும் பாண்டிக்குச் சென்று விட்டார்கள்.

கடைசி நிமிஷ வேலை ஏதாவது பாக்கி இருக்கிறதா என்று கழுகுக் கண்களுடன் கட்டிடத்தைச் சுற்றி வந்த போது, இது 'எங்கள் மூளையில் உருவானது, எங்கள் குழந்தை என்ற பெருமிதம் நெஞ்சில் முட்டியது.

திட்டமிட்டபடி தரைத் தளத்தில் இருபத்திநாலு மணி நேர மருந்துக்கடை, பாங்க், ஐஸ்க்ரீம் பார்லர்... குழந்தைகள் மனம் மகிழ்ந்து விளையாட வீடியோ கேம்ஸ்.

நுழைந்ததும் விசாரணைக் கவுண்டர். அந்தப் பக்கம் லிஃப்டுகள்.

முதல் மாடியில் வாசுதேவன் ஆசைப்பட்ட விதத்தில் 'நிஷா' சாதனங்களுக்கான தனிப்பிரிவு இதன் உள் அலங்காரத்தை விசேஷ கவனத்துடன் சுஜா செய்திருக்க தவறிப்போய் வெளிநாட்டுக் கடை ஒன்றில் நுழைந்து விட்டோமோ என்ற பிரமிப்பை அந்தப் பகுதி எவருக்கும் உண்டாக்கியது.



ஒரு தனிப்பட்ட நபருக்குத் தேவையான பொருட்கள் அத்தனையும், நேர்த்தியாக அமைக்கப்பட்ட பல பிரிவுகளில்...

மாடி தப்பாமல் டாய்லெட் வசதி. அதைப் பராமரிக்க ஒவ்வொரு தளத்திலேயும் இரண்டு துப்புரவுத் தொழிலாளிகள்.

மேல்மாடி பூராவும் ரெஸ்டாரண்ட்.

இதமான ஏ. ஸி.

ஆங்காங்கே ராட்சஸ இயற்கைக்காட்சி, புகைப் படங்கள் ஒட்டப்பட்ட சுவர்கள், பீங்கான் தொட்டிகளில் சிரிக்கும் க்ரோட்டன்ஸ் செடிகள்.

ஜனங்கள் போட்டுவிடும் குப்பைகளை அப்போதைக்கப் போதே பெருக்கி எடுக்க, கட்டிடத்தைச் சதா சுற்றிவரும் ஸ்வீப்பர்கள்.

பார்த்தவர்கள் அசந்துதான் போனார்கள்.

வழக்கம்போல அந்த முறையும் இவர்கள் வாசுதேவ னின் வீட்டிலேயே தங்கினார்கள்.

''உங்களுக்கு வேற கெஸ்ட் யாராச்சும் வருவாங்க... நாங்க ஹோட்டல்ல தங்கிக்கறோம்'' என்று வர்மா சொன்ன போது வாசுதேவன் தன் மாமூல் புன்னகை ஒன்றைத் தந்து ''மாடிலே மட்டும் எட்டு விருந்தாளிங்க அறை இருக்கு. இவை தவிர என் கம்பெனி கெஸ்ட் ஹவுஸும் இருக்கு. கவலைப்படாம தங்குங்க'' என்று சொல்லிவிட்டார்.

சுஜாவுக்கு என்று அவள் ஏற்கனவே தங்கிய அறை ஒதுக்கப்பட்டிருந்தது.

சௌக்யமா—என்று கேட்கும் கடல், பால்கனியி லிருந்து எட்டிப்பார்த்தால் வண்ண வண்ணக் குமிழ் களாய்த் தெரியும் ரோஜாத் தோட்டம்.

கவனத்தைச் சிதற அடிப்பது பைத்தியக்காரத்தனம் என்றதீர்மானத்தோடு. சுஜா பிடிவாதமாய் வாசுதேவனை பற்றியோ அவருக்கு அத்தனை நெருக்கத்தில் இருந்தும் ஸ்வாதீனத்தோடு பழக முடியாததைப் பற்றியோ எண்ணாமல் இருந்தாலும், இரவு படுத்தபிறகு மட்டும் 'தூங்கமாட்டேன். வாசுவைப்பார்க்கவேண்டும், அவரோடு பேசவேண்டும்' என்று மனசு வம்பு பண்ண, ஒரு காம்போ ஸைப் போட்டுக்கொண்டு தூங்கிப்போனாள்.

மறுநாள் காலை பெட் காபியோடு கூடவே நாலு வகை தினசரிகளும் வந்தன.

ஹிந்து—

இந்தியன் எக்ஸ்பிரஸ்—

தினத்தந்தி—

தினமணி—

ஒவ்வொன்றிலும் கடைசி பக்கத்தில் 'நிஷா' சூப்பர் மார்க்கெட்டின் படம் பெரி...சாய்...அதன்கீழ் வர்மா சங்கர், சுஜா படங்கள்.

'நிஷாவை அற்புதமாக உருவாக்கியிருக்கும் வர்மா அஸோஸியேட்ஸுக்கு எங்கள் நன்றி'

வாசுதேவன்—குப்தா—என்ற வாசகங்கள் கொட்டை யாய்.

இது போதாது என்று உள்ளேயும் அரைப்பக்க அழைப்பிதழ்.

'புதுமையான நிஷா சூப்பர் மார்க்கெட், உங்கள் வசதிக் காக இன்று திறக்கப்படுகிறது. அனைவரும் வந்து எங்களை கௌரவிக்க வேண்டும்'' என்று இரண்டே வரிகளில் எளிமை யாய் வாசகங்கள்.

சுஜா அவசரமாய்க் குளித்து, தயாராகி பேப்பர்களுடன் சங்கரின் அறைக்குச் சென்றாள்.



தனக்கு வந்த தினசரிகளைப் பார்த்து சங்கரும் திகைத்துப் போயிருக்க, இருவருமாய் வர்மாவின் அறைக்கு போனார்கள்.

உறங்கிக் கொண்டிருந்தவர்களை எழுப்பினார்கள்.

''காலை வேளைல ஏன் தொந்தரவு பண்ணறீங்க?'' என்று சிடுசிடுத்தவர் முன் பேப்பர்களைப் பிரித்துப் போட்டார்கள்.

வர்மாவின் தூக்கம் இருந்த இடம் தெரியாமல் ஓடிப் போயிற்று.

''முழுப் பக்க நன்றியா? அதுவும் அத்தனை தினசரிகள் லேயுமா?''

''ப்ரைம் மினிஸ்டர் வந்து திறப்பு விழாவ நடத்தி இருந்தாக்கூட நமக்குஇத்தனை விளம்பரம் கிடைக்காதே?''

''வாசுதேவன் முகத்துல விழிக்க எனக்குக் கூச்சமா இருக்கே...மைகாட்...மைகாட்.''

வர்மா தவித்துப் போனார்.

அடித்துப் பிடித்துக்கொண்டு குளித்து தயாராகி, சகாக் களுடன் கீழே வந்தார்.

வாசுதேவன் எங்கே என்று விசாரித்து, தேடிப்போய் கைகளைப் பற்றிக்கொண்டு ''தாங்க்ஸ்''—ஓ...தாங்க்ஸ் எ லாட்'' என்று திரும்பத் திரும்ப அதையே கூறினார்.

திறப்பு விழாவும், விருந்தும் குறித்த நேரத்தில் நடந்து முடிய, எப்போதோ கிடைத்த கால் நிமிஷ தனிமையில் 'மத்தியானம் மூணு மணிக்கு மேலே உன் ரூமுக்கு வரேன். எங்கேயும் போயிடாதே' என்று சொல்லி வாசுதேவன் நகர்ந்தார்.

மூணேகாலுக்கு, அவரவர் அறையில் எல்லோரும் ஓய் வெடுக்க, சுஜா கைவிரல்களைச் சொடுக்கிக்கொண்டு காத் திருக்க வந்தார்.

கதவைத் தாளிட்டுவிட்டு...சுஜாவை அணைத்து அழுத்தமாக முத்தமிட்டார்.

எதுவும் பேசத் தோன்றாமல் அப்படியே அவளைப் பார்த்துக்கொண்டு நின்றார்.

'எல்லாரும் உன்னைப் புகழறப்ப, இவ எனக்கு சொந்தம்னு உரிமையோட சொல்ல முடியாம...உனக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லாத மாதிரி தள்ளி நின்னுகிட்டு...இதவிட பெரிய தண்டனை வேற ஒண்ணும் இருக்க முடியாது சுஜா.''

முதல் முறையாக வாசுதேவன் வெளிப்படையாய்த் தவித்து உருக, அந்த நெருக்கத்தில் சரசரவென்று நெகிழத் தொடங்கின சுஜா, சட்டென்று தன்னை உலுக்கிக் கொண்டாள்.

நோ...நோ.

இந்த ரீதியில் பேச்சு துவங்கினால், கண்டிப்பாய் அன்று கேட்ட மாதிரி எதையாவது மடச்சி மாதிரி நான் கேட்டு விடுவேன்.

அந்த விஷயில் மீண்டும் நான் பேசமாட்டேன் என்று சங்கரிடம் ப்ராமிஸ் பண்ணி இருக்கிறேன்.

நோ—

மனசை அலையவிடமாட்டேன்—

கிட்டாததற்காகப் பைத்தியக்காரியாய் ஏங்க மாட்டேன்.

ந்த்...நோ.

சுஜா ஓரடி தள்ளி நின்று வாசுவைப் பார்த்தாள். பேச்சை மாற்றினாள்.

''இன்னிக்கு விழா எளிமையா அதே சமயத்து மனசுலே பதியும்படியாகவும் இருந்தது. கங்க்ராட்ஸ். நீங் ஒரு அலாதி மனுஷர். அதை நினைச்சி நான் ரொம்பப்



பெருமைப்படறேன். பேப்பர்ல ஏகத்துக்கு தாங்க்ஸ்சொல்லி தடபுடல் படுத்திட்டீங்களே...வர்மா அப்ப திறந்த வாய இன்னும் மூடலை. என்கிட்டகூட இந்த விளம்பரம் பத்தி சொல்லலியே வாசு!''

''ஸர்ப்ரைஸா இருக்கட்டுமேனுதான். உனக்கு நிஜம்மா சந்தோஷமா டாலிங்?''

''நி...ஜ ம்...மா.''

அன்றிரவு விருந்தில் ஊரின் பெரிய மனிதர்களுக்கும் இதர நகரங்களிலிருந்து வந்திருந்த நண்பர்களுக்கும் வர்மா சங்கர், சுஜாவைப் பிரத்யேகமாய் அறிமுகப்படுத்தி இன்னும் ஒரு விதத்தில் விளம்பரம் செய்தார் வாசுதேவன்.

விருந்து முடிந்து இரவு படுக்கும் போது மணி ஒன்று.

மறுநாள் காலையில் டிபன் சாப்பிட்டுவிட்டு, சென்னைக்குப் புறப்பட்டார்கள்.

'போயிட்டு வரேன் வாசு' என்று தனிப்பட்ட விதத்தில் சொல்லிக் கொள்ளக்கூட அவகாசம் கிடைக்காதது நெஞ்சை உறுத்த, வழி பூராவும் அதிகம் பேசாமல் வந்தாள் சுஜா.

மறுநாள் உடம்பு ரொம்ப அசதியாக இருந்ததால் அலுவலகத்துக்கு வரமாட்டேன், என்று சொல்லிவிட்டு, எண்ணெய் தேய்த்துக் குளித்து ஓய்வு எடுத்தாள்.

கோட்டா புடவை ஒன்றை உடுத்தி வாசு வாங்கித் தந்திருந்த ரெக்கார்டரில் டேப்பைப் போட்டுவிட்டு படுக்கையில் சாய்ந்தபோது, அவர் தன் வாழ்க்கையில் எத்தனை முக்கியமான இடத்தை ஆக்ரமிக்கத் துவங்கி விட்டார் என்ற வியப்பு எழுந்தது.

தூக்கம் வராமல் இரவு முழுவதும் எதையெதையோ சிந்தித்தபடி புரண்டு படுத்ததாலோ என்னமோ, காலையில எழுந்தபோது, தலை வலித்தது. உடம்பு கொஞ்சமாகச் சுடுகிற மாதிரியும் இருந்தது.

அலைச்சல் ஜுரமா?

காபியுடன் மெடாஸின் ஒன்று போட்டுக்கொண்டும் அனத்தல் விடாமல் இருக்க, ஆபீசுக்கு ராணியை போன் பண்ணி, உடம்பு சரியில்லை என்ற விவரத்தைச் சொல்லச் சொன்னாள்.

மதிய சாப்பாடு நேரத்தில் சங்கர் வந்து எட்டிப் பார்த்துவிட்டுப் போனான்.

மாலை சுமார் ஆறு இருக்கும்.

தலைவலியோடு, மூக்கடைப்பும் அதிகமாக இருக்க, டாக்டரிடம் போகலாமா வேண்டாமா என்று யோசித்த நாழிகையில் வாசல் மணி அழைக்கும் சப்தம்.

''சுஜா டாலிங்? என்னம்மா உடம்புக்கு?''

படுக்கையில் படுத்தபடியே தலையைத் திருப்பினாள்.

வாசு.

வேகமாய்ப் படியேறி வந்திருக்க வேண்டும்.

சுவாசம் இரைத்துக்கொண்டு வெளிப்பட்டது.

''வாசு.''

எழுந்து இவள் உட்கார அவர் தாவி அணைத்தார்.

''என்னம்மா...ஏன் ஜுரம் வந்திருக்கு? முந்தாநா அலைஞ்சது ஆகலியா? டாக்டரைப் பாத்தியா?''

அந்தப் பரபரப்பின் அர்த்தம் புரியாமல் சுஜா விழித்தாள்.

''எதுக்காக இப்படித் துடிச்சிப் போறீங்க வாசு... எனக்கு ஒண்ணுமில்லே...சாதாரண அலைச்சல்ஜுரம்தான் நாளைக்கு சரியாயிடும்.''

''போன் பண்ணப்ப, சங்கர் உனக்கு உடம்புசரியில்லேனு சொன்னதும் நான் தவிச்சிப் போயிட்டேன். உன்னைச் சந்திச்ச இத்தனை மாசத்துல ஒருநாள்கூட ஆபீசுக்கு



நீ வராம இருந்ததில்லை.. உடம்புக்கு ரொம்ப முடியாமப் போனாத்தானே நீ வராம இருப்பே? உடம்பு சரியில்லாதப்போ நாம கிட்ட இல்லாட்டி எப்படினு போட்டது போட்டபடி ஓடி வந்திட்டேன். சுஜா...என்ன...பாரு...என்னம்மா செய்யுது? தலைவலிக்குதா? வறியா...டாக்டர்கிட்ட போயிட்டு வரலாம்.''

சுஜா தலையைப் பின்னுக்குத் தள்ளிச் சிரித்தாள்.

''சின்ன பையன் கெட்டான் போங்க...யார்கிட்ட யாவதுசொன்னா சிரிக்கப்போறாங்க...என்ன வாசு இது!''

வாசு பதில் கூறாமல் அவளைத் தீர்க்கமாய்ப் பார்த்தார்.

''யார் என்ன வேணாலும் நினைக்கட்டும்...ஐ ரியலி டோண்ட் கேர்.'' என்றவர், முன்னால் சாய்ந்து அவளை முரட்டுத்தனமாய் இழுத்துத் தோள்மேல் சாய்த்துக் கொண்டார்.

பின் தணிந்த குரலில் பேசினார்.

''இரண்டு மாசம் முன்னால நிர்மலாவ டிவோர்ஸ் பண்ணிட்டு என்னைக் கட்டிக்கிங்க வாசு'னு ஒரு நாள் சொன்னியே நினைவு இருக்கா...வரவர உன்னைப் பிரிஞ்சி என்னால நிம்மதியா இருக்க முடியலை...எத்தனையோ முயற்சி பண்ணறேன். ஆனாலும் மனசு நீ என் மனைவின்ற உரிமையோட. எப்பவும் கூட இருக்கணும்னு பிடிவாதம் பண்ணுது...ஐ லவ் யூ சுஜா—இரண்டு தலை எறும்பா என்னால வாழ முடியலை...என் ஆத்மார்த்த சந்தோஷத்துக்காக துணிஞ்சு ஒரு முடிவை எடுக்க வேண்டிய நேரம் வந்திடுச்சின்னே நினைக்கறேன். நான் என்ன சொல்றன்னு உனக்குப் புரியுதா சுஜா டாலிங்?''

# 20

''நீங்க படிப்பை முடிச்சு, இப்ப எத்தனை வருஷம் ஆகிறது?''

''நாலு...''

''இந்த சின்ன வயசிலேயே இத்தனை பேரும் புகழும் பெற்றுவிட்டதைக் குறித்து?''

''ரொம்ப சந்தோஷமா இருக்கு. க்ளையண்ட்ஸும், ஜனங்களும் நம்மகிட்ட வைச்சிருக்குற மதிப்பை என்னிக்கும் காப்பாத்திக்கணுமேனு கவலையாகூட இருக்கு.''

''பாண்டிச்சேரி நிஷா சூப்பர் மார்க்கெட் பத்தி தனியா கொஞ்சம் சொல்ல முடியுமா?''

'நிஷா'வை நல்ல முறைல கட்டினத்துக்காக நாங்க ரொம்ப பெருமைப்படறோம். இத்தனை உயர்வா எங்களால அதை நிர்மாணிக்க முடிஞ்சதுக்கு அதன் சொந்தக்காரர்கள்தான் காரணம். எங்க மேல நம்பிக்கை வைச்சி, எங்களை சுதந்திரமா செயல்பட விட்டதால, சொன்னபடி குறிப்பிட்ட தேதிக்குள்ள கச்சிதமா வேலைய முடிக்க முடிஞ்சிது.''

''ஆர்கிடெக்சர்—ஆர்கிடெக்டுனு சொன்னா அது பணக்காரங்க சம்பந்தப்பட்ட விஷயம்னு எல்லாரும் னைக்கறாங்க. உங்க அபிப்ராயம் என்ன?''

''உங்க கருத்தை நிச்சயம் நான் ஆமோதிக்கமாட்டேன். தெரிஞ்சோ, தெரியாமலோ இப்படி ஒரு அபிப்ராயம்



மக்கள் நடுவிலே உண்டாயிருக்கிறது உண்மைதான். ஆனா இதை நான் ஏன் ஒத்துக்க முடியாதுங்கறதை விளக்கறேன் கேளுங்க. ஆர்கிடெக்சரை, கட்டிடக் கலையை, ஐந்து வருஷங்களுக்கும் மேலேயே படிச்சவங்க நாங்க. மண்வளம் எப்படின்றதுலே துவங்கி உள் அலங்காரம் வரைக்கும் எங்களுக்கு அத்துப்படி.''

''கட்டிட சம்பந்தமா அதிக அறிவு இல்லாத நபரை விட நாங்க தயாரிக்கிற வரைபடம், திட்டம் இன்னும் சிறப்பா இருக்கும் என்பதோட, நீங்க இவைகளைச் செய்ய எடுத்துக்கற நேரம், உழைப்பைவிட நாங்க பலமடங்கு குறைஞ்ச அவகாசத்துல வேலைகளைப் பூர்த்தி செய்திடுவோம். இன்ன அளவுலே செஞ்சா பூர்த்தியாற கட்டிடம் இப்படி இருக்கும்ன்றதை, எங்களால சுலபமா கற்பனை பண்ண முடியும்.

''சாதாரண நபருக்கு இந்த விஷுவலைசேஷன் கஷ்டமான காரியம். தவிர, எங்களுக்கு எந்த இடத்துல, என்ன பொருள் நல்லதா, அதே சமயத்துலே மலிவா கிடைக்கும்னு தெரியும். அதனால, வீடு கட்டறவங்களோட அலைச்சலைக் குறைச்சி, நல்ல வழிகாட்டியா எங்களால இருக்க முடியும்.

''எங்களுக்குக் கொடுக்கற ஊதியம் 3—4 பர்சென்ட் தான். ஸோ, லட்ச ரூபாய்ல ஒருத்தர் வீடு கட்டினார்னா, எங்க சம்பளம் அதிகபட்சம் நாலாயிரம் ரூபாய்தான். வரைபடம் தயாரிச்சி, அப்பப்ப சரியா அட்வைஸ் பண்ணி, கோளாறு எதுவும் இல்லாம பாடுபடற எங்க வேலைகளுக்கு இது ஒண்ணும் அதிகமில்லே. ஒரு ஆர்கிடெக்ட் இருக்குறதால வேலை சீக்கிரமாகவும், சிக்கனமாகவும் முடியுதுனு நான் சொல்லலை. எங்க க்ளையண்ட்ஸ் சொல்றாங்க.''

வந்திருந்த பத்திரிகை நிருபர், புகைப்படம் எடுத்துக் கொண்டு கேட்க வேண்டிய கேள்விகளைக் கேட்டு புறப்பட்டுப் போனதும், சங்கர் மெதுவாய் உள்ளே எட்டிப் பார்த்தான்.

"என்ன, பேட்டி, கீட்டி எல்லாம் முடிஞ்சிதா?"

"எங்க போயிட்ட சங்கர், என்ன தனியா விட்டுட்டு... கூட இருந்தா என்னவாம்?"

"பெண்கள் பத்திரிகை அட்டைல உன் படத்தைப் போட்டு பாரதி கண்ட புதுமைப் பெண்ணுனு கட்டுரை எழுத அவங்க வந்திருக்கறப்போ, நான் எதுக்கு நந்தியாட்டம் குறுக்கே? எப்படி, கேள்வியெல்லாம் சுவாரஸ்யமா இருந்துதா?"

"நாட் பேட்... ஆர்கிடெக்சர் பணக்காரங்களுக்கு உதவற தொழில்தானேனு கேள்வி கேட்டு வசமா மாட்டினார். விடுவேனா? ஒரு பிடி பிடிச்சு விட்டுட்டேன்.'

"செமையா அறுத்துருக்கேனு சொல்லு. வழக்கமா நான் அகப்பட்டுப்பேன். இன்னிக்கு இவரு..."

சங்கர் சிரிக்க சுஜாவும் தலையைப் பின்னால் சாய்த்துச் சிரித்தாள். பாதி சிரிப்பில் தடக்கென்று இரண்டு நாள் முன் வாசு பேசிய பேச்சுக்கள் ஞாபகத்துக்கு வர, சிரிப்பை மறந்து தீவிரமானாள்.

"சங்கர்..."

"ம்?"

"உன்கிட்ட அவசரமா கொஞ்சம் பேசணும். வெளியே போய் காபி சாப்பிட்டு வரலாமா?"

"இப்பவா? கஷ்டமாச்சே சுஜா. எனி ப்ராப்ளம்? ஊர்லேந்து மஞ்சு ஏதாவது எழுதி இருக்காங்களா?"

"அந்த சைட்லேந்து பிரச்சனை ஒண்ணும் இல்லே. மஞ்சு வாராவாரம் லெட்டர் எழுதறா. பத்து நாள் முன்னால போன்ல பேசி 'எப்ப வரேக்கா'னு கேட்டா. 'மும்முரமா ஒரு வேலையை முடிச்சிட்டு இருக்கோம். அடுத்த மாசம் வரேன்'னு சொன்னேன்."

"அப்புறம்?"



"சொல்றேன்... ஆனா இங்க இல்லே. லெட்ஸ் கோ அவுட்."

"உடனே கிளம்பறது கஷ்டம் சுஜா. ஆக்சுவலா உன் பேட்டி முடிஞ்சிடுத்தானு வர்மா பார்க்கச் சொல்லித்தான் நான் வந்தேன்."

"எதுக்கு?"

"வேற என்ன? கல்யாண மண்டபம் டிஸ்கஷனுக்குதான்.. செட்டியார் வந்திருக்கார்."

"நீ பேசிடேன் சங்கர்...நான் எதுக்கு?"

"ஐயா ஃப்ரீ இல்லேம்மா...அண்ணா நகர் ஃப்ளாட்ஸ்ல ஏதோ கோளாறாம்...உடனே போய் என்னனு பார்க்கணும்."

"என்ன சங்கர், மனசு விட்டுப் பேசணும்னாகூட முடிய மாட்டேங்குது."

"ஒண்ணு பண்ணலாமா? நீ டிஸ்கஷனை முடி...நான் பொடி நடைலே அண்ணா நகருக்குப் போயிட்டு வந்திடறேன். லஞ்சுக்கு வெளியே போய் நிம்மதியா பேசிட்டு வரலாம்."

சங்கர் கிளம்பிப் போக, சுஜாவும் பேப்பர் பென்ஸிலுடன் வர்மாவின் அறைக்குச் சென்றாள்.

ஒண்ணரை மணிக்குமேல் வேலை முடிந்து, வர்மா வீட்டுக்குப் போனதும், சங்கரும், சுஜாவும் எக்மோரில் இருக்கும் உடுப்பி 'மத்ஸ்யா'வுக்குச் சென்று உள்ளே உட்கார்ந்தார்கள்.

"என்ன சாப்பிடறே? சாப்பாடு ஆர் டிபன்..."

"டிபன்."

ரசவடைகளுக்கு முதலில் சங்கர் ஆர்டர் கொடுத்தான்.

வாய் அகன்ற பீங்கான் கிண்ணங்களில், ஆவி பறக்கும் ரசத்தில் மிதந்த வடைகள். ஏராளமான பச்சை கொத்த மல்லி, முண்டாசு கட்டின மாதிரி ஒரு ரோஜாப்பூர் கருவடாம்.

''சொல்லு...என்ன விஷயம்?''

சுஜா சூடான வடையை வாயில் போட்டுக்கொண்டு கொஞ்சம் தவித்து, பின் விழுங்கினாள்.

''முந்தாநாள் வாசு இங்க வந்திருந்தார், தெரியும் இல்லே?''

''ம்''

''அவர் போன் பண்ணப்ப, எனக்கு உடம்பு சரியில் லேனு நீ சொன்னதைக்கேட்டு பதறிகிட்டு ஓடிவந்திட்டார் சங்கர்.''

''ம்''

''நேத்து காலைல, எனக்கு நார்மல் வந்திடுச்சி ஆனாலும் வாசு ஆபீஸுக்கு வர விடலை. ஒரு நாளாவது ரெஸ்ட் எடுக்கணும்னு கண்டிப்பா சொல்லிட்டார்.''

''ம்''

''நேத்து சாயங்காலம், நான் கம்ப்ளீட்டா சரியாயிட் டேன்னு புரிஞ்சப்புறமே அவர் ஊருக்கு புறப்பட்டுப் போனார். பாவம், அவருக்குதான் எத்தனை அலைச்சல் சங்கர்? சூப்பர் மார்க்கெட் திறப்பு விழா ஆகி ஒருநாள் அப்பாடினு உட்கார்ந்து ரிலாக்ஸ பண்ண முடியாம இப்ப இந்த ட்ரிப் வேற.''

சங்கர் ஸ்பூனை கிண்ணத்தில் வைத்துவிட்டு அவளைப் பார்த்தான்.

''இதைச் சொல்லத்தான் இத்தனை அவசரப்பட்டியா? தனியா வரணும்னு சொன்னியா? இதை ஆபீஸ்லயே பேசியிருக்கலாமே...''



சுஜா சில நிமிஷங்களுக்கு எதுவும் பேசாமல் வடையை சாப்பிட்டு முடித்தாள்.

நாப்கினில் வாயைத்துடைத்துக் கொண்டு மெதுவாகப் பேசினாள்.

''வாசுவால என்னைப் பிரிஞ்சி இருக்க முடியலையாம் சங்கர். நிர்மலாவ டிவோர்ஸ் பண்ணறதைப் பத்தி நினைக்கறதைத் தவிர வேற வழி இல்லேனு தோணுதாம், சொன்னார்.''

''என்னது!''

''யா. முந்தாநாள் அவராவே இந்த வார்த்தைகளைச் சொன்னது நிஜம்.''

சங்கர் ஏதும் பேசாமல் தலைமுடியை இடக்கையால் கோதிவிட்டுக் கொண்டான். மேஜையில் தாளம் போட்டான்.

''என்ன சங்கர், பேசாம இருக்கே?''

''என்ன சொல்றது சுஜா? ஒரு விதத்துல சந்தோஷமா இருக்கு; ஒரு விதத்துல வருத்தமா இருக்கு.''

''...''

''உன்னைக் கல்யாணம் பண்ணிக்க விரும்பற அளவுக்கு வாசுவோட பிணைப்பு இறுகியிருக்குனு கேட்கறப்போ அப்பாடினு இருக்கு. உங்க புது வாழ்க்கைக்காக நிர்மலா பலி ஆடு ஆயிடுவாங்களேனு நினைச்சா கஷ்டமா இருக்கு''

''பலி ஆடு...அது இதுனு நீ சொல்றது சினிமா டைலாக் மாதிரி இருக்கு சங்கர்!''

''ஸாரி சுஜா! நீ கோவிக்கறதுல அர்த்தம் இல்லே. மனசுவிட்டுப் பேசணும்னு கூட்டிகிட்டு வந்தே. விவரத்தை கேட்டுட்டு சும்மா இருந்தவனை, பேசுன்னு உசுப்பிவிட்டே. உண்மையைச் சொன்னா மட்டும் கோவம் வர்றது நியாயமா?''

சுஜா டேபிள் மேல் சிந்தி இருந்த ஜலத்தை விரல் நுனியால் இழுத்து சுஜா...சுஜா என்று எழுதினாள்.

''உங்க உறவு ஆரம்பிக்கறப்பவே, போகப் போக ஒண்ணு நீ அடிபடுவே, இல்லே அந்தம்மா அடி படுவாங் கன்னு நான் எதிர்பார்த்தேன். என் கணக்கு தப்பாகலை.''

''வாசு என்னைக் கல்யாணம் பண்ணிக்க விரும்ப றேன்னு அவராத்தானே சொன்னார் சங்கர்? நான் அவரைத் திட்டம் போட்டு மாத்திப் பேச வைச்ச மாதிரி இருக்கு நீ பேசறது!

''நீ திட்டம் போடத் தேவையே இல்லே. பல ப்ளஸ் பாயிண்ட்டுகள் உன் பக்கம். நீ அதிபுத்திசாலி...படிச்சவ... அழகானவ...நாகரீகம் தெரிஞ்சவ...நாலுபேர் நடுவிலே பளிச்சுனு தனியா ஜொலிக்கக்கூடியவ. இது ஒண்ணுகூட அந்தம்மாவுக்கு இல்லியே! தென் அஃப்கோர்ஸ்நீங்க ரெண்டு பேரும் ஒருத்தர் மேல ஒருத்தர் உயிரையே வைச்சிருக்கீங்க. ஸோ? இரண்டும் இரண்டும் நாலு ஆறது இயல்பு தானே?''

சர்வர் என்ன வேண்டும் என்று கேட்க சங்கர் சுஜாவை ஏறிட்டான்.

''ஜஸ்ட் காபி.''

''போதுமா? ரசவடை மட்டும் வயிறு ரொம்புமா? என் மேல உள்ள கோபத்தால வயித்தைக் காயப்போடாதே. ஹவ் அபௌட் பகாளபாத்? உனக்குப் பிடிக்குமே!''

பேசிய சங்கர் சர்வர் பக்கம் திரும்பி ''இரண்டு பகாளபாத். அப்புறமா காபி'' என்றான்.

தலையை நிமிர்த்தாமல்ஸ்பூனால் ணங்ணங்என்று சின்ன தாய்த் தட்டி சப்தம் எழுபிக்கொண்டிருந்தவளை பார்க்கப் பரிதாபமாய் இருக்க, கையைத் தட்டி 'ஹேய்' என்றான்.



''உன் மனசு ரொம்ப புண்படும்படியா பேசியிருந்தா ஐ'ம் ஸாரி. உன்கிட்ட நான் வேஷம் போடமாட்டேன். போட்டாலும் உனக்குப் பிடிக்காது இல்லியா? சுஜீ உன் வாழ்க்கை ஸ்திரமாகப் போகுதுனு நினைச்சா சத்தியமா சந்தோஷமாத்தான் இருக்கு. ஆனா, அன்னிக்கு நாம் முதல் முறையா மனசுவிட்டுப் பேசினப்ப நிர்மலாவைப் புண்படுத் திட்டு நிம்மதியா என்னால வாழ முடியாதுன்னு நீ சொன்னதும், இரண்டு மாசம் முன்னால வாசுகிட்ட மடத் தனமா பேசிட்டேன்—இனிமே சத்தியமா அந்த மாதிரி பேசமாட்டேன்னு சொன்னதும் ஞாபகத்துக்கு வந்து கோபத்தை உண்டாக்கிடிச்சி.''

சுஜா சக்கென்று பார்வையை நிமிர்த்தினாள்.

''நிர்மலா மனசை இன்னிக்கும் நான் புண்படுத்தலியே. இன்னிக்கும் வாசுகிட்ட நான் அந்தப் பேச்சை எடுக்கலியே. அவராத்தானே இந்த முடிவுக்கு வந்திருக்கார்?''

அவள் கோபமாய்ப் பேசுவது புரிய, சங்கர் மௌனித் தான்.

''ஒண்ணு சொல்லட்டுமா சங்கர்? ஆறு மாசம் முன்னால நான் வேற மாதிரி பேசினதாகவும், இப்ப மாறிட்டதாகவும் நீ நினைச்சா...நான் மேல பேச ஒண்ணுமே இல்லே. நாம யாருமே என்னிக்குமே சரஸ்வ தமா ஒரே மாதிரி இருந்திடப் போறதில்லே. வாசுவோட பழகப் பழக, அவர் கூடவே எப்போதும் இருக்கணும்னு நான் நினைச்ச விதத்திலே வாசுவுக்கும் நாளடைவுலே இப்படி ஒரு எண்ணம் வந்திருக்கலாம். அவர் மனசு மாறினா அதுக்கு நானா பொறுப்பு? ஆனா...உன்கிட்ட ஒண்ணு ஒத்துக்க விரும்பறேன். அவரோட இந்த மன மாற்றம் எனக்கு எக்கச்சக்க மகிழ்ச்சியைக் கொடுக்குது. எஸ். ஐ'ம் ட்ருலி ஹாப்பி.''

சர்வர் கொண்டுவந்து வைத்த பகாளபாத்தைச் சாப் பிடாமல் அளைந்தபடி சுஜா தொடர்ந்தாள்.

"இரண்டு நாளா நானும் புரட்டிப் புரட்டி யோசிக்கிறேன். இது சரியா, தப்பா, எனக்குள்ள குத்த மனப்பான்மை இருக்கானு. இல்லே சங்கர், மனசு குறுகுறுக்கலை ராத்திரி படுத்தா தப்பு பண்ணிட்டமேனு பிராண்டலை. இன்ஃபாக்ட் வழக்கத்தைவிட குதிப்பாதான் இருக்கு. நான் சொல்லறதை நம்பறதும் நம்பாததும் உன் இஷ்டம்"

"வாசு இந்த முடிவுக்கு வந்தது உனக்கு சந்தோஷத்தைத் தருதுனு நீ சொல்லறதை நம்பறேன். உறுத்தலைனு சொல்லறதைத்தான் நம்ப கஷ்டமாயிருக்கு."

சுஜா தோளைக் குலுக்கி உதட்டைப் பிதுக்கினாள்.

"ஏன் நம்ப முடியலை சங்கர்? வாசுவும் மனுஷர் தானே! நாப்பத்தைஞ்சி வயசுக்கப்புறமாவது மனசுக்குப் பிடிச்ச வாழ்க்கையைத் தேர்ந்தெடுக்க துணிவோட முன் வந்திருக்காரேனு எனக்கு சந்தோஷமா இருக்கு. அவருக்கு என்ன இல்லே? புத்தி, கம்பீரம், பணம்? கொட்டிக் கிடக்கு ஆனாலும் மாரிட் லைஃப்? அது இத்தனை நாளா ஜீரோவா தானே இருந்து வந்திருக்கு?"

சங்கர் அவசரமாய்க் குறுகிட்டான்.

"நான் ஒத்துக்க மாட்டேன். இத்தனை வருஷங்களா அவரும் நிர்மலாவும் அன்யோன்யமா வாழலியா?"

"எது அன்யோன்யம் சங்கர்? ஒரே வீட்டுலே வாழ்ந்து சாப்பிட்டு, ஒரே அறைலே படுக்கறதா? நான்சென்ஸ்...நீ கூட இப்படி ஆர்க்யூ பண்ணா எப்படி? தாம்பத்யம்ன்றது இதெல்லாம் தாண்டினது. பெரியவங்க பார்த்து செய்த கல்யாணத்தை உடைக்கறதும், நிர்மலாவைப் புண்படுத்தறதும் தப்புனு வாசு எல்லாத்தையும் அனுசரிச்சிட்டு போயிட்டிருந்தார். ஐ...நோ."

"இப்ப விட்டுடறது மட்டும் தப்பில்லையா?"

"கருணை, பச்சாதாபம் மட்டும் காதலாயிடுமா சங்கர்? ஓ! உனக்கு நான் எப்படிப் புரிய வைப்பேன். லவ் ஈஸ் ஸம்திங் மோர் தேன் ஆல் திஸ், புரிஞ்சுக்கயேன்...ப்ளீஸ்."



"......"

"தியாகம் அது இதுனு பேசறது ஈஸி. செய்து காட்டறது கஷ்டம். இத்தனை வருஷமா வாசு வாழ்ந்தது ஒன் ஸைட் வாழ்க்கை. அது போதும்னு தீர்மானிச்சிட்டார். எதுக்கும் ஒரு எல்லை வேணாமா? சில விஷயங்கள்ல சுயநல வாதியா இருக்கறதுல தப்பில்லே சங்கர்!"

"இப்ப நீ இருக்கற மாதிரி?"

சுஜா கண்களை இடுக்கிக்கொண்டு பார்த்தாள்.

"எஸ்—யூ ஆர் ரைட். நீ இப்படி மடக்கிக் கேட்கறதுல எனக்குக் கோபம் இல்லே.

"சுயநலம்தான். பொறுத்துப் பொறுத்துப் பார்த்திட்டு முடியாம போனப்புறம் எழுந்த சுயநலம். ஒண்ணு சொல்லட்டுமா சங்கர்? வாசுவுக்கு அருமையான மனைவியா இருக்க என்னால முடியும். அவர் இதுவரை உணராத இன்பம், நிறைவுகளைத்தர என்னால கண்டிப்பாமுடியும்... ஏன், வாசுவுக்கு நிர்மலா கொடுக்கமுடியாத குழந்தையைக் கூட என்னால தர முடியும். நிறைவான வாழ்க்கை வாழ ஒரு சந்தர்ப்பம் வந்திருக்கறதை வாசு உபயோகப்படுத்திக்க தீர்மானிச்சதை நான் மனப்பூர்வமாஒப்புக்கறேன். தனியா உட்கார்ந்து யோசி சங்கர்! நாங்க எந்த தப்பும் பண்ணலைனு உனக்குப் புரியும்."

கோபப்படாமல், ஆத்திரத்துடன் கத்தாமல், தெளிவாய், நிதானமாய்ப் பேசிய சுஜா, கொஞ்சம் நிறுத்தி அவனைப் பார்த்துப் புன்னகைத்து "ஸோ? தட்ஸ் ஆல்... புறப்படலாமா?" என்று வினவ, மேற்கொண்டு அவளிடம் தர்க்கம் பண்ணுவதில் எந்தப் பலனும் இல்லை என்று உணர்ந்து சங்கர் எழுந்து நின்றான்.

# 21

அடுத்து வந்த இரண்டு வாரங்களும் சுஜாவால் மறக்க இயலாத நாட்களாய் அமைந்தன.

அன்றைக்கும் வழக்கம் போல சொல்லாமல் கொள்ளாமல் வந்து போன் செய்த வாசுதேவனின் குரலில் எக்கச்சக்க சிரிப்பு, சிறுபிள்ளைத்தனம்.

''ஒரு மணி நேரம் என்கூட வெளில வாயேன் சுஜா.''

''இப்பவா? ஆபீஸ் நேரத்துலேயா? என்ன காரணம் சொல்லிட்டு வர்றது?''

''இருக்கவே இருக்கு 'ஸைட்' இன்ஸ்பெக்ஷன்.''

''பொய்யா?''

''அ! இதெல்லாம் பொய்யா? சும்மா ஒரு விளையாட்டுக்குப் பேசற பேச்சு தானே?''

வர்மா வெளியில் போயிருந்ததால் சங்கரிடம் சொல்லி விட்டு, சுஜா கிளம்பினாள்.

கீழே போய் இரண்டடி நடப்பதற்குள் வாசுதேவனின் கார் அவளை உரசி நின்றது.

''ஹல்லோ டாலிங்.''



''கடவுளே! ஒரு நிமிஷம் பயந்தே போயிட்டேன் வாசு! எப்படி இத்தனை சுருக்க வந்தீங்க? எங்கேயிருந்து போன் பேசினீங்க?''

வாசு நாலு கடை தள்ளி இருந்த பப்ளிக் பூத்தைக் காட்ட, சுஜா தலையைப் பின்னுக்குச் சாய்த்துச் சிரித்தபடி காரில் ஏறினாள்.

''நான் கண்டிப்பா வருவேன்னு எதிர்பார்த்து இங்க வந்து போன் பண்ணினீங்களா?''

''ம்ம்''

''சப்போஸ் நான் வர முடியாதுனு சொல்லி இருந்தா? வர்மா கூட ஒரு டிஸ்கஷன்ல இருந்திருந்தா?''

''சொல்லலியே...அதானே ஸாரோட அதிருஷ்டம்.''

சுஜா எட்டி அவர் கையைக் குழந்தைத்தனமாய்க் கிள்ளினாள்.

''எப்ப வந்தீங்க?''

''நேரே உன் ஆபீஸுக்குதான் வரேன்.''

''என்ன விஷயம்? வரேன்னு சொல்லவேயில்லையே? ஆஸ்யூஷுவல் சர்ப்ரைஸ் தானே? சரி... இப்ப நாம எங்க போறோம்?''

''பாஸ்போர்ட் ஆபீஸுக்கு.''

''எங்க?''

''எஸ் மை டியர்... பாஸ்போர்ட் ஆபீஸுக்கு.''

''போயி?''

''உனக்கு பாஸ்போர்ட் அப்ளை பண்ணப்போறோம்.''

''பண்ணி?''

''இரண்டு நாளைக்குள்ள அடிச்சிப் பிடிச்சி பாஸ்போர்ட்டை வாங்கிக்கிட்டு, வர்ற சனிக்கிழமை சிங்கப்பூர் போறோம்.''

''சிங்கப்பூர்?''

''போறோம்...றோம்...''

சுஜா கண்களை விரித்தாள்.

''என்னாச்சு வாசு உங்களுக்கு?''

வாசுதேவன் பதிலுக்கு விஸில் அடிக்க, சுஜா அவரை நெருங்கி, ''விளையாடாதீங்க வாசு'' என்றாள் கெஞ்சலாய்.

''இதுல விளையாட்டென்ன டாலிங்? சிங்கப்பூர் நீ பாத்ததில்லே. அதான் குட்டியா ஒரு ஹாலிடே போயிட்டு வரலாம்னு...''

''விளையாடாதீங்க வாசு.''

''அட ராமா! திரும்பத் திரும்ப நீ இதையே சொன்னா நான் என்ன செய்யறது? முகத்தைக் கடுமையா வைச்சிகிட்டு அதட்டலா சொல்லவா?''

இதற்குள் சாஸ்திரி பவன் வந்துவிட அவர் சொல்வது நிஜம்தான் என்று சுஜாவுக்குப் புரிந்தது.

ப்ரீஃப் கேஸுடன் இறங்கினவர் பக்கத்தில் நடந்து மாடிக்குப் போனாள்.

சில தாள்களில் கையெழுத்துப் போடச் சொல்லி, அவள் தந்தை பெயரைக் கேட்டு இதர விவரங்களோடு விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து, பணம், ஏற்கனவே தயாராய்க் கொண்டு வந்திருந்த புகைப்படங்கள், அத்தாட்சித் தாள்களுடன் ஆபீஸரிடம் கொடுத்து சில நிமிஷங்களுக்கு அவருடன் குனிந்து பேசிவிட்டு ''போகலாம் வா'' என்று கிளம்பி வண்டிக்கு அழைத்து வந்தார்.

''என் ஃபோட்டோஸ் ஏது வாசு?''

''நிஷா' ஓபனிங் டே அன்னிக்கு எடுத்தது. உன்னை தனியா க்ளோஸப் எடுக்கச் சொல்லி இருந்தேன்.''

''ஸோ.. எல்லாம் ஏற்பாடாத்தான் செய்யறீங்க?''

''ரொம்ப.''



''இப்ப எதுக்கு இந்தத் திடீர் பயணம் வாசு?''

''புரியலை?''

''ம்ஹூம்.''

''நிஜம்மாவே புரியலை?''

''......''

வாசுதேவன் அவள் கையைப் பற்றி உதட்டில் வைத்தார்.

''வர்ற பத்தாம் தேதியோட நாம சந்திச்சு ஒரு வருஷம் பூர்த்தியாகுது. அதை செலிப்ரேட் பண்ண இந்த ட்ரிப். எப்படி ஐடியா?''

சுஜாவுக்குள் பந்தாக சந்தோஷம் திரண்டு மார்பில் புரண்டது.

''ஓ... வாசு...நா...நா...போங்க... எனக்கு என்ன சொல்லறதுனே தெரியலை.''

''ஹாப்பி?''

''வெரி.''

''நாளன்னிக்கு பாஸ்போர்ட்டைத் தந்துடறதா சொல்லி இருக்காங்க. நான் இன்னிக்கு ஊருக்குப்போயிட்டு வெள்ளிக்கிழமை வரேன். ஸாடர்டே ஃப்ளைட்லே போகலாம். ஒரு வாரம் லீவு போட்டுடு. முடியும் இல்லே?''

''உங்களால ஒரு வாரம் வேலைய விட்டுட்டு வர முடியுமா வாசு?''

''உன்கூட இருக்கறதுன்னா எதுவும் முடியும்.''

**வெ**ள்ளிக்கிழமை சொன்னபடி இரவு எட்டு மணிக்கு வாசுதேவன் வந்து சேர்ந்தார்.

மறுநாள் மதிய விமானத்தில் கிளம்பினார்கள்.

விமானம் புறப்பட்டு சாப்பாடு பரிமாறப்பட்டதும், சுஜா நினைத்துக் கொண்டு சொன்னாள்;

''நேத்து என் தங்கை போன் பண்ணா வாசு. 'சூப்பர் மார்க்கெட் திறப்புவிழா ஆகி பத்துநாள் ஆயிடுச்சே. இனியாவது இங்க வரக்கூடாதா'ன்னு கேட்டா.''

''என்ன சொன்னே?''

''அவசரமா சிங்கப்பூர் போறேன். வந்ததும் கட்டாயம் வரேன்னு சொன்னேன். திரும்பினதும் கண்டிப்பா போகணும் வாசு. எனக்கும் அவளைப் பார்க்கணும் போல இருக்கு.''

''போனாப் போச்சு. இதுஎன்ன கஷ்டமான காரியமா? ஆமா, உன் ப்ரதர் இன்லா பேர் என்ன? அவர் என்ன செய்யறார்னு சொன்னே?''

சுஜா பதிலளிக்குமுன் விமானம் தக்தக்கென்று குதிக்கத் துவங்க, காப்டனின் குரல் மைக்கில் பேச, பெல்ட்டை அணியுங்கள் என்ற வாசகம் மின்ன, பேச்சு அத்துடன் நின்று போனது.

சிங்கப்பூரில் இருந்த நாட்களில் சுஜாவும், வாசுதேவனும் சின்னப்பெண், பையன் மாதிரி அலைந்து திரிந்தார்கள். தெரிந்தவர் பார்த்து விட்டால் என்ன செய்வது என்ற பதட்டம் இல்லாமல் கையைக் கோர்த்துக்கொண்டு கடை கடையாய் ஏறி இறங்கினார்கள்.

செந்தோஸா தீவுக்கு கேபிள் காரில் மிதந்து சென்று கால் வலிக்கும் அளவுக்குச் சுற்றினார்கள்.

லாஞ்சில் ஏறி சமுத்திரத்தில் சிங்கப்பூரை வலம் வந்தார்கள்.

டைகர் பாம் கார்டனில் கறுப்பும், சிகப்புமாய் நின்று பயமுறுத்தின சிலைகளைப் பார்த்துச் சிரித்தார்கள்.

ஜுரோங் பறவைகள் பூங்காவுக்குச் சென்று, பேசும் மைனாவையும், பெங்குவின்களையும், இன்னும் வாயில் பேர் நுழையாத பறவைகளையும் கண்டு பிரமித்தார்கள்.

24 JUN 1991



சிரங்கூன் ரோடிலிருந்த கோமளவிலாஸுக்குச் சென்று மிளகாய்ப் பொடி, நெய் தொட்டுக் கொண்டு இட்லி தோசை சாப்பிட்டார்கள்.

ஒரு பெரிய ஷாப்பிங் சென்டர், நட்சத்திர ஹோட்டல் விடாமல் சென்று சாமான்களை வாங்கிக் குவித்தார்கள். தினுசு தினுசாய் சைனீஸ், மலாய் பதார்த்தங்களை ருசித்தார்கள்.

சென்னைக்குத் திரும்பிய வெள்ளிக்கிழமை இரவு படுக்கப் போகுமுன் வாசுதேவன் அவளிடம் கேட்டார்.

''ரொம்ப நாளா உன்கிட்ட ஒண்ணு கேட்கணும்னு சுஜா?''

''எதுக்கு இத்தனை தயக்கம் வாசு?''

''இல்லே...வந்து...உனக்கு வயசு இருபத்தி எட்டு... எனக்கு நாற்பத்தாறு... வித்தியாசம் பதினெட்டு வயசு. இது உன்னை என்னிக்காவது சங்கடப்படுத்தி இருக்கா?''

சுஜா கிட்டவந்து அவர் தலையில் செல்லமாய் முட்டினாள்.

''இத்தனை அசட்டுத்தனமா பேசக்கூட! உங்களுக்குத் தெரியுமா வாசு?''

''அது இல்லே, வந்து...''

''வந்தும் இல்லே...போயும் இல்லே... ஐ லவ் யூ... புரியுதா? ஐ...லவ்...யூ...அதான் எனக்குத் தெரியும். வேற ஒண்ணும் தெரியாது.

மறுநாள் காலையில் அவர் ஊருக்குக் கிளம்புமுன் சுஜா எதிரில் வந்து நின்றாள். கண்களை நிமிர்த்தி யோசனையுடன் பார்த்தாள்.

''என்ன டாலிங்?''

''உனக்குள்ள ஏதாவது சங்கடம் இருக்கானு நேத்துக் கேட்டீங்க இல்லே? ஒரு வேதனை குட்டியா இருக்கு. சொல்லட்டுமா? சூப்பர் மார்க்கெட் வேலை முடிஞ்சி போயிட்டதால, இனிமே நீங்க இங்க வந்தாத்தானே சந்திக்க முடியும்ன்றதை நினைச்சா, மனசுக்குள்ள ணக்குனு ஏதோ குத்துது வாசு.''

வாசுதேவன் அவள் முகத்தைக் கைகளால் தாங்கிப் பிடித்தார்.

''பத்து நாள் முன்னால நான் உன்கிட்ட என்ன சொன்னேன்னு ஞாபகம் இருக்கா சுஜா?''

''ம்.''

''நீயாவே அதுபத்தி என்னண்ட கேட்பேனு இருந்தேன். ஏனோ நீ கேக்கல.''

''வேணும்னே தான் பேசலை வாசு. முன்னே ஒருதரம் மடத்தனமா பேசி உங்களைப் புண்படுத்தினதுலேந்து அப்படிப் பேசக்கூடாதுனு ஒரு வைராக்கியம்.''

''ஸில்லி கேர்ள்...ஓ. கே. நானா சொல்றேன் கேட்டுக்கோள். ரொம்ப சீக்கிரமே நிர்மலாகிட்ட எங்க விவாகரத்து விஷயமா பேசப் போறேன். யாருக்கும் அதிக வருத்தம் இல்லாம, சிக்கல் இல்லாம எப்படிச் சமாளிக்கறதுனு வக்கீல்கிட்ட பேசப்போறேன். ப்ராபப்லி அடுத்த முறை நாம சந்திக்கிறப்போ நல்ல சேதியோட நான் வரலாம். ஸோ, இனிமே நாம அடிக்கடி பார்க்கமுடியுமான்ற அசட்டு பயமெல்லாம் உனக்கு வேணாம்...அண்டர்ஸ்டாண்ட்?''

புரிந்தது.

நன்றாகவே புரிந்துகொள்ள முடிய எப்போதும் கற்பனையில் அழுந்திப்போகத் தோன்றியது.

வேலை செய்யப்பிடிக்காமல், தனிமையில் உட்கார்ந்து ஆகாயத்தைப் பார்த்து சிரிக்கப் பிடித்தது.



வானில் சிறகடித்துப் பறந்த பறவைகளையும் உடலை தழுவின தென்றலையும், மணத்தைப்பரப்பின பூக்களையும் ஏறிட்டு ''ஐ லவ் யூ'' என்று உரக்கக் கூவ ஆசை பிறந்தது.

ஊருக்குப் போனபிறகு பத்துநாள் வேலைகள் சேர்ந்து போனதால் மூச்சுவிட நேரமில்லாமல் இருந்தபோதிலும் இண்டு இடுக்கு கிடைத்தால் போன் செய்து சுஜாவுடன் வாசு பேசின போதெல்லாம்—

வக்கீலிடம் பேசிவிட்டீர்களா? என்ன சொன்னார்? நிர்மலாவின் ரியாக்‌ஷன் என்ன?—என்று கேட்கத் துடித்த வாயைக் கஷ்டப்பட்டு சுஜா மூடிக்கொண்டாள்.

சொல்லுவார்...

அவராகவே சொல்லுவார்.

இது டெலிகேட்டான விஷயம்.

இதில் அவசரம் கூடாது.

வாசுவுக்குத் தெரியாதா?...

தானே நிதானமாய், சமயம் அறிந்து பேசிவிட்டு என்னிடம் சொல்லுவார்—என்று தனக்குத்தானே சமாதானம் செய்துகொண்டு எதிர்பார்ப்புடன் காத்திருக்க,

ஒரு வாரம்.

பத்து நாட்கள்.

வாசு எதுவும் சொல்லவில்லை என்பதோடு சென்னைக்கும் வராமல் இருந்தார் என்பதுதான் நடந்தது. அப்புறம் முழுசாய் நாலு நாட்கள் அவளோடு பேசாததும் தொடர்ந்தது.

என்னாயிற்று?

இத்தனை நாட்கள் என்னைப் பார்க்க வராமல் வாசு இருந்ததே இல்லையே?

நித்தமும் போன் செய்பவர் நாலு நாட்களாய் ஏன் பேசவில்லை?

வாட்ஸ் ராங்?

பொறுக்க முடியாது போக அன்றைக்கு ஒன்பதுக்கெல்லாம் அலுவலகத்துக்கு வந்து பி. பி. கால் புக் செய்தாள்.

வாசு பேசினார்.

''ஹல்லோ வாசு... நீங்க போனே பண்ணலியே! உடம்புக்கு என்ன?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே. நானே இன்னிக்கு அங்க வரலாம்னு இருக்கேன்.''

வாசுவின் குரல் கரகரப்பாய் இருந்தது.

''ஜலதோஷமா வாசு? பேச்சு எப்படியோ இருக்கே?''

''நத்திங்—சாயங்காலம் பார்க்கலாம்.''

ரிஸீவரை வைத்து நிமிர்ந்த சுஜாவால் அன்று பூராவும் எந்த வேலையிலும் கவனத்தைச் செலுத்த இயலவில்லை.

நாலு மணிக்கெல்லாம் புறப்பட்டு வீட்டுக்கு வந்தாள்.

டீ குடித்துவிட்டு, குளித்து, வாசுவுக்குப் பிடித்தமான மரூன் ஸில்க் ஆர்கென்ஸாவை உடுத்தி தயாரானாள்.

வாசுதேவன் வந்து நுழைந்தபோது மணி எட்டு இருக்கும்.

நிமிர்ந்து பார்த்தவள் திடுக்கிட்டாள்.

ஸம்திங் ஈஸ் ராங்.

ஆதுரத்துடன் கையைப் பற்றி ''என்ன வாசு?'' என்றதும், சிரிக்க முயன்றார்.

உதட்டோரம் துடிப்பதும், கைப் பிடிக்குள் அகப்பட்ட விரல்களில் வியர்வை கசகசப்பதும் புரிய, சுஜாவின் கவலை அதிகமானது.

யாருக்காவது உடம்பு சரியில்லையா?

வியாபாரத்தில் நஷ்டமா?

தொழிற்சாலையில் பிரச்சனையா?



என்ன?

எ . ன்...ன?

''குளிக்கறீங்களா?''

''ம்.''

கால் மணியில் அவர் குளித்துவிட்டு வருவதற்குள் ராணியை இடியாப்பம், குருமா வகையறாக்களை டேபிளில் எடுத்து வைக்கச் சொன்னாள்.

மௌனமாய்ச் சாப்பிட்டார்கள்.

''இன்னும் ஒண்ணு?''

''வேணாம் சுஜா...பசிக்கலை.''

கை கழுவினார்கள்.

''வீடியோல ஏதாவது படம் பார்க்கலாமா?''

''உன்கிட்ட பேசணும்...உள்ள போலாமா?''

போனார்கள்.

சுஜா ஏ. ஸி. யை ஆன் செய்தாள்.

படுக்கையில் உட்கார்ந்தவரின் தோளில் தலை வைத்து ''எதை நினைச்சி வருத்தப்படறீங்க, வாசு? இத்தனை நாட்கள்ல உங்களை ஒருதரம்கூட நான் இப்படிப்பார்த்தது இல்லியே '' என, ஒருவித வேகத்துடன் அவளை வாசுதேவன் இறுக அணைத்தார். சில கணங்களிலேயே பிடியைத் தளர்த்திவிட்டு நகர்ந்து உட்கார்ந்தார்.

''என்ன வாசு?''

அவளை ஏறிடாமல் சன்ன தொனியில் வாசுதேவன் பேசினார்.

''நிர்மலா உண்டாயிருக்காங்க, சுஜா?''

''எ...என்னது?''

வாசுதேவன் ஆம் என்று தலையசைத்தார்.

நீளமாய்ப் பெருமூச்சு இழுத்தவர், அடி உதட்டை அழுத்திக் கொண்டார்.

"யெஸ்—நானும் இப்படித்தான் அதிர்ந்து போனேன். நாலு நாள் முன்னால விஷயத்தைக் கேள்விப்பட்டதும் அரண்டு போனேன்."

"எ...எத்தனை நாள் வாசு?"

"மூணு மாசம் முடிஞ்சு போச்சாம் சுஜா. நிஜமா சொல்றேன்...நீ அன்னிக்கு என்னை அந்தக் கேள்வி கேட்ட பாரு, அதுக்கப்புறம் நான் நிர்மலாவோட சேர்ந்தே படுக்கலை...அதுக்கு முன்னாலயே...எப்பவோ...மை காட். இப்பப் போயி இந்த சேதி...நான்...நான்.. சுஜா...எனக்கு ஒண்ணுமே புரியலை. நேத்து திரும்ப டாக்டர் கிட்டப் போகச் சொன்னேன். அவங்க கர்ப்பத்தை உறுதிப்படுத்திட்டாங்க. இருபத்திமூணு வருஷம் கழிச்சு, இப்ப, ஓ...காட்... சுஜா...நான்...வந்து...கடவுளே."

புலம்பலாய்ப் பேசி வாசுதேவன் தலையைக் கவிழ்த்து கைகளில் தாங்கிப் பிடித்துக்கொள்ள, என்ன சொல்வது என்றோ, செய்வது என்றோ புரியாத விதத்தில் சுஜா இறுகிப் போனாள்.

# 22

"ஹலோ?"

"மிஸ்டர் சங்கர் வீடுதானே."

"ஆமா."

"அவர் இருக்காரா? நான் சுஜா பேசறேன்."

"சுஜாவா! என்னம்மா நல்லா இருக்கியா? சங்கர் குளிக்கறான்னு நினைக்கறேன்."

"ஓ..."

"ஏதாவது விஷயம் சொல்லணுமா?"

"ம்.. நான் பத்து நிமிஷம் கழிச்சு திரும்ப போன் பண்றேன்னு சொல்லுங்க."

ரிஸீவரை வைத்த சுஜா, கடைக்காரர் ஓரக்கண்ணால் பார்ப்பதை லட்சியம் பண்ணாமல் அங்கேயே நின்று நகத்தைக் கடித்தாள்.

அடிக்கடி மணிக்கட்டைத் திருப்பி கடிகாரத்தைப் பார்த்தாள்.

ஏழு எட்டு நிமிஷங்கள் ஆவதற்குள் மீண்டும் சங்கர் நம்பரை டயல் செய்தாள்.

"சங்கர்?"

"எஸ், நான்தான், என்ன சுஜா... காலை வேளைல அதிசயமா?"

''சங்கர், நான் உன்னை உடனே, உடனே பார்க்கணும். என் வீட்டுக்கு இப்பவே வர முடியுமா, ப்ளீஸ்?''

''ஹேய், வாட்ஸ் த மேட்டர்?''

''சொல்றேன். நீ உடனே வரணும் சங்கர், ப்ளீஸ்.''

அவள் குரலில் இருந்த தழுதழுப்பு ஆளை அசரச் செய்ய, ''வரேன், கால் மணிலே அங்க இருப்பேன். ஓ. கே?'' என்றான்.

தொடர்பைத் துண்டித்ததும், ஒண்ணரை ரூபாயைக் கடைக்காரரிடம் தந்துவிட்டு சுஜா மெதுவாய் நடந்தாள்.

அடுத்த தெருவில் அவள் வீடு.

பையப் பைய நடந்தால் சங்கர் வருவதற்கும் இவள் போய்ச் சேருவதற்கும் சரியாக இருக்கும்.

போர்த்தி இருந்த புடவைத் தலைப்பால் அடிக்கழுத்தைத் துடைத்துக் கொண்டாள்.

இரவு முழுவதும் உறங்காமல் எதையெதையோ சிந்தித்துக் கொண்டிருந்ததில் தலை பாரமாய் இருந்தது. கண்கள் சிவந்து துருத்திக் கொண்டு நின்றன.

மாடிப்படிகளில் ஏறுகையில் மணியைத் திரும்பப் பார்த்தாள்.

இன்னும் ஐந்து நிமிஷங்கள்.

கூடத்தில் நுழைந்து உள்ளே உட்காரப் பிடிக்காமல் இப்படியும், அப்படியும் நடந்தாள்.

படபடப்பாய் இருந்தது.

சங்கர் சுருக்க வந்துவிட்டால் தேவலைபோல இருந்தது.



கால்கள் திடுமென துவண்டு போகிற மாதிரி தோன்ற, அசதியுடன் சோபாவில் உட்கார்ந்தாள்.

சங்கர் அவள் வீட்டுக்கு வந்து சேரும்போது மணி எட்டடிக்க ஐந்து நிமிஷம் என்றது.

உள்ளே நுழைந்தவன் அவளுடைய தோற்றத்தைப் பார்த்து அதிர்ந்து போனான்.

''என்னாச்சு சுஜா?''

இது நாழிகை அடக்கி வைத்திருந்த துக்கம் நெஞ்சைக் கீறிக்கொண்டு எழ, சுஜாவின் கண்ணோரங்கள் பளபளக்க முற்பட்டன.

''என்ன சுஜா?''

அவன் கையை இறுகப் பற்றிக் கொண்டவள், அடி உதட்டைக் கடித்து தன்னைச் சமாளித்துக் கொள்ளப் பார்த்தாள்.

''காபி சாப்பிடறியா?''

''ஹெல் வித் காபி. முதல்ல விஷயத்தைச் சொல்லு.''

''சங்கர்!''

''என்ன சுஜா? எதுக்காக இப்படிக் கலங்கறே? வாசு நேத்து வரப்போறதா சொன்னியே வந்தாரா? நிர்மலா கிட்ட பேசிட்டாராமா? அதுல ஏதாவது ப்ராப்ளமா?''

சுஜா கைரேகைகளை சில கணங்களுக்கு உற்றுப் பார்த்தாள்.

கிசுகிசுப்பாய் பேசினாள்.

''அவங்க கர்ப்பமா இருக்காங்களாம் சங்கர்.''

''எவங்க? என்னது?''

''நிர்மலாதான்.

‘‘கர்ப்பம்? நிர்மலா? ஓ... மை காட்.’’

‘‘நேத்து வந்ததுலேந்து வாசு சரியாவே இல்லே. தெளிவா பேசக்கூட அவரால முடியலை. அப்புறம் மெதுவா இந்த விஷயத்தைச் சொன்னார். அதைக் கேட்டதும் நான்...நான்...’’

சங்கர் பதில் பேசாது இருக்க, சுஜா தொடர்ந்தாள்.

‘‘மூணு மாச கர்ப்பம் உறுதி ஆயிடிச்சாம். நாலு நாள் முன்னாலதான் அவருக்கே விவரம்தெரியுமாம். இன்னொரு தரம் டாக்டர் கிட்ட போய் செக்அப் பண்ணச் சொன்னதுலே, கன்ஃபர்ம் ஆயிடுச்சாம்.’’

சங்கர் எழுந்து நடந்தான். அவள் நாற்காலிக்குப் பின்னால் நின்று கேட்டான்.

‘‘அவர் உன்னைக் கல்யாணம் பண்ணிக்க விரும்பறார்னும், அதுக்காக நிர்மலாவை டிவோர்ஸ் பண்ணப் போறார்னும் சொன்னியே சுஜா?’’

‘‘சொன்னேன்தான். அவர் அப்படித்தானே என் கிட்டே சொன்னார். இந்த முடிவுக்கு வந்திட்ட மூணு மாசமா நிர்மலாவோட நெருக்கமா இருக்குறது இல்லியாம். இது, அதுக்கும் முன்னால கடவுளே...நான் எப்படி விளக்குவேன் சங்கர்?’’

வேண்டாம் என்று கையை நீட்டி அவளை நிறுத்தினவன், ஜன்னலிடம் சென்று, மரத்தையும் தெருவையும் வெறித்தான்.

‘‘வாசுவுக்கே இந்த நியூஸ் அதிர்ச்சியா இருந்திருக்குன்றதை என்னால புரிஞ்சிக்க முடியுது. மனுஷர் ப்ரமை பிடிச்சாப்பல இருக்கார் சங்கர்.’’

‘‘......’’



‘‘தட்டுத் தடுமாறி என்கிட்டே சேதிய சொன்னப்புறம் நாங்க ஒருத்தரோட ஒருத்தர் பேசிக்கவேயில்லே. என் ஷாக்கை புரிஞ்சிகிட்ட மாதிரி வாசு ஹால்லியே உலாத்திகிட்டு இருந்தவர் விடியறதுக்குமுன்னே குளிச்சிட்டு, ‘‘நான் ஊருக்குப்போறேன் சுஜா. உன் அவஸ்தை எனக்குப் புரியற மாதிரி, என் நிலையும் உனக்குப் புரியுமன்ற நம்பிக்கை எனக்கு இருக்கு. நீ இல்லாம என்னால் இருக்க முடியாது. அதுநிச்சயம். குழந்தை உண்டாயிட்டது என்தீர்மானத்தை எந்த விதத்துலேயும் பாதிக்கலை. எடுத்த முடிவு எடுத்தது தான். ஆனா அதைச் செயலாக்க கொஞ்சநாள் ஆகும். அதான் வித்தியாசம். நீ புரிஞ்சிக்கணும். அலட்டிக்காம இரு. குழப்பம் தெளிஞ்சு; இரண்டு நாள்ல ஒரு நிதானத்துக்கு வந்ததும் போன் பண்ணறேன்; இல்லே, நேரே வரேன்’’னு சொல்லிட்டு புறப்பட்டுப் போயிட்டார். ராத்திரியும் அவர் போனப்புறமும், நிறைய யோசிச்சு ஒரு முடிவுக்கு நான் வந்திருக்கேன். அதைப்பத்தி உன்னோட பேசினா தேவலைனு தோணிச்சு. அதான் உன்னை வரச் சொன்னேன்.’’

சங்கர் ஜன்னல் கம்பிகளின் மேல் சாய்ந்து அத்தனையையும் உன்னிப்பாய்க் கேட்டான். தலைமுடியைக் கோதிக் கொண்டு வாளாவிருந்தான்.

‘‘என்ன சங்கர் ஒண்ணுமே பேசாம இருக்கே!’’

‘‘என்ன சொல்லணும் சுஜா? இது உங்க இரண்டு பேர் சம்பந்தப்பட்ட அந்தரங்கமான விஷயம். மூணாவது ஆள் நான் எப்படி . என்னனு?...அதான் அவரே சொல்லிட்டுப் போயிருக்காரே, கொஞ்சம் தெளிஞ்சப்புறம் பேசலாம்னு...’’

சுஜா கண்களை விரித்து அவனை ஏறிட்டாள்.

‘‘ராத்திரி பூரா யோசிச்சு ஒரு முடிவுக்கு வந்திருக்கேன்னு சொன்னேனே, அது என்னனு தெரிஞ்சிக்க உனக்கு விருப்பம் இல்லியா?’’

''ஆல்ரைட்...சொல்லு.''

''முன்னே உன்கிட்ட பேசினப்போ. யார் மனசையும் மிதிச்சிட்டு என்னால நிம்மதியா வாழ முடியாதுனு சொன்னேனே நினைப்பு இருக்கா?''

''ம்''

''குழந்தை இல்லேனு இருந்த வரைக்கும், நிர்மலாவ விட எல்லா வகைலேயும் நான் வாசுவுக்குத் தகுதியானவ தான்னு மனப்பூர்வமா நம்பினதால, ஒரு குத்த மனப் பான்மை இல்லாம, அவர் எடுத்த முடிவுக்கு, நிர்மலா மனசை நான் மிதிக்கலைன்ற நம்பிக்கையோட சம்மதிக்க முடிஞ்சிது...ஆனா...இப்ப.''

''இப்ப?''

''இந்தக் குழந்தைக்காக வாசுவும் நிர்மலாவும் எவ்வளவு ஏங்கிகிட்டு இருந்தாங்கனு எனக்குத் தெரியும். எங்க நெருக்கம் அதிகரிக்கறத்துக்கு முன்னால இதுகுறிச்சி வருத்தத்தோட அவர் பேசினதுண்டு. கல்யாணமாகி இருபத்திமூணு வருஷம் ஆகியும் நம்பிக்கை இழக்காம கோவில், குளம், விரதம்னு நிர்மலா இருந்து வந்ததும் எனக்குத் தெரியும். அப்புறம் அவரோட பழகப் பழக, இது இனிமே நடக்கற விஷயம் இல்லேன்ற அலுப்போட அவர் பேசப் பேச, சரி; திஸ் ஈஸ் ரியலி இம்பாஸிபிள்னு நான் முடிவு செய்திட்டேன். ஆனா, திடும்னு இப்ப நிர்மலா உண்டாகி இருக்குற சேதிய கேட்கறப்போ, இதனால வாசு எந்த அளவுக்கு குழம்பிப் போயிருக்கார்ன்றதை உணர்றப் போ, நாளைக்கு நிர்மலாவ பிரிஞ்சப்புறம் ஆயுசு பூரா அந்த குத்த உணர்வு வாசுவை உறுத்திக்கிட்டே இருக்கும்னு தோணுது.''

''ஸோ?'' கிட்ட வந்து குனிந்து சங்கர் கேட்க, சுஜா பெருமூச்சை இழுத்து நாவால் அடி உதட்டை ஈரப்படுத்திக் கொண்டாள்.

அவனை நிமிர்ந்து பார்த்து சோகத்தை மறைக்காமல் புன்னகை செய்தாள்.



''அன்னிக்கு நான் கப்பல் பறவை இல்லேனு உன்கிட்ட ஆர்க்யூ பண்ணேன்; நினைப்பு இருக்கா...? நோ, நான் கப்பல் பறவைதான். தெரியாத்தனத்துல கப்பல்லே உட்கார்ந்திட்டு, நடுக் கடலுக்குப் போனதும் நிலைமை புரிஞ்சு தவிக்கிற கப்பல் பறவைதான். வாசு மேல அன்பு செலுத்துறதால யாருக்கும் எந்தப் பிரச்சனையும் இல்லே. இது எங்க இருவர் சம்பந்தப்பட்டதுனு முதல்ல நினைச் சேன். அந்த அன்பு இறுக, இறுக, நிர்மலா வாசுவுக்கு ஏத்தவங்க இல்லே. நான் இன்னும் சிறந்த மனைவியா இருந்து, அவருக்கு சந்தோஷம் தரமுடியும்னு நினைச்சேன். இதனால, வாசு நிர்மலாவ டிவோர்ஸ் பண்ணறேன்னு சொன்னப்போ தியாகம் எல்லாம் ஓரளவுக்குத் தான், அவரவர் நிம்மதி சந்தோஷம்தான் முக்கியம்னு எண்ணி சரினு சொன்னேன். ஆனா இப்போ? இல்லே சங்கர். இருபத்தி மூணு வருஷம் கழிச்சு உண்டாகி இருக்கிற பெண்ணோட சந்தோஷங்களைப் பிடுங்கிப் போட்டுட்டு என்னால சத்தியமா நிம்மதியா வாழ முடியாது. ஆயுசு முழுக்க அவங்களையும், குழந்தையையும் விட்டுட்டு வந்திட்டமேன்னு வாசுதேவன் வேதனைப்பட நான் காரணமா இருக்க விரும்பலை. இந்த மாதிரி ஒரு நிலை வரலாம்னு ஊகிக்க முடியாம, நான் கப்பல் பறவையா யிட்டது நிஜம். நடுக்கடல்ல பறவை திக்கு திசை புரியாம தவிக்கிற மாதிரி... நேத்து ராத்திரி நானும் கலங்கி பரிதவிச்சது நிஜம். சங்கர், நான்...நான்...''

வார்த்தைகள் உருவிழந்து சின்னச்சின்ன கேவல்களாக வெடிக்க, சுஜா அப்படியே கவிழ்ந்து கொண்டாள்.

அழுகையினூடே பேசினாள்.

''ராத்திரி பூரா யோசிச்சு ஒரு முடிவுக்கு வந்திட்டேன் சங்கர். இனியும் கப்பல் பறவையா நான் இருக்கவிரும்பலை. சரியோ தப்போ, இதுநாள் வரைக்கும் எனக்கு சொந்த

மாக முடியாத கப்பல்ல பிரயாணம் செஞ்சிட்டேன். போதும். நாட் எனிமோர். கப்பலை விட்டு பறவை பறக்க வேண்டிய சமயம் வந்தாச்சி. பறவைக்கு அதிர்ஷ்டமிருந்து நிலம் கண்ணுக்கு தென்பட்டாலும் சரி, இல்லே பறக்க முடியாம பாதி வழிலே நடுக்கடல்ல விழுந்து இறந்தாலும் சரி, நான் தீர்மானம் பண்ணிட்டேன். இதுதான் பறவையோட தலைவிதி... நான்...நான் சொல்றது உனக்குப் புரியுதா சங்கர்? இப்ப உனக்கு சந்தோஷம்தானே? சொல்லு. நான் எடுத்திருக்கிற முடிவு சரியானதுதானே?''

சங்கர் கர்சிப்பை எடுத்து அவள் முன் நீட்டினான். தோளில் கைவைத்துத் தட்டினான்.

''நீ அவசரப்படறியோன்னு எனக்குப் பயமா இருக்கு சுஜா...மனசு குழம்பி இருக்குறப்ப ஒரு முடிவுக்கு வர வேண்டிய நிர்ப்பந்தம் என்ன? லீவ் இட் லைக் தட்... இரண்டு நாள் கழிச்சு...''

''நோ, வாசு கடைசியா என்ன சொல்லிட்டுப் போனார்? அத நினைச்சிப்பாரு சங்கர். இந்தக் குழந்தைக்காக என்முடிவை நான் மாத்திக்கப்போறதில்லேனு தானே? வேணாம். அவரைத் திரும்ப சந்திச்சா நான் மனசு மாறிடுவேனோன்னு பயமா இருக்கு சங்கர்.''

''யு போத் லவ் ஈச் அதர் சுஜா...நீ மாட்டேன்னாலும் அவர் சுலபமா உன்னைப் பிரியறத்துக்கு சம்மதிப்பார்னு நம்பறியா?''

''இல்லே. நிச்சயம் நம்பலே. அதான் ஊரைவிட்டுப் போயிடணும்கிற—கப்பலை விட்டுப் பறந்திடணும்கிற—முடிவுக்கு வந்திருக்கேன்.''

''என்ன சொல்றே சுஜா?''

''இன்னிக்கே புறப்பட்டு என் தங்கை வீட்டுக்கு நான் போயிடப் போறேன் சங்கர். தூத்துக்குடிலே அவ விலாசமோ, அவ கணவர் பேரோகூட வாசுவுக்குத் தெரியாது...



ஒரு வாரம் அங்க இருந்திட்டு, மேலே என்ன செய்யறதுனு யோசிக்கப் போறேன். அம்மா என்மேல உள்ள கோபத்தை விட்டுட்டாங்கன்னா, கொஞ்ச நாள் அவங்களோட நிம்மதியா இருக்க முயற்சிக்கப் போறேன்.''

''உன் வேலை?''

''உன்கிட்ட இப்ப ஒரு லெட்டர்—பர்ஸனல் ப்ராப்ளம். அவசரமா ஊருக்குப் போறேன்னு—எழுதித்தரேன். வர்மா கிட்ட கொடுத்திடு ... ப்ளீஸ் ... எது கேட்டாலும் தெரியாதுனு சொல்லிடு. ஒரு மாசம் கழிச்சு, நானாவே உனக்கு போன் பண்ணறேன்...ஆறு மாசமோ, ஒரு வருஷமோ வாசு கண்ணுல படாம இருக்கிறது முக்கியம்...அவுட் ஆஃப் ஸைட், அவுட் ஆஃப் மைண்ட்னு சொல்வாங்க... நிர்மலாக்கு குழந்தை பிறந்திடிச்சின்னா, என் பிரிவு வாசுவ ரொம்ப தாக்காது. நாளடைவிலே அவர் நிம்மதிக்காகத்தான் விலகினேன்னு புரிஞ்சிப்பார்... நான் நினைக்கறது நடக்க, ஒரு நல்ல நண்பனா இருந்து எனக்கு ஹெல்ப் பண்ணுவியா சங்கர்? குத்த உணர்வு எதுவும் இல்லாம நானும் வாசுவும் வாழ நினைக்கறது சரியான முடிவுதானே? சொல்லு...ப்ளீஸ் சங்கர்...ப்ளீஸ் டெல் மீ!''

அடங்கி இருந்த சுஜாவின் அழுகை மீண்டும் பொங்கி எழ, கண்களில் துளிர்த்த நீரை அவள் பார்க்காமல் இருக்க வேண்டி சங்கர் லேசாகத் திரும்பிக் கொண்டான்.

'எஸ்—நான் என்றைக்கும் உனக்கு நல்ல நண்பன்தான். இதில் சந்தேகமே வேண்டாம். கவலைப்படாதே...சுஜா... நீ எடுத்திருக்கும் முடிவைவிட வேறொன்றும் சிறப்பாக இருக்கமுடியாது. நீ விவேகி...யதார்த்தவாதி. புத்திசாலி. உன்னால் தப்பான வழியில் போகவே முடியாது—ஐ நோ தட்...இந்த வீட்டைப் பற்றியோ, வேலையைப் பற்றியோ கவலைப்படாதே. முதலில் உன்னுள் நிம்மதியை

உண்டாக்கிக்கொள். இது முக்கியம்...' என்றெல்லாம் கூற விரும்பிய சங்கர் எதுவுமே சொல்லாமல் அவள் முகவாயில் ஒரு விரலைக் கொடுத்து நிமிர்த்தி,

''வர்மாவுக்கு லெட்டர் எழுதவும், பாக் பண்ணவும் உனக்கு ஹெல்ப் பண்ணட்டுமா சுஜா? தூத்துக்குடிக்கு ரயிலா, பஸ்ஸா? எதை விசாரிக்கட்டும்?'' என்று மட்டும் தணிந்த குரலில் இதமாய் வினவ, அந்தப் பரிவும், அன்பும் ரணமாகியிருந்த மனசை வருடிக் கொடுக்க, தன்னை நண்பன் சரியாகப் புரிந்து கொண்டுவிட்டான் என்கிற நிம்மதியுடன் அவனை சுஜா ஏறிட்டபோது, கண்ணீரையும் மீறிக்கொண்டு அவள் உதட்டில் ஒரு அழகான புன்னகை பிறந்தது.

● கப்பல் பறவை பறந்துவிட்டது ●

கன்னிமரா பொது நூலகம்
24 JUN 1991
சென்னை.

APR 2000
11 JUL 2011
20 JUL 2011